In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

ஓம் சிவாய நம:

மாதொருபாகனார்க்கு வழிவழி அடிமை செய்யும்

ஆதிசைவர்கள் வரலாறு

(சிவாசாரியார்கள் சரித்திரம்)

வெளியீடு:

ஆதிசைவர்கள் நலவாழ்வு மையம்,
கள்ளக்குறிச்சி - 606 202

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஸ்ரீ திரிபுரசுந்தரி உடனுறை ஸ்ரீ ஸோமநாதீஸ்வரர், பொரசக்குறிச்சி.



சிவஸ்ரீ சோ.சுப்ரமணியசிவாசாரியார்-ஸ்ரீமதி விஜயலட்சுமி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவாய நம

திருச்சிற்றம்பலம்

அன்புமணி,

தில்லை.S கார்த்திகேய சிவம் M.A.,
நிறுவனர்
ஆதிசைவர்கள் நலவாழ்வு மையம்
சன்னதி தெரு, பொரசக்குறிச்சி அஞ்சல்
கள்ளக்குறிச்சி, விழுப்புரம் மாவட்டம்.
Pin-606 203 Cell 9751846933

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவாயநம:

திருச்சிற்றம்பலம்

மாதொருபாகனார்க்கு வழிவழி அடிமை செய்யும்

ஆதிசைவர்கள் வரலாறு

(சிவாசாரியார்கள் சரித்திரம்)

ஆசிரியர்:

ஆகமவித்தகர், சித்தாந்த ரத்னம்

தில்லை.எஸ்.கார்த்திகேய சிவம் M.A.,

வெளியீடு:

ஆதிசைவர்கள் நலவாழ்வு மையம்

கள்ளக்குறிச்சி - 606 202.

விழுப்புரம் மாவட்டம்.

அலைபேசி: 97518 48933.

e.mail: thillaishivam@gmail.com

2016

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

நூல் குறிப்பு

நூலின் பெயர்	: ஆதிசைவர்கள் வரலாறு
ஆசிரியர் பெயர்	: தில்லை.S.கார்த்திகேய சிவம்
பதிப்பு	: முதற் பதிப்பு (2016)
தாள்	: சேஷாயி 21.3
அளவு	: 1/8 டெமி
பக்கங்கள்	: 28+156=184
மொழி	: தமிழ்
பிரதிகள்	: 1000
கணினி அச்சு & இயந்திர அச்சு	: ஸ்ரீ சத்யா பிரிண்டர்ஸ் கள்ளக்குறிச்சி. அலைபேசி. 9486282888
உரிமை	: ஆசிரியர்க்கே
வெளியீடு	: ஆதிசைவர்கள் நலவாழ்வு மையம் கள்ளக்குறிச்சி.
விலை	: ரூ.200-00

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

"வக்ரதுண்ட மஹாகாய சூர்ய கோடி ஸமப்ரப
அவிக்னம் குருமே தேவ ஸர்வ கார்யேஷு ஸர்வதா."

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஸ்ரீ செந்தில்நாதன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்து நான்காவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள்

திருவாவடுதுறை (அஞ்சல்) - 609 803, நாகை மாவட்டம். தொலைபேசி : 04364 - 232021

அருள் வாழ்த்துரை

நாள்: 13.10.2015

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்டகுருமணிதன் தாள் வாழ்க.

"அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்
எண்ணில் இருபத்தெண் கோடிநூ றாயிரம்
விண்ணவர் ஈசன் விழுப்பம் உரைத்தனர்
எண்ணிநின் றப்பொருள் ஏத்துவன் நானே."

-திருமந்திரம்

ஆகமவித்தகர், சித்தாந்தரத்தினம் **தில்லை.எஸ்.கார்த்திகேய சிவம்** அவர்கள் **"ஆதிசைவர்கள் வரலாறு"** என்னும் நூல் ஒன்றினை வெளியிட்டுள்ளமை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஆகமங்கள், திருமுறைகள் முதலிய உயரிய பிரமான நூல்களிலிருந்து மேற்கோள் காட்டி ஆதிசைவர்களின் உரிமைகளையும், பெருமைகளையும் தெளிவுற விளக்கியுள்ளார் நூல் ஆசிரியர். இதன்மூலம் நூலாசிரியரின் சைவ சமய ஈடுபாடு நன்கு புலனாகின்றது. தமிழ், வடமொழி என்னும் இருமொழிகள் வாயிலாகவும் ஆதிசைவப் பெருமக்கள் சைவத்திற்கு ஆற்றியுள்ள அரும்பணிகளை நினைவு கூர்ந்துள்ளமை பாராட்டத்தக்கது.

நூல் பலராலும் பயிலப்பெற்று ஆதிசைவர் குறித்த சிறப்பும் சைவ நீதியும் எங்கும் தழைக்க வேண்டுமென நமது ஆன்மார்த்த மூர்த்திகளாகிய ஸ்ரீஞானமாநடராஜப்பெருமான் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

இணைப்பு: திருநீற்றுத் திருக்காப்பு
பெறுநர்: தில்லை. எஸ்.கார்த்தியேசிவம் அவர்கள்,
பொரசக்குறிச்சி

திருவாவடுதுறை ஆதீனம்
திருவாவடுதுறை

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

உ
சிவசிவ

"கயிலை மாமுனிவர்"

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்,

அதிபர்.

ஸ்ரீ காசிமடம் திருப்பனந்தாள்-612 504

தஞ்சை மாவட்டம். தமிழ்நாடு.

Email: srikasimutt@gmail.com

நாள்: 14.10.2015

வாழ்த்துரை

மாதொரு பாகனார்க்கு வழிவழி அடிமை செய்யும் "**ஆதிசைவர்கள் வரலாறு**" எனும் அரிய தமிழ் நூல் ஆகம வித்தகர் **தில்லை.எஸ்.கார்த்திகேய சிவம்** அவர்களின் கடின உழைப்பில் பதிப்பாக வெளியிடப்பெறுவது அறிந்து மகிழ்ச்சி.

"பெருமைக்கும் வண்மைக்கும் பேரருட்கும் பேற்றின் அருமைக்கும் ஒப்பில்லை" - என ஞானசாத்திரம் பகர்வதைப் போல அப்பெருமானை முப்போதும் திருமேனி தீண்டி வழிபட்டுப் பூசிக்கும் பேறும் பண்டை நாற்றவத்தால் வாய்ப்பதாகும். அத்தகு பெருமைமிக்க ஆதிசைவர்கள் எனும் சிவாசாரியார் வரிசையில் சுந்தரர் பெருமானின் தந்தையும், சடங்கவி சிவாசாரியாரும், சந்தான குரவருள் அருணந்தி சிவாசாரியாரும் உமாபதி சிவமும் தோன்றிஅர்ச்சனையும் அரிய சாத்திர நூல்களும் அருளினார்கள். பெற்றான் சாம்பானுக்கும் முள்ளிச் செடிக்கும் முத்தி வழங்கிய நிகழ்வு பிந்தைய முற்போக்கு எனும் மாய பிம்பங்களுக்கு வழிகாட்டியும் முன்னேடியுமாகும்.

நிலைத்த வாழ்வு பெறும் (Classical book for ever) நூல்களுள் ஒன்றாகிய இந்நூலை எழுதிட உள்ளிருந்து, உணர்வூட்டிய பரம்பொருளின் மேன்மையால் வழிவழி அடிமை செய்யும் சிவாசாரியார்கள் வரலாறு எனும் நூல் சிறப்புற வெளிவந்து பன்னூறு பத்தர்களுக்கு விழுமிய பல்சுவை விளைத்திடச் செந்திற் கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

ஜெ. சுபம்

தில்லை. எஸ்.கார்த்தியேசிவம்
பொரசக்குறிச்சி, கள்ளக்குறிச்சி தாலுக்கா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குருபாதம்

தந்தை தாயும் நீ; என்னுயிர்த் துணையும் நீ
சஞ்சல மதுதீர்க்க
வந்த தேசிக வடிவும் நீ; உனையலால்
மற்றொரு துணை காணேன்;
அந்தம் ஆதியும் அளப்பெருஞ் சோதியே!
ஆதியே அடியார்தம்
சிந்தை மேவிய தாயுமா னவன்எனும்
சிரகிரிப் பெருமானே!

-ஸ்ரீ தாயுமான சுவாமிகள்

முனைவர். **ஸ்ரீமத் மௌன குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்**
கட்டளை விசாரணை
தருமையாதீனம் ஸ்ரீ மௌனமடம் - மலைக்கோட்டை
திருச்சிராப்பள்ளி - 620 002. போன் : 0431 - 2702472

"தெரிந்துணரின் முப்போதுஞ் செல்காலம் நிகழ்காலம்
வருங்காலம் மானவற்றின் வழிவழியே திருத்தொண்டின்
விரும்பிய அர்ச்சனைகள் சிவவேதியர்க்கே உரியனஅப்
பெருந்தகையார் குலப் பெருமை யாம்புகழும் பெற்றியதே."

-சேக்கிழார்

அனாதிசைவன் - சிவன், ஆதிசைவன் - சிவாசாரியார்கள், இவர்களை குருக்கள், சிவாசாரியார்கள், பட்டர், அகம்படிமை தொழின்மை பூண்பார் என அழைப்பர்.

உலகநலன் பொருட்டு பரார்த்த பூசையாம் திருக்கோயிலில் முப்போதும் திருமேனித் தீண்டி பூசிக்கும்பேறு பெற்றவர்களின் பெருமையை சேக்கிழாரே முடியாது என்றபோது நாம் எப்படி புகழ்வது.

தோத்திரத்திற்கு திருமுறை அளித்த சுந்தரமூர்த்தி சிவாசாரியார், சாத்திரத்திற்கு சித்தியார் அளித்த அருள்நந்தி சிவாசாரியார், புராணத்திற்கு கந்தபுராணம் அளித்த கச்சியப்ப சிவாசாரியார் என சைவத்திற்கு பல நூல்களையும் அருளிச் செய்திருக்கிறார்கள்.

உலக நலனுக்காக யாகமும், இறைவழிபாடும், செய்வதே தம் பிறப்பின் நோக்கம் என்று உணர்ந்து வருகிறார்கள்.

ஆகமங்களை அருளிச் சொன்ன சிவன் அதன் வழிப் பத்ததிகளை சிவாசாரியார்களின் மூலமே அருளியிருக்கிறான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவாசாரியார்களின் வரலாற்றினை மிகத் தெளிவாக பல நூல்களை ஆய்ந்து **ஆதிசைவர்கள் வரலாறு** எனும் நூலினை **தில்லை.எஸ்.கார்த்திகேய சிவம்** செய்திருப்பது போற்றுதலுக்குரியது.

வரலாறே இல்லாதவர்கள் இட்டுக்கட்டி வாழ்வதற்கு வகை செய்யும் காலத்தே மிகச் சிறப்பாக ஆய்ந்து வெளியிட்டுருப்பது உண்மையிலே பாராட்டுதலுக்குரியது.

அங்கோர்வாட் ஆலயம் மாதங்க பரமேஸ்வர ஆகமவிதிப்படி கட்டப்பட்டுள்ளது என்பதும்,

ஆகமங்கள் சிவாசாரியார்களுக்கே உரியது என நிறுவுவதும்,

சிவாசாரியார்கள் திருமடங்களை தோற்றுவித்து மக்களுக்கு தீட்சை அளித்தும், நல்லொழுக்கம் அருளியும் வந்திருக்கிறார்கள் என்பதும்,

சிதம்பரம் மேலமடம், திருநெல்வேலி தெற்கு மடம், சூரியனார் கோயில் ஆதினம், குன்றக்குடி திருவண்ணாமலை ஆதினம் போன்றவைகளையும் ஆய்ந்தும் உள்ளது சிறப்பு.

சிவாசாரியார்களின் பெயர் வகைகளின் காரணங்களை விவரிப்பது சிறப்பாக அமைந்துள்ளது.

திருச்சி மலைக்கோட்டை பூசிப்பவர் "**நம்பியார்**" என்றும்,
திருவையாறு பூசிப்பவர் "**காணிவட்டத்தார்**" என்றும்,
நடைமுறையில் உள்ளவாறு ஆய்வுப்பணி செய்தது சிறப்பாகும்.

பஞ்சாச்சாரியார்கள் பணியினை விவரித்து காட்டி இருப்பதும், சிவாசாரியார்கள் தோற்றுவித்த மடங்களும், அதன் வழி நடைமுறையில் உள்ளவைகளையும் பதிவு செய்துள்ளது சிறப்பு.

தாராசுரத்தில் சிவாலய கும்பாபிஷேகத்தில் பங்கு பெற்ற 108 சிவாசாரியார்கள் திருவுருவம் பெயர் பொறித்து இரண்டாம் இராஜராஜன் செய்த அரிய காரியம் சிவாசாரியார்கள் மேல் மீது வைத்த மதிப்பும், அவர்கள் ஆற்றுகின்ற புனித செயலை எண்ணியுமே ஆகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ்வகையில், **தில்லை. எஸ்.கார்த்திகேய சிவம்** முழுமையாக தம்குலத்திற்கு ஆற்ற வேண்டிய பணியை செய்திருக்கிறார் என்பதை "**ஆதிசைவர்கள் வரலாறு**" நூல் காட்டுகிறது.

ஆதிசைவர்கள் சுந்தரமூர்த்திநாயானரைப் போற்றுவது போன்று புகழ்த்துணைநாயனாரையும் போற்ற வேண்டும்.

தம் குலவரலாறு எழுதிய **கார்த்திகேயசிவத்தையும்** பாராட்டத் தவறக்கூடாது. நன்றி கடன் பட்டவர்களாவார்கள்.

நாடு நலம் பெற வேண்டுமென்றால் கோயில் பூஜை சிறப்பாக நடைபெற வேண்டும். அதற்கு சிவாசாரியார்கள் தேவை என்பதை அறிந்து தருமையாதினத்தில் வேத சிவாகம பாட சாலை 24வது குருமணிகள் தொடங்கினார்கள்.

தருமையாதினத்தில் பாடசாலை நடந்தபோது எல்லாத் திருக்கோயில்களிலும் சிவாசாரியார்கள் இருந்தார்கள். இன்று பல இடங்களில் வேதாகம பாடசாலை தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனாலும், பல கோயில்கள் சிவாசாரியார்கள் இல்லை. காரணத்தை சிந்திக்கவும்.

விடம் உண்ட சிவனின் கழுத்து கருத்தது.விடத்தை எடுத்து வந்த ஆலால சுந்தரர் கரம் கருக்கவில்லை. காரணம், சிவத்தை பூசித்து அவரின் கரமே சிவமாயிற்று.

"**அயம்மே அஸ்தோ பகவான்........சிவாபிமருஷனஹா**"

என வேதம் காட்டுவதால் சிவாசாரியார் பெருமையை அறிந்து போற்றுவோம்.

பெரியமரபு வழி வரலாற்று நூல் "**ஆதிசைவர்கள் வரலாறு**" இதனைச் செய்த **தில்லை.எஸ்.கார்த்திகேய சிவம்** பணி தொடர செந்தமிழ் சொக்கநாதப் பெருமான் திருவருளையும், தருமையாதீன குருமணியின் குருவருளையும் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

மௌனகுமாரசாமித்தம்பிரான்
தருமையாதீனம்

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

ஸ்ரீ செல்வ கணபதி துணை

சிவாகம ஞான சாகரம்
சாக்தரத்னம்
கயிலை மாமணி திருகோலக்கா
சிவஸ்ரீ **ந.இராமநாத சிவாசாரியார்**

ஆசியுரை

மாதொருபாகனார்க்கு வழிவழி அடிமை செய்யும் ஆதிசைவர்கள் வரலாறு

அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது. அதனின் அரிது அந்தணராய் பிறத்தல் அரிது. அதனின் அரிது ஆன்மார்த்த, பரார்த்த சிவபூஜை செய்யும் ஆதிசைவ குலத்தில் பிறத்தல் அரிது. ஆதிசைவ சமூகத்தை சிவபெருமானே சிருட்டித்துள்ளார்.

ஒரு சமயம் திருக்கயிலாயத்தில் சிவபெருமானிடத்தில் உமாதேவியார், சுவாமி தங்களுக்கு மிக விருப்பமானதைக் கூறினால் அதை செய்ய விரும்புகிறேன் என்று கேட்க, சிவ பெருமான் எனக்கு மிகவும் பிடித்தமானது என்னை பூஜை செய்வதுதான் என்று கூற, அதனை சேக்கிழார்,

எண்ணிலா ஆகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்
உண்மையாவது பூசனை என உறைத்தருள
அண்ணலார் தமை அர்ச்சனைபுரிய ஆதரித்தாள்
பெண்ணில் நல்லவளாகிய பெருந்தவக்கொழுந்து.

உமாதேவியார் மிகஉவந்து பூசனை பொருட்களுடன் வந்து இறைவா பூசனை புரிய அனுமதிக்க வேணும் என்று கேட்டு நின்றாள்.

இறைவர் தேவி பூசனைக்கேற்ற இடம் பூலோகமே, பூலோகத்தில் பூசணை செய்து அதன் பயனைக் கயிலாயத்தில் அனுபவிக்கலாம் என்றிட, தேவி பூலோகத்தில் எங்கு பூஜிக்கலாம் எப்படி பூஜிக்க வேண்டும் என்று கேட்க

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இறைவன் நகரேஷீ காஞ்சி என்னும் பிருத்விதலம் காஞ்சிபுரம் அங்கு சென்று பூஜிக்க என்று கூறி பூசனை செய்ய நான்கு வேதங்கள் இருபத்தெட்டு ஆகமம் ஆகியவற்றை உபதேசமாக கூறினார்.

கிழக்கே உள்ள தத்புருஷமுகத்திலிருந்து இருபத்தோரு பேதங்களுடைய இருக்கு வேதத்தையும், தெற்கே உள்ள அகோர முகத்திலிருந்து நூத்தியோறு பேதங்கள் உடைய யஜுர் வேதத்தையும், வடக்கே உள்ள வாமதேவ முகத்திலிருந்து ஆயிரம் சாகைகளையுடைய ஸாம வேதத்தையும், மேற்கே உள்ள ஸத்யோஜாத முகத்திலிருந்து ஒன்பது பேதங்கள் உடைய அதர்வன வேதத்தையும் ஊர்த்துவ முகமான ஈசானத்திலிருந்து சிவ ஞானத்தை தரக்கூடிய சிவாகமங்கள் இருபத்தியெட்டினையும் உபதேமாக கூறினார்.

ஆகமத்தின் மூலமாக பூஜை செய்ய வேண்டிய முறைகள் எத்தனை லிங்கங்கள் வைத்து ஆத்மார்த்த பூஜை செய்ய வேண்டும். என்னென்ன பலன்கள் என்று தேவி கேட்டாள்.

ஆத்மார்த்த பூஜையில் க்ஷணிகலிங்கபூஜையை ஆற்று மணல் முதலிய பன்னிரெண்டினாலும் செய்யலாம்.

காரணாகமம்,

"ஸிகதம் தண்டுலஞ் சாந்நம் நதீமிருத் கோமயம் ததா
நவநீதஞ்ச ருத்ராக்ஷம் சந்தனம் கூர்ச்சமேவச
புஷ்பமாலா குளம் பிஷ்டம் க்ஷணிகம் த்வாதச முச்யதே."

1.ஆற்றுமணல், 2.அரிசி, 3. அன்னம், 4.நதி மண்,
5. கோமயம், 6.வெண்ணை, 7.ருத்ராஷம், 8. சந்தனம்,
9.கூர்ச்சம், 10.புஷ்ப மாலை, 11. அரிசி மாவு, 12.வெல்லம்,
ஆக இந்த பன்னிரெண்டினும் க்ஷணிகலிங்கமாக பூஜிக்கலாம்.

ஆத்மார்த்து பூஜையில் க்ஷணிகலிங்க பூஜையை, ஆற்று மணலையே சிவலிங்கமாக அமைத்து பூஜையை செய்ய முற்பட்டாள். அதனை, திருஞானசம்பந்த சுவாமிகள்,

வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாக
போதத்தால் வழிபட்டாள் புள்ளிருக்கு வேளூரே

என்று பாடியுள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ்வாறு, தினம் சிவபூஜை வழிபாடு செய்து ஒருநாள் இறைவன் தேவியின் பக்தியை சோதிக்க எண்ணி, தனது தலையில் உள்ள கங்கையை பூஜை செய்யும் இடத்திற்கு மேற்கே சென்று அவிழ்த்துவிட ஓவென்ற இறைச்சலுடன் வெள்ளமாக வர தேவி உடனே பூஜிக்கும் சிவலிங்கத்திற்கு எந்தவித இடையூறும் வராமல் பாதுகாப்பாக இருகைகளாலும் தழுவிக் கொண்டாள்.

மேற்கேயிருந்து வந்த வெள்ளத்தைக்கண்டு தன் இரு கைகளாலும் தழுவிட வெள்ளம் இருபக்கமும் சென்று கிழக்கில் ஒன்று சேர்ந்துள்ளது கம்பா நதி. தன்னை மறந்து என்னை நினைந்து சிறப்பான முறையில் வழிபட்டு வரும் தேவி முன்காட்சி தந்து உன் பக்தியில் மகிழ்ச்சி அடைந்தோம். உனக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்க தங்களை என்றும் பிரியாமல் இருக்க வரம் தருமாறு கேட்டாள்.

அவ்வாறே தம் உடலில் இடது பாகத்தை தருகிறோம் என்று சுவாமி கூறிட மேலும் இன்று வரை தங்களை பூஜித்து வந்தது, தடைபடாமல் தொடர்ந்து நடைபெற அருள்செய்ய வேணுமெனக் கேட்க இறைவன் உடனே தன் ஐந்து முகங்களிலிருந்து ஐந்து ரிஷிகளை சிருஷ்டித்தார்.

கௌசிக காச்யபச் சைவ பாரத்வாஜோத கௌதம;
அகஸ்த்யச்சைவ பஞ்சே தே பஞ்சவக்த்ரேஷு தீக்ஷிதா

கௌசிகர் காசிபர்பாரத்வாஜர் கௌதமர் அகஸ்தியர் என்ற ஐந்து ரிஷிகளையும் தோற்றுவித்து தனது ஐந்து முகங்களினின்று தீக்ஷை செய்து அவர்களுக்கு ஐந்து மடங்களைத் தந்து சிவபரிபாலனம் செய்து வருமாறு அருளிச் செய்தார்.

பல சிஷ்யர்களை உருவாக்கி அவர்களுக்கு சிவதீக்ஷை செய்து கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம், பிரதிஷ்டாதி உத்ஸவாந்தம், உத்ஸவாதி பிராயசித்தாந்தம் செய்யும் முறைகளை அறிவித்து சமயதீக்ஷை, விசேஷ தீக்ஷை, நிர்வாண தீக்ஷை, ஆச்சார்ய அபிஷேகம் முதலியவைகளை செய்வித்து ஆத்மார்த்த சிவபூஜை, பரார்த்த பூஜைகள் முதலியவைகளை பரவச் செய்து சிவபரிபாலனம் செய்து வருமாறு ஆக்ஞாபித்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ்வாறு இந்த ஐந்து ரிஷிகளின் மரபில் வந்தவர்களே ஆதிசைவ சிவாசாரியார்கள் ஆவர்.

இவ்வளவு பெருமையுடன் விளங்கிவரும் ஆதிசைவ சிவாசாரியார் வரலாற்றினை சிவபெருமானின் திருவருளை மிகுதியாகப் பெற்றுள்ள, சிவாகம ரத்னாகரம். தில்லை. எஸ்.கார்த்திகேய சிவாசாரியார் பெருமுயற்சி எடுத்துக்கொண்டு மிக சிறப்பாகவும், விரிவாகவும், தெளிவாகவும் எழுதியிருப்பது சிவபெருமானுடைய அனுக்ரஹமாகும்.

சிவனருட்செல்வரான சிவஸ்ரீ தில்லை. எஸ்.கார்த்திகேய சிவாசாரியார் இதுபோன்று இன்னும் பல நூல்களை எழுதி வெளியிட வேண்டி எனது இதய தெய்வமான திருக்கோலக்கா ஸ்ரீத்வனிப்ரதாம்பாள் ஸமேத ஸ்ரீ தாளபுரீஸ்வர சுவாமியிடம் தில்லை. எஸ்.கார்த்திகேய சிவாசாரியாருக்கு நீண்ட ஆயுளும், நல்ல ஆரோக்கியத்தையும் தந்திட வேணுமாய் பிரார்த்தித்து ஆசிகள் பல வழங்கி மகிழ்ச்சி அடைந்துள்ளோம்.

அன்புடன்,
சிவாகம ஞானசாகரம், சாக்த ரத்னம்
கயிலைமாமணி திருகோலக்கா
சிவஸ்ரீ. ந.இராமநாத சிவாசாரியார்

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ



VIKAS RATNA SIVASRI. K. PITCHAI GURUKKAL
Chief Priest, Sri Karpaga Vinayakar Temple.
Principal, Karpaga Vinayakar Veda Agama Vidhyalayam
Founder, Sivaneri Kazhakam
Secretary, Karpaga Vinayakar School,
Pillayarpatti 630207 Sivaganga District, Tamilnadu, South India.

27/9/2015

உ

வாழ்த்துரை

ஆகமவித்தகர், சித்தாந்தரத்னம் தில்லை S.கார்த்திகேயசிவம் M.A அவர்களின் "மாதொருபாகனார்க்கு வழிவழி அடிமைசெய்யும் ஆதிசைவர்கள் வரலாறு" மிக அரியமுயற்சி. திருவாவாடுதுறை ஆதீனம் முன்பு வெளியிட்டது தற்போது கிடைப்பதற்கு அரிதாயுள்ளது. பல்வேறு விளக்கங்களுடன் சரித்திர ஆதாரங்களையும் இணைத்துள்ளது பாராட்டத்தக்கது. இது போன்ற பலசைவ நூல்களைப் பதிப்பிக்க நூலாசிரியருக்கு அனைத்து வளங்களையும் ஸ்ரீ கற்பகவிநாயகர் வாரிவழங்கப் பிரார்த்தித்து வாழ்த்துகிறோம்.

அன்புடன்
K. Pitchai
K.பிச்சைக்குருக்கள்
பிள்ளையார்பட்டி.

SIVANERI KAZHAKAM
SIVAGANGAI DIST.
PILLAYARPATTI

Ph:0091 (O) 4577-264275, H/P.00919443362320/9842462320
Website: www.pitchaianna.com / e.mail:pichaianna@gmail.com

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
சிவமயம்
சிவாகமக் கலாநிதி, சிவாகமச் செல்வர், சைவ சித்தாந்த சரபம்

A.V. சுவாமிநாத சிவாச்சாரியார்

நிறுவனர் & முதல்வர்
சிவபுரம் வேத சிவாகம பாடசாலை, மயிலாடுதுறை
Email : avssivachariyar@yahoo.com
Web Site : www.vedaagamavidhyamandir.com

வீடு :
நெ.41, 4வது கிராஸ் அண்ணா நகர்,
தருமபுரம் ரோடு, மயிலாடுதுறை,
பின் -609 001, தமிழ்நாடு.
☎: 04364 – 226440
: 9443126440

பாடசாலை :
No.32, மாயூரநாதர் தெற்கு வீதி,
மயிலாடுதுறை – 609 001.
☎: 04364 - 241491

Date : 05.10.2015

அணிந்துரை

அர்ச்சகஸ்யப்ரபாவேன அர்ச்சனஸ்யாதி சாயனாத்
ஆபிரூப்யாச பிம்பாநாம் சிலாபவதி தைவகீ

தெரிந்துனரின் முப்போதும் செல்காலம் நிகழ்காலம்
வரும்கால மானவற்றின் வழிவழியே திருத்தொண்டில்
விரும்பிய அர்ச்சனைகள் சிவவேதியார்க்கே உரியன
அப்பெருந்தகையார் குலப் பெருமையாம் புகழும் பெற்றியதோ

இந்நூல் ஆதி சைவர்கள் வரலாறு என்ற பெயரில் ஒரு அற்புத நூலாக, ஆகமவித்தகர், சித்தாந்த ரத்னம் தில்லை. எஸ். கார்த்திகேய சிவம் M.A. அவர்களால் தொகுத்து எழுதப்பட்டுள்ளது. நூல் எழுதுவது என்பது சாதாரண விஷயமல்ல. பல நூல்களைக் கொண்டு பலவாற்றானும் ஆராய்ந்து எழுதப் புகுதல் வேண்டும். நூலின் மையக் கருத்திலிருந்து சிறிதும் பிறழாமல் கொண்டு செல்ல வேண்டும். எனவே நூல் எழுதுவது என்பது ஒரு சாதனைச் செயலாகும்.

இளம் வயதில் முதிர்ச்சி பெற்ற அறிவோடு தில்லை. எஸ். கார்த்திகேய சிவம் அவர்கள் பெரு முயற்சி எடுத்து இந்நூலை ஆக்கியிருப்பது சிவனருட் செயலேயாகும். ஆதி சைவர் பெருமை பேசும் முப்போதும் திருமேனி தீண்டுவார் புராணம் கூறப் புகு முன், சேக்கிழார் சுவாமிகள் `அப் பெருந்தகையார் குலப் பெருமை யாம் புகழும் பெற்றியதோ'

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என அச்சம் தெரிவித்தே பாடியருளியுள்ளார். சகல லோக நாயகன், உமையொரு பாகன், ஆகமமாகி நின்று அண்ணிக்கும் பெருங்கருணைத் தடங்கடல் ஆகிய பரமனை ஆத்மார்த்தம் பரார்த்தம் எனும் இருவகையாலும் அப்போதைக்கப்போது ஆர்வமிகு அன்பினராய் திருமேனி தீண்டி பூஜிக்கும் பேறு பெற்றவர்கள், சிவாசாரியார்கள் எனப்படும் ஆதி சைவர்களாவர். ஒரு கற்சிலை தெய்வமாவது அர்ச்சகனுடைய ப்ரபாவத்தினால் தான் என்கிறது ஆகமம். அதாவது பெரும் பொருட் செலவில் ஆலயம் அமைக்கப்படுகிறது. தெய்வத் திருவுருவச் சிலைகள் சிற்பிகளால் வடிவமைக்கப்படுகின்றன. நிறைவாக ஆசார்யன் மூலமந்திர நியாஸம் செய்தால் தான் ஆலயமும் சிலைகளும் தெய்வத்தன்மையடைகின்றன. இதனை ஆவாஹனம் என்பர். இறை சக்தியை ஈர்த்து அச்சிலையில் நிறுத்துதல் என்பது பொருள்.

ஆத்ம சுத்தி, ஸ்தான சுத்தி, மந்திர சுத்தி, திரவிய சுத்தி, லிங்க சுத்தி என்பன ஐவகை சுத்திகளாகும். இதில் ஆத்ம சுத்தி என்பது நுண்ணுடல் பருவுடல் தூய்மையை மந்திர ஸம்ஸ்காரங்களினாலே செய்து அந்தர்யாகம் எனும் அகப்பூசை செய்து ஆசார்யன் தமது இதய கமல மத்தியில் ஸ்வயம் ப்ரகாசமாகவிருக்கும் சுவாமியை பூஜிப்பதாகும். இதற்கான உபகரணங்கள் யாவுமே ஆசார்யனின் நல்லொழுக்கங்களேயாகும். கொல்லாமை, புலனடக்கம், தவம், அறிவு, அன்பு, பொறுமை, வாய்மை, பொறை எனும் எண்வகை குணங்களே அஷ்ட புஷ்பங்களாம். தகாத ஆசைகளை விட்டொழிக்கும் வைராக்ய குணமே சந்தனம். இத்தகுதியில் நின்று இவ்வகைப் பூஜையைச் செய்யும் ஆசார்யனின் இதய கமலத்தில் வீற்றிருக்கும் பெருமானே ஆத்மார்த்த பரார்த்த பூஜாலிங்கங்களில் எழுந்தருளுகிறார். ப்ராணாயாம யோக சாமாத்தியத்தினால் இதயத்திலிருந்து பெருமானை மூலமந்திர உச்சாரணத்துடன் எழுப்பி பிரம்மரந்திரம் வழி துவாதசாந்தம் மட்டும் கொண்டு சென்று அங்கும் பரசிவத்தோடு ஒருமித்து மீண்டும் பிரம்மரந்திரம் வழி மூச்சுக்காற்றோடு நாசி மார்க்கமாய் வெளிக்கொணர்ந்து கையிலுள்ள புஷ்பாஞ்சலியில் சேர்த்து மூல மந்திர உச்சாரணத்துடன் லிங்கத்தில் பதிவு செய்வதே ஆவாஹணம் என்றும் ஜீவந்யாஸம் என்றும் போற்றப்படுகிறது. ஒரு நாளில் எத்தனை காலம் பூஜை செய்தாலும் அப்போதைக்கு அப்போது ஆர்வமும் அன்பும் பெருக நின்று செய்யும் தகைமை பூண்டவர்கள் ஆதிசைவர்கள். இதனால் தான் கற்சிலை தெய்வத்தன்மையடைகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவர்கள் சிவஸ்ருஷ்டி என்பதால் மற்றைய மக்களோடு ஒப்பிட முடியாதவர்கள். வழி வழி அடிமை செய்யும் அதாவது பரம்பரையாக பூஜிக்கும் பேறு பெற்றவர்கள். இது செய்திகளையெல்லாம் வேத ஆகம புராண இதிகாச பன்னிரு திருமுறைகளில் உள்ள ப்ரமாணங்களுடன், விளக்கியுள்ள நூலாசிரியர் ஆதிசைவ குலத்துதித்த பலரும் தம் குலப் பெருமையறியாது இருப்பதையும் சற்று வருத்தத்துடன் பதிவு செய்துள்ளார்.

எனவே, இந்நூல் ஒவ்வொரு அர்ச்சகர் வீட்டிலும் இருக்கவேண்டும். அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டும். பொக்கிஷமாகப் பாதுகாக்கப்பட வேண்டும். வரும்தலைமுறைகளும் அறிந்து கொள்ள வகைசெய்ய வேண்டும். சிவாகமப் பாடசாலைகளில் பாடமாக போதிக்கப்படவேண்டும். இந்நூல் கூறும் செய்திகளை மத்திய மாநில அரசுகளும் அறியும்படிச் செய்து முன்னவனார் கோயில் பூஜைகள் ஆதிசைவர்களைக் கொண்டு ஆகமநெறிப்படி நடந்திட வழிவகை செய்ய வேண்டும். மற்றய சமூகத்தினரும் சிவநேயச் செல்வர்களும் காய்தல் உவத்தலின்றி இந்நூலைப் படித்து ஏற்றுப் போற்ற வேண்டும்.

நூலாசிரியர் தில்லை. எஸ். கார்த்திகேய சிவம் இந்நூல் போன்று இன்னும் பல நூல்கள் எழுதி சைவத் தமிழுலகிற்குத் தொண்டாற்றிட உமையொரு பாகன் திருவருள் புரிந்திட வேண்டி வாழ்த்துகிறோம்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

எல்லாம் சிவனருள்

மயிலாடுதுறை
5.10.2015

(A.V. சுவாமிநாத சிவாசாரியார்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

நமசிவாய



சிவத்தொண்டர்.நாட்டார்.N.S.ராமலிங்கம்
தலைவர், பிரதோஷ வழிபாட்டு மன்றம்
தொழிலதிபர், N.S.R.ஏஜன்சீஸ்

"நாட்டார் இல்லம்" தேவபாண்டலம், சங்கராபுரம் தாலுக்கா,
விழுப்புரம் மாவட்டம்.தொலைபேசி: 04151-235309

திருச்சிற்றம்பலம்

"இனிய நிகழ்காலம்" "இனிதே எதிர்காலம்"

அருள் அணிந்துரை

பொரசக்குறிச்சி என்கின்ற ஒரு சிறிய கிராமத்தில் அவதரித்த தில்லை.எஸ்.கார்த்திகேய சிவம் எம்.ஏ., அவர்கள் ஆகம நூல்களை நன்கு கற்றுணர்ந்த படிப்பாளி. அவர்கள் பல நூல்களை நன்கு படித்து அறிந்துதான் இந்த ஆதிசைவர்கள் வரலாற்று நூலை எழுதி உள்ளார்கள். அவர்தம் விடாமுயற்சியால் பல நூல்களைப் படித்து அறிந்தவர். அதனால்தான் இந்த செயற்கரிய நூலை எழுதி உள்ளார்.

பாலில் தயிர், வெண்ணெய், நெய் உள்ளது போல் பாலை நன்கு காய்ச்சி பொறை ஊற்றி தயிராக்கி, தயிரை நன்கு கடைந்தபின்னர் வெண்ணெய் வருகிறது. அந்த வெண்ணையினை அடுப்பில் வைத்து காய்ச்சி நல்ல நறுமண சுவை மணக்கும் நெய்யினை நமக்கு இந்த நூல் ஆசிரியர் கொடுத்துள்ளார். நன்றி!

சைவம் என்னும் பெருங்கடலில் தைரியமாக விடா -முயற்சியாக மூழ்கி நல்ல முத்துக்களையும், பவழங்களையும் எடுத்துவந்து அவைகளை கோர்த்து நல்ல அழகான ஜொலிக்கும் மாலையை கட்டி தில்லை.எஸ்.கார்த்திகேய சிவம் இந்த வரலாற்று மாலையை நமக்கெல்லாம் சார்த்தி மகிழ்ந்து உள்ளார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்த வரலாற்று நூல் எக்காலத்தும் பிரகாசித்துக் கொண்டே இருக்கும். படித்த அறிஞர்கள் மத்தியில் இதுபோன்ற நூலை வெளியிட்ட தில்லை.எஸ்.கார்த்திகேய சிவம் அவர்களின் துணிவை பாராட்டியே ஆக வேண்டும்.

படித்த எல்லோருக்கும் ஞானம் என்ற விளக்கு உண்டு. அந்த ஞான விளக்கில் நன்னூல் என்ற திரியைப் போட்டு, அறிவு என்ற நெருப்பை ஏற்றி நன்கு சுடர்விட்டு எரியும்படி தூண்டி, தூண்டி விட்டு எரியும்படி செய்துள்ளார்கள்.

பலகாலம் பல நூல்களைப் படித்து, படித்து ஆராய்ந்து, ஆராய்ந்து தெளிந்த நீரோடையைப் போல் இந்த நூலை எழுதி உள்ளார்கள்.எத்தனையோ மேற்கோள்கள் காட்டி இவற்றையெல்லாம் படிக்கும்பொழுது மெய் சிலிர்க்கிறது. அவரது உழைப்பை எண்ணி வாழ்க தில்லை.எஸ்.கார்த்திகேய சிவத்தின் தொண்டு.

உள்ளம் வாழ்க! வாழ்க! வாழ்க!

இது போன்ற இன்னும் அறிய புத்தகங்களை வெளியிட தில்லைக் கூத்தன் இவருக்கு அருள் பாலிக்க வேண்டுகிறேன்.

படித்தால் மட்டும் போதாது அதனுள் இருக்கும் கருத்துகளை தனித்தனியே எடுத்து உணர்ந்திட அறிவு கூர்மை வேண்டும். இந்த நூலாசிரியர் திறமை மிக்கவர், தெய்வத் தொண்டோடு, சமூகத் தொண்டும் திறம்பட செய்து வருகிறார். அவர்தம் தொண்டுகள் சிறக்க இந்த நூலின் கருத்துகளே சிறப்பு தருகிறது.

வாழ்த்திக் கொண்டிருக்கும்,

தொண்டன்.நாட்டார்.N.S.**ராமலிங்கம்**
தேவபாண்டலம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



உ

திருப்பணிச் செல்வர்.

கி.வீரமுத்து

ஊராட்சி மன்ற தலைவர்,

தொழிலதிபர், செந்தில்ராஜா பஸ் சர்வீஸ்

பொரசக்குறிச்சி ஊராட்சி, கள்ளக்குறிச்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம்

வாழ்த்துரை

ஆதிசைவர்களின் வரலாற்றை எழுதி எம் பொரசை மண்ணுக்கு பெருமை சேர்த்த இதன் ஆசிரியர் பெருமகனார் தில்லை.எஸ்.கார்த்திகேய சிவம் எம்.ஏ., அவர்கள் பொரசை மண்ணிலே தவழ்ந்து ஸ்ரீ திரிபுரசுந்தரி உடனுறை சோமநாதீஸ்வரரை பாட்டனாகவும், பாட்டியாகவும் நினைத்து பூஜை செய்து அவர் தம் பிறவிக்கு பெருமை சேர்த்துள்ளார்.

தான் பிறந்த குருக்கள் சிவாசாரியார்கள், ஆதிசைவர்கள் மரபு வழிவந்தவர்கள் என்று பல சரித்திர சான்றுகள் மூலம் எடுத்துக் காட்டியும், அவர்கள் சிவனின் முகத்தில் அவதரித்தவர் என்றும், சிவனை தொட்டு பூஜை செய்யக்கூடிய உரிமை உள்ளவர்கள் என்றும் சான்றுடன் எடுத்துக் கூறியுள்ளார், காலப்போக்கில் மாற்று தேசத்தவர் படையெடுப்பால் ஆலயங்கள் சீர்குலைந்து வழிபாடுகள் முடங்கியததாகவும், அதன்பின் ஆதிசைவர்கள் வழிவந்த குருக்கள், சிவாசாரியார்கள் மிகவும் வறுமையில் சிவனை ஒரு கால பூஜை செய்ய முடியாத ஏழ்மை நிலைக்கு தள்ளப்பட்டார்கள் என்றும், அன்று அவர்கள் இருந்த நிலைமையும், இன்று அவர்கள் உள்ள நிலைமையையும் பல நூல்களை உவமைப்படுத்தி எழுதியுள்ளார்.

அவர் எழுதிய நூலின் பொருட்சுவை உணர்ந்து இனி வரும் அரசு சார்ந்தவர்கள் நம் புராதான ஆலயங்களை சீர்செய்தும், சிற்பங்களை பாதுகாத்தும், ஆலயங்களில் அதற்கு உரியவர் மூலம் வழிபாடுகள் நடத்த வேண்டும் என்பதே என் போன்ற ஆர்வலர்களின் வேண்டுகோளாகும்.

இந்நூலைப் போல தன் சிறுவயதிலேயே பல நூல்களை எழுதி, ஆகமவித்தகர், சித்தாந்த இரத்தினம் பட்டம் பெற்றும் சிவாகமம், ஜோதிடம், சிற்ப சாஸ்திரங்கள் பயின்று பலராலும் போற்றப்பட்டு எம் பொரசை மண்ணுக்கு பெருமை சேர்த்த பெருமகனாருக்கும், அவர் சார்ந்த குடும்பத்தாரையும், அவர் வழிபடும் பாட்டன், பாட்டி அருள்புரிய வாழ்த்தி

வணங்கி மகிழும் அன்பன்



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ ஸதாசிவமூர்த்தி தியானம்

"இந்துநிப பஞ்சமுக ஹஸ்ததச யுக்தம்
சூலவர டங்கமஸி வஜ்ரமபயம் ஸ்யாத்
பாசவரததாங்குச மணீர்தஹநு வாமே
ஸ்வதே கமலாஸன ஸதாசிவ ஸ்வரூபம்."

"திருஉருவம் தெளிபளிங்கு சடாமகுடத்து இதழி
சிறுபிறையும் மூவைந்தும் திருநயனம் வலப்பால்
கரதலத்தில் சத்தி அபயம் சூலம் நீலம் கட்டங்கம்
தமருகமும் மற்றை இடக்கரத்தில்
வரதமும் மாதுளம் கபாலம் போகிசபமாலை
மணம்மலி நீலோற்பலமும் உடையர் வயது ஈர்எட்டு
உருஇரட்டி உறுப்பு இரண்டுபதம் பதும ஆதனம்தான்
உற இருப்பர் சதாசிவர் தத்துவ தவிசில் உகந்து."

–சிவதருமோத்திரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ கண்டாசார்ய ஸ்துதி

"ஸ்ரீ கண்டவம்சோ ததிபூர்ண சந்திரம்
ஸ்ரீ கண்ட சாஸ்த்தரார்த்த விதம் முனீந்திரம்
ஸ்ரீ கண்ட பாவாஞ்சித யஞ்ஜஸூத்ரம்
ஸ்ரீகண்டம் ஆச்சார்யம் அஹம் பஜாமி."

"மஹானுபாவம் த்விஜ மாதிசைவம்
மோஹாடவீதாவ ஸமித்தபாவம்
ஸம்ஸார வாதுர்யுத்தரணைவம்
ஸம்ஸ்தோம்ய யஜஸ்ரம் ஹ்ருதி பக்தியுக்தயா."

In Public domain. Digitized by Muthulakshmi Research Academy

ஆதிசைவ சிவாசாரியார்களின் லோக குரு

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ சுந்தரமூர்த்தி ஸ்வாமி தியானம்

கேயுர குண்டல கிரீட விபூஷிதாங்கம்
ஹஸ்தேத்பலம் கடிகரம் த்ருதராஜவேஷம்
ருத்ராக்ஷ ருத்ரஜப பூதி லலாட பாஜம்
த்யாயேத் தீரிபம்க சிவசுந்த்ர மூர்திரூபம்.

"ஒரு மணத்தைச் சிதைவு செய்து வல்வழக்
கிட்டாட் கொண்ட உவனைங் கொண்டே
இருமணத்தைக் கொண்டருளிப் பணிகொண்ட
வல்லாள னெல்லாமுய்யப்
பெருமணச்சீர் திருத்தொண்டத் தொகைவிரித்த
பேரருளின் பெருமானென்றுந்
திருமணக் கோலப்பெருமான் மறைப்பெருமா
ளெமது குலதெய்வமா மால்."

–காஞ்சிப்புராணம்

In Public Domain. Digitization: Muthulakshmi Research Academy

உ

சிவாய நம :

திருச்சிற்றம்பலம்

முன்னுரை



"ஸதாசிவ ஸமாரம்பாம் ஸ்ரீ கண்டாச்சார்ய மத்யமாம்
அஸ்மத் ஆச்சார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம்."

"சாட எடுத்தது தக்கன்தன் வேள்வியில் சந்திரனை
வீட எடுத்தது காலனை நாரணன் நான்முகனும்
தேட எடுத்தது தில்லையுள் சிற்றப்பலத்து நட்டம்
ஆட எடுத்திட்ட பாதம் அன்றோ நம்மை ஆட்கொண்டதே"

எல்லாம் வல்ல ஸ்ரீ திரிபுரசுந்தரி உடனுறை ஸ்ரீ சோமநாதீஸ்வரர் திருவருளினாலும், ஸ்ரீ சிவகாமசுந்தரி உடனுறை ஸ்ரீ ஆனந்த நடராஜமூர்த்தி திருவருளினாலும், ஸ்ரீ ஒப்பிலா முலையம்மை உடனுறை ஸ்ரீ கோமுக்தீஸ்வரர் திருவருளினாலும் **ஆதிசைவர்கள் வரலாறு** என்ற நூல் சிவனருள் உள்நிற்க அடியேனால் எழுதப்பட்டுள்ளது.

மாதொருபாகனார்க்கு வழிவழி அடிமைசெய்யும் ஆதிசைவர்களாகிய சிவாசாரியார்களின் புகழும், பெருமையும், உயர்வும், ஆகமங்களிலும், சைவ பக்தி இலக்கியங்களிலும் பரவி உள்ளன.

ஆதிசைவர்களுக்கும் சிவபெருமானுக்கும் உள்ள பந்தம், ஆதிசைவர்களுக்கும் சைவ சமயத்திற்கும் உள்ள பந்தம் அளவிடற்கரியது. இத்தகைய சிறப்புடைய ஆதிசைவர்களின் வரலாற்றை, பெருமைகளை, சைவ சமய உலகம் தெரிந்து கொள்வதன் பொருட்டும், முக்கியமாக ஆதி சைவர்களிடமே தங்கள் வரலாறுகளை பற்றிய, பெருமைகளை பற்றிய போதிய விழிப்புணர்வு இல்லாததால் ஆதிசைவர்களிடையே விழிப்புணர்வை உண்டாக்கும் பொருட்டும் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

ஆதிசைவர்கள் ஒவ்வொருவரும் இந்நூலினை கண்டு தங்கள் வரலாற்றையும், பெருமையையும் உணர்வதோடு, தங்கள் குடும்பத்து பெண்களிடமும், குழந்தைகளுக்கும் தாங்கள் சார்ந்த சைவ சமய அன்பர்களிடமும், தங்கள் உண்மை வரலாற்றை கொண்டு சேர்க்க வேண்டும் என்பதே எனது அவா.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

எனது இளமை சிறுவயதில் அடியேன் கொண்ட தீவிரமான **தில்லை சிதம்பரம் தரிசனமும், திருவாவடுதுறை ஆதீனம் தொடர்புமே** அடியேனுக்கு சிவபற்றையும், சைவ சமய தத்துவங்களையும் உணரும் திருவருளை தந்ததாக என் உள்மனத்தின் நம்பிக்கையை இங்கு பதிவு செய்கிறேன்.

வரலாறு என்பது நாம் பழைய விஷயங்களை மீண்டும் நினைவு கூர்ந்து கொள்வதற்கு மட்டுமல்ல, பழைய விஷயங்களில் இருந்து நாம் கற்றுக் கொள்ளவும்தான். அந்த வகையில் ஆதிசைவர்களை பற்றிய வரலாற்று ஆராய்ச்சிக்கு இது ஓர் ஆரம்பம். ஒவ்வொரு ஆதிசைவரும் தங்கள் வரலாற்றினை, பெருமைகளை உணர்ந்து செயல்பட வேண்டும் என்ற பணிவான கோரிக்கையை ஒவ்வொரு ஆதிசைவரின் திருவடிகளிலும் சமர்ப்பிக்கின்றேன்.

இந்நூல் எழுதுவதற்கு உறுதுணையாக பல நூல்கள் எனக்கு உதவின. அந்நூல் ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது பணிவான நன்றிகள். இந்நூலுக்கு சிறந்த முறையில் வாழ்த்துரை வழங்கிய சைவ ஆதின பீடங்களுக்கும், சிவாசாரிய பெரியோர்களுக்கும், சைவ பெருமக்களுக்கும் பணிவான நமஸ்காரங்கள்.

இந்நூலினை சிறந்த முறையில் அச்சிட்டு தந்த கள்ளக்குறிச்சி ஸ்ரீ சத்யா பிரிண்டர்ஸ் உரிமையாளர்கள் இராம.கிருஷ்ணமூர்த்தி, சோ.இராமமூர்த்தி அவர்களுக்கு மிகுந்த நன்றிகள்.

அடியேனால் இயன்றவரை ஆதிசைவர்கள் தொடர்பான அனைத்துவித விஷயங்களையும் சேகரித்து இந்நூலினை எழுதியுள்ளேன். எனவே, ஆதிசைவர்களே வாருங்கள்,

கடந்த காலம் தெரிவோம்
கடந்த காலம் தெரியாதவர்களுக்கு நிகழ் காலம் புரியாது.
நிகழ் காலம் புரியாதவர்களுக்கு எதிர் காலம் இல்லை.

இந்நூலினை கண்ணுறும் ஆதிசைவ பெரியோர்களும், சைவ பெருமக்களும் இந்நூலில் உள்ள குற்றங்களை பொருத்து, குணங்களை கொள்ள வேணுமாய் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மாதொரு பாகனார்க்கு
வழிவழி அடிமையான்
தில்லை.S.கார்த்திகேய சிவம்

ஸ்ரீ மன்மத வருஷம்
2016

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருளடக்கம்

பக்கம்

1. ஆதிசைவர்கள் 3
2. ஆதிசைவர்களின் தோற்றம் 7
3. ஆகமங்களும் ஆதிசைவர்களும் 12
4. ஆலய பூஜைகள் ஆதிசைவர்களுக்கே உரிமையானது 23
5. சிவவேதியர், வேத வேதியர் 33
6. ஆதிசைவர்கள் இனத்தால் தமிழர்களே 37
7. ஆதிசைவர்களின் தொன்மை 40
8. ஆதிசைவர்களின் தமிழ்த்தொண்டு 42
9. ஆதிசைவர்களின் வடமொழித் தொண்டு 49
10. ஆதிசைவர்களின் சிறப்பு பெயர்கள் 56
11. திருமடங்களும் ஆதிசைவர்களும் 62
12. மன்னர்களுக்கு ராஜ குருவாக ஆதிசைவர்கள்...... 74

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

13. சிவபெருமான் சைவ சமயத்தின் அரும்பெரும் செயல்களை பணிகளை ஆதிசைவர்களையே கொண்டு செய்தல் 78

14. சிவபெருமான் தன்னை பூஜிக்கும் ஆதிசைவர் கோலம் கொண்டே அடியவர்களுக்கு அருள் செய்தல் 84

15. ஆதிசைவர்களின் இடைக்கால நிலை 92

16. நிகழ்காலத்தில் ஆதிசைவர்கள் 109

17. ஆதிசைவர் மரபில் அவதரித்த அருளாளர்கள் 126

18. ஆதிசைவ மரபில் அவதரித்த பெண் சித்தர் 136

19. மருதமரத்தை காத்த புஷ்பவன குருக்கள் 138

20. ஆதிசைவ சிவாசாரியார்களின் பழக்கவழக்கங்கள்.. 141

21. ஆதிசைவர்களின் கடமைகளும், பணிகளும் 144

22. ஓர் வேண்டுகோள் 147

23. மூன்றாம் குலோத்துங்கசோழன் ராஜகுரு ஸ்ரீ ஈஸ்வர சிவாசாரியார் 152

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

1.ஆதிசைவர்கள்

தமிழகத்தின் தொன்மையான சமயங்களாக விளங்கக் கூடியவை சைவமும், வைணவமும் ஆகும். இவற்றில் சைவம் என்ற சொல் சிவசம்பந்தம் உடையது என பொருள்படும்.

“**சைவம் சிவனுடன் சம்பந்தமாவது.**” என்பது. திருமூலரின் திருமந்திரமாகும். சைவ சமயத்தின் முழுமுதற் கடவுள் சிவபெருமான். இவரை பக்தி இலக்கியங்கள் **அநாதிசைவர்** என்றும், இவரை முப்போதும் திருமேனி தீண்டி பூஜை செய்து வழிபடும் சிவாசார்ய பெருமக்களை **ஆதிசைவர்** என்றும் பக்தி இலக்கியங்கள் போற்றி வழிபடுகின்றன. இதனை,

“அரிய சதாசிவனென்போன் அனாதி சைவன்-அவன்பால்
அவதரித்த சிவமறையோர் ஆதிசைவர்.”

என்ற பாடலால் அறியலாம்.

தமிழகத்தின் அனைத்து சிவாலயங்களிலும் அகத்தடிமை திருத்தொண்டு செய்துவரும் இவர்கள், குருக்கள், பட்டர், நாயனார், நாயகர், சிவாசாரியார், என பல பெயர்களில் அழைக்கப்பட்டாலும் பொதுவாக தமிழில் உள்ள பக்தி இலக்கியங்கள் இவர்களை “**ஆதிசைவர்கள்** ” என்றே அழைக்கின்றன. சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில் இவர்களை,

“**மாதொரு பாகனார்க்கு வழி வழி அடிமைசெய்யும் வேதியர் குலம்**” என்று போற்றி பாடுகின்றார்.

மேலும், பெரியபுராணத்தில் ஸ்ரீ சுந்தரர் திருவெண்ணெய்நல்லூர், வழக்காடு மன்றத்தில் தம்மை அறிமும் செய்துக் கொள்ளும் பொழுது,

“**அனைத்து நூல் உணர்ந்தீர் ஆதிசைவனென்றறிவீர்.**” என்று கூறுகிறார்.

ஸ்ரீ சுந்தரரின் பாட்டனார் ஆரூரன் சிவாசாரியார் தம் கைபடயெழுதிய ஓலைச்சுவடியில்,

“**அருமறை நாவல் ஆதிசைவன் அரூரன்.**” என்று குறிப்பிட்டு, தன்னை **ஆதிசைவன்** என்றே அறிமுகப்படுத்திக் கொள்கிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ சுந்தரர் வாழ்ந்த காலம் கி.பி. 7-ம் நூற்றாண்டு. எனவே, 7-ம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே ஆதிசைவர்கள் தமிழகத்தில் வாழ்ந்து வருவதும், சிவால்ய பூஜைகள் செய்து வருவதும் வரலாற்று உண்மையாகும்.

தமிழ்த்தாத்தா உ.வே.சா.அவர்கள் தமது **என்சரித்திரம்** நூலில் தமது ஊர் சிவாலயத்தில் "**ஆதிசைவர்** " ஒருவர் பூஜை செய்வதாக குறிப்பிட்டுருப்பார்.

ஸ்ரீ உமாபதி சிவாசாரியார் தாம் அருளிய **திருத்தொண்டர் புராண சாரத்தில்,**

"தன்கயிலை யதுநீங்கி நாவலூர்வாழ் **சைவனார் சடையனார்** தனயனராய் மண்புகழ அருட்டுறையான் ஓலைகாட்டி மணம் விலக்க வன்தொண்டராய்"

என்று பாடுகிறார். இதில் ஸ்ரீ சுந்தரரின் தந்தை **சடையனாரை** **சைவனார்** என்ற அடைமொழிக்கொண்டு அழைக்கிறார்.

மேலும், **ஸ்ரீஉமாபதி சிவாசாரியார் திருமுறை கண்ட புராணத்தில்** நம்பியாண்டார் நம்பி அவதாரத்தை குறிப்பிடும் பொழுது,

"..........நாரையூரினில் **ஆதிசைவ மறையோன் பால்**
வையமெலாம் ஈடேறச் சைவம்வாழ மாமணிபோல் ஒரு
சிறுவன் வந்து தோன்றி" -என்று பாடுகின்றார்.

இதில், நம்பியாண்டார் நம்பி திருநாரையூரில் ஆதிசைவ மரபில் அவதரித்ததாக குறிப்பிடுகின்றார்.

சந்தானாசாரிய புராண சங்கிரகத்தில் திருவாரூர் சாமிநாத தேசிகர், அருள்நந்தி சிவாசாரியார் புராணத்தில்,

"வேத வொலியு முழவொலியும்
வேள்வி யியற்றுந் திருமுறையோர்
நாதவொலியு மோவாத
நன்மை பெருகுந் திருத்துறையூர்
ஆதி சைவ குலம் புரிந்த
அருமை யான பெருந்தவத்தால்
நீதி சாலுஞ் சிவாகமங்கள்
நிலவ வொருவ ரவதரித்தார்".

என்று பாடியுள்ளார். இப்பாடலில் **அருள்நந்தி சிவாசாரியார்** ஆதிசைவ மரபில் சிவாகமங்கள் நிலைபெற்று விளங்க அவதரித்தவர் என்று குறிப்பிடுகின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ மாதவ சிவஞான சுவாமிகள் பாடி அருளிய காஞ்சிப் புராணத்தில்,

"இருண்மலந் துமிக்குஞ் சிவாகம முறையி னீரிரு பாதமு மனுட்டித்
தருள்பெறு மாதி சைவர்க ளாதி யவாந்தர சைவரீ றனோர்
மருவிவாழ் மாட மாளிகைப் பக்தி மருங்குடுத் துயர்வனப் பினதாற்
றெருடரு மனாதி சைவர்வீற் றிருக்குந் திவளொளிப் புரிசையே கம்பம்."

என்று சிவாகம விதிப்படி பூஜித்து வழிபடும் சிவாசாரியர்களை ஆதிசைவர் என்று குறிப்பிட்டு பாடியுள்ளார்.

திருவாவடுதுறை ஆதினத்துக் **கவிராக்ஷஸ ஸ்ரீகச்சியப்ப முனிவர் தாம் பாடியருளிய தணிகைப்புராணத்தில்,**

"அருள்வளங் கொழிக்கு மைந்தொழி லாக
வடங்கிய சிறப்பொடு பூசை
மருவுமெவ் வகையு மாகம வழியான்
மயரறத் தெளிந்தவர் வரையாச்
சுருதிகண் மிருதி புராணமெக் கலையுந்
துகளறத் தெரிந்தவ ரிறைவன்
தருதிரு மேனி தீண்டிடு **ஆதிசைவர்**"

என்று ஆகமவழியில் சிவபெருமானின் திருமேனி தீண்டி வழிபடும் ஆதிசைவர்களை போற்றி பாடுகின்றார்.

மேலும், **ஸ்ரீவிநாயகர்புராணத்தில் கவிராக்ஷஸ ஸ்ரீ கச்சியப்பமுனிவர்,**

"நயந்தரு வேதமோதி நல்லவாகமங்கடேற்றிப்
புயந்தலைச் சூலம் வைத்த புனிதர் பூசனையாற்பேறு
வயத்துறு தமக்குமேனை வையகத்தெவர்க்குமாக்கும்
வியத்தகும் **ஆதிசைவர்**"

என்று ஆதிசைவர்களை வியந்து போற்றுகின்றார்.

இளைசைப் புராணம்,

"வேதமுற் கலைகளோடு விரிந்திடு சிவாகமங்கள்
ஓதியே யுண்மை தேறியுயர் கயிலாய நாதர்
சோதிதன்மேனி தீண்டித் தொன்மை யாராதனஞ்செய்
கோதிலா **ஆதிசைவர்**"

என்று ஆதிசைவர்களை போற்றி புகழ்கின்றது.

இவ்வாறு சிவபெருமானை முப்பொழுதும் தீண்டி வழிபடும் சிவாசாரியார்களை ஆதிசைவர்கள் என்று பக்தி இலக்கியங்கள் பல இடங்களில் போற்றுவதை காணமுடியும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"**ஆதி** " என்றால் முதன்மையான என்று பொருள்படும்

"**சைவர்**"என்றால் சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வழிபடுபவர் என்று பொருளாகும்.

சிவபெருமானை வழிபடுவதில் முதன்மையானவர், சிவபெருமானை வழிபடுவதற்கு வழிகாட்டுவதில் முதன்மையானவர் என்பதால் இவர்களுக்கு "**ஆதிசைவர்** " என்று பெயர் ஏற்பட்டது.

ஆதிசைவர்கள் சிவபெருமானையே முழுமுதற் பரம் பொருளாக வழிபடும் உறுதி படைத்தவர்கள்.

ஆதிசைவ சிவாசாரியார்களின் குரு துதியானது,

"ஸதாசிவ ஸமாரம்பாம் ஸ்ரீ கண்டாச்சார்ய மத்யமாம்

அஸ்மத் ஆச்சார்ய பரியந்தாம் வந்தே குருபரம்பராம்"

என்பதாகும். அதாவது ஸதாசிவமூர்த்தியாகிய சிவபெருமானையே **தங்கள் குலதெய்வமாகவும், முழுமுதற் பரம்பொருளாகவும்** வழிபடும் மரபும் பேறும் பெற்றவர்கள்.

இவர்கள் சிவபெருமானையே முதற்பரம்பொருளாக வழிபடும் மரபுடையவர்கள் என்பதால்தான், சிவபெருமானை. "**அநாதி சைவன்** " என்றும், சிவபெருமானுக்கு அடுத்த நிலையில் வைத்து இவர்களை "**ஆதிசைவர்கள்** " என்றும் சைவ இலக்கிய நூல்கள் போற்றுகின்றன.

சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில் ஆதிசைவர்களை "**சைவ முதன் மறையோர்**" என்றும், ஆதிசைவ மரபை "**மாசிலா மரபு** " என்று போற்றுகின்றார்.

மாசிலா மரபு - குற்றமில்லாத மரபு. ஏனெனில், ஆன்மாக்களின் பாசத்தைப் போக்கச் சிவபூஜையை மரபு தொழிலாக கொண்டமையால் மாசிலா மரபு என்கிறார்.

வாழ்க ஆதிசைவர்கள் மரபு,

வளர்க அவர்கள் சிவத்தொண்டு.

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

2.ஆதிசைவர்களின் தோற்றம்

ஒரு சமயம் திருக்கயிலை மலையில் பார்வதிதேவி சிவபெருமானிடம் ஆன்மாக்களுக்கு சிவஞானத்தை தந்திடும் உண்மை நூல் எது என்று கேட்டருள,

சிவபெருமான் குருவாக சுகாஸனத்தில் எழுந்தருளி ஆகமங்களை பார்வதி தேவிக்கு உபதேசம் செய்து இந்த சிறப்புமிகு சிவாகமங்களே உயிர்களுக்கு சிவஞானத்தை தந்திடும் உண்மை நூலாகும் என்று அருளிச்செய்தார்.இதனை சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில்,

"வெள்ளி மால்வரைக் கயிலையில் வீற்றிருந் தருளித்
துள்ளு வார்புனல் வேணியார் அருள்செயத் தொழுது
தெள்ளு வாய்மையின் **ஆகமத் திறனெலாந் தெரிய**
உள்ள வாறுகேட் டருளினாள் உலகை ஆளுடையாள்"

என்று பாடியுள்ளார்.

ஆகமங்கள் பார்வதி தேவிக்கே முதன்முதலில் உபதேசம் செய்யப்பட்டது. இதனை

**"ஆகதம் சிவவக்த்ரேப்ய: கதம்ச கிரிஜாமுகே
மதம் ச சிவபக்தானாம் ஆகமம்சேதிகீர்த்யதே"**

என்ற வாக்கு உணர்த்தும்.

ஸ்ரீ அப்பர் பெருமானும் தமது திருவிடைமருதூர் தேவாரத்தில்,

**"இணையிலா இடைமாமருதிர் எழு
பணையில் ஆகமம் சொல்லுந்தன் பாங்கிக் கே"**

என்று அம்பிகைக்கு ஆகமம் உபதேசிக்கப்பட்டதை பாடியுள்ளார்.

இவ்வாறு, சிவபெருமான் பார்வதி தேவிக்கு சிவாகமங்களை உபதேசம் செய்து, தாம் உபதேசம் செய்த ஆகமங்களில் கூறியவாறு, ஆகம மந்திரங்களை கூறி ஆகம விதிப்படி எம்மை பூஜை செய்வது எமக்கு விருப்பமானது என்று சிவபெருமான் கூறியருளினார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதனை சேக்கிழார்பெருமான் தமது பெரியபுராணத்தில்,

**"எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும்
உண்மையாவது பூசனை என உரைத்தருள
அண்ணலார் தமை அர்ச்சனை புரிய ஆதரித்தாள்
பெண்ணில் நல்லவளாயின பெருந்தவக் கொழுந்து"**

என்று பாடியுள்ளார்.

இதன்படி சிவபெருமானுக்கு விருப்பமான சிவபூஜையை ஆகமவிதிப்படி பார்வதி தேவி பூலோகத்தில் சிறந்த இடமான காஞ்சிபுரத்தில் செய்து சிவனருள் பெற்றாள்.

அப்பொழுது, பார்வதி தேவி சிவபெருமானிடம் தாம் உபதேசம் பெற்ற ஆகமங்கள் என்றும் இந்நிலவுலகில் நிலைபெற்று விளங்கவும், தங்களுக்கு விருப்பமானதும், தாம் முதன்முதலில் செய்த சிவபூஜையும் தடைபெறாமல் இப்பூவுலகில் என்றென்றும் நடைபெற்று வரவேண்டும் என்றும் வரம் கேட்கின்றாள்.

அப்பொழுது சிவபெருமான் ஸதாசிவமூர்த்தியாக திருஉருவம் கொண்டு,

ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், ஸத்யோஜாதம் என்ற தமது ஐந்து திருமுகங்களில் இருந்தும்,

**"கௌசிக காச்யபச்சைவ பாரத்வாஜோத கௌதம:
அகஸ்த்யச் சைவ பஞ்சே தே பஞ்சவக்த்ரேஷு தீக்ஷிதா:"**

என்ற வாக்கின்படி,

கௌசிகர், காஸ்யபர், பரத்வாஜர், கௌதமர், அகஸ்தியர் என்ற ஐந்து முனிவர்களை தோற்றுவித்து, அவர்களுக்கு தனது ஐந்து முகங்களாலும் சிவதீக்ஷை செய்து, இந்த ஐந்து முனிவர்களின் வம்சத்தில் வருபவர்கள் மூலம் தாம் உபதேசித்த ஆகமங்கள் நிலைபெற்று காப்பாற்றப்படும் என்றும், தமக்கு விருப்பமான சிவபூஜையானது இவர்கள் வம்சத்தின் மூலம் இப்பூவுலகில் தடைபடாமல் நடைபெற்று வரும் என்று பார்வதிதேவிக்கு வரம் தந்து அருள் செய்தார்.

இவ்வாறு, இந்த ஐந்து முனிவர்களின் வம்சத்தில் வந்தவர்களே **ஆதிசைவர்கள்** எனப்படும் **சிவாசாரியார்களாவர்.**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காரணாகமம், **நித்யார்ச்சனாவிதி படலத்தில்,**

"ஸதாசிவாக்யஸ்ய சிவஸ்ய வக்த்ரே
யேதீக்ஷிதா: கௌசிக காஸ்யபாத்யா:
தேஷாம் முநீநாம் விதிவக்த்ரமேண
ஜாதா சிவப்ராமஹ்ண நாமதேயா: "

அதாவது சதாசிவனுடைய திருமுகங்களில் இருந்து தோன்றி சிவதீக்ஷை செய்விக்கப்பட்ட கௌசிகர், காசிபர் உள்ளிட்ட ஐந்து ரிஷிகள் வம்சத்தில் வந்தவர்களே சிவப்பிராமணர் என பெயர் பெற்றனர் என்பதாகும்.

ஆதிசைவ சிவாசாரியார்கள் சிவபெருமான் திருமுகத்தில் அவதரித்தவர்கள் என்பதை, **திருவாவடுதுறை ஆதின மஹாவித்வான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளை தாம் பாடி அருளிய மயிலாடுதுறை தலப்புராணத்தில்,**

"அண்ணலார் திருமுகங்கள் ஐந்தினும் தோற்றம் உற்றார்
கண்ணலார் பொது சிறப்பாம் முறைகள் ஆகமங்கள் கற்றார்
நண்ணலார் பரார்த்ததோடு ஆன்மார்த்தமும் நயந்து அர்சிக்கும்
எண்ணலார் **ஆதிசைவர்**" -என்று பாடியுள்ளார்.

இப்பாடலில் ஆதிசைவர்கள் சிவபெருமானின் ஐந்து திருமுகத்தில் தோன்றியவர்கள் என்றும்,

இவர்கள் ஆகமங்களை கற்று ஆன்மார்த்தம், பரார்த்தம் என்ற இருவகை பூஜைகள் மூலம் சிவபெருமானை அர்ச்சிப்பவர்கள் என்று குறிப்பிடுகின்றார்.

மேலும், **கோயிலூர் தலப்புராணத்தில் மஹாவித்வான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளை** அவர்கள்,

"கொங்கலர் கடுக்கை வேணிக்குழுகரைம் முகத்துந்தோன்றித்
தங்களான் மார்த்தத்தோடு பரார்த்த பூசனையும் போற்றிப்
பொங்குவேதாகமங்கள் புரையறத் தெரிந்து நாளுந்
துங்கமார் **ஆதிசைவர்**"

என்ற இப்பாடலிலும் ஆதிசைவர்கள் சிவபெருமானின் ஐந்து திருமுகத்தில் தோன்றியவர்கள் என்றும் இவர்கள் ஆகமங்களை தெளிவுற கற்று ஆன்மார்த்த, பரார்த்த பூஜை செய்பவர்கள் என்று பாடியுள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ்வாறு, சிவபெருமானின் ஐந்து திருமுகங்களில் உதித்த **ஆதிசைவர்களாகிய சிவாசாரியார்களே** ஆலயங்களில் சிவாகம விதிப்படி **அகம்படித் திருத்தொண்டு** என்று அழைக்கப்படும் சிவாலய பூஜைகள் செய்வதற்கும், உத்ஸவங்கள், விழாக்கள், கும்பாபிஷேகங்கள் செய்வதற்கும் முழு உரிமை உடையவர்கள் ஆவார்கள்.

ஆதிசைவர்கள் இப்பூலகில் அவதரித்தமைக்கு முதற் காரணம், **ஆகமங்கள் காப்பாற்றப்படவும், ஆகமவிதி சிவபூஜை நடைபெறவும்** என்பதை இங்கு உணர்ந்து கொள்க.

சிவபிரானால் அருளப்பட்ட ஆகமங்களை கடைபிடித்து ஆலயங்களில் இவர்கள் பூஜை செய்வதால் ஆதிசைவர்கள் "**ஆகம அந்தணர்கள்** " என்று அழைக்கப்பட்டனர்.

ஆகமவிதிப்படி ஆதிசைவர்களாகிய சிவாசாரியார்களே வழிவழியாக பூஜை செய்வதே சிவபிரானுக்கு உகந்தது, விருப்பமானது, மகிழ்ச்சி அளிக்கக்கூடியது என்பதை இதன் மூலம் உணர முடியும்.

எனவேதான் சேக்கிழார்பெருமான் பெரியபுராணத்தில் இவர்களை,

"மாதொரு பாகனார்க்கு வழி வழி அடிமை செய்யும் வேதியர் குலம்." என்று போற்றி பாடியுள்ளார்.

அதாவது மாதொருபாகனாராகிய சிவபெருமானுக்கு வழிவழியாக பூஜை செய்யும் சிவவேதியர் குலமே ஆதிசைவர் மரபு என்கிறார்.

இதற்கு விளக்கம் அளித்துள்ள மிகச்சிறந்த சைவ அறிஞர் **சி.கே.சுப்ரமணியமுதலியார்** தமது பெரிய புராண உரையில்,

"வழி வழி அடிமை செய்யும் வேதியர் குலம்." - இதுவே ஆதிசைவ மரபு. சிவப்பிராமணர் என்பார் இவர்களே. இவர்கள் இன்றைக்கும் திருக்கோயிற் பூஜையாகிய அகம்படித் திருத்தொண்டு தவிர வேறு தொழில் செய்யாமை காண்க. சிவாலயத்தில் ஆகம விதிப்படி பூஜை செய்ய இவர்களே உரிமை பெற்றவர்கள் என்கிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"வழி வழி அடிமை" - என்ற பதத்திற்கு பொருள் கூறும்பொழுது, ஆதிசைவர்கள் தந்தை மரபு, தாய் மரபு என்ற இருமரபும் சிவனுக்கு அடிமை செய்யும் அதாவது சிவாலய பூஜை செய்யும் மரபு உள்ளவர்களாய் என்று கூறுகிறார்.

ஆலயங்களில், தன்னருளை சிவலிங்கமாக காட்டிய சிவபெருமான், அந்த சிவவழிபாட்டுக்கென தன்னருள் பெற்ற ஞானிகளை பக்குவப்படுத்தி சிவஞானத்தை அளித்து படைத்தருளிய **சிவமரபே ஆதிசைவ சிவாசாரியார்கள் மரபாகும்.**

சைவ அன்பர்களுக்கு ஆகமவிதிப்படி சிவதீக்ஷை அளித்து சிவபூஜை செய்திட வழிகாட்டியும், தன்னலவில் ஆத்மார்த்த பூஜை செய்தும், திருக்கோவிலில் பரார்த்த பூஜை செய்தும் சைவ பரிபாலனம், சிவபரிபாலனம் செய்து குருவாக, ஆச்சாரியராக இருந்திடவே ஆதிசைவர்களாகிய சிவாசாரியார்கள் இவ்வுலகில் தோற்றுவிக்கப் பட்டார்கள்.

ஆதிசைவர்களின் பூர்வீகத்தை பொருத்து **திருவாலங்காடு வகையறா, காஞ்சிபுரம் வகையறா, திருக்கழுக்குன்றம் வகையறா** என்று கூறப்படுகிறது. ஆனால் இது பற்றிய வரலாறுகள் முழுமையாக அறிய முடியவில்லை.

இதன் மூலம் ஆதிசைவர்களின் தோற்றத்தின் பெருமையையும், தொண்டின் உண்மையையும் உணர முடியும்.

திருச்சிற்றம்பலம்

சிவாசார்யார்களின் பஞ்ச க்ருத்யம் (ஐந்தொழில்)

"ஸ்நானம் ஸந்திம் ச ஸ்ருஷ்டிம் ஸ்யாது
ஜபம் ந்யாஸ ஸ்திதிம் பவேது
ஸம்ஹாரம் ஹோம த்யாநம் ச
ப்ரம்ம யக்ஞம் திரோபவேது
அநுக்ரஹம் சிவபூஜாம் ச
ஆசார்ய பஞ்ச க்ருத்யகம்" -அம்சுமத்யாகமம்

சிவாசார்யார் செய்யும் ஸ்நாநம், ஸந்தி ஆகியவை ஸ்ருஷ்டியையும், ஜபம் ந்யாஸம் ஸ்திதியையும், ஹோமம் த்யானம் ஸம்ஹாரத்தையும், ப்ரும்ஹயக்ஞம் திரோபவத்தையும் சிவபூஜை அனுக்ரஹத்தையும் குறிக்கும். இதுவே, ஆசார்ய பஞ்ச க்ருத்யமாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3. ஆகமங்களும், ஆதிசைவர்களும்

சைவ சமயத்தின் முதல் நூல்கள் வேதம், சிவாகமம் இரண்டுமே ஆகும். இவற்றுள்,வேதத்தை பொது நூல் என்றும் ஆகமத்தை சிறப்பு நூல் என்றும் அழைப்பார்கள். இதனை திருமூலர் தமது திருமந்திரத்தில்,

"வேதமோடு ஆகமம் மெய்யாம் இறைவன்நூல்
ஓதும் பொதுவும் சிறப்பும் என்று உள்ளன
நாதன் உரையவை நாடில் இரண்டந்தம்
பேதமது என்பர் பெரியோர்க்கு அபேதமே"

என்று பாடியுள்ளார்.

இதே கருத்தை சைவ சித்தாந்த நூல் சிவஞான சித்தியார்,

"ஆரணநூல் பொது சைவம் அருஞ்சிறப்பு நூலாம்
நீதியினால் உலகர்க்கும் சத்தி நிபாதர்க்கும் நிகழ்த்தியது"

என்று கூறுகின்றது.

ஆதிசைவர்களாகிய சிவாசாரியார்கள் வேதங்களை பொதுவாக கொண்டு சிவபெருமானால் அருளப்பட்ட சிறப்பு நூலாகிய சிவாகமங்களையே தங்கள் வாழ்வில் பிரமாணமாகக் கொண்டவர்கள். ஆகமமானது ஸதாசிவமூர்த்தியின் ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், ஸத்யோஜாதம் என்ற ஐந்து முகங்களில் மேல்முகமாகிய ஈசான திருமுகத்தில் இருந்து "ஈசானஸ் ஸர்வ வித்யாணாம்" என்ற வாக்கிற்கேற்ப எட்டு ஆகமங்களும், தத்புருஷம் முதலிய நான்கு முகங்களில் இருந்தும் ஐந்து ஐந்தாக இருபது ஆகமங்களும் ஆக மொத்தம் 28 ஆகமங்கள் தோன்றின.

சிவபெருமான் தனது சத்யோஜாத முகத்தில் இருந்து, காமிகம்,யோகஜம் சிந்தியம், காரணம் அஜிதம் என்ற ஐந்து ஆகமங்களையும்,

வாமதேவம் என்ற திருமுகத்தில் இருந்து, தீப்தம், சூக்ஷ்மம், ஸஹஸ்ரம், அம்சுமான், சுப்ரபேதம் என்ற ஐந்து ஆகமங்ளையும்,

அகோரம் என்ற திருமுகத்தில் இருந்து விஜயம், நிச்வாசம், சுவாயம்புவம், அநலம், வீரம், என்ற ஐந்து ஆகமங்ளையும்,

தத்புருஷம் என்ற திருமுகத்தில் இருந்து ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், பிம்பம் என்ற ஐந்து ஆகமங்ளையும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஈசானம் என்ற திருமுகத்தில் இருந்து புரோத்கீதம், லளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம் பாரமேஸ்வரம், கிரணம், வாதுளம் என்ற எட்டு ஆகமங்ளையும் அருளிச் செய்தார்.

இந்த இருபத்து எட்டு ஆகமங்களும் **சிவபேதம், ருத்ரபேதம்** என்று இருவகைப்படும்.

சத்யோஜாதம், வாமதேவம் ஆகிய இருமுகங்களில் இருந்து அருளிய பத்து ஆகமங்கள் சிவபேதமாகும்.

ஈசானம், தத்புருஷம், அகோரம் ஆகிய மூன்று முகங்களிலிருந்து அருளிய பதினெட்டு ஆகமங்கள் ருத்ரபேதமாகும்.

மேற்கண்ட இருபத்து எட்டு ஆகமங்களும் மூல ஆகமங்கள் என்று அழைக்கப்படும். இவையன்றி உப ஆகமங்கள் 207 உள்ளன.

சிவபெருமான் தனது ஐந்து திருமுகங்களில் இருந்து இரு பத்து எட்டு ஆகமங்களையும் அருளினார் என்பதை **திருமூலர் தமது திருமந்திரத்தில்,**

"அஞ்சனமேனி அரிவையோர் பாகத்தன்
அஞ்ஜோடிருபத்து மூன்றுள ஆகமம்
அஞ்சலிகூப்பி அறுபத் தருவரும்
அஞ்சாம் முகத்தில் அரும்பொருள் கேட்டதே ."

என்ற பாடியுள்ளார்.

மாணிக்கவாசகரும் இதே கருத்தை, தமது திருவாசகத்தில்,

"மன்னு மாமலை மகேந்திரம் அதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித்து அருளியும்
....
....
மாவேட்டு ஆகிய ஆகமம் வாங்கியும்
மற்று அவை தம்மை மகேந்திரத்து இருந்து
உற்ற ஐம் முகங்களால் பணித்தருளியும்" என்று பாடி

அருளியுள்ளார்.

ஆகமங்கள் ஒவ்வொன்றும், சரியை, கிரியை, யோகம், ஞானம், என்று நான்கு பாதங்களாக (பிரிவுகளாக) உள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

1. சரியாபாதம்: ஆகமங்களில் உள்ள நடைமுறை விதிகள் இதில் கூறப்பட்டுள்ளன. அதாவது திருக்கோயில் அலகிடுதல். மெழுகுதல், திருநந்தவனம் அமைத்தல், அனுஷ்டானம் போன்ற சரீரத்தால் செய்யப்படும் பணிகளை விளக்குகின்றது.

2. கிரியாபாதம்: தீஷைகள் பற்றியும், ஆலயங்களை நிர்மாணம் செய்வது பற்றியும், இறை பிம்பங்களின் உருவ அமைப்பு பற்றியும், பிரதிஷ்டை, கும்பாபிஷேகம் செய்யும் முறைகள் பற்றியும், உத்ஸவ விழாக்கள் செய்வது பற்றியும், கூறப்பட்டு உள்ளன. பொதுவாக சிவாகம விதிப்படி பூஜைகள் செய்யும் முறைகளை கூறும் பகுதியாகும்.

3. யோகபாதம்: அஷ்டாங்க யோகங்களை பற்றியும் பூதசுத்தி, அந்தர்யோகம் போன்ற யோக நிலைகள் இதில் கூறப்பட்டுள்ளன.

4.ஞானபாதம்: பதி, பசு, பாசம் பற்றிய முப்பொருள் உண்மைகளை விளக்கும் பகுதியாகும். ஆகம தத்துவங்களை அறியும் பகுதியாக உள்ளன.

சிவாகாமத்தின் இந்த ஞானபாதமே சைவ சித்தாந்தம் என்று அழைக்கப்படுகிறது.

சிவாகமங்களே சைவ சித்தாந்த நூலாக விளங்குகின்றது என்பதனை, **பதினோறாம் திருமுறையில் திருக்கழுமல மும்மணிக் கோவையில், பட்டிணத்து அடிகள்,**

"கைவலம் நெல்லியங் கனியது போலச்
சைவசித்தாந்தத் தெய்வ ஆகமத்தை
வரன்முறை பகர்ந்த திருமலர் வாய" என்று பாடியுள்ளார்.

சைவசித்தாந்த நூல்களில் ஒன்றான சிவஞான சித்தியாரில்,

வேதநூல் சைவ நூல் என்று இரண்டே நூல்கள்
வேறு உரைக்கும் நூல்கள் இவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூல் அநாதி அமலன் திருநூல் இரண்டும்
ஆரணநூல் பொது சைவம் அருஞ்சிறப்பு நூலாம்
நீதியினால் உலகர்க்கும் சத்திநிபாதர்க்கும்
நிகழ்த்தியது நீள் மறையின் ஒழிபொருள் வேதாந்தத்
தீதுஇல் பொருள்கொண்டு உரைக்கும் நூல் சைவம்.
பிறநூல் திகழ்பூர்வம் "**சிவாகமங்கள் சித்தாந்தம் ஆகும்**".

என்று அருள்நந்தி சிவாசாரியார் சிவாகமங்களே சித்தாந்தமாகும் என்பதனைத் தெளிவு செய்து பாடியுள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆகமங்களின் சாரமாக திருமூலரால் பாடப் பெற்ற திருமந்திரத்திலேயே சைவ சித்தாந்தம் என்ற சொல் முதன் முதலில் வருகின்றது.

"கற்பன கற்றுக் கலைமன்னும் மெய்யோகம்
முற்பத ஞானம் முறைமுறை நண்ணியே
சொற்பதம் மேவித் துரிசற்று மேலான
தற்பரம் கண்டுளோர் **சைவசித்தாந்தரே** "

என்பதும் சிந்திக்க.

மேலும், சிவஞான சித்தியார் - பரபக்கம் நூலில்,

படிக்கும் நூல்கள் சிவாகமம் ; பசு பாசமோடு பதித்திறம்
எடுத்து இயம்புவது ஈசன்; வார்கழல் ஏத்திடும்...

என்று அருள்நந்தி சிவம் பாடியிருக்கின்றார். அதாவது பேரின்பம் எய்த விரும்புபவர் படிக்கும் நூல்கள் சிவாகமங்கள் ஆகும். அவை பதி, பசு, பாசம், என்னும் முப்பொருள் உண்மைகளை எடுத்து கூறும் நூல்களாக விளங்குகின்றன என்று கூறுகிறார்.

இவ்வாறு நமது சைவ சமய அருளாளர்கள் சிவாகமங்களே சைவ சித்தாந்த தத்துவமாக விளங்குகின்றன என்று தெளிவுபடுத்தி அறுதியிட்டு உரைக்கின்றனர்.

மேலும், இந்த ஆகமங்களின் வழிநூல்களாக பதினெட்டு சிவாசாரியார்கள் பத்ததி நூல்களை அருளிச் செய்தனர்.

இந்த பத்ததி நூல்கள் ஆகமவிதிப்படி பூஜைகள், கும்பாபிஷேகங்கள், உத்ஸவங்கள் செய்வது பற்றியும், சிவதீக்ஷை, அனுஷ்டானம், சிவபூஜை போன்றவற்றின் முறைகளை பற்றியும், ஆலய நடைமுறைகள் பற்றியும், விரிவாகவும், விளக்கமாகவும் விவரித்து கூறுகின்றன.

இந்த பத்ததி நூல்கள் ஆகமங்களுக்கு அமைந்த விளக்கவுரை போல் உள்ளன. இந்த பத்ததி நூல்களில், **அகோர சிவாசாரியார் பத்ததி, சோமசம்பு சிவாசாரியார் பத்ததி, ஈசான சிவாசாரியார் பத்ததி** போன்றவை புகழ்பெற்ற பத்ததி நூல்களாக விளங்குகின்றன.

இன்று தமிழகத்தில் பெரும்பாலான சிவாலயங்களில் ஆதிசைவ சிவாசாரியார்களால் **ஸ்ரீ அகோர சிவாசாரியார் பத்ததியே** கடைபிடிக்கப்பட்டு வருகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ்வாறு சிவபெருமானால் அருளப்பட்ட சிறப்புமிக்க ஆகமங்களை ஆதிசைவர்கள் தங்களது முன்னோர்கள் காட்டிய வழியில், குருகுல முறையில், சிறுவயது முதலே கற்று ஆகமவிதிப்படி பூஜைகள் விழாக்கள், கும்பாபிஷேகங்கள் ஆகியவற்றை செய்யும் அருள் பெற்றவர்களாக திகழ்கின்றார்கள்.

ஆதிசைவர்கள் சிவாகம விதிப்படி பூஜிப்பதற்காகவே இவ்வுலகில் தோன்றியவர்கள் என்பதாலும்,ஆகமங்களையும், ஆகம பூஜைகளையும் காப்பதற்காகவே, சிவபெருமானால் படைக்கப்பட்டவர்கள் என்பதாலும் ஆகம கல்விக்கே இவர்கள் முக்கியத்துவம் கொடுத்து கற்று வருபவர்கள். ஆதி சைவ சிவாசாரியார்கள் வேதங்களில் உள்ள கோயில் வழிபாடுகளுக்குரிய மந்திரங்களை மட்டுமே பயின்று, ஆகமங்களையே பிரதானமாக பயில்வார்கள்.

ஆதிசைவர்கள்ஆகமங்களையே பிரதானமாகவும், பிரமாணமாகவும் கொள்வதால் இவர்கள் ஆகம அந்தணர்கள், என்றும், ஆகம வேதியர்கள் என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

சிவபிரானை வழிபடும் சைவர்களுக்கு ஆகமமே பிரமாண நூலாகும். சிவனை வழிபடும் அடியார்களுக்கும், சைவர்களுக்கும் ஆகம விதிப்படி சிவதீக்ஷை அளித்து சிவபக்தியை பரவ செய்யும் முதற்கடமை ஆதிசைவர்களுக்கே உரியதாகும்.

ஆதிசைவர்கள் சிவாகம விதிப்படி சிவபெருமானை அர்ச்சிப்பவர்கள் என்பதை **ஸ்ரீ நம்பியாண்டார் நம்பி தனது திருத்தொண்டர் திருஅந்தாதியில்,**

"நெறிவார் சடையரைத் தீண்டி முப்போது **நீ டாகமத்தின்**
அறிவால் வணங்கி அர்ச்சிப்பவர் நம்மையும் ஆண்டமராக்
கிறையாய் முக்கண்ணும் எண்தோளும் தரித்தீறில் செல்வத்தொடும்
உறைவார் சிவபெருமாற்குறை வாய உலகினிலே"
என்று பாடியுள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ உமாபதிசிவாசாரியார் தமது திருத்தொண்டர் புராண சாரத்தில்,

"செப்பலருந் தவமுடைய செம்மை யாளர்
சிறுகாலே மலர்வாவி திகழ மூழ்கி
ஒப்பில் திருநீறணிந்து நியதி ஆற்றி
ஓவாமே ஐந்தெழுத்தும் உணர்ந்துரைத்து
தப்பில் **சிவாகம விதியால்** இன்பால் அன்பாந்
தன்மையால் தன்மையாந் தகையார் என்றும்
முப்பொழுந் திருமேனி தீண்ட வல்ல
முறைமையார் பிறவிதொறுந் திறமையாரே"

என்று பாடியுள்ளார்.

ஆகமங்கள் சிவபிரானால் அருளப் பெற்றவை என்பதை,

"அண்டர் தமக்கு ஆகமநூல்கள் மொழியும் எம் ஆதியை" என்று ஸ்ரீ சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் பாடியருளுகின்றனர்

சிவபெருமான் ஆகம வடிவாக விளங்குகின்றான் என்பதை சிவபுராணத்தில் மாணிக்கவாசகர்,

"ஆகமம் ஆகிநின்றண்ணிப்பான் தாள் வாழ்க" என்று பாடியருளியுள்ளார்.

கண்ணப்பநாயனார் புராணத்தில் சேக்கிழார் பெருமான்,

"எய்திய சீராகமத்தில் இயம்பிய பூசனைக்கேற்ப" என்பார். அதாவது சிறப்புடைய ஆகமங்களில் கூறியுள்ளபடி பூசித்து என்பதாகும்.

அன்னை பார்வதி தேவி ஆகமவிதிப்படியே பூஜை செய்ய ஆசைப்பட்டாள் என்பதை சேக்கிழார் பெருமான்,

திருக்குறிப்புத் தொண்டர் நாயனார் புராணத்தில்,

"இங்கு நாதா நீ மொழிந்த ஆகமத்தின்
இயல்பினால் உனை அர்ச்சனை புரியப்
பொங்கு கின்றதென் ஆசை என்றிறைஞ்சிப்
போக மார்த்தபூண் முலையினாள் போற்றி"

என்று பாடியுள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேலும், அம்மையார், சிவபெருமான் அருளிய ஆகமநெறியிலே உறைத்து நின்று பூஜித்த செயலை,

''உம்பர் நாயகர் பூசனைக்கவர்தாம்
உரைத்த ஆகமத் துண்மையே தலைநின்
எம்பிராட்டியார் அர்ச்சனைபுரி வதனும்'' -என்றும்,

ஆகம விதியில் குறைவில்லாமல் அம்மையார் சிவபூஜை செய்த செயலை,

''மெய்தரும்படி வேண்டின எல்லாம்
வேண்டும் போதினில் உதவமெய்ப் பூசை
எய்த ஆகம விதியெலாஞ் செய்தாள்
உயிர்கள் யாவையும் ஈன்ற எம்பிராட்டி''

என்று சேக்கிழார்பெருமான் பெரியபுராணத்தில் பாடுகின்றார்.

இவ்வாறு இவ்வுலகத்தில் முதன்முதலில் சிவபூஜை செய்தவள் அன்னை பார்வதி தேவியே.

அன்னை பார்வதிதேவியே ஆகம விதிப்படியே சிவபெருமானை பூஜை செய்ததாக சேக்கிழார் பெருமான் பாடி அருளியது அனைவரும் சிந்திக்கதக்கது.

திருவாவடுதுறைப் புராணத்தில் அன்னை பார்வதிதேவி ஆகம விதிப்படி பூஜை செய்த செயலை,

''ஐந்த ருக்களும் நினைந்தவெல் லாந்தந்
தருள அன்பொடும் அளவில்பல் மலரும்
கந்த நற்கள பங்கன கப்பூண்
கதிர்மணிப் பணியா டைபோ னகமும்
இந்து சேகரற் கணிந்துநி வேதித்
தெவையும் **ஆகம விதிப்படி** பூசித்து
உந்து நன்மறை யாற்துதித் திறைஞ்சி
உள்ம கிழ்ந்தனள் என்னையா ளுடையாள்''

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

63 நாயன்மார்களில் ஒருவராகிய திருநீலநக்க நாயனார் தினம்தோறும் ஆகம விதிப்படியே சிவபெருமானை பூஜை செய்து வந்தார் என்பதனை,

''மெய்த்த ஆகம விதிவழி வேத காரணரை
நித்தல் பூசனை புரிந்தெழு நியமமுஞ் செய்தே"–என்று

பெரியபுராணத்தில் சேக்கிழார் பெருமான் கூறியுள்ளார்.

இவ்வாறு, சிவபெருமானுக்குச் செய்யப்படும் பூஜைகள் மட்டுமல்ல, சிவபெருமானுக்கு அமைக்கப்படும் கோவில்களும் ஆகம விதிப்படியே நிர்மாணிக்கப்பட வேண்டும். பூசலார் நாயனார் தனது மனதுக்குள் தான் எழுப்பிய கோயிலையும் ஆகம விதிப்படியே அமைத்தார் என்பதை,

''சாதனத்தோடு தச்சர் தம்மையும் மனத்தால் தேடி
நாதனுக்கு ஆலயம்செய நலம்பெற நன்னாட்கொண்டே
ஆதரித்து **ஆகமத்தால்** அடிநிலை பாரித்து அன்பால்
காதலிற் கங்குற்போதும் கண்படா தெடுக்கலுற்றார்"

என்று சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில் பாடியுள்ளார்.

மேலும், சிவபெருமானுக்கு செய்யும் பூஜைகளும் எழுப்பும் கோயிலும், ஆகம விதிப்படி நடப்பதோடு அல்லாமல், திருக் கோவில்களில் நடைபெறும் விழாக்களும், திருக்கோயில்களுக்கு வழங்கப்படும் நிபந்தங்களும் ஆகம விதிப்படியேயே நடந்திடல் வேண்டும். இதனை மனுநீதிச்சோழன் வரலாறு உணர்த்தும்.

மனுநீதிச் சோழன் திருவாரூர் திருக்கோவிலுக்கு சிவாகம விதிப்படியே பூஜைக்கு வேண்டிய நிபந்தங்களை அளித்தான் என்பதை,

"பொங்கு மாமறைப் புற்றிடங் கொண்டவர்
எங்கும் ஆகி இருந்தவர் பூசனைக்
அங்கண் வேண்டும் நிபந்தம் ஆராய்ந்தான்
துங்க **ஆகமம்** சொன்ன முறைமையால்"

என்று பெரியபுராணம் கூறுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நமிநந்தி அடிகள் நாயனார் புராணத்தில், சோழ அரசன் ஒருவன் திருவாரூரில் அருள்புரியும் புற்றிடங்கொண்டார்க்கு வேத ஆகம நூல்களில் கூறியுள்ளவாறு நிபந்தம் அளித்தும், பங்குனி உத்திர விழாவினை செய்திடவும் ஆணை பிறப்பித்தனை,

"நாதமறைதேர் நமி நந்தியடிகளார் நற்றொண்டாகப்
பூதநாதர் புற்றிடம் கொள் புனிதர்க்கு அமுதுபடி முதலாம்
நீதவளவன்தான் வேண்டும் நிபந்தம் பலவும் அரியணையின்
மீது திகழ இருந்தமைத்தான் **வேதாகம நூல் விதிவிளங்க**"

என்று சேக்கிழார் பெரியபுராணத்தில் பாடுகின்றார்.

இவ்வாறு, ஓர் ஆலயம் நிர்மாணித்து அமைப்பது முதல் பூஜைகள், விழாக்கள் அனைத்தும் ஆகம விதிப்படியே செய்யப்பட வேண்டும். என்பதை சைவத் திருமுறைகளும் நமது அருளாளர்களின் திருவாக்குகளும் நமக்கு உணர்த்துகின்றன.

திருக்கோயில்களுக்கு நிலத்தை தேர்ந்தெடுப்பதிலிருந்து (பூகர்ஷணம்,) கோவில் அமைத்து தெய்வங்களை பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் முதல் மண்டலாபிஷேகம் வரையிலும், அதன்பின் நடைபெறும் விழாக்கள், பிராயசித்தங்கள் என அனைத்திற்கும் ஆகமங்களே பிரமாணமாகும். இதனை,

கர்ஷணாதி ப்ரதிஷ்டாந்தம்- கோவில் நிலம் தேர்ந்தெடுத்து அமைப்பது முதல் கும்பாபிஷேகம் வரை

ப்ரதிஷ்டாதி உத்ஸவாந்தம்- கும்பாபிஷேகம் முதல் உற்சவ விழாக்கள் வரை

உத்ஸவாதி ப்ராயச்சித்தாந்தம் - உத்ஸவ விழாக்கள் முதல் ப்ராயசித்த பரிகாரம் வரை

என்ற வரிசை முறையில் ஆகமங்கள் எடுத்து விளக்கமாக கூறும்.

ஆகமவிதிப்படி ஆலயங்களில் பூஜைகள் விழாக்கள் செய்யப்படவேண்டும். ஆகமம் அறிந்த ஆதிசைவ சிவாசாரியாரை கொண்டு, ஆலயங்களில் கர்ஷணாதி ப்ரதிஷ்டாந்தம், பிரதிஷ்டாதி உத்ஸவாந்தம், உத்ஸவாதி பிராயச்சித்தாந்தம் என்ற முறையில் பூஜைகள் விழாக்கள் செய்யப்பட வேண்டும் என்பது ஆகம விதியாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ்வாறு, ஆகம விதிகளை முறைப்படி கடைபிடித்து பூஜித்து வரும் பக்தர்களுக்கு சிவபெருமான் அருள் புரிவான் என்பதை , **"அம்மானே ஆகம சீலர்க்கருள் நல்கும் பெம்மானே"** - என்று ஸ்ரீ சுந்தரர் திருவாரூர் தேவாரத்தில் பாடி அருளுகின்றார்.

சிவபெருமானால் அருளப்பட்ட ஆகம விதிகளை புறந்தள்ளி இகழ்பவர்களை அரசன் தண்டித்திட வேண்டும் என்பதனை **திருமூலர் தமது திருமந்திரத்தில்,**

"தத்தம் சமயத் தகுதிநில் லாதாரை
அத்தன் சிவன் சொன்ன ஆகம நூல்நெறி
எத்தண்டமும் செயும் அம்மையில் இம்மைக்கே
மெய்தண்டம் செய்வது அவ்வேந்தன் கடனே" -என்று பாடுகின்றார்.

ஆகமங்களில் மட்டுமே ஓர் ஆலயத்திற்குரிய நிலத்தைத் தேர்ந்தெடுப்பது முதல், ஆலயத்தை அமைக்கும் முறை, தெய்வங்களை பிரதிஷ்டை செய்யும் முறை, கும்பாபிஷேகம் செய்யும் முறை, அதற்குண்டான மந்திரங்கள், தத்துவ விளக்கங்கள், கும்பாபிஷேகத்திற்கு பின் அந்த ஆலயத்தில் செய்யப்படும் உத்ஸவங்கள், விழாக்கள் ஆகியவற்றை செய்யும் முறைகள், ஏதேனும் குறைகள் ஏற்பட்டால் அதனை நீக்கும் பிராயசித்த விதிகள், பரிகாரங்கள் என்று ஒரு கோவிலைப் பற்றிய அனைத்துவித தகவல்களும், செய்திகளும் ஆகமங்களில் மட்டுமே உள்ளன.

ஆகமங்கள் சிவபெருமானால் அருளப்பெற்றதும், சிவபெருமானே ஆகம விதிப்படி பூஜிப்பதே தமக்கு விருப்பமானது என்று அருளியதும், அன்னை பார்வதி தேவியே ஆகம விதிப்படி சிவபெருமானை பூஜித்து வரம் பெற்றதும் ஆகமங்களின் முக்கியத்துவத்தையும், சிறப்பையும் உணர்த்தும்.

கடந்த காலங்களில் நமது முன்னோர்களாகிய மன்னர்கள் திருக்கோயில்களை ஆகம விதிப்படியே அமைத்தும், ஆகம விதிப்படியே பூஜைகளையும், விழாக்களும் செய்து வந்துள்ளார்கள் என்பதை ஒவ்வொரு திருக்கோயில்களிலும் உள்ள கல்வெட்டு செய்திகள் நமக்கு உணர்த்துகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தமிழகத்தில் மட்டுமல்லாது நமது மன்னர்கள் வெளிதேசங்களில் சென்று அங்கே அமைத்த கோவில்களையும் ஆகம விதிப்படியே அமைத்துள்ளனர். **எடுத்துக்காட்டாக கம்போடியாவில் உள்ள அங்கோர்வாட் ஆலயம் மாதங்க பரமேஸ்வர ஆகம விதிப்படி எழுப்பப்பட்ட கோயிலாகும்.**

இத்தகைய சிறப்புடைய சிவாகமங்கள் ஆதிசைவர்களுக்கே முதன்மையுரிமை உடையது. ஆதிசைவர்களுக்கு சமய நூற் கல்வியாக ஆகமமே உள்ளன. ஆதிசைவர்களின் அடிப்படை நூல், பிரமான நூல் ஆகமமே ஆகும்.

ஆகமங்கள் தமிழ் நாட்டில் மட்டுமே கடைபிடிக்கப்பட்டு வருகின்றன. பல ஆகமங்கள் கடந்த காலங்களில் சிவாசாரியார்கள் வீடுகளில் பாதுகாக்கப்பட்டு வந்தன. தமிழகத்தின் இடைக்காலத்தில் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலை மாற்றத்தினாலும், சிவாசாரியார்களின் பொருளாதார நெருக்கடி காரணமாகவும், சிவாசாரியார்களின் ஆகம கல்விக்கு அரசின் ஆதரவு இல்லாமையாலும், காலப்போக்கில் பல ஆகம ஏடுகள் அழிந்து விட்டன.

ஆகமங்கள் தமிழ்பண்பாட்டையே பிரதிபலிக்கின்றன. ஸ்மார்த்த பிராமணர்களைவிட சிவாசாரியார்கள் உயர்ந்தவர்கள் என்று ஆகமங்கள் கூறும். ஆகமங்கள் சிவாசாரியார்களின் பெருமைகளை பேசுவதால் வடஇந்தியாவில் ஆகமங்கள் புறக்கணிக்கப்பட்டன என்று கூறுவார் உழவாரம் இராஜசேகரன் அவர்கள்.

மேற்கண்ட செய்திகளின் மூலம் ஆகமங்களுக்கும் ஆதிசைவர்களுக்கும் உள்ள தொடர்பு நன்கு விளங்கும்.

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4.ஆலய பூஜைகள் ஆதிசைவர்களுக்கே உரிமையானது

சிவாகமங்களில் இரண்டுவித பூஜைகள் கூறப்பட்டுள்ளன.

1. ஆத்மார்த்த பூஜை: இப்பூஜையை சிவதீக்ஷை பெற்ற ஒருவர் தன்நலன் கருதி தனது இல்லத்தில் செய்வது ஆகும்.

2. பரார்த்த பூஜை: இது உலக நலன் கருதி மக்களின் நன்மைக்காக பொது நலன் கருதி. ஆகம விதிப்படி திருக்கோயில்களில் செய்யப்படும் பூஜையாகும்.

இது கிராமத்திலோ, நகரத்திலோ, வனங்களிலோ, மலைகளிலோ, நதிதீரம் (அ) சமுத்திர தீரங்களிலோ உள்ள ஆலயத்தில் இருக்கும் தெய்வ மூர்த்திகளை ஆகமவிதிப்படி மாதொரு பாகனார்க்கு வழிவழி அடிமை செய்யும் வேதியர் குலத்தில் தோன்றிய ஆதிசைவ சிவாசாரியார்களை கொண்டு பூஜிப்பது பரார்த்த பூஜையாகும்.

<u>பரார்த்த பூஜை மூன்று வகைப்படும்</u>

1) நித்ய பூஜை- திருக்கோயில்களில் நாள்தோறும் செய்யப்படும் பூஜையாகும்.

2) நைமித்திக பூஜை- திருக்கோயில்களில் மாதந்தோறும் நடைபெறும் விசேக்ஷ பூஜைகள் மற்றும் திருவிழாக்கள்,கும்பாபிக்ஷேகம் போன்றவைகளாகும்.

3) காம்ய பூஜை- திருக்கோயில்களில் பக்தர்களின் வேண்டுதல்களின்படியும், விருப்பத்தின்படியும் செய்யப்படும் பூஜையாகும்.

இதில் பரார்த்த பூஜை என்று அழைக்கப்படும் கோயில்களில் செய்யப்படும் ஆலய பூஜை வழிவழியாக செய்யும் உரிமை ஆதிசைவர்களுக்கே உள்ளது. இதனை, சேக்கிழார் பெருமான் தமது பெரிய புராணத்தில்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy.

"தெரிந்துணரின் முப்போதுஞ் செல்காலம் நிகழகாலம்
வருங்கால மானவற்றின் வழிவழியே திருத்தொண்டில்
விரும்பிய **அர்ச்சனைகள் சிவவேதியர்க்கே உரியன**
அப்பெருந்தகையார் குலப்பெருமையாம் புகழும் பெற்றியதோ"
என்று பாடுகிறார்.

அதாவது சிவாலய பூஜைகள் ஆதிசைவ சிவாசாரியார்களுக்கே உரிமையுடையது என்பதை "**அர்ச்சனைகள் சிவவேதியர்க்கே உரியன**" என்று ஏகாரம் இட்டு சேக்கிழார் வலியுறுத்துவதை கவனித்தல் வேண்டும்.

மேலும், செல்காலம், நிகழ் காலம், வருங்காலம் என்று பிரித்து கூறி எக்காலத்திலும் வாழையடி வாழையாக ஆதிசைவ சிவாசாரியார்களுக்கே பூஜைகள் செய்யும் உரிமை உண்டு என உறுதிபடக் கூறுகிறார்.

மேலும், **சைவ சமய நெறி என்னும் நூலில் ஸ்ரீ மறைஞானசம்பந்தர்,**

"சிவன் முகத்திலே யுதித்த விப்ரசைவர்
இவரே யருச்சனைக் கென்றேன்" (பாடல் 435)

என்று பாடியுள்ளார்.

அதாவது சிவன் முகத்தில் தோன்றிய விப்ர சைவர்களுக்கே (ஆதி சைவர்களே) அர்ச்சனை செய்யும் உரிமை உண்டு என்கிறார்.

மேலும், **ஸ்ரீ மறைஞானசம்பந்தர்** அதே நூலில்,
"அயன் முகத்தில் தோன்றிய அந்தணர் அர்ச்சித்துப்
பயனடைதற் இட்டலிங்கம் பாங்கு" -என்று பாடுகிறார்.

அதாவது பிரம்மனின் முகத்தில் தோன்றிய பிராமணர்கள் மற்றும் அடியார்கள் உள்ளிட்ட மற்றவர்கள் ஆத்மார்த்த பூஜை செய்யவே உரிமை உண்டு. இவர்களுக்கு கோயில்களில் பூஜை செய்யவோ, கும்பாபிஷேகம், உத்ஸவங்கள் போன்ற விசேஷங்கள் செய்யவோ உரிமை இல்லை என்று பாடியுள்ளார்.

இதன்மூலம், சிவன் முகத்தில் தோன்றிய ஆதிசைவர்களே ஆலய பூஜைகள், கும்பாபிஷேகம் முதலியன செய்ய உரிமையுடையவர் என்பதை மறைஞானசம்பந்தர் அறுதியிட்டு கூறுவதை காணலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவ்வாறு, ஆதிசைவ சிவாசாரியாரைக் கொண்டு சிவபூஜை, உத்ஸவங்கள், கும்பாபிஷேகங்கள் செய்யாமல் பிராமணர்கள் உள்ளிட்ட மற்றவர்களை கொண்டு செய்தால் ஏற்படும் பாதிப்புகளை **திருமூலர் தாம் அருளிய திருமந்திரத்தில்,**

"பேர் கொண்ட பார்ப்பான் பிரான் தன்னை அர்ச்சித்தால்
போர் கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார் கொண்ட நாட்டுக்குப் பஞ்சமுமாம் என்றே
சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத்தானே" -

என்று பாடியுள்ளார்.

அதாவது , சிவபெருமானால் அருளப்பட்ட சிவாகம மந்திரங்களை அறிந்த ஆதிசைவ சிவாசாரியாரை தவிர்த்து, மற்றவர்களைக் கொண்டு சிவாலய பூஜைகள், கும்பாபிஷேக கிரியைகள் செய்தால், நாட்டின் அரசன் வலிமை இழப்பான். நாட்டில் மழை வற்றும், பஞ்சம் ஏற்படும் என்று எங்கள் அருளாசிரியர் நந்தியம் பெருமான் உரைத்ததாக நாயன்மாரும், முழு முதற் சித்தருமாகிய திருமூலர் கூறுகிறார். எனவே சிவாகமம் அறிந்த ஆதிசைவ சிவாசாரியார் செய்யும் பூஜையே நலத்தையும், வளத்தையும் கொடுக்கும் என்பது இதன் உட்பொருளாகும்.

ஆகமங்களும் மேற்கண்ட கருத்துக்களையே வலியுறுத்துகின்றன. [redacted] **மகுடாகமத்தில்,**

"விப்ரக்ஷத்ரிய விட்சுத்ர; தீக்ஷீதாஞ்ச ப்ரவேசகா;
ஆத்மார்த்தயஜனம் குர்யு; ந குர்யஸ்து ப்ரார்த்தகம்"

என்று கூறப்பட்டுள்ளது.

அதாவது பிராம்மணர், அரசர், வணிகர், வேளாளர்கள் ஆகியோர் சிவதீக்ஷை பெற்று ஆத்மார்த்த பூஜை செய்யவே அதிகாரம் உண்டு.

திருக்கோயில்களில் பூஜை, கும்பாபிஷேகம், உத்ஸவ விழாக்கள் செய்ய அதிகாரம் இல்லை என்று ஆகமம் கூறுகிறது.

இதன்மூலம் பிராம்மணரும், தீக்ஷை பெற்ற அடியார்களும் கோயில்களில் பூஜை, கும்பாபிஷேகம் செய்யக் கூடாது என்பது ஆகம முடிவாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருவிளையாடல் புராணம், இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலத்தில்,

சோமவாரவிரத மகிமை கூறப்பட்டுள்ளது. அதில், சிவபெருமானை தீண்டி பூஜிக்கும் அருகரல்லாத வேத அந்தணர் மற்றும் தீக்ஷை பெற்ற சைவர்கள் இட்டலிங்கம் எனும் ஆன்மார்த்த லிங்கத்தை பூஜை செய்து சோமவார விரதம் செய்க என்றும், ஆன்மார்த்த பூஜைக்கு உரிமையில்லாதவர் சிவபிராமணராகிய ஆதிசைவரை கொண்டு பூஜை செய்வித்து இவ்விரதம் கொள்க என்றும் கூறப்பட்டுள்ளது.

"ஆதியிவ் விலிங்கந் தீண்டற் கருகரல்லாத வேத
வேதியர் முதலோ ரிட்ட விலிங்த்தில் விதியாலர்ச்சித்
தோதிய விரத நோற்க வர்ச்சனைக்குரிய ரல்லாச்
சாதியர் பொருணோர்ந்து **ஆதிசைவராற்** பூசை செய்தல்"

இதிலிருந்து வேத பிராமணர், மற்றும் தீக்ஷை பெற்ற சைவர்கள் யாவரும் ஆன்மார்த்த பூஜை செய்யலாமேயொழிய திருக்கோவிலில் லிங்கத்தை தீண்டி பூஜை செய்தல் கூடாது என்பது பெறப்படும்.

ஆதிசைவ சிவாசாரியார்கள் பிராமணர் உள்ளிட்ட நான்கு பிரிவினர்களில் ஒருவரா என்றால் இல்லை என்பதாகும். ஏனெனில் ஸ்மார்த்த வழிவந்த வைதீக பிராமணர்கள் வேறு, ஆகம வழிவந்த ஆதிசைவ சிவாசாரியார்கள் என்பவர்கள் வேறு.

வேத பிராமணர் பிரம்மனின் முகத்தில் தோன்றியவர்கள். ஆதிசைவ சிவாசாரியார்கள் சிவசிருஷ்டியாளர்கள் அதாவது சிவபெருமானின் திருமுகத்திலிருந்து உதித்தவர்கள். எனவேதான், சிவபெருமானின் முகத்தில் தோன்றிய ஆதிசைவ சிவாசாரியார்களே திருக்கோயில்களில் பூஜைகள், கும்பாபிஷேகங்கள் ஆகியவை செய்ய வேண்டும் என்பது ஆகம விதியாகும் என்பதை உணர்ந்து கொள்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேலும், பொருளாசை காரணமாகவோ, அலலது துவேஷம் (உள்நோக்கம்) காரணமாகவோ, பிராமணர், அடியார் உள்ளிட்ட மற்றவர்கள் கோயில்களில் சிவத்தை தீண்டுவதாலும், பூசிப்பதாலும் அதை செய்வோர், செய்விப்போர் இருவருக்கும் தேவலோகத்துவ தோஷம் பிடிக்கும் மீறி செய்வாராயின் அவ்விடத்து அரசருக்கும் பொது மக்களுக்கும் கெடுதி உண்டாகும். அதுவும் மீறினவன் அவன்மட்டுமன்றி அவனுடைய இருபத்தோரு வம்சமும் வம்சாவளியும் தீராத கோர நரகத்துக்கு உள்ளாவார்கள் என்று ஆகமம் செப்புகின்றது.

மேலும், **ரௌரவாகமம்,**

"ஆதிசைவனே கர்த்தவ்யம் ஆத்மார்த்தம் ச பரார்த்தகம்"

அதாவது, ஆதிசைவனே தன்அளவில் ஆத்மார்த்த பூஜையும், திருக்கோயில்களில் பரார்த்த பூஜையும் செய்ய வேண்டியவர், உரிமை உடையவர் என்று ஆகமம் கூறுகின்றது.

மேலும், **காமிகாமம்,**

"ஆதிசைவ குலைஜாத: ஸ்ரேஷ்டஸ்யாது ஸ்தாப நாதிஷு"

அதாவது ஆதிசைவ சிவாசாரியார்களே பிரதிஷ்டை கும்பாபிஷேக கிரியைகள் செய்ய வேண்டும் என்று உறுதிபட காமிகாமம் கூறுகின்றது.

மேலும், **சுப்ரபேத ஆகமத்தில்,**

**"தீக்ஷிதானாம் த்விஜாதீனாம் ஆத்மார்த்த மனு லோமினாம்
பரார்த்தம் ஆதிசைவானாம் ஆத்மார்த்த ஸஹிதம் பவேத்"**

அதாவது, சிவதீக்ஷை பெற்ற பிராமணர், அடியார் உள்ளிட்ட அனைவரும் ஆத்மார்த்த பூஜை மட்டுமே செய்யலாம்

ஆதிசைவர்களே ஆத்மார்த்த பூஜை, பரார்த்த பூஜை என இரண்டும் செய்ய உரிமை உடையவர்கள் என்று சுப்ரபேத ஆகமத்தில் கூறப்பட்டுள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருநாகைக்காரோணம் புராணத்தில், **திருவாவடுதுறை ஆதினம் மஹாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள்,** ஆதிசைவர்கள் சிவபெருமான் திருமுகத்தில் அவதரித்தவர்கள் என்றும், ஆன்மார்த்தம், பரார்த்தம் என்ற இருபூஜைகளும் செய்யும் பூரண உரிமை உடையவர்கள் என்றும் பாடியுள்ளார்.

அப்பாடல்,

"பெருமறை உடன் ஆகமம் முழுதுணர்ந்தார்
பிறங் உமாதேவி ஓர் பாகர்
திருமுகமோர் ஐந்தினுமினி உதித்தார்
திகழு ஆன்மாத்தமொண் பரார்த்தம்
இருதிறங்களு நற் பூசனை புரிவார்
இணையிலாச் சீலமிக் கமைந்தார்
பொருவரு **ஆதிசைவர்கள்** சிறப்பிற்
பொலிந்துவாழ் தெருக்களும் பலவால்"

மேற்கூறிய கருத்தையே **காளையார் கோயிற் புராணம்,**

"பொதுமையுஞ்சிறப்புமென்னப் புராதனன் புகன்றவாய்மை
முதுமறையாக மங்கண் முழுதுமோர்ந்தென்றும் பூசை
பதியுமான்மார்த்தத்தோடு பரார்த்தத்தும்புரி இத்தலைக்கோர்
மதிபெறும் **ஆதிசைவர்**." - என்றும்,

கண்டதேவிப் புராணம்,

"எண்ணில்வேதாக மங்களைய மெய்தாமையாய்ந்து
மண்ணிலான் மார்த்தத்தோடு பரார்த்தமும் வயங்க பூசித்
தொண்ணிதியருட்பேரெய்தி யொழிந்த மும்மலத்தினராம்
புண்ணிய **ஆதிசைவர்**." - என்றும்,

திருப்பெருந்துறைப் புராணம்,

"மறையுடனாகமமுணர்ந்த மாட்சியர்
பொறையொடான் மார்த்த பரார்த்தம் போற்றுவார்
அறைபெரும் புகழ்மிகும் **ஆதிசைவர்**." - என்றும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருக்குடந்தைப் புராணம்,

“வெள்ளியங்கயிலை விமலனார் மொழிந்த வேதாகம முழுதுணர்ந்து
தெள்ளிய சமயமுதலொரு மூன்று தீக்கையும் பெற்றபிடேகம்
நள்ளியதிறந்தான் மார்த்தமொண்பரார்த்த பூசித்திருவினையுந்
தள்ளிய பொலிவறிகளித்து வாழ் **ஆதிசைவர்**.” - என்றும்,

ஆதிசைவர்களாகிய சிவாசாரியார்கள் ஆன்மார்த்தம், பரார்த்தம் என்ற இரு விதத்திலும் சிவபெருமானை பூஜிக்கும் உரிமை பெற்றவர்கள் என்று மேற்கண்ட தலப்புராண பாடல்கள் அறுதியிட்டு கூறுகின்றன.

திருக்கோயில்களில் சிவலிங்க திருமேனியை தீண்டி பூஜித்து வழிபடும் உரிமை ஆதிசைவருக்கே உரியது.
இதனை ஸ்ரீ சுந்தரர் தமது திருத்தொண்டத் தொகை தேவாரத்தில்,

“முப்பொழுதும் திருமேனி தீண்டுவார்க்கும் அடியேன்”

என்று பாடியுள்ளார்.

இதற்கு விளக்கம் அளித்துள்ள சேக்கிழார் பெருமான் தமது பெரியபுராணத்தில்,

“எப்போதும் இனியபிரான் இன்னருளால் அதிகரித்து
மெய்ப்போத நெறிவந்த விதிமுறைமை வழுவாமே
அப்போதைக் கப்போதும் ஆர்வமிகும் அன்பினராய்
முப்போதும் அர்ச்சிப்பார் **முதற் சைவராம் முனிவர்** ”

இங்கு **ஆதிசைவரை முதற்சைவர் என்று குறிப்பிடுவதை காண்க.**

அகத்தடிமைப் பணி (அ) அகம்படித் திருத்தொண்டு என்பது கருவறையில் சிவபெருமானை தீண்டி பூஜிக்கும் செயலை குறிப்பதாகும். ஆதிசைவருக்கே லிங்க திருமேனியை தீண்டி பூஜிக்கும் உரிமையை சைவசமயம் அளித்துள்ளது.

ஆதிசைவராகிய புகழ்துணை நாயனாரை பெரிய புராணத்தில் சேக்கிழார் பெருமான்,

“செருவிலிபுத் தூர்மன்னுஞ் சிவமறையோர் திருக்குலத்தோர்
அருவரைவில் லாளி தனக்கு **அகத்தடிமை** யாமதனக்கு
ஒருவர்தமை நிகரில்லார் உலகத்துப் பரந்தோங்கிப்
பொருவாரிய புகழ்நீடு புகழ்த்துணையார் எனும் பெயரார்” என்று பாடியுள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருத்தொண்டர் புராணம் சாரத்தில் உமாபதி சிவாசாரியார் ,

“புண்ணியர்கள் புகழ்அழகார் திருப்பத்தூர்வாழ்
புகழ்த்துணையார் அகத்தடிமை புனிதர்”

என்று பாடியுள்ளார்.

ஸ்ரீ சுந்தரர் தமது தேவாரத்தில் புகழ்துணை நாயனாரை பற்றிப் பாடும் பொழுது,

“**அகத்தடிமை செய்யும் அந்தணன்** தான்அரி
சிற்புனல் கொண்டுவந் தாட்டுகின்றான்,
மிகத்தளர் வெய்திக் குடத்தையும் நும்முடி
மேல்விழுந் திட்டு நடுங்குதலும்
வகுத்தவ னுக்கு நித்தற் படியும்
வரும்என் றொருகாசினை நின்ற நன்றிப்
புகழ்த்துணை கைப்புகச் செய்து கந்தீர்
பொழிலார் திருப்புத்தூர்ப் புனிதனீரே”

என்று பாடியுள்ளார்.

இவ்வாறு, **தேவார திருமுறைகளில் ஆதிசைவராகிய புகழ்துணை நாயனாரை பற்றி பாடியருளும் பொழுது மட்டுமே அகத்தடிமை பணியை,அகத்தடிமை திருத்தொண்டு பற்றி பாடப்பட்டிருப்பதன் மூலம் ஆதிசைவர்களுக்கே கருவரை சென்று பூஜைகள், கும்பாபிஷேகம், உற்சவங்கள் செய்யும் உரிமை உள்ளது என்பதை தெரிந்துகொள்ளலாம்.**

சிவாகமம் அறிந்த ஆதிசைவ சிவாசாரியாரை கொண்டு செய்யும் பூஜைகள், கும்பாபிஷேகங்கள் மூலமே, அதை செய்தோர், செய்வித்தோர் இருவரும் சுப பலனையும், சிவ புண்ணியத்தையும் முழுமையாக அடைய முடியும். உலகத்திற்கு நன்மை உண்டாக்கும். நீர்வளம், நிலவளம் முதலியன செழுமையுடன் விளங்கும் என்பதாகும்.**காரணகாகமும்,**

“**ஆதிசைவஸ்ய பூஜாம் ஸர்வஸித்திகரம் ஸ்மருதம்**”
என்று கூறுகின்றது.

அதாவது, ஆதிசைவர்கள் செய்யும் பூஜையே உலகத்திற்கு நலத்தையும், வளத்தையும், கீர்த்தியையும், பயனையும் தருவதாகும் என்பது இதன் உட்பொருளாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருவாடுதுறை ஆதின மஹாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் தாம் பாடிய **சிவாலய தரிசன விதியில்**, ஆதிசைவர்களை கொண்டே ஆலயத்தில் வழிபாடு செய்ய வேண்டும் என்பதை,

"இருகரங் குவித்துட் புக்காங் கிலங்க நின்றாடு மையர்
பொருவில் குஞ்சிதத்தாள் போற்றிப் புண்ணியச் சிவபிரான்முன்
மருவியங் **காதிசைவன்** மலர்க்கையி னனைத்து நல்கி
யொருவற வனையான் செய்யும் உபசாரம் அனைத்து நோக்கி"

என்று பாடியுள்ளார்.

சைவ சித்தாந்த தத்துவத்தில் ஒரு பொருளை நிரூபணம் செய்ய மூன்று நிலைகளை கொண்டு ஆராயப்படும். அவை,

1. காட்சி (பிரத்யட்ச பிரமாணம்)
2. கருதல் (அனுமானப் பிரமாணம்)
3. உரை (ஆகமப் பிரமாணம்)

இந்த மூன்று நிலைகளில்,

ஆதிசைவரை தவிர மற்றவர்கள் அனைவரும் ப்ரார்த்த பூஜைக்கு அருகரல்லர் என விதித்த **நூல் (ஆகம) வழக்காலும்,**

வழிபடும் ஏனையோரைக் காட்டிலும் மூர்த்தியைத் தீண்டி வழிபாடு செய்வார் உயர்ந்தவராதல் வேண்டுமெனக் **கருதளவையாலும்.**

தாம் கொடுக்கும் திருநீற்றை யாவரும் இருகரங்களையும் நீட்டியேற்கக் காணும் **காட்சி அளவையாலும்.**

ஆதிசைவ சிவாசாரியார்களுக்கே பரார்த்த பூஜை, கும்பாபிஷேகம் போன்ற கிரியைகள் செய்ய பூரண உரிமை உள்ளது என்பது தெரியவரும்.

சிவபெருமான் விரும்புவது ஆகம பூஜைகளையே எனவேதான் சிவபெருமான் தனது திருமுகங்களில் இருந்து ஆகமங்களை உபதேசம் செய்து, அந்த ஆகம விதிப்படி பூஜைகளை செய்ய, தனது திருமுகத்திலிருந்தே ஆதிசைவர்களை தோற்றுவித்து தம் திருமேனியை தீண்டும் அதிகாரத்தை சிவவேதியர்களாகிய ஆதிசைவ குலத்திற்கே சிவபெருமான் தந்துள்ளார்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

மேலும், திருக்கோயில்களில் நடைபெறும் பூஜைகளில், விழாக்களில் ஆகம குறைபாடுகள் ஏற்பட்டால், மழை குறையும் மன்னனுக்கு தீங்கு ஏற்படும், பொது மக்களுக்கு தீங்கு நிகழும் என்பதை திருமூலர் தமது திருமந்திரத்தில்,

"ஆற்றரு நோய்மிகும் அவனி மழை குன்றி
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத்தான் திருக்கோயில்கள் எல்லாம்
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே"

என்று பாடியுள்ளார்.

மேலும், கோயில்களில் ஆகம விதிப்படி முறையான பூஜைகள் நடைபெறுவதில் தடை ஏற்பட்டால், அரசருக்கு தீங்கு நேரிடும், வளம் குன்றும், திருடுகள் அதிகமாகும் என்பதை திருமூலர் தமது திருமந்திரத்தில்,

"முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளம்குன்றும்
கன்னம் களவு மிகுந்திடும் காசினி
என்னருள் நந்தி எடுத்துரைத் தானே"

என்று பாடியுள்ளார்.

எனவே, ஆதிசைவ சிவாசாரியார்களைக் கொண்டே ஆகம விதிப்படி ஆலயங்களில் பூஜைகள், விழாக்கள், கும்பாபிஷேகங்கள் போன்றவை செய்யப்படவேண்டும்.

இதை எல்லாம் உணர்ந்தே பண்டைய அரசர்கள், முப்போதும் திருமேனி தீண்டுவாராகிய ஆதிசைவ சிவாசாரியார்களுக்கு பரார்த்த பூஜையை பரம்பரைப் பாத்தியங் கொடுத்துப் பாராட்டினார்கள்.

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5.சிவவேதியர் - வேத வேதியர்

பொதுவாக பிராமணர்களை, அந்தணர், வேதியர், மறையவர் என்று அழைப்பார்கள். ஆனால் மேற்கண்ட வேதியர், அந்தணர் என்ற பதத்தோடு சிவ (அ) சைவ என்ற திருவார்த்தையை சேர்த்து **சிவஅந்தணர், சிவவேதியர், சிவப்பிராமணர், சிவமறையவர், சைவவேதியர், சைவஅந்தணர்** என்று குறிப்பிடும் பொழுது அது ஆதிசைவர்களாகிய சிவாசாரியார்களையே குறிக்கும்.

வேதத்திற்கு முதன்மை கொடுப்பவர்கள் பிராமணர்கள்.

வேதத்தைப் பொதுவாகப் பயின்று ஆகமத்திற்கு முன்னுரிமை கொடுப்பவர்கள் சிவாசாரியார்கள் மற்ற பிராமணர்களைப் போன்று உருவத்திலும், உடையிலும் ஒன்றுபோல் காணப்பட்டாலும், ஆதிசைவ சிவாசாரியார்கள் ஆகம மரபை சேர்ந்தவர்கள் மற்ற பிராமணர்கள் வேத மரபை சார்ந்தவர்கள்.

பிராமணர்கள் பிரம்மனின் முகத்தில் உதித்த வேதவேதியர்கள்

ஆதிசைவ சிவாசாரியார்கள் சிவசிருஷ்டியில் அதாவது சிவபெருமானுடைய திருமுகத்தில் தோன்றிய சிவவேதியர்கள்.

எனவே, பிராமணர்கள் வேறு சிவாசாரியார்கள் வேறு என்ற உண்மையை புரிந்து கொள்ள வேண்டும்.

இருவருக்கும் தங்கள் வாழ்விலும் சரி, வழிபாட்டு முறைகளிலும் தனித்தனி சம்பிரதாயங்கள் உள்ளன.

வரலாற்று ஆய்வாளர் திரு. **K.K.பிள்ளை அவர்கள் தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும்** என்ற நூலில்,

“கோவில் அருச்சகத் தொழிலுக்கு உரிமையுடையவர்கள் ஆதிசைவ அந்தணர்கள் அல்லது குருக்கள் ஆவார்கள். ஏனைய பிராமணப் பிரிவினர் இவர்களுடன் உணவுக் கலப்பும் இரத்தக் கலப்பும் கொள்வதில்லை. ஆதிசைவரின் கோத்திரங்கள் சூத்திரங்களுக்கும், ஏனைய பிராமணரின் கோத்திர சூத்திரங்களுக்கும் ஆழ்ந்த வேறுபாடு உண்டு” என்கிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர் ஸ்ரீலஸ்ரீ எஜமான் ஸ்வாமிகள் தமது **மெய்யும் பொய்யும் நூலில்,**

வேதத்திற்கு முதன்மை கொடுப்பவர்கள் பார்ப்பனர் (பிராமணர்கள்) என்றும்,

ஆகமத்திற்கு முதன்மை கொடுப்பவர்கள் சிவாசாரியார்கள் என்றும்,

மேலும், சிவனே - சிவமே - பரம்பொருள் என்பவர்கள் சிவாசாரியார்கள்

பிரம்மமே - பரம்பொருள் என்பவர்கள் பார்ப்பனர்கள் என்றும்,

பார்ப்பனர்களுக்கு, சன்யாச ஆஸ்ரமம் உண்டு, சிவாசாரியார்களுக்கு சன்னியாச ஆஸ்ரமம் விதிக்கப்படவில்லை என்றும்,

பார்ப்பனர்கள் வேதவிதிப்படி அனைத்து சடங்குகளும் செய்வார்கள் என்றும் சிவாசாரியார்கள் ஆகமவிதிப்படி அனைத்து சடங்குகளையும் செய்வார்கள் என்றும், இதுபோல் பல எடுத்துகாட்டுகளை கூறி, பிராமணர்கள் என்போர்கள் வேறு சிவாசாரியார்கள் என்பவர்கள் வேறு என்று கூறி விளக்கியுள்ளார்கள்.

மேலும், பார்ப்பனர்களுக்கும், சிவாசாரியார் பெருமக்களுக்கும் உபநயனம் விதி உண்டு. ஆனால், சிவாசாரியார்கள் உபநயனத்தின் பின்பு சிவதீக்ஷை பெற்று செய்யும் சந்தியாவந்தனம் வேறானது. அது விசேஷமான சிவவணக்கம் கொண்டதாகும். வழிபாட்டுக்கே பிறப்பெடுத்த சிவாசார்யப் பெருமக்களின் சந்தியாவந்தனம் கூடுதலான சிறப்புடையது என்பதை இதன்மூலம் அறியலாம்.

இவ்வாறு, பல செய்திகளை **திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர் ஸ்ரீலஸ்ரீ எஜமான் சுவாமிகள்** தமது **சிவஞானநிலையில் வெளிப்படுத்தியுள்ளார்கள்.**

சமயங்களின் அரசியல் என்ற நூலில் முனைவர். **தொ.பரமசிவம்** அவர்கள்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"கோயில்களில் கருவறையில் மூலத் திருமேனியைத் தொட்டுப் பூசனை செய்வோர் "**சிவப்பிராமணர்**" என்னும் கூட்டத்தாரே ஆவர். அது அவர்களுக்கே உரிய தனி உரிமையாகும். அவர்கள் வேதப் பார்ப்பனர்களோடு இன்றுவரை மணஉறவு வைத்துக்கொள்வதில்லை. வேதப் பார்ப்பனர்களுக்கு கருவறையுள் நுழையவும் இன்றளவும் அனுமதி இல்லை. கருவறையை அடுத்துள்ள இடைகழி (அர்த்த) மண்டபத்தில் நின்று கொண்டே அவர்கள் வேதம் ஓதுகின்றனர்" என்று கூறுகிறார்.

பெரியபுராணத்தில் சேக்கிழார் பெருமான் பிராமணர்களைக் குறிப்பிடும்பொழுது வேதியர் மறையோர், அந்தணர் என்றும், சிவாசாரியார்களை குறிப்பிடும்பொழுது, சிவவேதியர், சிவமறையோர், சைவஅந்தணர் என்றும் தனித்துக் காட்டி பாடியுள்ளார்.

முற்காலத்தில் ஆதிசைவர்களாகிய சிவாசாரியார்களை "**ஐயர்**" என்று அழைக்கும் வழக்கம் உலக வழக்கிலும், சைவ சமய வழக்கிலும் கிடையாது.

சைவ சமயத்திற்கு குருவாக விளங்குவதால் "**குருக்கள் ஐயா**" என்று அழைக்கும் மரபே இருந்தது. காலப்போக்கில் குருக்கள் ஐயா - குருக்கள் ஐயர் என்று ஆகி பின் ஐயர் என்று அழைக்கும் வழக்கம் ஏற்பட்டு விட்டது.

தமிழகத்தின் இடைக்காலத்தில் அதாவது மாற்று தேச மன்னர்கள் காலத்தில் பூணூல் அணிந்தவர்கள் அனைவருமே "**ஐயர்**" என்று அழைக்கும் பழக்கம் ஏற்பட்டு விட்டது.

இதன் காரணத்தால், ஆதிசைவ சிவாசாரியார்கள் தங்கள் தனித்தன்மையை, தனித்துவத்தை, சமூக மரியாதை இழந்ததுதான் துயரமானது.

பழைய தமிழ்நூல்களில் சிவாசாரியார்களை **தமிழ்குருக்கள், சைவகுருக்கள்** என்று அழைக்கும் மரபு இருந்துள்ளது. தாய்மொழி தமிழாக கொண்ட மக்களே சிவனை வழிபடும் சைவ சமயத்தவராக விளங்குவதால் தமிழ்குருக்கள் என்றும், சைவகுருக்கள் என்றும் ஆதிசைவர்களை அழைக்கும் மரபு கடந்த காலங்களில் இருந்து வந்துள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தமிழகத்தின் இடைக்காலத்தில் ஏற்பட்ட தெலுங்கு மன்னர்களின் ஆட்சிகாலத்திலும், மராட்டிய மன்னர்களின் ஆட்சி காலத்திலும் தெலுங்கு தேசத்திலிருந்தும், மராட்டிய தேசத்திலிருந்தும் பொது மக்கள் தமிழகத்தில் பெரும் திரளாக குடியமர்த்தப்பட்டனர். இவ்வாறு வந்த மக்களுக்கு புரோகிதம் செய்து வைக்க தெலுங்கு தேசங்களிலிருந்தும், மராட்டிய தேசங்களில் இருந்தும் பிராமணர்கள் இங்கு அழைத்த வரப்பட்டு குடியமர்த்தப்பட்டனர். இவ்வகையில், தமிழகத்தில் பலவகைப்பட்ட பிராமணர்கள் வாழ்ந்து வருகின்றார்கள்.

இவர்களில் தமிழக கோவில்களில் **பண்டைக் காலம் முதலே தமிழகத்தின் தொல்குடிகளாக இருந்து வழிபாடுகளை செய்து வரும் ஆதிசைவ சிவாசாரியார்கள் தமிழ் நிலத்திற்கே உரிய சைவ குருக்கள்மார்கள்.** இவர்களே தமிழ் பேசும் மக்களுக்கும் சைவ சமயத்தார்க்கும் குருவாக, குருக்கள்களாக இருந்து வந்துள்ளார்கள் என்பதே கடந்த கால வரலாற்று உணமையாகும்.

எனவே, ஆகம மரபில் வந்த ஆதிசைவர்கள் எனப்படும் சிவாசாரியார்கள் என்பவர்கள் வேறு, சுருதி நூல் கடைபிடிக்கும் பிராமணர்கள் என்பவர்கள் வேறு என்ற உண்மையை அறிந்து கொள்ள வேண்டும்.

திருச்சிற்றம்பலம்

ஆதிசைவ
சிவாசாரியார்களின் ஐந்து சின்னங்கள்

ஆதிசைவ சிவாசாரியார்களுக்கு ஆகமங்கள் ஐந்து அடையாளங்களை (சின்னங்களை) கூறியுள்ளது.

அவை, **விபூதி, ருத்திராக்ஷம், உபவீதம், உத்தரியம், தலைச்சீலை** ஆகியனவாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

6.ஆதிசைவர்கள் இனத்தால் தமிழர்களே

ஆதிசைவர்கள் சங்க காலம் முதலே தமிழ் நிலத்தில் வாழ்ந்து வரும் தமிழ் இனத்தை சார்ந்தவர்களாவார்கள். ஆதிசைவர்கள் பழந்தமிழர்கள், தொல்குடி அந்தணர்கள், தமிழ்நாட்டுக் கோயில்களில் பூஜை செய்யும் மரபுக்குரியவர்கள்.

கா.சு.பிள்ளை அவர்கள தமது **சேக்கிழார் சுவாமிகள் வரலாறு** என்ற நூலில்,

கோயிலில் பூசை புரியும் ஆதிசைவர் பண்டைத் தமிழ்ப் பார்ப்பனராவார், **நம்பி** என்ற தமிழ்பெயரும் அவர்களைக் குறித்து வழங்குகின்றது என்று கூறுகிறார்.

"**தமிழர் சமயம்**" என்ற நூலில் **கா.சு.பிள்ளை** அவர்கள், இப்போது ஆலயங்களின் குருக்களாய் உள்ள ஆதிசைவ மரபினர் தமிழ்ப் பார்ப்பனரே ஆவார். அவர்கள் சிவன் முகத்து அருள்பெற்ற அந்தணரெனவும், சுமார்த்தப்பிராம்மணர் அயன் முகத்துதித்த பிராம்மணர் எனவும் கருதப்படுவதுடன் பின்னையோர் கோயிற் பூசனைக்கு உரியரல்லர் என்று ஆகமம் விதிக்கிறது. ஆதிசைவர் தமிழ்நாட்டிலே பொதியின் மலைக்குத் தெற்கிலுள்ள பெருஞ் செல்வமென்னும் மகேந்திர மலையில் தவமியற்றுத் திருவருள் பெற்ற ஐந்து தமிழ் முனிவர்களின் சந்ததியாராவார். அவர்கள் தற்காலத்தில் தம்மை இன்னார் என்று அறியாது சுமார்த்த மதநெறியை தழுவி நடக்க முயலுகின்றார்கள் என்று கூறுகிறார். மேலும், **ஆதிசைவர்களை தமிழ்குருக்கள், சைவ குருக்கள்மார் என்றும் காசுபிள்ளை குறிப்பிடுகின்றார்.**

மறைமலையடிகளார் தனது **தமிழர் மதம்** எனும் நூலில், ஆதிசைவர்களை தமிழ் பார்ப்பனர் என்றும் தமிழ்குருக்கள்மார் என்றும் குறிப்பிடுகின்றனர்.

சமயங்களின் அரசியல் என்ற நூலில் **முனைவர். தொ.பரமசிவம்** ஆவார்கள்,

"சிவப்பிராமணர்கள் தமிழ்நாட்டில் உருவாகிய ஒரு கூட்டத்தாராய் இருக்க வேண்டும். வடமொழியிலும் தமிழிலும் அர்ச்சனை செய்யத் தெரியும். அடியவர்களுக்குத் திருநீறு வழங்கும் உரிமையும் கடமையும் இவர்களுக்கு மட்டுமே உண்டு".

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

இவர்கள் எண்ணிக்கையில் சிறிய கூட்டத்தவராவர். இவர்களுக்குக் "**காணியாளர்**" என்ற பெயரும் உண்டு. **காணியாளர் என்றால் மரபுரிமை உடையவர்** (மண்ணின் மைந்தர்) என்பதே பொருளாகும். பின்னாளில் வடநாட்டிலிருந்து இடம் பெயர்ந்து வந்த வேதப் பார்ப்பணர் பெருந்தொகையினர் ஆவர். எனவே,இந்தக்கடைசி இடப்பெயர்வுக்கு "**பிருகத்சரணம்**" (பெருந்தொகையான குடியேற்றம்) என்றே பெயர். எனவேதான் சிவன் கோயிலை அடுத்த அக்கிரகாரங்களில் சிவப்பிராம்மணர் (ஆதிசைவ அர்ச்சகர்) வீடுகள் ஒன்று, இரண்டு என்பதாக இருக்க, வேதப்பார்ப்பணர்கள் வீடு நாற்பது, ஐம்பது என்பதாக இருக்கின்றன என்று கூறியுள்ளார்.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர் ஸ்ரீலஸ்ரீ எஜமான் சுவாமிகள் தனது மெய்யும் பொய்யும் என்ற நூலில்,

சிவாசாரியார்கள் ஆரியர் அல்லர் என்றும், திராவிடர்களில் ஆதியானவர்கள் இந்த நிலத்திற்கே சொந்தமான பூர்வீகக் குடிமக்கள் என்றும், சைவர்களில் ஆதியானவர்கள் ஆதிசைவர்கள் ஆக **ஆதி என்ற அடைமொழி பூர்வீகமானவர்கள்** என்ற பொருள் தருவதை உணரலாம். எனவே, **ஆதிசைவர்கள் தமிழகத்தின் பூர்வீக குடிகள் என்கிறார்.**

மேலும், "ஆதியிலிருந்தே இந்நிலத்தில் இருந்தவர்களை ஆதிதிராவிடர்கள் என்கிறோம். திராவிடர்கள் என்ற சொல் விந்திய மலைக்குத் தெற்கே உள்ளவர்களைக் குறிக்கும். சைவர்கள் என்ற சமயப் பெயர் ஒட்டுவதால் சிவாசாரியார்களை ஆதிசைவர்கள் என்கிறோம். நிலப்பெயரும், சமயப்பெயரும் ஒன்றாக ஒட்டாது என்பது யாவரும் அறிந்ததே. ஓட்டித்தான் ஆகவேண்டுமென்றால், இவர்களை "ஆதிசைவத்திராவிடர்கள்" என்பதே பொருந்திவரும்.

எனவே, **சமயரீதியாகப் பார்க்கும்போது சிவாசாரியார்கள் சைவர்கள், மொழிவழியாகப் பகுக்கும்போது தமிழர்கள்** என்கிறார். நமது திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர் **ஸ்ரீலஸ்ரீ எஜமான் சுவாமிகள்.**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாரத தேசத்தில் இமயம் முதல் குமரி வரை பிராமணர்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஆனால் ஆதிசைவ சிவாசாரியார்கள் தமிழகத்தில் மட்டுமே வாழ்ந்து வருபவர்கள் தமிழகம் மட்டுமே சிவாசாரியார்களின் பூர்வீகமாக உள்ளது. தமிழகத்தை தாண்டி வட இந்தியாவில் சிவாசாரியார்கள் என்ற பிரிவினர் கிடையாது. ஆதிசைவ சிவாசாரியார்களும் அவர்கள் பிரமானமாகக் கொண்ட ஆகம நூல்களும் தமிழகத்தில் மட்டுமே வழக்கில் உள்ளவை இதன் மூலமே சிவாசாரியார்கள் தமிழகத்தின் பூர்வீக குடிகள், தமிழர்களே என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

மேலும், ஆதிசைவர்களாகிய சிவாசாரியார்கள் தமிழகத்தில் மட்டும் வாழ்ந்து வருவது போல்,தமிழர்கள் பூர்வீக குடிகளாக வாழும் மற்றொரு நாடாகிய இலங்கை ஈழத்திலும், சிவாசாரியார்கள் பூர்வீக குடிகளாக வாழ்ந்து வருவது சிந்திக்கத்தக்கது.

ஈழ தேசத்தில உள்ள சிவாலயங்களில் அகம்படித் தொண்டு என்ற சிவாலய பூஜைகளை செய்து கொண்டு சைவ சமயம் வளரவும், சிவபக்தி பெருகவும் பல சிவாசாரியார்கள் ஈழத்தில் தொண்டு செய்து வருகிறார்கள். தமிழர்கள் தொன்மையாக வாழும் இடங்களே, சிவாசாரியார்களின் பூர்வீக இடமாகஇருப்பதில் இருந்தே ஆதிசைவ சிவாசாரியார்கள் தமிழர்களே என்பதை தெரிந்து கொள்ளலாம்.

இதன் மூலம் ஆதிசைவர்கள் தமிழ்நாட்டின் பூர்வகுடிகள், மண்ணின் மைந்தர்கள் என்பதை உணர முடியும்.

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthukamalam Research Academy

7.ஆதிசைவர்களின் தொன்மை

சங்க காலம் முதலே ஆதிசைவர்கள் தமிழகத்தில் தொன்மை குடிமக்களாக வாழ்ந்து வழிபாடுகளை செய்து வந்துள்ளனர் என்பதை சங்க இலக்கியமான **பரிபாடல்,**

"விரி நூலந்தணர் விழவு தொடங்கப்

புரிநூலந்தணர் பொலம் கலம் ஏற்ப" (11-77-9) என்ற புறநானூறு பாடல் மூலம் உணர்த்துகிறது.

இங்கு, **விரிநூல் என்பது ஆகமத்தையும், விரிநூலந்தணர் என்பது ஆகமத்தை அறிந்த ஆதிசைவர் அந்தணரையும் குறிக்கும்.**

இவர்கள், தமிழகத்தில் தொன்மை குடிமக்களாக வாழ்ந்து வந்து சைவ சமயத்திற்கும் தமிழ் பக்தி இலக்கியங்களுக்கும் தொண்டு செய்து வருகிறார்கள்.

கலியுகம் தொடங்கிய காலத்தில் அவதரித்த கண்ணப்பநாயனார் புராணத்தில் சிவவழிபாட்டினை செய்யும் **சிவகோசரியார்** ஓர் ஆதிசைவர்.

சங்க காலப் பாடல்களில் பெருமைப்பட பேசப்படும் சிவபெருமானே சங்கப் பலகை ஏறி வாதிட்டு பொற்கிழி பெற்றுத் தந்த **சங்ககால தருமி** ஓர் ஆதி சைவ அர்ச்சகர்.

தருமி ஆதிசைவர் மரபில் வந்தவர் என்பதை திருவிளையாடல் புராணம் தருமிக்குப் பொற்கிழி அளித்த படலத்தில்,

"அந்த வேலையிலா **ஆதிசைவரில்**
வந்த மாணவன் மணஞ்செய் வேட்கையால்
முந்தை யாட்சிமுமுயலும் பெற்றியான்
தந்தை தாயிலான் தருமியென்றுளான்"

என்ற பாடலின் மூலம் அறியலாம்.

தமிழகத்தின் இருண்ட காலமான களப்பிரர் ஆட்சியில் கி.பி.5ம் நூற்றாண்டில், பல துன்பங்களுக்கும், வறுமைக்கும் இடையில் உயிரினும் மேலாக மதித்து சிவபூஜை செய்த 63 நாயன்மார்களில் ஒருவராகிய **ஸ்ரீ புகழ் துணை நாயனார்** ஓர் ஆதிசைவர்.

In Public domain Digitization Muthulakshmi Research Academy

கி.பி. 7ம் நூற்றாண்டில் அவதரித்து 63 நாயன்மார்களை இந்த உலகறியச்செய்த தேவாரம் பாடிய மூவரில் ஒருவராகிய **ஸ்ரீ சுந்திரமூர்த்தி சுவாமிகள்.** அவர் பெற்றோர் **ஸ்ரீ சடையனார், ஸ்ரீ இசைஞானியார்** ஆகியோர் ஆதிசைவர்கள்.

கி.பி. 10ம் நூற்றாண்டில் அவதரித்து மாமன்னன் இராஜராஜசோழன் வேண்டுதலுக்கு ஏற்ப தேவார திருமுறைகளை கண்டெடுத்து தொகுத்து தந்த **ஸ்ரீ நம்பியாண்டார்நம்பிகள்** ஓர் ஆதிசைவர்.

கி.பி. 13ம் நூற்றாண்டில் சிவஞானசித்தியார் என்ற உயர்வான சைவ சித்தாந்த நூலை பாடி அருளிச் செய்த சைவ சித்தாந்த ஆசிரியர் **ஸ்ரீ அருள்நந்தி சிவாசாரியார்** ஓர் ஆதிசைவர்.

கி.பி. 14ம் நூற்றாண்டில் அவதரித்து தமிழில் உள்ள புராணங்களில் அளவில் பெரியதும் சிறப்பும் உடைய கந்த புராணத்தை பாடிய **ஸ்ரீ கச்சியப்ப சிவாசாரியார்** ஓர் ஆதிசைவர்.

மேலும், ஸ்ரீ சுந்தரரின் தாயார் இசைஞானியார் ஆளுடைய நம்பி மாதாக்கள் இசை ஞானியார் என்று, இரண்டாம் குலோத்துங்க சோழனுடைய (கி.பி1113 - 1150) திருவாரூர் கோயில் கல்வெட்டில் உள்ளது. அப்பகுதி வருமாறு,

> "ஆளுடைய நம்பி மாதாக்கள் இசைஞானியார்
> ஜனனீ பவதோ ஞான சிவாச்சார்ய குலே பவத்
> சைவே கௌதம கோத்ரேஸ்மின் ஞான்யாரவ்யா
> கமலாபுரீ" - என்பதாகும்.

இவ்வாறு ஆதிசைவ மரபை சார்ந்தவர்கள் சங்க காலம் முதல் தொன்மை குடிமக்களாக காலந்தோறும் தமிழகத்தில் வாழ்ந்து வந்து சிவப்பணியும், சைவத் தொண்டும் செய்து வந்துள்ளார்கள் என்பதை இதன்மூலம் அறிந்து கொள்ள முடியும்.

திருச்சிற்றம்பலம்

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

8.ஆதிசைவர்களின் தமிழ் தொண்டு

"சைவமும் தமிழும் தழைத்தினி தோங்குக" என்ற வாக்கிற்கேற்ப ஆதிசைவர்கள் சைவ சமயத்திற்கும் தமிழ் பக்தி இலக்கியங்களுக்கும் செய்த தொண்டு அளப்பரியதாகும்.

சங்ககால தருமி என்ற ஆதிசைவர் பொற்கிழி பெறுவதற்காக, சங்கப்பலகை ஏறி நக்கீரரோடு வாதிட்டு சங்கப்புலவர்களுக்கும் தமிழுக்கும் பெருமை சேர்த்தார் சிவபெருமான்.

சைவ சமயத்தின் மையமான அறுபத்தி மூன்று நாயன்மார்களையும் அவர்கள் செய்த சிவத் தொண்டையும் இந்த உலகம் முழுவதும் அறியச் செய்தவர் **ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்.**

தாம் பாடியத் **திருத்தொண்டத்தொகை தேவாரம்** மூலம் அடியவர்களின் நாயன்மார்களின் பெருமைகளை உலகறியச் செய்ததன் காரணமாக பக்தி இயக்கமும் சைவ சமயமும் புத்துயிர் பெற்றது.

சுந்தரர் பாடியத் திருத்தொண்டத் தொகை தேவாரத்தின் காரணமாகவே, தமிழில் பெரியபுராணம் எனும் அழகிய தமிழ் இலக்கியம் சேக்கிழாரால் பாடப் பெற்றது.

சுந்தரர் காலத்திற்கு பின்பே சைவ சமயத்தில் நாயன்மார்களுக்கும், அடியார்களுக்கும் தனித்ததோர் இடம் கிடைத்தது. நாயன்மார்களுக்கு கோயில் அமைப்பதும், அவர்களுக்கு பூஜைகள், விழாக்கள் என பல சிறப்புகள் செய்யப்பட்டன.

அதேபோல், திருநாரையூரில் அவதரித்த **நம்பியாண்டார் நம்பி** எனும் ஆதிசைவ குலத்தில் உதித்த சிறுவர்தான் தேவார திருமுறைகளை கண்டுபிடித்து மீட்டெடுத்து தந்து, தமிழ் மொழிக்கும், சைவ சமயத்திற்கும் அளப்பரிய மிகப்பெரும் தொண்டினை செய்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கரையான் புற்றுகளால் செல்லரித்து அழியக்கூடிய நிலையில் இருந்த தேவாரங்களை எல்லாம் கண்டுபிடித்து தந்த பெருமை நம்பியாண்டார்நம்பிகளையே சாரும்.

நம்பியாண்டார்நம்பி இல்லையேல் திருமுறைகள் இன்று நமக்கு கிடைக்காத ஒரு பெருஞ்செல்வமாய் போயிறுக்கும்

நம்பியாண்டார்நம்பி தேவார திருமுறைகளை கண்டு பிடித்ததோடு அல்லாமல், அவைகளை முறைப்படி திருமுறைகளாக தொகுத்து சைவ சமயத்திற்கும் தமிழுக்கும் மிகப் பெரும் தொண்டு செய்தவர்.

நம்பியாண்டார்நம்பி இல்லையேல் இன்று தேவாரமும் இல்லை. திருமுறைகளும் இல்லை. சைவ உலகம் என்றென்றைக்கும் ஆதிசைவராகிய நம்பியாண்டார் நம்பிகளுக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளது.

ஆகமங்களின் ஞானபாதமான சைவ சிந்தாந்த தத்துவத்தை **சிவஞானசித்தியார்** எனும் நூலாக பாடி தமிழுக்கும், சைவ சமயத்திற்கும் தனிப்பெரும் தொண்டு செய்தவர் **சகலாகம பண்டிதர்** என்று அழைக்கப்படும் **அருள்நந்தி சிவாசாரியார்.**

சிவஞான சித்தியார் பெருமைக்கும் சிறப்புக்கும் அது பெற்ற "**ஆர்**" என்ற அடைமொழியே போதுமானதாகும்.

சிவஞான சித்தியார் இல்லையேல் இன்று சைவ சித்தாந்த தத்துவத்தை புரிந்து கொள்வது கடினம். ஏனெனில் மெய்கண்டாரின் சிவஞானபோதம் சூத்திர வடிவில் சுருக்கமாக உள்ளதால், சைவசித்தாந்த தத்துவத்தை எளிமையாக அனைவரும் புரிந்து கொள்ளும்வகையில் பாடியுள்ளார்.

மேலும், **அருள்நந்தி சிவாசாரியார்** ஆகமத்திற்காகவே தோன்றிய ஆதிசைவ மரபில் அவதரித்தவர் என்பதாலும், சகலாகம பண்டிதர் என்பதாலும், ஆகம தத்துவங்களை மிகச்சிறந்த முறையில் சிவஞான சித்தியாரில் கூறியிருப்பார்.எனவேதான், **தருமை ஆதின குருமுதல்வர் குருஞானசம்பந்தர்.**

"பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியின் சித்தியிலே
ஓர் விருத்தப் பாதி போதும்" என்று பாடியுள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தாயுமானவ சுவாமிகள்,

"பாதிவிருத்தத்தால் இப்பார் முழுவதும் ஆக உண்மை
சாதித்தார் பொன்னடியைச் சாரும்நாள் எந்நாளோ?

என்று சிவஞான சித்தியார் நூலை புகழ்ந்துரைப்பார்.

மேலும், பழமையான தமிழ் செய்யுள் பகுதி ஒன்று, தரமுயர்ந்த ஆறு தமிழ் நூல்களை வரிசைப்படுத்தி குறிப்பிட்டு, இவை தரமான தமிழ் நூல்கள் என்று புகழ்ந்து போற்றுகின்றன. அப்பாடல்,

"வள்ளுவர்சீர் அன்பர்மொழி வாசகம் தொல்காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை - ஒன்றிய சீர்த்
தொண்டர் புராணம் **தொகுசித்தி** ஓராரும்
தண்டமிழின் மேலாம் தரம்"

இப்பாடலில் திருவள்ளுவரின் திருக்குறள், மாணிக்கவாசகரின் திருவாசகம், தொல்காப்பியம், பரிமேலழகர் செய்தஉரை, சேக்கிழார் பாடிய பெரியபுராணம் இவற்றோடு அருள்நந்தி சிவாசாரியார் பாடிய சிவஞான சித்தியாரையும் குறிப்பிட்டு புகழப்படுவதை காணமுடியும்.

சிவஞான சித்தியார் சாத்திரநூல் மட்டுமன்று. முழு அளவு இலக்கிய நூலாகவும் கொள்ளத்தக்கது. ஓரளவு தோத்திர நூலும் ஆகும். தொட்ட தொட்ட இடமெல்லாம் சாத்திரச் சிறப்போடு இலக்கியச் சிறப்பும் கமழும் என்பார்கள் **தவத்திரு ஊரன் அடிகள்** அவர்கள்.

சைவ சித்தாந்தக் கொள்கைகளில் தொன்னூற்று ஐந்து விழுக்காடு சிவஞான சித்தியாரிலேயே உள்ளன. எனவேதான்,

சிவனுக்கு மிஞ்சிய தெய்வமும் இல்லை
சித்தியார்க்குமிஞ்சிய சாத்திரமும் இல்லை.

என்ற பழமொழி ஏற்பட்டது.

இது ஒன்றே அருள்நந்தி சிவாசாரியாரின் பெருமையையும் அவர் செய்த தமிழ் தொண்டையும் பறை சாற்றும்.

மேலும், அருள்நந்தி சிவாசாரியார் சிவஞான சித்தியாரில், பரபக்கம் என்ற பகுதியையும் இருபா இருஃபது என்ற சைவ சித்தாந்த நூலும் இயற்றியுள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சைவ சித்தாந்த தத்துவத்திற்கும், தமிழுக்கும் ஆதிசைவர் அருள்நந்தி சிவாசாரியார் செய்திருக்கும் தொண்டும், ஞானப் பேருதவியும் பெரிதும் போற்றுதற்குரியதாகும்.

அதேபோல், சான்றோருடைத்த தொண்டை நாட்டில் காஞ்சி குமரக்கோட்டத்தின் அர்ச்சகர் காளத்தியப்ப சிவாசாரியார் திருமகனாக அவதரித்தவர் கச்சியப்ப சிவாசாரியார். ஆதிசைவ மரபில் வந்த கச்சியப்ப சிவாசாரியாரால் பாடப் பெற்றது கந்தப்புராணமாகும்.

"**கந்தர்புராணத்தில் இல்லாதது எந்தப் புராணத்திலும் இல்லை**" -என்று பழமொழி எழும் அளவிற்கு பொருட்செறிவு கொண்டதாகவும், இலக்கிய வளம் செறிந்த நூலாகவும் பாடியுள்ளார் கச்சியப்ப சிவாசாரியார்.

" **கச்சியப்பன் செய்த கந்தபுராணக் கலைக்கடல்**"- என்ற வாக்கே கச்சியப்ப சிவாசாரியாரின் பெருமையை உணர்த்தும்.

"இனிய வடமொழி அமுதம் உண்டு தென்மொழி வாரம்
என்ற கடலைக் குடித்து ஓர்
இணையிலா உன்சரிதை கூறும் விலிகொண்டு, அன்பில்
ஏறும் ஒரு கச்சியப்பர்"

என்று **ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் கச்சியப்ப சிவாசாரியாரை** போற்றி புகழ்கின்றார்.

கந்தபுராணம் மொத்தம் ஆறுகாண்டங்களைக் கொண்டு 10,345 செய்யுள்களைக் கொண்டது.

கச்சியப்ப சிவாசாரியார் கந்த புராணத்தை அரங்கேற்றி முடிந்தபின் அவரை தொண்டை மண்டல வேளாளப் பிரபுக்கள் அவரை வணங்கி, தந்தப் பல்லக்கில் ஏற்றி ஊர்வலமாக அழைத்துச் சென்று பெருமை படுத்தினர் என்பதை,

"அந்தப் புரமும் அறுநான்கு
கோட்டத் தாரும் ஒன்றாய்க்
கந்தப் புராணம் பதினா
யிரம் சொன்ன **கச்சியப்பர்**
தந்தப் பல்லக்குச் சிவிகையும்
தாங்கிஅச் சந்நிதிக்கே
வந்தப் புராணம் அரங்கேற்றி
னார்தொண்டை மண்டலமே."

என்ற **தொண்டை மண்டலச் சதகம்** பாடல் மூலம் அறிய முடிகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேலும், அனைத்து சைவ சமய விழாக்களிலும், திருக்கோயில்களிலும் சைவ சமய பக்தர்களால் அன்போடு வாழ்த்துப் பாடலாக பாடப் பெற்றுவரும்,

“வான்முகில் வழாது பெய்க மலி வளம் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க குறைவு இலாது உயிர்கள் வாழ
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகம் எலலாம்”

என்ற இப்பாடல் அருமையிலும் அருமையான வாழ்த்துப் பாடலாகும்.

தமிழின் இனிமையும், சைவ சமயத்தின் சிறப்பையும் எடுத்துகூறும் விதமாக, சைவ சமயத்திற்கு கிடைத்த மணிமகுடமாக இந்த வாழ்த்துப்பாடல் விளங்குகின்றது. சைவ சமய அன்பர்கள் அனைவரையும் வசீகரித்து அன்போடு பாட வைக்கும் காரணம் ஒன்றே இதன் பெருமைக்கும், புகழுக்கும் சான்றாகும். இப்பாடல் ஒன்றே ஆதிசைவராகிய கச்சியப்ப சிவாசாரியாரின் வாக்கு வன்மைக்கும் தமிழத் தொண்டுக்கும் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

பெரியபுராணத்திற்கு முதல் நூலான **திருத்தொண்டத் தொகையும்**, வகை நூலான **திருத்தொண்டர் திருவந்தாதியையும்** தந்தும், சைவ சமயத்திற்கும், தமிழ்மொழிக்கும் **தோத்திரம் பாட ஸ்ரீ சுந்தரரையும், ஸ்ரீ நம்பியாண்டார் நம்பியையும், சாத்திரம் பாட ஸ்ரீ அருள்நந்தி சிவாசாரியாரையும், புராணம் பாட ஸ்ரீ கச்சியப்ப சிவாசாரியாரையும் தந்துள்ள சிறந்த புகழ்மிக்க மரபே ஆதிசைவ மரபாகும்.**

ஆதிசைவர் மழவை மகாலிங்கையர் தமிழ்த் தொண்டு

19-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த மிகப்பெரும் தமிழ் பண்டிதர் **மழவை மகாலிங்கையர்** ஆவார்.

அக்காலங்களில் மிகப்பெறும் தமிழ் வித்வானாக சென்னை பட்டினத்தில் சிறப்புற்று வாழ்ந்தவர். யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலர் அவர்கள் பார்சிவல் பாதிரியார் வேண்டுதலுக்கிணங்க பைபிளை தமிழில் மொழி பெயர்த்தார். அந்த மொழி பெயர்ப்பு சரியானதுதானா என்று பரிசோதித்து தேர்ந்தெடுக்கும் பொறுப்பை அன்றைய சென்னை கிருஸ்துவ சபை மழவை மகாலிங்கையரிடம் ஒப்படைத்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மழவை மகாலிங்கையர் ஆறுமுக நாவலர் பைபிள் தமிழ்மொழி பெயர்பை பரிசோதித்து, முற்றும் வாசித்தும், அதிலே பிழையில்லையென்றும், வசன நடை நன்றாக இருக்கின்றது என்றும், இந்தப் பிரகாரம் அச்சிட்டு வெளியிட தகுதியானது என்று இவர் சான்றளித்த பின்பே சபையால் நாவலரின் மொழி பெயர்ப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஆங்கிலேயர்களால் சென்னையில் ஆரம்பிக்கப்பட்ட முதல் கல்லூரி **சென்னை பிரசிடென்சி காலேஜ்** (மாநில கல்லூரி) ஆகும். இக்கல்லூரியில் **முதல் தமிழ் பேராசிரியராக விளங்கியவர் மழவை மகாலிங்கையர்** ஆவார்.

இவரை **தமிழ்தாத்தா உ.வே.சா** அவர்கள் தமது **நினைவு மஞ்சரி** நூலில்,

'பிரசிடென்சி காலேஜில் ஆரம்பத்தில் தமிழாசிரியராக இருந்தவர் மகாலிங்கையரென்பவர். **அவர் ஆதிசைவர்.** மழவராயனேந்தலென்னும் ஊரினர். அக்காலத்தில் இந்நகரில் (சென்னை) தமிழ் விஷயமாக எந்த நிகழ்ச்சி நடைபெற்றாலும் அவருடைய சம்பந்தம் இருக்கும்"-என்று புகழ்ந்து கூறுகிறார்.

மேலும், **மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள்** தமது இளமை பருவத்தில் (கி.பி1840-1842) சென்னை சென்றிருந்தபொழுது, சபாபதி முதலியார், திருவேங்கடாசல முதலியார், திருவம்பலத் தின்னமுதம் பிள்ளையென்னும், மூவர் மூலமாக மழவை மகாலிங்கையரை சந்தித்ததையும், தமிழில் தமக்கிருந்த ஐயங்களைக் கேட்டுத் தெளிந்துக் கொண்டதாகவும், தமிழ்தாத்தா உ.வே.சா அவர்கள் தமது குருநாதரின் வரலாற்று நூலாகிய **ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் சரித்திரத்தில்** குறிப்பிட்டுள்ளார். அப்பகுதி வருமாறு,

மழவை மகாலிங்கையரை அறியாதவர் யாவர்? மதுரைக்குக் கிழக்கேயுள்ள மழவராயனேந்தலென்பது அவர் ஊர். அப்பெயரின் மரூஉவே மழவையென்பது. மகாலிங்கையர் திருத்தணிகை விசாகப் பெருமாளையரிடத்தும், அவர் சகோதரர் சரவணப்பெருமாளையரிடத்தும் தமிழ் நூல்களை முறையே பாடங்கேட்டவர். கேட்டவற்றை ஆராய்ந்து தெளிந்தவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கம்பராமாயணம், திருத்தணிகைப்புராணம், முதலிய பெருங்காப்பியங்களில் நல்ல பயிற்சி உள்ளவர். இலக்கண அறிவை விசேஷமாக பெற்றவர். அஞ்சாநெஞ்சினர் விரைந்து செய்யுள் செய்யும் ஆற்றலுடையவர், ஸங்கீத லோலர், சிநேக வாத்ஸல்ய சீலர், **ஆதிசைவ குலதிலகர்,** தாண்டவராயத் தம்பிரானுக்கு உயிர்த்தோழர். பிற்காலத்தில் ஆறுமுகநாவலர் சென்னைக்கு வந்திருந்தபொழுது பலருடைய வேண்டுகோட் -கிணங்கி அவரெழுதிய பைபிள் தமிழ் வசன புத்தகத்தைப் பரிசோதித்தற்குத் தேர்ந்தெடுக்கப் பெற்றவர் என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் அந்நூலில்,

'பிள்ளையவர்கள் அக்காலங் தொடங்கி மகாலிங்கையரோடு பழகுதலை மிகுதியாக வைத்துக் கொண்டு அவரிடம் நன்னூல் விருத்தியுரை, காரிகையுரை, தண்டியலங்காரவுரை, நாற்கவிராச நம்பியகப்பொருளுரை, முதலியவற்றிலும், பிறவற்றிலும், தமக்கிருந்த ஐயங்களைக் கேட்டுத் தெளிந்து அதுவரை தமக்கு அகப்படாமல் இருந்ததாகிய இலக்கணக் கொத்துரையையும் அவர்பால் பாடங்கேட்டனர்" - என்று குறிப்பிடுகின்றார்.

இத்தகைய மிகப்பெறும் புகழை பெற்று தமிழ் வித்வானாக விளங்கிய **மழவை மகாலிங்கையர் ஓர் ஆதிசைவர் என்றும் ஆதிசைவ குலத்தில் தோன்றியவர் என்றும் தமிழ் தாத்தா உ.வே.சா குறிப்பிட்டுள்ளது ஆதிசைவர்களுக்கு மிகப் பெறும் பெருமையாகும்.**

மழவை மகாலிங்கையர் சிறுவர்களுக்கு உபயோகமாகும் படி, வசன நடையில் ஓர் இலக்கணம் நூல் எழுதியுள்ளார். கி.பி.1847-ல் முதல்முதலாக தொல்காப்பியம் எழுத்ததிகாரம், நச்சினார்கினியர் உரையை பதிப்பித்துள்ளார்.

மழவை சிங்கார சதகம் முதலிய பல தமிழ் நூல்களை இயற்றியுள்ளார். இவ்வாறு பல தமிழ்தொண்டுகளை செய்துள்ளார்.

ஆதிசைவர் மழவை மகாலிங்கையர் தமிழ்தொண்டினை என்றென்றும் மறவாது போற்றுவோம். இவ்வாறு, சைவமும் தமிழும் தழைக்க, முப்போது திருமேனி தீண்டும் ஆதிசைவ மரபில் தோன்றி தமிழ்த் தொண்டும் சிவத்தொண்டும் செய்த ஆதிசைவர்களின் பெருமையை நாம் அறிந்து கொள்ளலாம்.

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

9.ஆதிசைவர்களின் வடமொழி தொண்டு

ஆதிசைவர்களாகிய சிவாசாரியார்கள் சைவமும் தமிழும் தழைக்க தமிழ் தொண்டு செய்தது போன்று, வடமொழியில் சிவாகம கருத்துக்களையும், சைவ சித்தாந்த தத்துவங்களையும் விளக்கக் கூடிய பல நூல்களை இயற்றியுள்ளனர்.

சிவாகமங்களின் சாரமாக சிவார்ச்சனா விதிகளை கூறும் பதினெட்டு பத்ததி நூல்களை 18 சிவாசாரியார்கள் வடமொழியில் இயற்றியுள்ளனர். இந்த பதினெட்டு பத்ததி நூல்களும் சிவாகமங்களின் தத்துவங்களை, கிரியைகளை, ஆச்சாரங்களை, நியமங்களை விளக்கும் நூல்களாக உள்ளன. இந்த பத்ததி நூல்கள் **"ஆகமங்களின் வழிநூல்கள்"** என்று அழைக்கப் படுகின்றன.

இந்தப் பத்ததி ஆசிரியர்களின் பெயர்கள்:

1) ஸ்ரீ உக்ரஜ்யோதி சிவாசாரியார் 2)ஸ்ரீசத்யோஜ்யோதி சிவாசாரியார்
3) ஸ்ரீ இராமகண்டர் சிவாசாரியார் 4) ஸ்ரீ வித்யாகண்டர் சிவாசாரியார்,
5) ஸ்ரீ நாராயணகண்டர்சிவாசாரியார் 6) ஸ்ரீ விபூதிகண்டர் சிவாசாரியார்,
7) ஸ்ரீ கண்டர் சிவாசாரியார், 8) ஸ்ரீ நீலகண்டர் சிவாசாரியார்,
9) ஸ்ரீ சோமசம்பு சிவாசாரியார், 10) ஸ்ரீ ஈசான சம்பு சிவாசாரியார்,
11) ஸ்ரீ ஹிருதய சிவாசாரியார், 12) ஸ்ரீ பிரம்ம சம்பு சிவாசாரியார்
13) ஸ்ரீ வைராக்கிய சிவாசாரியார், 14) ஸ்ரீ ஞான சம்பு சிவாசாரியார்,
15) ஸ்ரீ திரிலோசன சிவாசாரியார் 16) ஸ்ரீ வருண சிவாசாரியார்
17) ஸ்ரீ ஈஸ்வர சிவாசாரியார் 18) ஸ்ரீஅகோரசிவாசாரியார்
ஆகியோர் ஆவார்கள்.

மூல ஆகமங்களில் உள்ள கிரியாபாதம் பகுதிகளை முறையாக தொகுத்து வரிசைபடுத்தி எளியமுறையில் ஆகம விதிப்படி கிரியைகள் செய்யும்வண்ணம் இந்த பத்ததி நூல்கள் அமைந்துள்ளன. **"பத்ததி" என்ற சொல்லுக்கு நூலாசிரியர் காண்பித்த வழி என்பது பொருளாகும்.**

இன்று ஆலயங்களில் பூஜை செயயும் பெரும்பாலான ஆதிசைவ சிவாசாரியார்களால் அதிகமாக நடைமுறையில் கையாளப்படும் பத்ததி **ஸ்ரீ அகோர சிவாசாரியார் பத்ததியாகும்.**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேலும், சில சிவாசாரியார்கள் சோமசம்பு சிவாசாரியார் பத்ததி, வருணசிவாசாரியார் பத்ததி, ஈசான சிவாசாரியார் பத்ததி, வாமதேவசிவாசாரியார் பத்ததி ஆகிய பத்ததிகளை கடைபிடித்து வருகின்றனர்.

இவற்றில், சோமசம்பு சிவாசாரியார் பத்ததி திருவாவடுதுறை ஆதீனத்தில் பிரதானமாக கடைபிடிக்கப்பட்டு வருகின்றது.

ஸ்ரீ அகோர சிவாசாரியார்

ஸ்ரீ அகோர சிவாசாரியார் சோழதேசத்தில் ஆதிசைவ மரபில் அவதரித்தவர். சர்வாத்ம சம்பு சிவாசாரியாரிடம் சிவாகமங்களை பயின்றவர். வேதாந்த சாஸ்திரங்கள் உட்பட அனைத்து கலைகளையும் கசடறப் பயின்று சிவாகமங்களில் வல்லவராய் திகழ்ந்தார்.

ஸ்ரீ துர்வாஸ முனிவரை உபாசித்து அவரை குருவாகக் கொண்டு சைவ சமயத்தின் தலைமை பீடமான சிதம்பரத்தில், ஸ்ரீ அனந்தேஸ்வரன் கோவிலுக்கு அருகில் திருமடம் ஸ்தாபித்து ஆகம நூல்கள் பலவற்றை இயற்றியும், பக்தர்களுக்கு சிவஞான உபதேசம் அளித்து அருள்புரிந்து வந்தார். மேற்படி திருமடத்தில்தான் அகோரசிவாசாரியார் பத்ததி என்று அழைக்கப்படும். "**கிரியாக்கிரமத்யோதிகை**" என்ற நூல் இயற்றப்பட்டது. மேற்படி திருமடம், **ஸ்ரீ அகோர சிவாசாரியார் திருமடம்** என்று அழைக்கப்பட்டது. தற்போது சிதம்பரத்தில் அம்மடம் **மேலமடம்** என்று வழங்கி வருகிறது.

சிவாசாரியார் ஒருவர் தலைவராக இருந்து ஆரம்பித்த இம்மடம் பின்பு ஸ்மார்த்த பிராமணர் ஒருவர் தலைமையில் இயங்கி வந்துள்ளது.

ஸ்ரீ அகோர சிவாசாரியார் ஆகமங்களுக்கு செய்த தொண்டினை போன்று வடமொழியில் பல சைவ சித்தாந்த நூல்களையும், பல ஆகமங்களுக்கு உரை நூல்களும் எழுதியுள்ளார். அந்நூல்கள் அனைத்தும் ஆகம கிரியைகளுக்கும், சைவ சமய சித்தாந்த தத்துவங்களை உணர்ந்து கொள்வதற்கு பெரும் உதவியாக உள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்நூல்களாவன,

1.சர்வஞானோத்ர விருத்தி
2.ஸர்வ வித்யேசினீ
3.தத்துவப் பிரகாசிகா விருத்தி
4.தத்வ ஸங்கிரஹ லகுகா
5.தத்வத்ரய நிர்ணய விருத்தி
6.ரத்ண த்ரயோல்லேகினீ
7.போககாரிகா வியாக்யா
8.நாதகாரிகா வியாக்கியா
9.மிருகேந்திர விருத்தி தீபிகை
10.ஆச்சர்ய ஸாரம் } காவியங்கள்
11.பாஷண்டா பஜயம்
12. பத்த பிரகாசம்
13. நாட்யாப்யுதயம்
14. கிரியாக்ரமத் யோதிகை என்பனவாகும்.

ஸ்ரீ அகோர சிவாசாரியாரின் காலம், சாலிவாஹன சகாப்தம் ஆயிரத்தென்பதில் என்னால் எழுதப் பெற்றது. என்றுள்ள அகோர சிவாசாரியாரின் வசனத்தாலேயே கி.பி.1158 (சா.1080) என அறிய முடிகிறது.

அகோர சிவாசாரியர் சைவசித்தாந்த ஆசிரியர்களில் ஒருவரான உமாபதி சிவாசாரியாருக்கு முற்பட்டவர். உமாபதி சிவாசாரியார், தமது **பௌஷ்கர சம்ஹிதா பாஷ்யத்தில்,** அகோர சிவாசாரியாரின் "**மிருகேந்திர விருத்தி தீபிகை**" எனும் நூலில் பிரமாணமாக கூறியுள்ளதன் மூலம் அறிய முடிகின்றது.

மேலும், ஞானபாதமாகிய பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள் உண்மைகளை விளக்கும் சித்தாந்த நூல்களாக

1.தத்தவப் பிரகாசிகை, 2.தத்துவ சங்கிரகம்,
3.தத்துவத்திரய நிர்ணயம், 4.இரத்தினத் திரயம்,
5.போக காரிகை, 6.நாத காரிகை,
7.மோட்ச காரிகை, 8.பரமோட்ச நிராசகாரிகை

என்ற எட்டு நூல்கள் ஸ்ரீ சத்யோஜாத சிவாசாரியார் உள்ளிட்ட சிவாசாரியார்களால் இயற்றப்பட்டன. **இவை அஷ்ட பிரகரணம்** என்று அழைக்கப்பட்டன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சைவ சித்தாந்த தத்துவங்களை விளக்கும் மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கு நூல்கள் தமிழில் இருப்பது போல், வடமொழியில் முப்பொருள் உண்மைகளை விளக்கும் ஆகமங்களின் ஞானபாத கருத்துக்களை கூறும் தத்துவ நூல்களாக இந்த எட்டு நூல்களும் உள்ளன.

சிவாகமங்கள் – முதல் நூல்கள் என்றும்
பத்ததி நூல்கள் – வழி நூல்கள் என்றும்
அஷ்ட பிரகரணம் நூல்கள் – சார்பு நூல்கள் என்றும்

அழைக்கப்பட்டு போற்றப்படுகின்றன.

சிவபெருமானால், அருளப்பட்ட முதல் நூல்கள், வழி நூல்கள், சார்பு நூல்கள் என அனைத்தும் ஆதிசைவர்களாகிய சிவாசாரியார்களால் இயற்றப்பட்டும், பாதுகாக்கப்பட்டும், கடைபிடிக்கப்பட்டும் வந்துள்ளன என்பதன் மூலம் ஆகமங்களுக்கும், சிவாசாரியார்களுக்கும் உள்ள பிணைப்பும் இங்கு உணரத் தக்கதாகும்.

ஸ்ரீ ஆறுமுக நாவலர், தமது சைவ வினாவிடை நூலில் அஷ்டப் பிரகரணம் என்ற எட்டு நூல்களையும் சிவாகமங்களின் சார்பு நூல்கள் என்று அழைக்கின்றார். திருவாவடுதுறை ஆதினம் இந்த எட்டு நூல்களையும் வெளியிட்டு சைவ தொண்டு செய்துள்ளனர்.

இவையன்றி, ஆகமங்களின் சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதம் ஆகியவற்றின் தத்தவங்களை எடுத்துக்கூறும் விதமாக,

ஸ்ரீ திரிலோசன சிவாசாரியாரால் இயற்றப்பட்ட சித்தாந்த ஸாராவளி என்ற நூலும்,

ஸ்ரீவேதஞானர் என்பவரால் இயற்றப்பட்ட **சைவாகம பரிபாஷா மஞ்சரி** என்ற நூலும்,

காஞ்சிபுரம் **ஸ்ரீ ஞானசிவாசாரியாரின் சீடர் ஸ்ரீ பஞ்சாக்ஷர ஸ்வாமிகள்** இயற்றிய **சைவபூஷணம்** என்ற நூலும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீகண்டசிவாசாரியார் இயற்றிய சித்தாந்த ரத்னாகரம் என்ற நூலும், **ஸ்ரீ ஞானசிவாசாரியார் இயற்றிய சிவபூஜாஸ்தவம்** என்ற நூலும்,

ஆகமங்களின் ஞானபகுதியை முறைபட தொகுத்து தரும் **ஸ்ரீ உமாபதி சிவாசாரியாரின் சதரத்தின சங்கிரதம்** என்ற நூலும், போன்ற பல ஆகம சித்தாந்த நூல்களை சிவாசாரியார்கள் வடமொழியில் இயற்றியுள்ளனர்.

மேலும், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள இராஜவல்லிபுரத்தில் செப்பரை எனும் அழகிய ஊர். ஸ்ரீ நடராஜ பெருமானின் ஐந்து சபைகளில் தாமிர சபை உள்ள பதியாகும். இங்கு **செப்பரை** எனும் அழகிய **சைவ ஆகம மடம்** ஒன்று உள்ளது.

இந்த செப்பரை மடத்தில் கி.பி.1560-ம் ஆண்டு காலங்களில் சின்னப்பட்டமாக வீற்றிருந்தவர், **செப்பரை கனகசபாபதி சிவாசாரியார்** ஆவார். இவர், ஆகமம், சைவ சித்தாந்தம், தமிழ் மொழி வடமொழிகளில் வல்லமை பெற்றவராக விளங்கியுள்ளார்.

இவரிடம், திருவாவடுதுறை ஆதினத்தை சார்ந்த வித்வான் **இலக்கணக் கொத்து சுவாமிநாததேசிகர்** என்பவர் வடமொழிப் பாடம் பயின்றார். என்பதை,

" செப்பறைப் பதியின் வாழ்**சிவத் துவிஜன்**
கனக சபாபதி கருதுவட நூற்கடல்
தபோதனர் புகழும் சைவாதி ராசன்
உபய பதங்களை உண்மையொடு பணிவாம்."

(சிவத்துவிஜன் - ஆதிசைவ அந்தண சிவாசாரிய மரபு) என்று தாம் பாடிய இலக்கணக் கொத்தின் பாயிரப் பாடலில் கூறியுள்ளார்.

இவ்வாறு, முப்பொழுதும் திருமேனி தீண்டும் ஆதிசைவ சிவாசாரியார்கள் கடந்த காலங்களில் இலக்கிய நூல்களை படைக்கும் அளவிற்கு தமிழ்மொழி, வடமொழி என்று இரு மொழிகளிலும் புலமை பெற்றிருந்தனர் என்ற செய்தியை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியார் வரலாறு

வியாசர் அருளிய **"பிரமசூத்ரம்"** எனும் நூலுக்கு ஆதிசங்கரர், இராமானுஜர், மத்வர் போன்றோர் உரை எழுதியுள்ளனர். இதில் ஆதிசங்கரர் பிரம்ம சூத்திரத்திற்கு எழுதிய உரை **அத்வைதம்** என்றும், இராமானுஜர் பாஞ்சராத்திர ஆகமத்தின் வழி நின்று வைணவ மரபை அடிப்படையாகக் கொண்டு எழுதிய உரை **விசிட்டாத்துவிதம்** என்றும், மத்துவாச்சாரியார் பிரம்மசூத்திரத்திற்கு எழுதிய உரை **துவைதம்** என்றும் அழைக்கப்படுகின்றன.

ஆனால், ஆதிசங்கர், இராமானுஜர், மத்வர் ஆகியோருக்கு முன்பே சிவாசாரியார் மரபில் வந்த **ஸ்ரீநீலகண்டசிவாசாரியார்** என்பவர் பிரம்மசூத்திரத்திற்கு ஆகமங்களை பிரமாணமாகக் கொண்டு சைவசமய தத்துவங்களை வெளிப்படுத்தும்வண்ணம் வடமொழியில் ஓர் உரை செய்துள்ளார், இவர் செய்த உரைக்கு

"பிரமசூத்திர சிவாத்துவித சைவபாடியம்" என்று அழைக்கப்படுகிறது.

இராமானுஜர், வைணவ மரபை, வைணவ ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டு பிரமசூத்திரத்திற்கு வைணவ பாஷ்யமாக உரை செய்ததுபோல், **ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியார் சைவ ஆகமங்களை பிரமானமாகக் கொண்டு, சிவபரத்துவத்தை, சைவ சமய தத்துவ ஞானங்களையும் வெளிப்படுத்தும்வகையில் சைவபரமாக சைவபாடியமாக உரை செய்துள்ளார்.**

இந்த நீலகண்ட பாஷ்யத்திற்கு இந்திய தேசத்தின் முதல் குடியரசு தலைவர், தத்துவ அறிஞர். டாக்டர் எஸ்.இராதாகிருஷ்ணன் அவர்கள் ஓர் சிறந்த அணிந்துரை அளித்துள்ளார்.

ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியாரின் காலமும், வரலாறும் முழுமையாக அறிய முடியவில்லை. ஆதிசங்கரர் இராமனுஜர், மத்துவர் ஆகியோருக்கு இணையாக போற்றப்பட வேண்டியவர். எனினும் அவர் செய்த பாடியத்தின் பெருமையும், அவரின் புகழும் வரலாற்றில் மறைக்கப்பட்டதாக உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியார் அருளிய சிவாத்துவித பாஷ்யத்திற்கு **ஸ்ரீ அப்பயதீட்சிதர் "சிவார்க்கமணி தீபிகை"** என்ற ஓர் விளக்கவுரை முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு எழுதியுள்ளார்.

ஸ்ரீ காசிவாசி செந்திநாதையர் அவர்கள், ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியாரின் சிவாத்துவித சைவ பாஷ்யத்தை தமிழில் மொழிபெயர்த்து முதன்முதலில் 1907ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளார். அந்நூலை மறுபதிப்பாக 2005ஆம் ஆண்டில் **சேக்கிழார் அடிப்பொடி தி.ந.இராமச்சந்திரன்** அவர்கள் வெளியிட்டு சைவ சமய உலகத்திற்கு பெரும் உதவி செய்துள்ளார்.

ஸ்ரீ ஆதிசைவ சிவாசாரியார் பெருமக்கள் ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியாரின் பிரம்ம சூத்திர சிவாத்துவித சைவ பாஷ்யத்தை கண்டு, தெளிந்து. உணர்ந்து, அதன் புகழை வெளிக்கொணர்ந்து வருதே ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியாருக்கு ஆதிசைவர்களும், சைவ சமய அன்பர்களும் செய்யும் மரியாதையாகும்.

ஸ்ரீ காசிவாசி செந்திநாதையர் அவர்கள், 1905ஆம் ஆண்டிலேயே கீழ்கண்டவாறு ஒரு வேண்டுகோள் வைத்துள்ளது இங்கு சிந்திக்கத்தக்கதாகும்.

உ

ஸ்ரீ நீலகண்டசிவாசாரியசுவாமிகள்
விம்பப் பிரதிஷ்டை.

☞ மத்துவர்களுக்கு ஆனந்ததீர்த்தரும், வைணவர்களுக்கு இராமாநுஜாசாரியரும், ஏகான்மவாதிகளுக்குச் சங்கராசாரியரும் ஆசாரியர்களாய் அமர்ந்தாற் போல, சிவபெருமானை ஆண்டவர் என்றும் ஆன்மாக்களை அடிமை என்றுங் கொண்டு சிவபெருமானுக்குத் தொண்டு பூண்டொழுகும் சிவத்துவிஜர்களுக்கும் மற்றைச் சைவசமயிகளுக்கும் ஆசாரியராய், (ஒரே முக்கியப் பொருள் பொதிந்த) பிரமசூத்திரங்களுக்குச் சத்தியார்த்தஞ் செய்து வைதிகசைவசமயஸ்தாபனஞ் செய்த பரமாசாரியராகிய ஸ்ரீநீலகண்டசிவாசாரியரது திருவுருவவிம்பத்தைத் தொண்டைமண்டலத்து வடதிருமுல்லைவாயிலிற் போல மற்றைய சிவாலயங்கடோறும் பிரதிட்டை செய்து ஆவணி மாசத்துப் பூசநக்ஷத்திரத்திற் குருபூசை செய்து, இராப்போதிலே உற்சவம் நடாத்தி வைதிக சைவசமயப் பிரபுதிலகர்கள்யாவரும் பெரும்புகழையும் சிவபுண்ணியத்தையும் பெற்று நீடு வாழ்வாராக.

இங்ஙனம்,
ஸ்ரீகாசிவாசி—செந்திநாதையர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

10.ஆதிசைவர்களின் சிறப்பு பெயர்கள்

ஆதிசைவர்கள் சைவ சமய பக்தி இலக்கியங்களிலும், கல்வெட்டுகளிலும் பல சிறப்பு பெயர்கள் கொண்டு அழைக்கப் படுகிறார்கள்.

1. சிவவேதியர்: சிவபெருமானை முழு முதற் கடவுளாக வழிபடும் வேதியன் என்பதால் சிவவேதியர் என்று பெயர்.

2. ஆதிசைவர்: இப்பூவுலகில் தோன்றிய முதல் சைவர் என்பதால் ஆதிசைவர் என்று பெயர்.

3. குருக்கள்: சைவர்களுக்கு ஆகமவிதிப்படி சிவதீக்ஷை அளித்து நல்வழிப்படுத்தும் குருமார்களாக விளங்குவதால் "**குருக்கள்**" என்று பெயர்.

4.சிவாசாரியார்: சிவபெருமானால் அருளப்பட்ட ஆகமங்களை தெளிவுற கற்று, ஆகமவிதிப்படி விசேஷ பூஜைகளை சிவபிரானுக்கு செய்யும் ஆச்சாரியார் என்பதால் "**சிவாசாரியார்**" என்று பெயர்.

5.சிவமறையோர்: மறைகளாகிய வேத ஆகமங்களை கொண்டு சிவபிரானை அர்ச்சிப்பதால் "**சிவமறையோர்**" என்று பெயர்.

6.சைவஅந்தணர்: சைவ சமய நெறியில் வாழும், சைவ சமய நெறிகளை கடைபிடிக்கும் அந்தணர் என்பதால் "**சைவஅந்தணர்**" என்று பெயர்.

7.பட்டர்: பட்டன் என்றால் குரு என்று பொருள் "**ஆல நிழல் பட்டனே**" என்பது திருமுறை வாக்கு. பட்டறிவு உடையவன். ஆகமங்களை தான் உணர்ந்தும் மற்றோர்க்கு தனது அனுபவ ஞானத்தினால் உணர்த்துவதால் "**பட்டன்**" என்று பெயர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

8.தொழுகுலத்தோர்: உலகநலன் பொருட்டும், பிறர் நலன் பொருட்டும் இறைவனை ஆலயத்தில் தொழுது வழிபாடு செய்பவர்கள் என்பதால் "**தொழுகுலத்தோர்**" என்று பெயர்.மேலும், ஆதிசைவர்கள் வழிவழியாக இறைவன் திருமேனியை தீண்டிதொழுவதால்"**தொழுகுலத்தோர்**" என்று அழைக்கப்பட்டனர்.

9.நம்பியார்: ஆதிசைவர்களின் மரபு பெயர். பூர்வீக குடிகள் என்பது இதன் பொருளாகும். நம்பி + ஆரூரர்=நம்பியாரூர் என்பது சுந்தரரின் இயற் பெயர், நம்பியாண்டார் நம்பி என்பவற்றைக் காண்க.

10.நாயனார்: ஸ்ரீ சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் மரபில் வந்தவர்கள் என்பதால் "**நாயனார்**" என்று பெயர்.

11.சிவப்பிராம்மணன்: சிவபெருமானின் திருமுகத்தில் தோன்றிய பிராம்மணன். சிவபிரானை அர்ச்சித்து வழிபடும் பிராம்மணன் என்பதால் "**சிவப்பிராம்மணன்**"என்று பெயர்.

12.ஆகம அந்தணர்: ஆகமங்களை ப்ரமாணமாக கொண்ட அந்தணர், ஆகமங்களை பிரதானமாக கற்கும் அந்தணர் என்பதால் "**ஆகம அந்தணர்**" என்று பெயர்.

13.கோயிற்பிராமணன்: கோயில் பூஜையை தவிர்த்து வேறு எத்தொழிலும் செய்யாதவர் என்பதால் "**கோயிற்பிராமணன்**" என்று பெயர்.

14. உரிமையிற் தொழுவார்: சிவபிரானிடம் ஆதிசைவர்களுக்கே முதல் உரிமை உள்ளதால் உரிமை கொண்டு வழிபடுவதன் காரணத்தால் "**உரிமையிற் தொழுவார்**" என்று பெயர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

15.**அகத்தடிமை அந்தணன்:** அகம் என்னும் கருவறையில் பூஜை (அடிமை) புரியும் அந்தணன்என்பதால் "**அகத்தடிமை அந்தணன்**" என்று பெயர்

16.**அரன் மறையோர்:** அரனாகிய சிவபெருமானை வேத ஆகம மறைகளில் கூறியுள்ள விதிப்படி அர்ச்சிக்கும் மறையவர்கள் என்பதால் "**அரன் மறையோர்**" என்று பெயர்

17.**அனுக்கத்தொண்டர்:** ஆதிசைவர்களாகிய சிவாசாரியார்களை முதன்மையாக குறிக்கும் பெயர்

18.**தேசிகர்:** தேசிகர் என்றால் குரு என்று பொருள். சைவ மரபில் தேசிகர் என்ற சொல் முதன்மையாக சிவாசாரியார்களை குறிக்கும்.

19.**மாகேஸ்வரர்கள்:** ஆதிசைவ அர்ச்சகர்களுக்கு "**மாகேஸ்வரர்கள்**"என்று பெயர்

20.**ஆசாரியன்:** சைவ மரபில் ஆசாரியன் என்பது ஆகமம் அறிந்த ஆதிசைவ சிவாசாரியார்களை குறிக்கும் பெயர்

பெரியபுராணத்தில் சேக்கிழார் பெருமான், ஆதிசைவ சிவாசாரியார்களை **சிவவேதியர், சைவ அந்தணர், சிவமறையோர்** என்று குறிப்பதோடு அல்லாமல்,

ஆசிலந்தணர் - குற்றமிலா அந்தணர் என்றும்,

செல்வ மறையோர்- சிவனருளை முழுவதும் பெற்ற மறையவர்கள் என்றும்,

மாசிலாமறையோர் - சிவதூய்மை உடைய மறையவர்கள் என்றும்,

அன்பில் வரும் குல மறையோர் - சிவபிரானுக்கு அன்பினாலே வழி வழி அடிமை செய்யும் குலத்தாராகிய சிவவேதியர் என்றும் போற்றி புகழ்ந்துள்ளார்.

பொதுவாக சோழர்கால கல்வெட்டுகளில் சிவாசாரியார்களை சிவப்பிராமணர்கள் என்று குறிப்பிட்டுள்ளனர். அர்ச்சகர்களை குறிக்கும் இடங்களில் பெரும்பாலும் **நம்பி, பட்டர், பட்டஸ்ய** என்று காணப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாண்டிய மண்டலத்திலும், மதுரையைச் சார்ந்த சிவாசாரியார்களும் தம்மை **பட்டர்** என்று அழைத்துக் கொள்கிறார்கள். மற்றபடி தமிழகத்தில் உள்ள பெரும்பாலான ஆதிசைவர்களை, **குருக்கள்** என்றும், **சிவாசாரியார்கள்** என்றும் அழைக்கும் வழக்கம் உள்ளது.

ஸ்ரீ சுந்தரரின் ஆன்மார்த்த ஸ்தலமாகிய திருவாரூரில் ஸ்ரீ தியாகராஜரை பூஜிக்கும் ஆதிசைவர்கள் **நயினார்** என்றும் **பிரமராயர்** என்றும் அழைக்கப்படுகின்றனர்.

திருவாரூர் ஸ்ரீ சுந்தரரின் ஆன்மார்ந்த தலம் என்பதாலும், திருவாரூர், ஸ்ரீ சுந்தரரின் தாயார் இசை ஞானியார் அவதரித்த தலம் என்பதாலும் (இதன் காரணமாகவே ஸ்ரீ சுந்தரருக்கு பிள்ளை திருநாமம் ஆரூரன்) அங்கு பூஜிக்கும் ஆதிசைவர்கள் தாங்கள் சுந்தரர் மரபில் வந்தவர்கள் என்ற முறையில் **நயினார் பட்டம்** பெற்றுள்ளனர். நாயனார் என்பதே நயினார் என்று மருவியுள்ளது.

மேலும், தில்லை அந்தணர்களுக்கு சிதம்பரம் நடராஜர் ஆலயம் எவ்வாறு உரிமையுடையதாக உள்ளதோ, அதுபோல், ஆதிசைவர்களாகிய சிவாசாரியார்களுக்கு உரிமையுடைய கோவிலாக திருவாரூர் தியாகராஜர் கோயில் இருந்ததாக தெரிய வருகிறது. பூஜை முதல் பராக், கட்டியம், திருவாசல், சீர்பாதம், பொற்பண்டாரி என அனைத்து பணிகளையும் ஆதிசைவர்களே மேற்கொண்டதாகவும் தெரிய வருகிறது. (இதுபற்றி விரிவான ஆராய்ச்சிகள் தேவைப்படுகிறது)

இதே போன்று, **திருச்சி மலைக்கோட்டை ஸ்ரீ தாயுமானவர்** ஆலயத்தில் பூஜை செய்யும் ஆதிசைவர்கள் "**நம்பியார்**" என்று அழைக்கப்படுகிறார்கள்.

திருவையாறு ஸ்ரீ ஐய்யாரப்பனை முப்பொழுதும் தீண்டி பூஜித்து வரும் ஆதிசைவர்களை **காணிவட்டத்தார்** என்று அழைக்கும் மரபு பண்டைகாலத்தில் இருந்து வந்துள்ளது.

இதுமட்டுமல்லாமல், ஒவ்வொரு பெரிய சிவாலயங்களிலும் **அர்ச்சகம், ஸ்தானீகம்** என்ற பெயரில் சிவாகம விதிப்படி பூஜைகளை ஆதிசைவர்கள் செய்து வருகிறார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேலும், ஆகமங்கள் ஒவ்வொரு சிவாலயத்திலும் ஐந்து நிலைகளில் ஆதிசைவர்களை நியமிக்க கூறுகிறது.

இந்த ஐந்து ஆதிசைவர்களும் **பஞ்சாச்சாரியார்கள்** என அழைக்கப்படுகிறார்கள்.

1.ஆச்சாரியார்: ஆகமங்களை கற்றுணர்ந்து நைமித்திகம் அதாவது விசேஷ பூஜைகளைசெய்பவர். இவரே சிவாசாரியார் ஆவார்.

2. அர்ச்சகர்: நித்ய பூஜைகளை மட்டும் செய்பவர்.

3. ஸாதகர்: ஆகமத்தில் கூறப்பட்டுள்ளபடி பூஜைக்கு வேண்டிய பொருளை சேர்த்து வைத்து உதவுபவர்.

4.அலங்கிருதர்: இறைவனுக்கு அலங்காரம் செய்பவர்.

5.வாசகர்: வேத ஆகமங்களை, திருமுறைகளை ஓதுபவர்.

இந்தமுறையில், ஆதிசைவர்களாகிய பஞ்சாச்சாரியர்களுக்கும் பணி முறைகளை சிவாகமம் வகுத்துள்ளது.

இந்த, பஞ்சாசாரியார்கள் பற்றிய செய்தி கூறும் கல்வெட்டு ஒன்று திருவாரூர் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமி கோவில் 2ம் பிரகாரம் வடபுறச்சுவரில் உள்ளது. இக்கல்வெட்டை **மனுச்சரிதங்கண்ட கல்வெட்டு** என்பர். இதில்,

"ஸ்ரீகாரியம் சுப்பிரமங்கலமுடையான்மாதவன் இரவியானமாலையை மூவேந்த வேளார் விண்ணபத்தினால்" **பதிபாதமூலப்பட்டுடை பஞ்சாசாரிய தேவகன்மிகளுக்கும்** கோயிலார்க்கும் ....என்று கூறப்பட்டுள்ளது.

இதில்"பதிபாதமூலம் பட்டுடைபஞ்சாசாரிய தேவகன்மிகள் என்போர் கோயிலில் அகம்படித்தொண்டு செய்து முப்போதும் திருமேனி தீண்டுதற்குரிய ஆதிசைவர்கள்- என்று விளக்கம் அளிப்பார் பெரியபுராண அறிஞர்.C.K.சுப்பிரமணியமுதலியார்.

மேற்படி, கல்வெட்டு இரண்டாம் குலோத்துங்க சோழனுடையது. காலம் கி.பி.1123 ஆகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆதிசைவர்கள் ஆகமவிதிப்படி **சமய, விசேஷ தீக்ஷை** பெற்று அதன்படி அனுஷ்டானங்களை கடைபிடிப்போர் "**சிவம்**" என்றும், உரிய காலத்தில் **நிர்வாண தீக்ஷை, ஆச்சாரிய அபிஷேகம்** பெற்று அதன்படி அனுஷ்டானங்களை கடைபிடிப்போர் சிவாசாரியார் என்றும் அழைக்கப்படுவார்கள்.

மேலும், ஆதிசைவர்களுக்கு குருக்கள் என்ற பெயர் சிவாகமங்களை கற்றும், சிவாலய பூஜை செய்தும், சைவ சமய பக்தர்களுக்கு சிவதீக்ஷை அளிக்கும் சைவ குருமார்களாக விளங்கிய காரணத்தினால் வந்த காரணப்பெயரே அன்றி அதாவது **குருக்கள்** என்பது பட்டமேயன்றி அது **சாதி பெயர்** இல்லை என்பதை உணர்க.

இவ்வாறு கோயில் பூஜை புரியும் ஆதிசைவர்களுக்கும், சைவ சமயத்திற்கும் சிவபெருமானுக்கும் உள்ள தொடர்பை சிறப்பித்து போற்றும் வகையில் கௌரவப்படுத்தி ஆதிசைவர்களை பலப்பெயர்களில் அழைக்கும் பழக்கம் பண்டை சைவ இலக்கியங்களிலும், தமிழகத்திலும் இருந்து வந்துள்ளதை அரிய முடியும்.

இதன்மூலம், பல பெயர்களில் ஆதிசைவர்கள் அழைக்கப்படுவதைக் கொண்டு ஆதிசைவர்களின் பெருமைகளையும், சிறப்புகளையும் உணர்ந்து கொள்ளலாம்.

திருச்சிற்றம்பலம்

தேசிகர்

தேசிகர் என்ற பெயர் ஆதிசைவர்களாகிய சிவாசாரியார்களை குறிக்கும் பெயராகும். இதனை வாயுசங்கிதை உத்தரபாகம் மூலம் அறிய முடியும்.

"சிவஹஸ்தம் ஸமர்ப்யாத சிஸோ ஸ்சிரஸி தேசிக:
சிவபாவம் ஸமாபந்ந சிவாசார்ய்ய ந்தமாதிஸேத்"

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

11. திருமடங்களும் ஆதிசைவர்களும்

குருத்துவம், ஆச்சாரியத்துவம் ஆதிசைவருக்கே உரியது. ஆகமவிதிப்படி சிவதீக்ஷை அளிக்கும் உரிமை ஆதிசைவருக்கே உண்டு. குருவாக இருந்து சிவஞானம் அளிக்கும் காரணத்தால்தான் ஆதிசைவர்களுக்கு "**குருக்கள்**" என்ற பெயர் ஏற்பட்டது. குருக்கள் என்ற பெயர் காரணத்தைக் கொண்டே ஆதிசைவர்களின் குருத்துவத்தை அறிய முடியும்.

கடந்த காலங்களில் சிவாலயத்திற்கு அருகே ஆதிசைவர்களாகிய சிவாசாரியார் இல்லம் இருக்கும். **இவர்களின் இல்லம் ஒவ்வொன்றும் சைவ மடமாகவே விளங்கியது.** பல **சைவர்களுக்கும், சைவ குடும்பங்களுக்கு குலகுருவாக இருந்து ஆகம உபதேசமும் சிவபக்தியையும் ஊட்டி வந்துள்ளார்கள்.**

பெண்ணாகடத்தைச் சேர்ந்த மெய்கண்டாரின் தந்தை அச்சுத களப்பாளருக்கு திருத்துறையூர் சைவ சித்தாந்த ஆசிரியர் அருள்நந்தி சிவாசாரியார் குலகுருவாக இருந்த வரலாற்றை நாம் இங்கும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இதுபோன்று அக்காலத்தில் பல சைவ குடும்பங்களுக்கு, சைவ குருமார்களாக, குலகுருவாக இருந்து ஆதிசைவ சிவாசாரியார்கள் சிவஉபதேசம் செய்து வந்துள்ளார்கள்.

பதினெட்டு சைவ மடங்கள் என்பதே, சிவாசார்ய பெருமக்களுக்கு உரிய மடங்கள் என்பதும், அவர்களால் தோற்றுவிக்கப்பட்டவை என்பதும் வரலாற்று உண்மையாகும்.

"பதினென் மடத்திற் பயிலு முதலிகளும்" – **திருவானைக்கா உலா**

"வெண்ணீற்று வண்டற் பதினெண் மடத்தாரும்" –**திருக்காளத்தி நாதர் உலா**

"சைவமார்க்கப் பதினெண் மடத்தாரும்" – **திருப்பூவண நாதர் உலா**

போன்ற உலா நூல்களில் பதினென் மடங்களை பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. **மேற்கண்ட உலா நூல்களுக்கு அரும்பதவுரையெழுதிய தமிழ்தாத்தா உ.வே.சாமிநாதையர் அவர்கள் "பதினென் மடத்தார்" என்பது, சிவாகம பத்ததிகள் பதினெட்டும் இயற்றிய சிவாசாரியார்கள் பதினெண்மர்களுடைய பரம்பரையினர் என்றும், அந்த மரபில் வந்தவையே பதினென் மடங்களாக குறிப்பிடப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேற்கண்ட செய்திகளை தமது **சைவ ஆதினங்கள்** என்ற நூலில் எடுத்துக்காட்டியுள்ள **தவத்திரு. ஊரன் அடிகள்,** கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"மேற்குறித்த உலாநூல்கள் மூன்றிலும் காலத்தால் முற்பட்டது, காளமேகப்புலவர் பாடிய திருஆனைக்கா உலாவாகும். காலம் பதினைந்தாம் நூற்றாண்டு. அக்காலத்தில் பதினெண் மடங்கள் என்பது பத்ததி ஆசிரியர் பதினென்மர் பரம்பரை மடங்களையே குறித்தது. சுத்த சைவ பதினென் ஆதினங்கள் என்ற பட்டியலிற் காணப்பெறும் மடங்களிற் பல அக்காலத்தில் தோன்றவில்லை...

..............காளமேகப்புலவர் திருவானைக்கா உலா பாடிய பதினைந்தாம் நூற்றாண்டில் பதினென்மடங்கள் என்றால் பத்ததிகள் செய்த சிவாசாரியார் பரம்பரை மடங்களே.பிற்காலத்தில் அவை இல்லாது போயின. பின்வந்தோர் அவை இன்னதென (பத்ததி ஆசிரியர் வழிவந்தவை என) அறியாத நிலையில் தம் காலத்தில் வழக்கிலுள்ள தமிழ்ச் சைவ மடங்கள் எனக் கருதினர். ஒரு நூலின்றி, மூன்று உலா நூல்களில் சைவ மடங்கள் பதினெட்டு எனக் கூறப்பெற்றுவிட்டதால் தம் காலத்திலுள்ள மடங்களிற் பதினெட்டைப் பட்டியலிட்டு விட்டனர்" என்கிறார்.

அதாவது, முதலில் சைவ மடங்கள் பதினெட்டு என்பது ஆகம பத்ததி நூல் இயற்றிய சிவாசாரியார்கள் மடங்களே என்பதும், இந்த பதினெட்டு ஆகம மடங்கள் காலப்போக்கில் மறைந்து, அழிந்து போன பின்பு, பின்வந்தோர், சைவ ஆதினங்கள், பதினெட்டு என்று இப்பொழுது கூறக்கூடிய திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள், மதுரை போன்ற ஆதீனங்களை சைவ மடங்கள் பதினெட்டு என்று பட்டியலிட்டனர் என்பது இதன்மூலம் தெரிய வருகிறது.

இதன் மூலம், மடங்கள் ஏற்படுத்தி முதன்முதலில் சைவமும் ஆகமமும் தழைக்க அரும்பணியாற்றிவர்கள் ஆதிசைவ சிவாசாரியார்களே என்பது தெரியவரும்.

In Public domain: Digitization Muthulakshmi Research Academy

மேலும், இன்று, பதினெட்டு சைவ ஆதினங்கள் என்று வழக்கிலுள்ள பட்டியலில் உள்ள **குன்றக்குடி ஆதீனமும், சூரியனார் கோயில் ஆதீனமும்** ஆதிசைவர்களாகிய சிவாசாரியார்களால் தோற்றுவிக்கப்பட்டது.

குன்றக்குடி ஆதினத்திற்கு, குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் என்று பெயர். இந்த ஆதினம் முதலில் திருவண்ணா மலையில் தோற்றுவிக்கப்பட்டு, பின்னர் குன்றக்குடி வந்து நிலை பெற்றது.

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தை தோற்று வித்தவர், திருவண்ணாமலையில் வாழ்ந்து வந்த ஸ்ரீ தெய்வசிகாமணி சிவாசாரியார் ஆவார். இவர் ஆதிசைவ அந்தணர், சிவாசாரிய மரபினர், இல்லறத்தார். சைவ சித்தாந்த ஆசிரியர்களில் ஒருவராகிய அருள்நந்தி சிவாசாரியாரின் நேர் மாணக்கராவார் (சீடர்) ஸ்ரீ தெய்வசிகாமணி சிவாசாரியாரே சைவ சமய தழைத்தோங்க குன்றக்குடி ஆதினத்தை தோற்றுவித்தவர்.

அதேபோல், சூரியனார் கோயில் ஆதினம் ஸ்கந்த பரம்பரை வாமதேவசந்தானம் அதாவது கந்த பெருமானிடம் உபதேசம் பெற்ற வாமதேவ மகரிஷியின் வழியில் வந்த **ஸ்ரீ சிவாக்கிரயோகிகள் என்ற ஸ்ரீ சிவக்கொழுந்து சிவாசாரியார்** என்பவரால் **சூரியனார் கோயில் ஆதீனம்** நிறுவப்பட்டது. இவர் ஓர் ஆதிசைவ அந்தணர்

"சோழ தேசத்தில் மருதாந்த சோழபுரத்தில் அவதரித்தருளின சிவாக்கிரகயோகிகள் என்னும் சிவக்கொழுந்து சிவாசாரியாருக்கு" என்பது இவரைப் பற்றிய குறிப்பு என்பார் தவத்திரு ஊரன் அடிகள்.

சிவவழிபாடும், சிவாகமங்களும், சைவ சமயமும் தழைத் தோங்க ஆதிசைவ சிவாசாரியார்கள் பல மடங்களை நிறுவி தொண்டு செய்து, மக்களுக்கு நன்முறையில் சிவஞானம் அளித்து நல்வழி காட்டியுள்ளார்கள். காலப்போக்கில் சிவாசார்ய மடங்கள் எல்லாம் அழிந்து போயின (அல்லது) வளர்ச்சி குன்றின. இதற்கான காரணம் தமிழகத்தின் இடைக்காலத்தில் ஏற்பட்ட மாற்று தேசத்து மன்னர்களின் ஊடுறுவல்களும், அரசியல் மாற்றங்களுமே ஆகும். (இதன் விளக்கங்களை பின்வரும் இடைக்காலத்தில் ஆதிசைவர்கள் என்ற பகுதியில் காண்க.)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேலும், **ஸ்ரீ அகோர சிவாசாரியார்** தம்முடைய பத்ததி நூலில் **மகோற்சவ விதிப் படலத்தில்** பதினைந்து மடங்களின் பெயர்கள் கூறியுள்ளார்.

1. கைலாச மடம், 2.பௌண்ரக மடம்,
3.வலாக மடம், 4.கற்பகிராம மடம்,
5.பதரீ மடம், 6.தேவதாருவன மடம்,
7.கந்தர்ப்ப மடம், 8.உத்தராரண்யகம் மடம்,
9.தக்ஷிணாரண்யகம் மடம் 10.கோவிதார மடம்,
11.ஆமந்தகமடம், 12.மத்த மடம்,
13.மாயூர மடம், 14.ரணபத்ர மடம்,
15.சோழக மடம்

இந்த பதினைந்து ஆகம சைவ மடங்களும் சிவாசாரியார் தலைமையில் இயங்கி வந்துள்ளன.

மேற்கண்ட, பத்ததி ஆசிரியராகிய ஸ்ரீ அகோர சிவாசாரியார் கி.பி.பதினோறாம் நூற்றாண்டில் சோழ மன்னர்கள் ஆட்சி காலத்தில் வாழ்ந்தவர். சிதம்பரம் ஸ்ரீ அனந்தேஸ்வரன் கோயில் அருகே திருமடம் ஒன்றை நிறுவினார். இதற்கு **ஸ்ரீ அகோர சிவாசாரியார் மடம்** என்று பெயர். இம்மடத்தில் துருவாச முனிவரின் திருவுருவம் அமைந்துள்ளது. இம்மடத்தில் வீற்றிருந்தே அகோர சிவாசாரியார் ஆகம உபதேசம் செய்தும், பல ஆகம நூல்களை இயற்றியதாகவும், "**சிதம்பரஸார**" என்ற நூலில் கூறப் பட்டிருக்கின்றது. இப்பொழுது இம்மடம் "மேலமடம்" என்று அழைக்கப்படுகிறது. சிவாசாரிய மரபில் வந்த இம்மடம் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்புவரை ஸ்மார்த்த பிராமணர் தலைமையில் செயல்பட்டு வந்ததாக தெரியவருகிறது.

இன்றைக்கு, ஆதிசைவ சிவாசாரியார்கள் தலைமையில் இரண்டு திருமடங்களே வழிவழியாக இருந்து சைவப்பணியும், சிவப்பணியும் ஆற்றி வருகின்றன. அவை,

1. கூனம்பட்டி ஆதீனம்

2.சீர்காழி சட்டநாத சுவாமிகள் மடம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கூனம்பட்டி மாணிக்கவாசகர் மடாலயத்தை நிறுவியவர் ஸ்ரீ மாணிக்கவாசகரின் சீடராகிய, அணுக்கத் தொண்டர் மாணிக்கப் பண்டிதர் என்பவர். இவர் சோழநாட்டு வாட்போக்கி என்னும் இரத்னகிரியில் ஆதிசைவர் மரபில் தோன்றியவர். இரத்தனகிரிப் பெருமானை முப்பொழுதும் தீண்டி வழிபடும் பரம்பரையினர் கல்வி அறிவு ஒழுக்கங்களிலும், சிறப்புற்றும் வேத ஆகம சாஸ்திரங்களிலும், மந்திர சாஸ்திரங்களிலும் புலமை பெற்று விளங்கினார்.

இவர் மதுரை சென்று மீனாட்சி அம்மை சமேத சொக்கநாதப் பெருமானை வழிபட்டு வந்த நாளில், சமயக்குரவர் நால்வரில் ஒருவரான ஸ்ரீ மாணிக்கவாசகப் பெருமானைத் திருவருள் கூட்டக் கண்டு கண்ணீர் ததும்ப அவரின் அணுக்கத்தொண்டராக தொண்டு செய்யும் பேறு பெற்றார். மாணிக்கவாசக பெருமானோடு பல தலங்களுக்கும் தலயாத்திரை செய்து வந்தார். இந்நிலையில் மாணிக்கவாசகர் சிவபெருமான் திருவடிகளில் பதித்த மனத்தராய் தில்லை சிதம்பரத்தை வந்தடைந்தார். சிவகாமவல்லி உடனுறை நடராஜப்பெருமானை கண்டு தரிசித்த வேளையில், நிழல் போல் தன்னைவிட்டு பிரியாது அணுக்க தொண்டராய் விளங்கும் சீடர் மாணிக்கப் பண்டிதருக்கு ஞானதீக்ஷையும், ஞான உபதேசமும், சிவானந்த வெள்ளத்தினாலே ஞானாபிஷேகமும் செய்தருளி அவருக்கு மாணிக்கவாசர் என்ற தம்முடைய திருநாமத்தைச் சூட்டி அருளினார். பின்னர் மாணிக்கப்பண்டிதர் பூஜித்துவரும் ஸ்ரீஇராஜலிங்க மூர்த்தியோடு, தம் ஆன்மார்த்த மூர்த்தியாகிய மீனாட்சி சுந்தரேஸ்வரரையும் பூஜித்து வருமாறு அருள் செய்து, சைவ பரிபாலனம் செய்து வருவாயாக என்று அருளாசி வழங்கி விடை கொடுத்தார்.

ஸ்ரீ மாணிக்கவாசகரின் திருவருள் பெற்ற மாணிக்க பண்டிதரே கூனம்பட்டி ஸ்ரீ மாணிக்கவாசக மடாலயத்தின் நிறுவனரும் குரு முதல்வரும் ஆவார். இவருடைய சந்தான பரம்பரையில் வந்து கொண்டிருப்பதுதான் கூனம்பட்டி ஆதீன குருபரம்பரையாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கூனம்பட்டி ஆதீனம், ஈரோடு மாவட்டம், விஜயமங்கலம் அருகில் உள்ளது. இந்த ஆதீனத்தின் குருபரம்பரை வாழையடி வாழையென பெருகியது. இந்த ஆதீனத்தில் பீடமேறுபவர் தங்கள் பெயரோடு மாணிக்கவாசகர் என்ற குருநாமத்தை சேர்த்துக் கொள்வார்கள். மேலும் இந்த குருபரம்பரையில் வருபவர்களை **மாணிக்க சாமி** என்று அழைக்கும் மரபும் உள்ளது.

இந்த ஆதீனத்தின் குருமகாசந்நிதானமாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ இராஜலிங்க மாணிக்கவாச ஸ்வாமிகள் காலத்தில், சமண இளவரசனின் கூன் நிமிர்த்தி அருள் செய்த காரணத்தால் சுவாமிகள் தங்கிய திருமடம் பகுதி கூனம்பட்டி எனப் பெயர் பெற்றது.

கூன் நிமிர்ந்த இளவரசனுக்கு சுவாமிகள் மடாலயத்திலேயே திருமணம் செய்து வைத்தார்கள். அதுபற்றியே கூனம்பட்டிக்கு கல்யாணபுரி எனற பெயரும் வழங்குவதாயிற்று.

இந்த ஆதீனத்தின் ஐம்பத்தி ஐந்தாம் குருபீடமாக இருந்து அருளாட்சி புரிந்தவர் **ஸ்ரீலஸ்ரீ சரவண மாணிக்கவாசக சுவாமிகள்.** இவர் சேக்கிழார் பெருமான் அருளிய பெரியபுராணத்தை தன் அனுபூதி ஞானத்தால் தமிழுலகமும், சைவ உலகமும் வியக்கும் வண்ணம் சொற்பொழிவு ஆற்றி வந்துள்ளார்கள். அதுகண்ட சிவநேய சான்றோர்கள் இவரை **கோவை சேக்கிழார்** என்று அழைத்து பெருமைப் படுத்தினார்கள்.

கொங்கு தேசத்தில், பல சைவ அன்பர்களுக்கு ஆகமவிதிப்படி சிவதீஷை அளித்து சிவஞான உபதேசம் செய்து சைவபரிபாலனமும், சிவபரிபாலனமும் செய்து வரும் திருக் கையிலாய பரம்பரை கல்யாணபுரி எனப்படும் கூனம்பட்டி ஆதீனத்தில் இப்பொழுது 57 ஆம் பட்டத்தில் குருமஹாசந்நிதானமாக ஸ்ரீலஸ்ரீ ராஜலிங்க சரவண மாணிக்கவாசக சுவாமிகள் அமர்ந்து ஞானச்செங்கோலோச்சி செய்து வருகின்றார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சீர்காழி ஸ்ரீ சட்டநாத சுவாமிகள் திருமடம் ஆதிசைவ சிவாசாரியாரை குருமுதல்வராக கொண்ட திருமடமாகும். இந்த திருமடம் முதலில் சீர்காழியில் இருந்து சைவ பணியும் சிவப்பணியும் ஆற்றி வந்தது. இருநூறு ஆண்டுகளுக்கு முன் சென்னை கோமாலீஸ்வரன்பேட்டையில் இந்த திருமடமானது வந்து நிலைபெற்றது. பல சைவ அன்பர்களும் பக்தர்களும் இம்மடம் வந்து குருஉபதேசமும் சிவஞானமும் பெற்று செல்கிறார்கள். இந்த திருமடத்தின் ஆன்மார்த்த மூர்த்தியாக காமாட்சி அம்மன் உடனுறை அகத்தீஸ்வரர் ஸ்வாமி வீற்றிருந்து அருள்புரிகிறார்.

சட்டநாத ஸ்வாமி திருமடத்தின் குருமார்களில் ஒருவரான ஸ்ரீசாம்பசிவ சிவாசாரியாரின் மனைவியார் பெறும் சித்தராக விளங்கியவர்.

ஸ்ரீ அனந்தம்மாள் என்பது இவரது இயற்பெயராகும் இந்த அம்மையார் ஸ்ரீ சக்ரபூஜை உபாசனை சிறப்பாக செய்து வந்ததால், **ஸ்ரீ சக்கர அம்மாள்** என்று அழைக்கப் பட்டார். தமிழ்தென்றல் திரு.வி.க அவர்கள் இந்த அம்மையார் பறக்கும் ஆற்றல் பெற்றிருந்ததாக தம் நூலில் குறித்துள்ளார். இவருடைய ஜீவசமாதி திருவான்மியூரில் உள்ளது. பல சித்துகளை செய்து பக்தர்களுக்கு அருள்புரிந்த இவர் ஆதிசைவ சிவாசாரியார் மரபில் வந்த அம்மையார் ஆவார்.

இன்றும் சட்டநாத சுவாமிகள் திருமடம் பல சைவ அன்பர்களுக்கு சிவதீஷை அளித்து சைவசமயம் வளரவும் சிவபக்தி பெருகவும் பல பணிகளை தொண்டினை சிறப்புற செய்து வருகின்றது.

காஞ்சிபுரத்தில் காலாண்டார் என்னும் பெயரில் தெரு ஒன்று உள்ளது. **காலாண்டார்கள் எனப்படும் ஆதிசைவர்களின்** மடம் ஒன்று இத்தெருவில் இருந்ததால் இப்பெயர் பெற்றதென்பர். இவர்கள் சிவவடிவமாகிய பைரவ மூர்த்தியை உபாசித்து வந்ததாக கூறப்படுகிறது. இவர்களுக்கு ஏகாம்பரேஸ்வரர், காமாட்சி அம்மன் ஆலயங்களில் கால்பங்கு (நான்கில் ஒரு பகுதி) ஆளுமை இருந்ததால் காலாண்டார்கள் என அழைக்கப்பட்டனர் என்பர். இவர்களை வடமொழியில் சதுர்பாக மிராசுதாரர்கள் என்று அழைக்கின்றனர் என்று கூறுகிறார் **பூசை.ச.ஆட்சிலிங்கம்** அவர்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொங்கு குல குருக்கள்

இதேபோல், தமிழகத்தில் கொங்கு நாட்டின் பல சைவ மடங்களை நிறுவி ஆதிசைவர்கள் சிவப்பணியும் சைவ சமயத் தொண்டும் செய்து வருகிறார்கள். ஆதிசைவ குருக்கள்கள் கொங்கு தேசத்தில் கொங்கு குடிமக்களுக்கும், பிற குடிமக்களுக்கும் பலவற்றிருக்குமாக குலகுருவாக பல தலைமுறைகளாக வீற்றிருந்து அவர்களின் குடும்பங்களின் நலன் கருதி சிவபூஜை, சிவஉபதேசம், செய்து அவர்களுக்கு நல்வழி காட்டி வந்துள்ளனர்.

குருபீடம் உயர குடி உயரும் என்ற வாக்கிற்கேற்ப கொங்கு தேசத்து மககளும் அவர்களின் குல குருக்களை நன்கு ஆதரித்து வந்தனர். கொங்கு தேசத்து பூர்வ குடிகள் 51 ஆதிசைவ ஆதினங்களை நிறுவினர். இவ்ஆதினங்கள் **குருகுலங்கள், குருமடாலயங்கள்** என்று அழைக்கப்பட்டன. குலதெய்வத்தை வழிபடுவது போன்று தங்களின் குலகுருக்களையும் போற்றி வந்தனர். தெய்வம் குலகுருவின் மூலமே நன்மை அளிக்கும் என்ற நம்பிக்கை கொண்டனர்.

மேலும், தங்கள் குலகுருக்கள் திருமடம் அமைத்து இருந்த பகுதிகளை **அய்யம்பாளையம், குருக்கள்பட்டி, குருக்கள்பாளையம்** என்று குருவின் பெயரை நினைவுபடுத்தும் விதமாக ஊரின் பெயரை சூட்டினார்கள். கொங்கர் கொங்குதேசம் வருகையிலேயே குருக்களையும் அழைத்து வந்தனர் என **கொங்கு காணிப்பட்டயம்** கூறுகின்றது.

கொங்கு மண்டலத்தில் குருத்துவம் உடைய ஆதிசைவ குருக்கள்கள் பல்நெடுங்காலமாக பெருமையாக வாழ்ந்து வந்தனர் என்பதை கீழ்கண்ட கொங்கு மண்டல சதகம் பாடல் எடுத்துக் கூறுகின்றது.

"குலசேகரன் குலோத்துங்கன் துங்கசீர்ச் சோழர்கள் கொங்கிடைமெய்த்
தலபூசை நன்குறத் தன்னாடு உலாரிற் சமர்த்தர் கண்டு
நிலையான காணியும் மென்மையு மிய நிதானமுற்று
வலவாதி சைவர்கள் வாழ்வதன்றோ கொங்கு மண்டலமே."

ஆதிசைவ குருக்கள்கள் கொங்கு தேசத்தில் பல்வேறு குடிகளுக்கு குலகுருக்களாக இருந்து சைவ சமய பரிபாலனம், சிவபரிபாலனம் செய்து வருகின்றார்கள். இவர்களின் சைவ மடங்கள் விபரம் வருமாறு,

In Public domain. Digitization: Muthukalingam Research Academy

கொங்கு நாட்டு ஆதிசைவ திருமடங்கள்

1. **ஸ்ரீலஸ்ரீ சிவசமய பண்டித குருசுவாமிகள்,**
   சிவகிரி மடம்.
2. **ஸ்ரீமத் இம்முடி சிற்றம்பல குருசுவாமிகள்**
   அருணகிரி அய்யம்பாளையம் மடம்.
3. **ஸ்ரீமத் நாயனார் தில்லைச் சிற்றம்பல குருசுவாமிகள்**
   தாரமங்கலம் மடம், குருக்கள்பட்டி.
4. **ஸ்ரீமத் அழகிய தில்லைச் சிற்றம்பல குருசுவாமிகள்**
   கல்லங்குளம் மடம், ராசிபுரம்.
5. **ஸ்ரீமத் கனகசபாபதி பண்டித குருசுவாமிகள்**
   வள்ளியறச்சல் மடம், குருக்கள்பட்டி.
6. **ஸ்ரீமத் மீனாட்சி சைவபுரந்தர பண்டித குருசுவாமிகள்**
   காடையூர் மடம்.
7. **ஸ்ரீமத் கனககிரி பண்டித குருசுவாமிகள்,**
   பட்டாலி மடம்.
8. **ஸ்ரீமத் கொடுமுடிப்பண்டித குருசுவாமிகள்,**
   கீரனூர் மடம்.
9. **ஸ்ரீமத் ஒரு நான்கு வேதாந்த பண்டித குருசுவாமிகள்**
   பாப்பினி மடம்.
10. **ஸ்ரீமத் பாலசக்தி சைவ சிகாமணி பண்டித குருசுவாமிகள்**
    பரஞ்சேர்வழி மடம், ஆலாம்பாடி.
11. **ஸ்ரீமத் சந்திரசேகர பண்டித குருசுவாமிகள்**
    வெள்ளக்கோயில் மடம், மயில்ரங்கம்.
12. **ஸ்ரீமத் ஆலாலசுந்தர பண்டித குருசுவாமிகள்**
    மருதுறை மடம், குறுக்குபாளையம்.
13. **ஸ்ரீமத் சைவசிகாமணி குலசேகர பண்டித குருசுவாமிகள்**
    ஸ்ரீ முத்தூர் சந்தான மடம்.
14. **ஸ்ரீமத் கனகசபாபதி பண்டித குருசுவாமிகள்,**
    ஸ்ரீ கண்ணபுரம் மடம்.
15. **ஸ்ரீமத் கொற்றனூர் சடைய பரமேஸ்வர பண்டித குருசுவாமிகள்**
    இலக்கமநாயக்கன்பட்டி மடம்.
16. **ஸ்ரீமத் கனகசபாபதி பண்டித குருசுவாமிகள்**
    பேரூர் மடம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

17. ஸ்ரீமத் சுந்தர சென்னிகிரி பண்டித குருசுவாமிகள்
பழனி கீரனூர் மடம்.

18. ஸ்ரீமத் சிவசமய பண்டித குருசுவாமிகள்
கீழ்சாத்தம்பூர் மடம்.

19. ஸ்ரீமத் மார்கண்டேய பண்டித குருசுவாமிகள்
இருகூர் மடம். (பால வெள்ளாளர் குலகுரு)

20. ஸ்ரீமத் மாணிக்கநாயக சந்திரசேகர பண்டித குருசுவாமிகள்
கொடுமுடி மடம்.

21. ஸ்ரீமத் ஆலாலசுந்தர ஹர்தன வாக்கிய புத்திர சந்தான குருசுவாமிகள்
தென்சேரி மலை மடம்.

22. ஸ்ரீமத் ராசமாணிக்க ஸ்ரீ ஆலாலசுந்தர பண்டித குருசுவாமிகள்
வலையப்பாளையம் மடம். கருவனூர்

23. ஸ்ரீமத் ஞான சிவாச்சாரியார் குருசுவாமிகள்
பேரூர் மேலை மடம்.

24. ஸ்ரீமத் தியாகராஜபண்டித குருசுவாமிகள்
பல்லாகோயில் மடம்.

25. ஸ்ரீமத் மூவேந்திர பண்டித குருசுவாமிகள்
தோளூர் மடம், மொஞ்சனூர்.

26. ஸ்ரீமத் கல்யாண பசுபதி பண்டித குருசுவாமிகள்
கருவூர் மடம். கரூர்.

27. ஸ்ரீமத் சுந்தர வாகீச சென்னிகிரி பண்டித குருசுவாமிகள்
பிடாரியூர் மடம்.

28. ஸ்ரீமத் மூவேந்திர பண்டித குருசுவாமிகள்
வெள்ளோடு மடம்.

29. ஸ்ரீமத் நல்மணி வேதாந்த பண்டித குருசுவாமிகள்
கத்தங்காணி மடம், முதலிபாளையம்.

30. ஸ்ரீமத் ஆண்ட சிவசுப்ரமண்ய பண்டித குருசுவாமிகள்
கருமாபுரம் மடம். (கொங்கு நாடார்கள் குலகுரு)

31. ஸ்ரீமத் ஆதிசைவ புரந்திர பண்டித குருசுவாமிகள்
சாத்தம்பூர் மடம், ஊத்துக்குளி

32. ஸ்ரீமத் சிவராஜ பரமேஸ்வர பண்டித குருசுவாமிகள்
மூலனூர் மடம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

33. ஸ்ரீமத் காவேரி பரமேஸ்வர பண்டித குருசுவாமிகள்
மாம்பாடி மடம்.

34. ஸ்ரீமத் உமாபதி பண்டித குருசுவாமிகள்
நஞ்சை இடையார் மடம். (கொங்கு வேட்டுவர்கள் குலகுரு)

35. ஸ்ரீமத் இம்முடி சிற்றம்பல குருசுவாமிகள்
நடத்தை மடம்.

36. ஸ்ரீமத் ஆண்ட சிவசுப்ரமணிய பண்டித குருசுவாமிகள்
பெருந்துறை சான்றோர் குலகுரு மடம்.

37. ஸ்ரீமத் திருஞானசம்பந்த கண்ணுடைய வள்ளல் குருசுவாமிகள்
வள்ளல் தலையூர் மடம்.

38. ஸ்ரீமத் திருஞானசம்பந்த கண்ணுடைய வள்ளல் குருசுவாமிகள்
வள்ளல் பழங்கரை மடம்.

39. ஸ்ரீமத் திருஞானசம்பந்த கண்ணுடைய வள்ளல் குருசுவாமிகள்
வள்ளல் மயில்ரங்கம் மடம்.

40. ஸ்ரீமத் திருஞானசம்பந்த கண்ணுடைய வள்ளல் குருசுவாமிகள்
வள்ளல் வடகரை மடம்.

41. ஸ்ரீமத் ஆண்ட சிவசுப்ரமணிய பண்டித குருசுவாமிகள்
ஏனாதிநாயனார் மடம், திருமுருகன் பூண்டி.

42. ஸ்ரீமத் பராபர பண்டித குருசுவாமிகள்
அலங்கியம் மடம்.

43. ஸ்ரீமத்இம்முடி அகோர தர்ம சிவாச்சார்ய பண்டித குருசுவாமிகள்
நெரிஞ்சிப்பேட்டை மடம்.

44. ஸ்ரீமத் மெய்ஞான தேசிக பண்டித குருசுவாமிகள்
சிறுகிணர் மடம்.

45. ஸ்ரீமத் விஸ்வநாத சைவபுரந்தர பண்டித குருசுவாமிகள்
பவித்ரம் மடம்.

46. ஸ்ரீமத் உத்தம பண்டித குருசுவாமிகள்
புலுவர் தீக்ஷாகுரு மடம்.

47. ஸ்ரீமத் தேவேந்திர சைவ புரந்திர பண்டித குருசுவாமிகள்
புகழுர் மடம்.

48. ஸ்ரீமத் ஆலாலசுந்த பண்டித குருசுவாமிகள்
செட்டிபாளையம் மடம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

49.ஸ்ரீமத் ஏழுகரைநாட்டு நம்பிசதாசிவ பண்டித குருசுவாமிகள்

திருசெங்கோடு மடம்.

50.ஸ்ரீமத் உத்தம பண்டித குருசுவாமிகள்

காங்கேய மடம்.

51.ஸ்ரீமத் நவரத்னநாயக பண்டித குருசுவாமிகள்

பவானி திரு மடம்.

52.ஸ்ரீமத் வீகீர்தீஸ்வர வேதாந்த பண்டித குருசுவாமிகள்

திருவெஞ்சமாக்கூடல் மடம்.

53. ஸ்ரீமத் ஆகம பண்டித குருசுவாமிகள்

புத்தூர் மடம்.

54.ஸ்ரீமத் சிவஞான பண்டித குருசுவாமிகள்

கரையூர் மடம்.

55. ஸ்ரீமத் குலோத்துங்க வேதநாயக பண்டித குருசுவாமிகள்

திருச்செங்கோடு மடம்.

மேற்கண்ட சைவ ஆதினங்கள் அக்காலங்களில் கொங்கு நாட்டில் சைவ சமயமும், பக்தி இயக்கமும் கிராமங்களில் சிறப்புற வளர்ந்திட தொண்டு ஆற்றியுள்ளனர்.

சிவசம்ஸ்கார உடையராம் தன்மை ஆதிசைவர்களுக்கு ஜென்மத்திலேயே வந்ததாகும். குருக்கள், சிவாசாரியார் என்பவை ஆதிசைவர்க்கே உரிய பட்டமாகும். ஆதிசைவர்களுக்கே ஆச்சாரியாத்துவம் சொந்த நிதி ஆதிசைவர்கள் ஸ்வயம்புவாக ஆசாரிய புருஷர்கள் எனவேதான் ஆகம பிரமாணத்தாலும், உலக வழக்காலும் "குருக்கள்" என அழைக்கப்பட்டு வருகின்றனர்.

குருவுக்குள்ள தர்மம் சிவபெருமானை காட்டுவது. அதன்படி, சைவ நன்மக்களுக்கு சிவதீக்ஷைகளை அவரவர் பக்குவத்திற்கு ஏற்றவாறு செய்து வைக்கும் ஆச்சார்ய அதிகாரம் ஆதிசைவர்களாகிய சிவாசாரியார்களுக்கு உள்ளது என்று ஆகமங்கள் கூறுகின்றன.

அந்த வகையில், ஆதிசைவ சிவாசாரியார்கள் கடந்த காலங்களில் பல சைவ மடங்களையும் ஆகம மடங்களையும் தோற்றுவித்து குலகுருவாக, மடாதிபதிகளாக விளங்கி சைவ சமயத்தொண்டும் சிவப்பணியும் ஆற்றி வந்துள்ளார்கள் என்பதை இதன்மூலம் அறிய முடியும்.

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization: Muthulakshmi Research Academy

12.மன்னர்களுக்கு ராஜகுருவாக ஆதிசைவர்கள்

பெருமைமிகு சிறப்பும் தனித்துவம் மிக்க ஆதிசைவர்கள் தமிழ் அரசர்களாகிய முற்கால, பிற்கால சோழர்கள் ஆட்சி காலத்திலும், நாயன்மார்கள் காலமாகிய பல்லவர்கள் ஆட்சி காலத்திலும், பாண்டிய மனனர்கள் ஆட்சியிலும் சீரும் சிறப்புடன் வாழ்ந்து வந்துள்ளார்கள். மேலும், அரசர்களுக்கு **ராஜகுருவாகவும்** இருந்து ஆன்மீக வழி நடத்தியுள்ளனர்.

தமிழகத்தில் கற்களைக் கொண்டு கோயில் அமைக்கும் மரபு பல்லவர்கள் காலத்திலேயே தோன்றியது. முதலாம் பரமேஸ்வர வர்ம பல்லவனால் (கி.பி. 660-680) **கூரம்** எனும் சிற்றூரில் கட்டப்பட்ட கோவிலே முதற் கற்கோயிலாகும். அக்கோவிலில் பூஜை செய்ய **ஸ்ரீஅனந்தசிவாசாரியார்** என்பவரை பரமேஸ்வர வர்ம பல்லவன் நியமித்தான் என்ற கல்வெட்டு செய்தியும், மூன்றாம் நந்தி வர்ம பல்லவன் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 826-849) திருவல்லம் சிவன் கோவிலில் பூஜை செய்ய சிவபிராமணர் இருந்தனர் என்ற கல்வெட்டு செய்தியும் ஆதிசைவர்களாகிய சிவாசாரியார்களின் தொன்மையை எடுத்துக் கூறும்.

மேலும், பல்லவர்காலத்து சிவாசாரியார்கள் பல்லவ அரசர்களுக்கு குருவாக இருந்து ஆகமங்களையும், ஆகமத்தின் ஞானபாதமாகிய சைவசித்தாந்த தத்துவங்களையும் உபதேசித்து பல்லவ அரசர்களை சிறந்த சிவபக்தர்களாக வழி நடத்தியுள்ளனர்.

எடுத்துக்காட்டாக, மேற்கூறிய பரமேஸ்வரவர்ம பல்லவன், ருத்திராக்ஷத்திலான சிவலிங்கத்தை மணிமுடியாக அணிந்து ஆட்சி செய்ததாகவும்,

" சிவனுக்கு மேல் தெய்வம் இல்லை."

"சிவனை உள்ளன்புடன் வழிபடுபவன்"- போன்ற கல்வெட்டு செய்திகள் மூலம் இம்மன்னனின் சிவபக்தியை அறியமுடியும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதேபோன்று, இராஜசிம்ம பல்லவன் (கி.பி. 680-700) காஞ்சி கைலாசநாதர் கோவில் கல்வெட்டில் தன்னை **ஆகமபிரியன்** என்றும், **சங்கர பக்தன், சைவ சித்தாந்த மார்கஹ:** அதாவது **சைவ சிந்தாந்தப்படி நடப்பவன்** என்றும் கூறியுள்ளான் **(சைவ உலகில் திருமந்திரத்திற்கு பிறகு சைவ சித்தாந்தம் என்ற சொல் வருவது இந்த பல்லவ மன்னுடைய கல்வெட்டிலேயே ஆகும்.)** இம்மன்னனும் ருத்திராக்ஷத்திலான சிவலிங்கத்தை மணிமுடியாக தரித்து ஆட்சி செய்ததாக (சிவ சூடாமணி) கல்வெட்டு செய்தி கூறுகின்றது.

இவ்வாறு பல்லவ மன்னர்கள் சிவபெருமான் மீதும், சைவசித்தாந்த தத்துவத்தின் மீதும் பற்றுக் கொண்டு ஆட்சி புரிந்தமைக்கு காரணம், அக்காலத்தில் வாழ்ந்த சிவாசாரிய பெருமக்களே என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

மேலும், பிற்கால சோழ அரசர்களுக்கும் ராஜகுருவாக இருந்து சிவாசாரியார்கள் வழி நடத்தியுள்ளனர்.

தஞ்சை பெரிய கோவிலை எழுப்பிய சிவபாத சேகரனான இராஜராஜ சோழனுக்கு, **ஈசான சிவபண்டித சிவாசாரியார்** இராஜகுருவாக இருந்துள்ளார். கங்கை கொண்ட சோழன் என்று அழைக்கப்படும் இராஜேந்திரசோழனுக்கு **சர்வசிவ பண்டித சிவாசாரியார்** இராஜகுருவாக இருந்துள்ளார். விக்ரம சோழனுக்கு **ஸ்ரீகண்ட சிவாசாரியாரும்,** மூன்றாம் குலோத்துங்கனுக்கு **ஈஸ்வர சிவாசாரியார்** இராஜகுருவாக இருந்துள்ளார் என்பதை, சோழர் கால கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகிறது.

மேலும் இராஜராஜ சோழன் எழுப்பிய தஞ்சை பெரிய கோவிலின் தலைமை அர்ச்சகர் **பவனபிடாரன்** என்ற சிவாசாரியார் என்பதும் அங்கு ஆதிசைவரை கொண்டு மகுடாகம விதிப்படி பூஜை செய்வித்தான் என்பதை,

.................................பண்புமிகு

ஆதி சைவர்கள் நீடு மகுடாகமத்தில் ஆரணத்தில்

ஓது இசையில் செய்பூஜை உட்கொண்டு (கன்னி 28) - என்று **தஞ்சைப் பெருவுடையார் உலா** பாடல் மூலம் அறிய முடிகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேலும், இரண்டாம் இராஜராஜசோழன் கும்பகோணம் அடுத்த தாராசுரத்தில் தான் எழுப்பிய சிவாலய கும்பாபிஷேகத்தில், பங்கேற்ற 108 சிவாசாரியார்களின் திருஉருவங்களை அவர்களின் ஊர் பெயரோடு அவ்வாலயத்தின் வடபுறச் திருச்சுற்றுமாளிகையில் படிமமாக செதுக்கி வைத்திருப்பதின் மூலம் சோழர்கள் ஆதிசைவ சிவாசாரியர்களை எந்த அளவிற்கு போற்றினார்கள் என்பதையும், உயர்வாக மதித்தார்கள் என்பதையும் தெரிந்து கொள்ள முடியும்.

அதேபோல், மூன்றாம் குலோத்துங்க சோழனால் எழுப்பப்பட்ட திருபுவன வீரேஸ்சுரம் என்று அழைக்கப்படும் திருபுவனம் சிவன் கோயிலை தலைமையேற்று பிரதிஷ்டை (கும்பாபிஷேகம்) செய்தவர். **ஈஸ்வர சிவாசாரியாரே** என்று கூறுகிறார் **பிற்கால சோழர் வரலாறு** என்ற நூலில் கல்வெட்டு அறிஞர் **சதாசிவ பண்டாரத்தார்.**

இவரே, **சுவாமித்தேவர்** என்று அழைக்கப்பெற்றார் என்றும், சோழ அரசன் திருக்கடவூர் கோயிலுக்கு இருவரை அர்ச்சராக நியமித்த கட்டளையை இச்சுவாமித்தேவர் மாற்றி வேறு இருவரை நியமித்தார் என்றும் அதை அரசனும் ஏற்றுக் கொண்டான் என்ற கல்வெட்டு செய்தி மூலம் இந்த **இராஜகுருக்கள் சோழ அரசர்களிடம் பெற்றிருந்த செல்வாக்கை அறியலாம் என்கிறார் சைவ சமய வளர்ச்சி எனும் நூலில் வரலாற்று அறிஞர் மா.இராசமாணிக்கனார்.**

சோழர்கள் கோவில் சார்பான, சமயச் சார்பான நிறுவனங்களின் நிர்வாகத்தை தங்கள் குருக்கள்வசமே ஒப்படைத்திருந்தார்கள் என்கிறார், தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும் என்ற நூலில் வரலாற்று அறிஞர் கே.கே.பிள்ளை

சோழர்கள் ஆட்சி காலத்தில் ராஜகுருவாக வீற்றிருந்த சிவாசாரியார்கள் ஆலோசனைப்படியே ஆட்சி நடைபெற்று உள்ளது. அரசனுக்கு அறிவுரை கூறுவது, நல்ல செயல்கள் செய்ய முடிவெடுப்பது, முக்கியமான சமயப் பொறுப்புகளை வகிப்பது, ஆகிய சமய, சமூக பணிகளை சிவாசாரியார்கள் செய்து வந்துள்ளனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சோழர்கள் ஆட்சி காலத்தில் சிவாசாரியார்கள் கோவில்களை தலைமையேற்று நிர்வாகம் செய்ததோடு அல்லாமல், சோழர்கள் காலத்தில் **அமிர்தகணத்தார்** என்ற கோவில் வாரிய குழுவிலும் இடம் பெற்று இருந்துள்ளார்கள்.

சோழ மன்னர்கள் தங்கள் ஆட்சி காலத்தில் வேதம் படித்த பிராமணர்களுக்கு சதுர்வேதிமங்கலம் என்ற பெயரில் பல இறையிலிகள் அளித்தாலும், சோழர்கள் பரம்பரை சைவர்கள், மிகுந்த சிவபக்தி உடையவர்கள் என்பதால் ஆகம கல்விக்கும், ஆகம அந்தணர்களாகிய ஆதிசைவ சிவாசாரியார்களுக்குமே முன்னிலை தந்தும் தங்கள் குருவாக அமர்த்தி, பெருமை படுத்தினார்கள். திருக்கோயில்கள் சம்மந்தமான அனைத்து நடைமுறைகளையும் அவர்கள் வசமே முழுவதுமாக ஒப்படைத்தார்கள்.

மேலும், சோழ அரசர்கள் வேதம் படித்த பிராமணர்களுக்கு வழங்கிய இறையிலிகளுக்கு **பிரமதேயம்** என்று பெயர். ஆனால், ஆதிசைவர்களாகிய அர்ச்சகர்களுக்கு வழங்கப்பட்ட இறையிலிகள் **"அர்ச்சனா போகம்"**- என்றும், இராஜகுருவாக வீற்றிருந்து வழிநடத்திய சிவாசாரியார்களுக்கு வழங்கப்பட்ட இறையிலிகள் **"ஆசாரியபோகம்"**- என்றும் கல்வெட்டுகளில் குறிப்பிடப் பட்டுள்ளது. மேலும், கோயிலில் பூஜை செயயும் ஆதிசைவ அர்ச்சகருக்கு வழங்கப்பட்ட நிலங்களுக்கு **சிவபிராமணக் காணி** என்றும் கல்வெட்டுகளில் குறிக்கப் பட்டுள்ளது.

சோழ மன்னர்கள் பரம்பரையாக சைவ சமயத்தை சார்ந்தவர்கள். மிகுந்த சிவபக்தி மிகுந்தவர்கள். இவ்வாறு சோழ அரசர்கள் சைவ பற்று உடையவர்களாகவும் சிவபக்தி மிகுந்தவர்களாகவும் விளங்க மேற்கண்ட சிவாசாரியார்களே காரணம் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

சோழ மன்னர்களின் இராஜ குருக்களால் சைவ சமயம் தமிழ்நாட்டில் நன்கு வளர்ச்சி பெற்றதென்றால் மிகையாகாது என்கிறார். சைவ சமய வளர்ச்சி என்ற நூலில் வரலாற்று அறிஞர் மா.இராசமாணிக்கனார்.

இவ்வாறு, ஆதிசைவர்களாகிய சிவாசாரிய பெருமக்கள் சோழ மன்னர்கள் ஆட்சி காலத்தில் சைவ சமயத்திற்கும், தமிழ் சமூகத்திற்கும் செய்த தொண்டு அளப்பரியதாகும்.

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

13.சிவபெருமான் சைவ சமயத்தின் அரும்பெரும் செயல்களை, பணிகளை ஆதிசைவர்களையே கொண்டு செய்தல்

சைவ சமயத்தின் தனிப்பெரும் முதல்வனாகிய சிவபெருமான் தனது திருமுகத்தில் இருந்து தோற்றுவித்த ஆகமங்களையும், அந்த ஆகமவிதிப்படி சிவபூஜைகள் நடைபெறும் பொருட்டு தனது ஐந்து திருமுகங்களில் இருந்து ஆதிசைவர்களாகிய சிவாசாரியார் மரபை தோற்றுவித்தார்.

தனது திருமுகத்தில் இருந்து தோன்றிய வழி வழி அடிமைகளாகிய ஆதிசைவர்களைக் கொண்டே சிவபெருமான் சைவ சமயத்தின் அரும்பெறும் செயல்களை பணிகளை செய்வித்தார்.

"எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும்
உண்மையாவது பூசனை என உரைத்தருள."

என்ற திருவாக்கிற்கிணங்க சிவபெருமானுக்கு விருப்பமான பூஜையும், அதை செய்வதற்கான ஆகமங்களையும் முதன் முதலில் ஆதிசைவர்களுக்கே உபதேசம் செய்து ஆகமங்களையும், சிவபூஜையும் பாதுகாத்து வரும் அரும் பெரும் பணியை ஆதிசைவர்களிடமே ஒப்படைத்து திருவருள் செய்தார்.

அநாதி சைவனாகிய சிவபெருமான் இப்பூவலகில் தனக்கு அடுத்த நிலையில் வீற்றிருந்து, சைவ பரிபாலனம், சிவ பரிபாலனம், செய்து, சைவ சமயத்தின் தலைமகனாய் சிவபெருமைகளை பறைசாற்றும் உரிமையையும், கடமையையும் ஆதிசைவர்களிடமே ஒப்படைத்து திருவருள் செய்தார்.

சிவாலயங்களில் உலக நலன் பொருட்டு, ஆன்மாக்களுக்கு நல்லருள் புரியும்வண்ணம், லிங்கத் திருமேனிக் கொண்டு எழுந்தருளி, தமது திருமேனியை முப்பொழுதும் தீண்டி ஆகம விதிப்படி பூஜை செய்யும் உரிமையை ஆதிசைவர்களுக்கே தந்து திருவருள் செய்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதன் உட்பொருள் யாதெனில், தனது வழிவழி அடிமைகளாகிய ஆதிசைவர்கள் தமது அருகிலேயே இருக்க வேண்டும் என்ற சிவபெருமானின் விருப்பத்தை இங்கு காண முடியும். **நம்பியாரூரர் திருக்கைலையில் ஆலால சுந்தரராக சிவபிரானுக்கு அருகிலேயே திருநீற்றுமடல் ஏந்தி நிற்பார்** என்பதும், **இங்கு பூலோகத்தில் சிவாலயங்களில் அவர் மரபில் வந்த ஆதிசைவர்கள் விபூதி மடல் கொண்டு பக்தர்களுக்கு திருநீறு அளிப்பதும் இங்கு எண்ணி குறிப்பட்டு சிந்தித்து பார்க்கத்தக்கது.**

திருக்கயிலையில் தனக்கு அணுக்கத் தொண்டராய் இருந்த ஸ்ரீ ஆலால சுந்தரரை, பூவுலகிலும் தனக்கு அணுக்கத் தொண்டராய் இருந்து அகம்படித் தொண்டு புரியும் ஆதிசைவ குலத்தில் அவதரிக்கச் செய்த திருவருள் இங்கு சிந்திக்கத்தக்கது.

பெரியபுராணம் தடுத்தாட்கொண்ட புராணத்தில் வரும்,

"அருமறை நாவல் ஆதிசைவன் ஆரூரன் செய்கை
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக்கு யானும் என்பால்
வருமுறை மரபு ளோரும் வழித்தொண்டு செய்தற் கோலை
இருமையால் எழுதி நேர்ந்தேன் இதற்கிவை என் எழுத்து."

என்று சிவபெருமானால் காண்பிக்கப்பட்ட ஓலைச்சுவடியில் உள்ள வாசகமாகிய **"பித்தனாகிய சிவபெருமானுக்கு நானும் என் வழி வழி மரபிலே வருபவர்களும் வழிவழியாய்த் திருத்தொண்டுசெய்து வரும் அடிமையாவோம்"** என்று ஸ்ரீசுந்தரரின் பாட்டனராகிய ஆரூரன் அவர்கள் கூறியுள்ள வாக்கு அவர் மரபிற்கு மட்டும் பொருந்துவது அல்ல. **அனைத்து ஆதிசைவ சிவாசாரியார்களின் மரபுக்கும் இது பொருந்துவதாகும்** என்பது சிந்தித்து உணரத்தக்கது. முக்கியமாய் ஆதிசைவர்கள் இவ்வாக்கை ஆழ்ந்து சிந்தித்தல் வேண்டும். ஏனெனில் இதன்காரணமாக, இக்காலத்திலும் பெரும்பான்மையான ஆதிசைவர்கள் வேறு பணி செய்யாமலும் சிவபூஜையே மரபு பணியாக, தொண்டாக செய்து வருதலை எண்ணி பார்க்க தக்கது.

இன்றும் பல ஆதிசைவ குடும்பங்களில் பலரும் பல தொழில்கள் செய்ய முயற்சித்தபொழுதும் அன்று ஸ்ரீ சுந்தரர் வாழ்வில் வேதியனாய் வந்து ஆட்கொண்டதுபோல் அல்லாமல் இன்று, தனது திருவருள் மூலம் ஆட்கொண்டு இவர்களை சிவபூஜை பணியில் ஈடுபடுத்தும் திருவருளை கண்கூடாக காணமுடியும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆதிசைவர்கள்அனைவரும் சிவபெருமானின் வழிவழி அடிமைகள் அதிலும் முதன்மை அடிமைகள் ஆதிசைவர்களுக்கும் சிவபெருமானுக்கும் உள்ள பந்தம் வார்த்தைகளுக்கும், சிந்தனைகளுக்கும் அப்பாற்பட்டது. எனவே, ஆதிசைவ மரபைச் சார்ந்தவர்கள் வழிவழியாக வாழையடி வாழையாக தனக்கு அடிமைகள் என்று வலிந்து ஆட்கொண்டு திருவருள் செய்தார்.

இவ்வாறு, **சிவபெருமான் ஆதிசைவ மரபை வலிந்து ஆட்கொண்டு செய்த விதம், செய்யும் விதம் வேறு எந்த மரபுக்கும் கிடைக்காத அரும்பெரும் பாக்கியமாகும். இஃது ஆதிசைவ மரபின் மீது சிவபெருமான் கொண்ட பற்றை அன்பை விருப்பத்தை காண முடியும்.**

ஆகமம், சிவபூஜைக்கு அடுத்து, அடியவர்களின் உள்ளத்தில் என்றும் நீங்காது வீற்றிருப்பவன் சிவபெருமான், **தொண்டர்தம் உள்ளத்து அடக்கம்** என்ற திருவாக்கிற்கிணங்க, அடியவருக்கு செய்யும் பூஜையே ஆண்டவனுக்கு செய்யும் பூஜையாக கொண்டு மகிழ்பவன். அத்தகைய சிறந்த அடியவர்களாகிய அறுபத்து மூன்று நாயன்மார்களின் பெருமைகளையும் புகழையும் இவ்வுலகம் அறியும்வண்ணம் தம்மை முப்பொழுதும் திருமேனி தீண்டி வழிபடும் ஆதிசைவ மரபில் அவதரித்த ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் கொண்டே அடியவர்களின் பெருமையைக் கூறும் திருத் தொண்டத்தொகை பாடியருள திருவருள் செய்தார்.

ஸ்ரீ சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் நாயன்மார்களின் பெருமையை கூறும் திருத்தொண்டத் தொகையை பாடியருளவே இப்பூவுலகில் அவதரித்தார் என்பதை சேக்கிழார் பெருமான். பெரியபுராணத்தில்,

"மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடத்
தீதிலாத் திருத்தொண்டத் தொகை தரப்" என்று பாடுவார்.

இவ்வாறு, திருத்தொண்டத் தொகை தேவாரம் மூலம் அடியவர்களின் பெருமையும், அடியவர்களின் புகழும் இவ்வுலகம் முழுதும் பரவச் செய்யும் சைவ சமயத்தின் அரும்பெரும் செயலை **ஆதிசைவராகிய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்** மூலம் செய்த திருவருள் சிந்திக்கத்தக்கது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேலும் சைவ சமயத்தின் பெரும் செல்வமாக விளங்குபவை திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் பாடியருளிய தேவார திருமுறைகள்

"கண்டபெருமந்திரமே மூவர் பாடல்"

என்று வாக்கிற்கேற்ப மந்திர ஆற்றலுடைய தேவாரப் பதிகங்கள் தில்லை சிதம்பரத்தில், கரையான் புற்றால் மூடப்பட்டு செல்லரிக்கும் நிலையில் இருந்த தமிழ்பாக்கள் கொண்ட ஓலைச்சுவடிகளை கண்டெடுத்து தரும் சைவ சமயத்தின் அரும்பெரும் செயலை, பணியை **தம்மை முப்பொழுதும் திருமேனி தீண்டி வழிபடும் ஆதிசைவ மரபில் அவதரித்த நம்பியாண்டார் நம்பி மூலம் செய்த திருவருள் காணத்தக்கது.**

கரையான் புற்றில் அழியும் நிலையில் இருந்த தேவாரப் பாக்களை தமக்கு இனிய ஆதிசைவ மரபில் வந்த நம்பியாண்டார் நம்பி மூலம் கண்டெடுத்து தந்தது மட்டுமல்லாமல், மூவர் பாடிய தேவாரங்களையும், மற்றும் உள்ள அருளாளர்கள் பாடிய பாடல்களையும் திருமுறைகளாக தொகுத்து தந்திடும் சைவ சமயத்தின் அரும்பெரும் பணியையும், மேலும், அந்த தேவார திருமுறைகளுக்கு திருநீலகண்டப்பெரும்பாணர் மரபிலே வந்த பெண்ணொருத்தி மூலம் பண்இசை அமைக்கும் சைவ சமயத்தின் அரும்பெறும் செயலையும் தமக்கு வழி வழி அடிமை செய்யும் ஆதிசைவ மரபில் அவதரித்த நம்பியாண்டார் நம்பி மூலம் சிவபெருமான் செய்த திருவருள் உணரத்தக்கது.

மேலும், தனக்கு இனிய அடியவர்களாகிய அறுபத்துமூன்று நாயன்மார்களின் புகழை பெருமைகளை ஒரு ஆதிசைவரைக் கொண்டு பாடினால் போதாது என்று எண்ணிய சிவபெருமான் தம்மை முப்பொழுதும் திருமேனி தீண்டி வழிபடும் மரபில் வந்த ஆதிசைவராகிய நம்பியாண்டார் நம்பி மூலம் **திருத்தொண்டர் திருவந்தாதி** பாடச் செய்த திருவருள் சிந்திக்கத்தக்கது.

மேலும், **சைவ சமயத்தின் இருகண்களாக விளங்குபவை தோத்திரமும், சாத்திரமும் ஆகும்.**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தோத்திரம் என்பவை பன்னிரு திருமுறைகள், சாத்திரம் என்பவை **பதினான்கு** சைவ **சித்**தாந்த **நூல்கள்**.

இவற்றுள், நாயன்மார்களை இவ்வுலகிற்கு அடையாளம் காட்டியது, தேவாரம் பாடி அருளியது, தேவாரப் பாடல்களை கண்டெடுத்து தந்தது, திருமுறைகளாக தொகுத்து இசைபண் அமைந்திட உறுதுணையாக இருந்தது, ஆகிய அரும்பெறும் செயல்களை, தொண்டுகளை தோத்திரத்திற்கான சைவ சமயத்தின் முக்கிய பணிகளை தனது வழிவழி அடிமைகளாகிய ஆதிசைவர்கள் மூலமே சிவபெருமான் செய்து கொண்டது போன்று, ஆகமங்களின் ஞானபாதமாகிய சைவ சித்தாந்த தத்துவங்களை கூறும் சாத்திர நூல்களை பாடி அருள ஆதிசைவர்களையே மூலமாக கொண்ட தன்மையைப் பார்ப்போம்.

சைவ சித்தாந்த சாத்திர நூல்களில் முதன்மையானது சிவஞானபோதம். இந்த சிவஞான போதத்தை அருளிச் செய்த மெய்கண்டார் அவதரிக்க திருக்காரணமாய் விளங்கியவர் ஆதிசைவராகிய அருள்நந்தி சிவாசாரியார்.

சிவபெருமான் தம்மை முப்பொழுதும் திருமேனி தீண்டும் வழிபடும் **ஆதிசைவ மரபில் வந்த அருள்நந்தி சிவாசாரியார்** என்ற குருமூலமே குரு உபதேச வழிகாட்டுதலே மெய்கண்டார் அவதரிக்கவும் அவர் மூலம் சிவஞானபோத நூல் தோன்றவும் காரணமானது.

சைவ சமயத்தின் இந்த அரும்பெரும் செயலை ஆதிசைவ குரு மூலம் செய்த திருவருள் சிந்திக்கத்தக்கது.

மேலும், பார் புகழ் போற்றும் அளவில் **ஆகமங்களின் ஞானபாதமாகிய சைவ சித்தாந்த தத்துவம்** இவ்வுலகில் போற்றப்பட வேண்டும் எனில் ஆகமம் அறிந்த ஒருவர் மூலம், ஆன்மாக்கள் எளிதில் உணரும் வகையிலும், கற்போர்க்கு இன்பம் தருவதாயும், இனிய ஓசையுடன் அமைந்த பாடல்களாக இயற்றப்படவேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சைவ சமயத்தின் இத்தகைய அரும்பெரும் செயலை தம்மை முப்பொழுதும் தீண்டி வழிபடும் ஆதிசைவ மரபில் வந்த **ஸகாலகமபண்டிதர் அருள்நந்தி சிவாசாரியைக்** கொண்டு "**சிவஞானசித்தியார்**" எனும் ஒப்புயர்வுற்ற நூலை அருளிச் செய்தார்.

அனைத்து சைவ சித்தாந்த கருத்துகளும் சிவஞான சித்தியாரில் முழுமையாக நிரம்பியுள்ளன. படிப்பதற்கு எளிமையாகவும்,சிந்திப்பதற்கு சிறந்ததாகவும் விளங்கியதால்தான்

"சிவத்திற்கு மேல் தெய்வம் இல்லை"

"சித்திக்கு மேல் நூல் இல்லை" - என்ற பழமொழி உண்டாயிற்று.

சிவஞான சித்தியாரே சைவ சமயத்தவர்களால் பெரிதும் பயிலப்படுவதும், இதற்கு ஆறுபேர் உரை வகுத்துள்ளதும் இதன் சிறப்பை உணர்த்தும்.

இவ்வாறு, சைவசித்தாந்த தத்துவத்தினை எளிமையாக பாடிடும் அரும்பெறும் பணியை ஆதிசைவரை கொண்டு செய்த திருவருள் உணரத்தக்கது.

இங்ஙனம்,

ஆகமங்களை காப்பாற்றிய ஆதிசைவர்

சிவபூஜையை வளர்த்தெடுத்த ஆதிசைவர்

நாயன்மார்களை இவ்வுலகம் அறியச்செய்த ஆதிசைவர்

தேவாரப்பாடல்களைகண்டெடுத்து தந்தஆதிசைவர்

திருமுறைகளை தொகுத்து தந்திட்ட ஆதிசைவர்

இசைபண்களை அமைக்க உதவிய ஆதிசைவர்

சைவ சித்தாந்த தத்துவம் தோன்ற காரணமான ஆதிசைவர்

சைவ சித்தாந்த தத்துவத்தை சிறப்புற பாடிய ஆதிசைவர்.

என்று சிவபெருமான் சைவ சமயத்தின் அரும் பெரும் பணிகளை, செயல்களை தம்மை முப்பொழுதும் திருமேனி தீண்டி வழிபாடு செய்யும், தனது வழிவழி அடிமைகளாகிய ஆதிசைவர்களை கொண்டே செய்த திருவருளை இங்கு நாம் உணர வேண்டும்.

திருச்சிற்றம்பலம்

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

14. சிவபெருமான் தன்னை பூஜிக்கும் ஆதிசைவர் கோலம் கொண்டே அடியவர்களுக்கு அருள் செய்தல்

ஆதிசைவர்களாகிய சிவாசாரியார்கள் சிவபெருமானின் பிரதிபிம்பம். ஆதிசைவர்கள் சிவபெருமானின் ஐந்து திருமுகங்களில் இருந்து தீக்ஷை செய்துவிக்கப்பட்டு தோன்றியவர்கள் என்பதால், சிவபெருமானுக்கும் ஆதிசைவ சிவாசாரியார்களுக்கும் வேறுபாடு கிடையாது. வேறுபாடு பார்ப்பவர்களுக்கு தீங்கு நேரிடும் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

சிவபெருமான் ஒரு நாள் கண்ணாடியில் தோன்றிய தம் அழகு நிறைந்த பிரதிப் பிம்பத்தைப் பார்த்து சுந்தரமே வா என்று அழைக்க அது ஓர் அழகிய சுந்தர வடிவமாய் தோன்றி நின்றது. அந்த சுந்தர வடிவமே ஸ்ரீ ஆலால சுந்தரர் என்பதும், ஆலால சுந்தரரே இப்பூவுலகில் ஆதிசைவ மரபில் நம்பியாரூரராக அவதரித்தார் என்பதும் இங்கு சிந்திக்கதக்கது.

ஆகமங்கள், திருக்கோயில்களில் உள்ள ஏழுவித லிங்கங்களில் ஆதிசைவ அர்ச்சகரும் ஒருவர் என்று கூறுகின்றது.

"கோபுரே சிகரே த்வார
ப்ராகாரே பலிபீடகே
அர்ச்சகே மூல லிங்கேச சப்த
லிங்கஸ்ய தர்ஸநம்"

எனவே **"அர்ச்சகஸ்து ஹரஸ்ஸாக்ஷாத்"** என்று திருவாக்கிற்கேற்ப ஆதிசைவ அர்ச்சகர்களை சிவபெருமானாகவே பாவித்து வழிபட வேண்டும். ஏனெனில், **அநாதி சைவனாகிய சிவபெருமான் தனது திருவருளை திருவருள் குறிப்பை தனக்கு அடுத்த நிலையில், உள்ள தம்மை முப்பொழுதும் திருமேனி தீண்டி பூஜை செய்யும் ஆதிசைவர்கள் மூலமே தந்தருள்வான் என்பதை உணரவேண்டும்.**

எடுத்துக்காட்டாக, மிகப்பெரும் ஆதினமாக விளங்கக்கூடிய திருவாவடுதுறை ஆதினத்தின் குரு முதல்வராகிய ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகள், குழந்தை பருவத்தில் வைத்தியநாதன் என்னும் திருநாமங் கொண்டு வளர்ந்துவரும் காலத்தில் தனது தாய் தந்தையருடன் வைத்தீஸ்வரன் திருக்கோயில் சென்று ஸ்ரீ வைத்தியநாதரை தரிசித்து அச்சந்நிதியை விட்டு நீங்காமல் அங்கு வழிபட்டு நின்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அச்சமயம், அவரது தாய் தந்தையர் கோயிலை சுற்றி வலமாக வந்தபொழுது, தங்கள் குழந்தை வைத்தியநாதனை காணாமல் கலக்கமுற்று தேடிவரும் தருவாயில் வைத்தியநாதன் மூலவர் சந்நதியினின்று தரிசித்து ஒரு சிவலிங்கத்தை தனது கையில் கொண்டு வந்தனர். தனது குழந்தையின் கையில் உள்ள சிவலிங்க திருமேனியை கண்ட தாய்தந்தையர் இதனை யாவரிடத்துப் பெற்றாய்? என்று வினவ அதற்கு அப்புதல்வர்.

"ஆதிசைவ சிவாசாரிய சுவாமிகள் ஒருவர் உள்ளேநின்று இப்பெருமானாரை எழுந்தருளப் பண்ணிக்கொடுத்து உறுதிமொழி உரைத்துவிட்டு உள்ளே சென்றனர்." என விடையளித்தனர்.

இதனை கேட்ட பெற்றோர் இது சிவபெருமானின் திருவருட் செயலேயாகும் என மதித்து திருவருட் பெருமையையும், தங்கள் புதல்வரின் புண்ணியப் பேற்றினையும் நினைந்து கண்ணீர் மல்க துதித்து நின்றனர். இச்செய்தி **திருவாவடுதுறை ஆதீனத்தின் குருபரம்பரை விளக்கம்** நூலில் இடம் பெற்றுள்ளது.

மேலும், திருவாரூரில் ஸ்ரீ சுந்தரர் பெருமான் மீது பரவைநாச்சியார் ஊடல் கொண்டு பொழுது, தம் தோழராகிய வீதிவிடங்கப்பெருமான் திருவடிகளை துதித்து வருந்திய ஸ்ரீ சுந்தரர் சிவபெருமானிடம் இவ்விரவே பரவை விட்டுக்குத் தூது சென்று அவளது ஊடலைத் தீர்த்து அருளுதல் வேண்டும் என்று வேண்டியருள, சிவபெருமான் **தம்மை பூஜைபுரியும் ஆதிசைவ மறையவர்** கோலம் பூண்டு தூது சென்ற விதத்தை பெரியபுராணத்தில் சேக்கிழார் பெருமான்,

"ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பி தூதர் பரவையார்
கோல மணிமா ளிகைவாயில் குறுகு வார்முன் கூடத்தம்
பாலங் கணைந்தார் புறநிற்பப் **பண்டே தம்மை அர்ச்சிக்கும்**
சீலம் உடைய மறைமுனிவ ராகித் தனியே சென்றணைந்தார்."

என்று பாடியுள்ளார்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

இவ்வாறு ஆதிசைவ மறையவர் கோலத்தில் வந்த சிவபிரானை மறுத்து அனுப்பிய பின், நிதானமுற்ற பரவையார், வந்தவர் சிவபெருமானேயாதல் வேண்டுமெனத் தெளிந்து, தம்முடைய தோழர் சுந்தரருக்காக **ஆதிசைவ அர்ச்சகர் வடிவம்** கொண்டு எளிவந்த பெருமானைத் மறுத்துரைத்தேனே என வருந்திப் புலம்பினார். இதனை சேக்கிழார் பெருமான் தனது பெரிய புராணத்தில்,

"அண்டர்தம் பிரானார் தோழர்க்காக
அர்ச்சிப்பார் கோலம் கொண்டனைந் தவரை
யான்உட் கொண்டிலேன் பாவியேன்"

என்று பாடியுள்ளார்.

இவ்வாறு சிவபெருமான் **தம்மை பூஜை புரியும் ஆதிசைவ சிவாசாரியார் உருவம்** கொண்டே பற்பல இடங்களில் பல அடியவர்களுக்கு அருள் புரிந்துள்ளார் என்பதை சைவ சமய சரித்திரங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

பாடல்பெற்ற திருத்தலங்களில் ஒன்றாகிய திருவையாறு ஸ்ரீ ஐயாரப்பரை முப்பொழுதும் திருமேனி தீண்டி பூஜிக்கும் ஆதிசைவ சிவாசாரியார் ஒருவர் காசி நகர் சென்று கங்கையில் நீராடி விஸ்வநாதரை தரிசித்து சிவபுண்ணிய பலன் அடைய வேண்டி காசியாத்திரை மேற்கொண்டார். குறித்த நாளில் அந்த ஆதிசைவ அர்ச்சகர் காசியாத்திரை முடிந்து திரும்பி வராததால், அவரின் மனைவியும் மக்களும் ஸ்ரீ ஐயாறப்பனிடம் அழுது முறையிட்டனர். அப்பொழுது ஸ்ரீ ஐய்யாறப்பன் காசி சென்ற ஆதிசைவ அர்ச்சகரின் உருவம் கொண்டு அவ் அர்ச்சகருக்கு உரிய பூஜை முறைகளை செய்து வந்தார். காசி சென்ற அந்த ஆதிசைவ அர்ச்சகர் திரும்பிவர, இங்கு இதுநாள்வரை இறைவன் சிவபெருமான் ஆதிசைவ அர்ச்சகர் வடிவம் கொண்டு தனக்குதானே பூஜை செய்து வந்த திருவருளை அனைவரும் வியந்து போற்றி கண்ணீர் மல்க துதித்து நின்றனர்.

இதனை மாணிக்கவாசகர் தமது திருவாசகம், கீர்த்திக் திருஅகவலில்,

ஐயாறு அதனில் சைவன் ஆகியும் என்று போற்றி பாடியுள்ளார். அதுமுதல் அநாதிசைவனான ஐயாறப்பர் ஆதிசைவனாகப் போற்றப்படுகிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஐயாறப்பன் ஆதிசைவனாக வந்து சிவபூஜை செய்த திருவருளை, திருவையாறு தலத்தில் நடைபெறும் பிரம்மோத்ஸவத்தின் ஐந்தாம் நாளில் **தன்னைத்தான் பூசித்தல்** என்னும் ஐதீக விழாவாக இன்றும் நடத்தப்பட்டு வருகிறது.

மேலும், பாடல் பெற்ற தலங்களில் ஒன்றான திருவிடை மருதூருக்கு அருகே உள்ள திருவிசைநல்லூர் என்னும் திருத்தலத்தில் சில நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்து வந்தவர் ஸ்ரீ தர ஐயாவாள் என்னும் சிவபக்தர். இவருக்காக இவருடைய வீட்டுக் கிணற்றில் கங்கை பொங்கி வந்து அருள் பாலித்ததாக வரலாறு கூறுகிறது.

இவர் நாள்தோறும் திருவிடைமருதூரில் அருள்புரியும் ஸ்ரீ மகாலிங்கப்பெருமானை வணங்கிவரும் நியதி உடையவர். ஒரு நாள் கடும் மழை பெய்ததன் காரணமாக காவிரியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது, அதன் காரணமாக ஸ்ரீதர ஐயாவாள் அவர்களால் தனது ஊரில் இருந்து திருவிடைமருதூர் சென்று ஸ்ரீ மகாலிங்கப் பெருமானை தரிசித்து வணங்க முடியவில்லை. இதனால் அவர் மனம் கலக்கமுற்று உள்ளம் வருந்தி ஸ்ரீ மகாலிங்கப் பெருமானையே சிந்தையில் இருத்தி கண்ணீர் மல்க தனது இல்லத்தில் வீற்றிருந்தார்.

அவ்வேளையில், மழையில் நனைந்த நிலையில் ஸ்ரீ மகாலிங்கப் பெருமானை முப்பொழுதும் தீண்டி பூஜைசெய்யும் ஆதிசைவ சிவாசாரியார் ஒரு வந்தார். அவர் ஸ்ரீ தர ஐயாவாளிடம் மகாலிங்கப் பெருமானின் திருவருள் பிரசாதத்தையும், விபூதியும் வழங்கினார். கண்ணீர் மல்க ஆனந்தத்தோடு பெற்றுக் கொண்டு மகிழ்ச்சியடைந்தார். பின் ஆதிசைவ சிவாசாரியாரின் ஈரத்தை மாற்றிக்கொள்ள புதிய துணிகளை அளித்து ஒரு பட்டாடையும் தந்தருளினார். பின்பு அந்த ஆதிசைவ சிவாசாரியார் ஸ்ரீதர ஐயாவாளிடம் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு விடைபெற்றுக் கொண்டார்.

In Public domain, Digitization: Muthulakshmi Research Academy

மறுநாள், காவிரியில் வெள்ளம் வடிந்தபின் ஸ்ரீதர ஐயாவாள் திருவிடைமருதூர் சென்று அங்கு இருந்த ஆதிசைவ சிவாசாரியாரை கண்டு, தமது இல்லத்திற்கு முதல்நாள் கடும் மழையில் வந்து விபூதி பிரசாதம் அளித்ததற்கு நன்றி தெரிவித்தார். அதற்கு அந்த சிவாசாரியார் தாம் கடும் மழையின் காரணமாக நேற்று வெளியே வரவில்லையே என்று கூறினார். அதைக்கேட்ட ஸ்ரீதர ஐயாவாள் வந்தது யாராக இருக்கலாம் என சிந்தித்தவாறு ஸ்ரீமகாலிங்கப் பெருமானை தரிசித்து வேண்டி நிற்க, தாம் முதல் நாளில் சிவாசாரியார்க்கு அளித்த பட்டாடையானது ஸ்ரீ மகாலிங்கப் பெருமான் மீது சாற்றியருக்கக் கண்ட ஸ்ரீதர ஐயாவாள், **சிவாசாரியார் கோலத்தில் வந்தவர் சிவபெருமானே** என்று உணர்ந்து கண்ணீர் மல்க சிவபெருமானின் திருவருளை வியந்து மனம் உருகி வழிபட்டார்.

மேலும், திருவிளையாடற்புராணம், **வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலத்தில்,** பாண்டிய மன்னன் வாதவூரடிகளை (மாணிக்கவாசகர்) குதிரை வாங்குவதற்கு வேண்டிய பொருளை தந்து அனுப்புகிறான். அப்பொழுது, வாதவூடிரகள் குதிரை வாங்க செல்வதற்குமுன் மதுரையில் திருவருள்புரியும் சோமசுந்தரக் கடவுளின் திருமுன் சென்று வணங்கி அடியேனுக்கு ஒருவரம் அருளல் வேண்டும், அதாவது, செல்லும் இப்பொருளனைத்தையும் தேவரீருக்கும், ஐம்பொறிகளையும் அடக்கித் தேவரீரையே விரும்பும் அடியார்கட்கும் பயன்பட வேண்டும் என்று மனம்முருகி கண்ணீர் மல்க துதித்து வேண்டி நிற்க, அப்பொழுது **சோமசுந்தரப் பெருமானின் திருவருள்போல் ஆதிசைவ அர்ச்சகர் ஒருவர்** எதிரே வந்து வாதவூரடிகளுக்கு திருநீறு அளித்தார். அப்பொழுது வாதவூரடிகள், **நமக்கு இதுபோல் நன்நிமித்தம் வேறு இல்லை, இது நாம் அடையக்கருதும் நன்நெறிக்கு ஓர் ஏதுவாம்,** என்று மகிழ்ந்து ஆதிசைவ அர்ச்சகர் தந்த திருநீற்றினை இருகரங்களினாலும் வாங்கி நெற்றியில் தரித்து மனத்தெளிவுடன் சோமசுந்தர பெருமானிடம் விடைபெற்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இக்கருத்தை பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்தில்,

"ஆதி சைவனா மருச்சக னொருவனே ரணைந்து
பூதி யீந்தன னமக்கிது போலிலை நிமித்தம்
ஈது நன்னெறிக் கேதுவென் றிருகையேற் றணிந்து
வேத நாதனை யிறைஞ்சினார் விடைகொடு மீண்டர்."

என்று பாடியுள்ளார்.

இதிலிருந்து உணரவேண்டியது சிவபெருமான் தம்மை திருமேனி தீண்டி பூஜிக்கும் ஆதிசைவ உருவம் கொண்டோ, ஆதிசைவ அர்ச்சகர் மூலமோ திருவருள் பாலிப்பார் என்பதாகும்.

மேலும், ஆதிசைவ சிவாசாரியார்கள் தங்கள் கரங்களால் தரும் விபூதிக்கு அதிக சிறப்பு உண்டு. சிவபெருமானை முப்பொழுதும் திருமேனியை தீண்டி பூஜை செய்து, அபிஷேகம் ஆராதனைகள் முதலியவைகளை செய்வதால் அவர்களது கைகள் **சிவமாம் தன்மை பெறுகின்றது. சிவபெருமானின் அருளை விபூதியின் வடிவில் பக்தர்களுக்கு அளிப்பவர்கள்.**

சைவ சமய மரபில் விபூதியை பக்தர்களுக்கு தந்திடும் உரிமை ஆதிசைவர்களுக்கும், ஆதினங்களுக்கும் மட்டுமே உரிமையுடையது. திருக்கோயில்களில் சிவபெருமானின் திருமேனியை தீண்டி வழிபடும் கரங்களை கொண்டு சிவாசாரியார்கள் தந்திடும் விபூதிக்கு ஐஸ்வர்ய விபூதி என்று பெயர். அதாவது விருத்தியை தந்திடும் விபூதியாகும். இது வளர்ச்சியை தந்திடும்.

துறவறநெறியில் வீற்றிருந்து, ஆதீனங்கள், தம்பிரான்கள் தந்திடும் விபூதிக்கு மோஷ விபூதி என்று பெயர் அதாவது வீடு பேற்றையும், துறவறத்தையும் தந்திடும் விபூதியாகும். இவர்களை தவிர மற்ற யாவர்க்கும் விபூதி தந்திடும் உரிமை சைவ சமய மரபில் கிடையாது.

சிவபெருமானைத் தீண்டி பூஜை செய்யும் பேறு பெற்றவர்களாகிய சிவாசாரியார்களை சிவமாகவே பாவித்து வணங்கி அவர்களிடம் விபூதி பிரசாதம் பெற்றுக்கொள்வது வழக்கம். சிவபெருமானே ஆதிசைவ சிவாசாரியார் வடிவில் வந்த வாதவூரடிகளுக்கு திருநீறு தந்த வரலாற்றை இங்கு சிந்திக்கவேண்டும்.

In Public domain, Digitization-Muthulakshmi Research Academy

இவ்வாறு, சிவபெருமான் தம்மை முப்பொழுதும் தீண்டி வழிபடும், வழிவழி அடிமை மரபாகிய ஆதிசைவ சிவாசாரியார்கள் உருவம் கொண்டே திருஅருள் செய்வார் என்பதே உண்மையாகும்.

இந்த உண்மையை உணர்ந்துதான் சைவ சமய சம்பிரதாயத்தில் சிவசொருபமாகிய ஆதிசைவருக்கே முதல் மரியாதை வழங்கப்படும்.

நாயன்மார்களின் புகழை பறைச்சாற்றும் உன்னத காப்பியம் பெரியபுராணம். சேக்கிழார் தமது பெரியபுராணத்தில் **பிள்ளை பாதி புராணம் பாதி** என்று கூறும் அளவுக்கு ஞானசம்பந்த பெருமானுக்கு அதிக பாடல் பாடியவர். ஆனால், சைவசமயத்தில் தலையாய காப்பியமாகிய தமது பெரியபுராணத்திற்கு சைவசமயத்திற்கு **அரும்பெரும் தொண்டுகளைச் செய்த சைவசமயத்தின் முதல் திருத்தொண்டர்களாகிய ஆதிசைவரே முதன்மையான தலைவனாக இருக்கவேண்டும்** என்ற சைவசமய மரபின் அடிப்படையில் சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தின் காப்பிய தலைவராக, ஆதிசைவ மரபில் அவதரித்த ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளை அமைத்த பாங்கினை இங்கு நாம் சிந்தித்து பார்க்க வேண்டும்.

இன்றும் பாரம்பரியமிக்க திருவாவடுதுறை ஆதீனம் உள்ளிட்ட பல சைவ ஆதினங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் விழாக்களில் ஆதிசைவரை சிவபெருமானின் பிரதிநிதியாக பாவித்து ஆதிசைவருக்கே முன்னுரிமையும், முதற் மரியாதையும் தரப்பட்டு வருகிறது.

மிகப்பெரும் ஆதினமாகிய திருவாவடுதுறை ஆதீனத்தில் ஆவணி அவிட்டம், மஹா சிவராத்திரி, பொங்கல், தீபாவளி, மகரத் தலைநாளுக்குரிய குருபூஜை திருமுகம் எழுதும் நாள், திருமடத்தின் கொடியேற்றம், ஸ்ரீ நமசிவாய மூர்த்திகள் குருபூஜைத் திருநாள் ஆகிய விசேஷ தினங்களில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசன்னிதானம் அவர்கள் ஆதீன மரபின்படி முதலில் ஆதிசைவர்களுக்குத்தான் பூரிகாசு வழங்கி மரியாதை செய்து வருகின்றார்கள் என்பது சிந்திக்கத்தக்கது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருவாவடுதுறை ஆதீன குருபூஜைவிழாவை முன்னிட்டு நடைபெறும் பத்து நாட்கள் விழாவில் முதல் மூன்று நாட்கள் ஆதினத்தில் நடைபெறும் கருத்தரங்கில் **ஆதிசைவ சிவாசாரியார்களே ஆகம நற்கருத்துகளை** சொற்பொழிவு ஆற்றும் மரபு இன்றும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

சைவர்களில், ஆதிசைவரையே முதன்மையாக தலைமையாக கொள்ளும் மரபு கடந்த காலத்தில் இருந்துள்ளது. திருவிளையாடற் புராணம், உக்கிரபாண்டியனுக்கு வேள்வளை செண்டு கொடுத்த படலத்தில்,

"ஆதி சைவர் முதற்சைவ ரைவருங்
கோதி லாவகச் சைவக் குழாங்களும்
பூதி மேனியர் புண்ணி வைந்தெழுத்
தோது நாவின சொல்லைவந் தெய்தினார்" (பாடல் -25)

என்று சைவர்களில் ஆதிசைவரை முதன்மைப்படுத்தி பாடப்பட்டுள்ளது.

அநாதி சைவனாகிய சிவபிரானுக்கு அடுத்த நிலையில் விற்றிருந்து திருத்தொண்டினை செய்துவரும் ஆதிசைவ சிவாசாரியார்களை தவிர்த்து செய்யும் எந்த ஒரு சிவப்பணியும், சிவச்செயலும், சைவசமய விழாக்களும் சிவபெருமானுக்கு விருப்பமானதாக அமையாது என்பதை இதன் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

சிவவழிபாட்டிற்கென்று இப்பூவுலகில் தோன்றிய முதல் சைவர்களாகவும், சிவபெருமானின் அணுக்கத் தொண்டர்களாகவும், வழிவழிஅடிமை செய்பவர்களாகவும், சிவபெருமானின் பிரதிநிதி களாகவும் விளங்கும் ஆதிசைவ உருவம் கொண்டே சிவபெருமான் அருள் செய்வார் என்பதையும், இதன் காரணமாகவே, சைவ சமய விழாக்களில் ஆதிசைவருக்கே முதல் மரியாதை அளிக்கப்படும் மரபு கடந்த காலங்களிலும் இன்றும் கடைபிடிக்கப்பட்டு வருகின்றது என்பதை இதன்மூலம் நாம் தெரிந்து கொள்ளலாம்.

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

15. ஆதிசைவர்களின் இடைக்கால நிலை

(கிபி.14-ம் நூற்றாண்டு முதல் 20-ம் நூற்றாண்டுவரை)

ஆதிசைவர்களாகிய சிவாசாரியார்கள் தமிழ் அரசர்களாகிய சோழர்கள், பாண்டிய மன்னர்கள் ஆட்சி காலங்களிலும், நாயன்மார்கள் காலமாகிய பல்லவ மன்னர்கள் ஆட்சி காலங்களிலும் ஆகமங்களை சிறப்புற பயின்றும், ஆகமவிதிப்படி சிவாலயங்களில் அனைத்து தொண்டுகளையும் செய்து, மன்னர்களுக்கு சிறந்த ஆன்மீக வழிகாட்டிகளாய் இராஜ குருவாகவும் இருந்து உரிமையோடும், பெருமையோடும் சீரும் சிறப்புற்றும் வாழ்ந்து வந்துள்ளார்கள். ஆனால் காலப்போக்கில் மாற்று தேசத்து அரசர்கள் ஆட்சி காலத்தில் அதாவது, கி.பி.14-ம் நூற்றாண்டு முதல் தங்கள் பெருமைகளையும், உரிமைகளையும் இழந்து உரிமையற்றவர்களாக ஆனார்கள்.

எடுத்துக்காட்டாக, தமிழ் அரசர்களாகிய பிற்கால சோழர்களில் கடைசி மன்னனாகிய மூன்றாம் இராஜேந்திர சோழனின் ஆட்சி வலிமைக்குன்றி 13-ம் நூற்றாண்டு இறுதியில் முடிவுற்றப்பின் பாண்டிய மன்னர்கள் சோழ, பாண்டிய தேசங்களை ஒரு சேர ஆட்சி புரிந்தனர். இக்காலத்தில், சடையவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி.1251-1268) மிகவும் புகழ் பெற்று விளங்கினான். பின் குறுகிய காலத்தில் மாறவர்மன் குலசேகர பாண்டியன் ஆட்சி காலத்தில் (கி.பி.1268-1310) அம்மன்னனின் மகன்கள் வீரபாண்டியன், சுந்தரபாண்டியன் என இருவரும் வாரிசு உரிமைக்கோரி போரிட்டதன் காரணமாக தமிழகத்தில் ஆட்சித்தலைமை நிலையற்றதாக விளங்கியது. எங்கும் அமைதியின்மை, குழப்பம் நிலவியது. பரம்பரை பரம்பரையாக சைவர்களாக விளங்கிய சோழர்கள் அழிக்கப் பட்டார்கள். சோழ அரசு சிதறுண்டது. பாண்டிய தேசத்தில் அமைதியின்மை தொண்டை மண்டலத்தில் பல்லவ வம்சத்தின் வாரிசுகளாக வந்தவர்கள் குருநில மன்னர்களாக பலம் அற்றவர்களாக விளங்கினார்கள். இந்நிலையில் தென்னாட்டில் குறிப்பாக தமிழகத்தில் முஸ்லீம் தளபதி மாலிக்காபூர் படையெடுப்பு கி.பி.1311ல் நடைபெற்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கி.பி. 1311-ல் நடைபெற்ற மாலிக்காபூர் படையெடுப்பும், கி.பி.1318-ல் நடைபெற்ற குஸ்ரூகான் படையெடுப்பும் தமிழகத்தையும், தமிழக கோயில்களையும் சீரழித்தன. சிதம்பரம், திருவாரூர், ஸ்ரீரங்கம், மதுரை போன்ற கோயில்களெல்லாம் தீக்கிரையாக்கப்பட்டன. அங்குள்ள கோயில் செல்வங்கள் எல்லாம் கொள்ளை அடிக்கப்பட்டன. தங்கள் கோயிலை காப்பாற்ற முயற்சித்த சிவாசாரியார்களும், கோயிற் பணியாளர்களும், பக்தர்களும் கொடுமையாக கொலை செய்யப்பட்டனர். இதன் காரணமாக சுமார் அரை நூற்றாண்டுகளுக்கு (50 வருடங்களுக்கு) மேல் கோவில்கள் பூட்டப்பட்டன. கோவில்களில் எவ்வித பூஜைகளும் வழிபாடுகளும் இன்றி பாழடைந்து கிடந்தன. டில்லி சுல்தான் கியாசுதின் துக்ளக் மகன் உலூப்கான் பாண்டிய நாட்டின்மேல் போரிட்டு கி.பி.1323-ல் மதுரையை கைப் பற்றினான். டெல்லி சுல்தான்களின் நேரடி கட்டுப்பாட்டிற்கு தமிழகம் கைமாறியது.

சுல்தான்களின் ஆட்சியில் தமிழகத்தில் சமயம் சார்ந்த நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. கோயில்கள் சேதப்படுத்தப் பட்டன. வழிபாடுகளும், விழாக்களும் முடக்கப் பட்டன. கோயில் விக்ரகங்கள், அணிகலன்கள் கொள்ளை அடிக்கப்பட்டன. கோயிலையொட்டி வாழ்ந்து வந்த பிராம்மணர்கள் குறிப்பாக சிவாசாரியார்கள் மிகப் பெரிய தாக்குதலுக்கு ஆட்பட்டனர். இவ்வாறு, சுமார் அரை நூற்றாண்டுகளுக்கு மேல் தமிழக கோயில்கள் பாழடைந்து கிடந்தன.

மாலிக்காபூர் படையெடுப்பாலும், சுல்தான்கள் ஆட்சியிலும் தமிழகம் இருந்த நிலையை விஜயநகர மன்னன் குமார கம்பண்ணன் மனைவி **கங்கா தேவி** தாம் எழுதிய **மதுரா விஜயம்** என்ற நூலில் விரிவாக குறிப்பிட்டுள்ளார். அதில் கோயில்கள் இருந்த நிலையை கீழ்கண்டவாறு அதில் விவரிக்கின்றார்.

In Public domain Digitization Muthulakshmi Research Academy

"திருக்கோயில்களின் கதவுகளை கரையான் தின்றன. கருவரைக்குள் இருந்த வளைவுகளில் விரிசல் அங்கு புல் முளைத்திருந்து முழவின் ஒலியை எதிரொலித்துக் கொண்டிருந்த ஆலயங்களில் ஓநாய்களின் உளையொலி எதிரொளித்தது. வேத முழக்கம் உடைய அந்தணர்கள் தெருவில் இறைச்சி நெடி வீசியது. அழகிய மாதரின் சிலம்பொலி எழுந்து உள்ளங்களைக் கவர்ந்த நெடுஞ்சாலைகளில் பிராமணர்களை இரும்புச் சங்கிலிகளில் இழுத்துச் செல்லுகையில் அவர்கள் எழுப்புகின்ற ஒலி, சங்கிலி ஓசைகளுடன் சேர்ந்து காதைக் கிழித்தன" என்றவாறு அந்நூலில் விவரித்துள்ளார்.

இதை படிக்கவே மனம் அதிர்கிறது. இவ்வாறு கோயில்களின் சூழ்நிலை இருந்தபொழுது கோயிலை சார்ந்தே வாழ்ந்த அர்ச்சகர் களாகிய சிவாசாரியார்கள் நிலை எவ்வாறு இருந்திருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். அவர்கள் நிலை மிக மோசமானதாக இருந்திருக்கும். ஏனெனில் கோயில்கள் தாக்கப்படும்பொழுது அதன் முதல் பாதிப்பு அங்கு பூஜை செய்பவருக்குத்தான் என்பதே எதார்த்த உண்மையாகும்.

எடுத்துக்காட்டாக கி.பி. 1758ம் ஆண்டில் பிரஞ்ச் தளபதி லாலி என்பவரால் திருவாரூர் திருக்கோவிலில் சூறையாடல் நிகழ்த்தப் பெற்றது என்பதையும், அப்பொழுது, கோவிலில் நெல் தவிர பிறப் பொருட்களை அவரால் கைப்பற்ற முடியவில்லை என்பதால், கோபமடைந்த பிரஞ்ச் தளபதி லாலி கோவிலை பாதுகாத்த கோயில் பூஜைப்புரியும் குருக்கள்களை துப்பாக்கி கொண்டு சுட்டு வீழ்த்தியதாக (A HISTORY OF THE MILITARY TRANSACTIONS OF THE BRITHSH NATIONAL IN HINDUSTHAN) என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளதாக கல்வெட்டு ஆய்வாளர் குடவாயில் பாலசுப்ரமணியன் அவர்கள் தமது திருவாரூர் திருக்கோவில் நூலில் பதிவு செய்துள்ளார்.

இவ்வாறு, கோயிலின் பாதுகாப்பிற்காகவும், கோவில் தொண்டுக்காகவும், உயிர்த்தியாகம் செய்த ஆதிசைவ குருக்கள் பலர் ஆவர். இது பதிவு செய்யப்பட்ட நிகழ்வு. இவ்வாறு பதிவு செய்யப்படாத நிகழ்வுகளினால் எத்தனை சிவாச்சாரியார்கள் உயிர் பலி வாங்கப்பட்டதோ?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எத்தனை சிவாசாரியார்கள் தாங்கள் பூஜித்த கோயில் களுக்காக, இறைவனுக்காக உயிர்த்தியாகம் செய்தனரோ? எவ்வளவு துன்பத்திற்கும் கொடுமைகளுக்கும் உள்ளானார்களோ என்பது நம் கற்பனைக்கும் எட்டாததாகும்.

இவ்வாறு அரைநூற்றாண்டுகளுக்கும் மேல் கோயில்களில் பூஜைகளும், வழிபாடுகளும் நிறுத்தப்பட்டதால் கோயிலை சார்ந்தே வாழ்ந்த ஆதிசைவர்களாகிய சிவாசாரியார்களின் வாழ்க்கை மிகவும் பின்னுக்கு தள்ளப்பட்டு பல துன்பங்களுக்கு ஆளாகும் சூழ்நிலை ஏற்பட்டது.

பின்பு தமிழகத்தில் 14-ம் நூற்றாண்டு இறுதியில் அதாவது கி.பி.1365-70 ஆண்டு காலங்களில் மதுரையில் சுல்தான்களின் ஆட்சியை ஒழித்துக்கட்டி தமிழகம் முழுவதும் விஜயநகர பேரரசின் கீழ் கொண்டுவரப்பட்டது. விஜயநகர அரசர்களின் ஆட்சிக்காலம் தென்னகத்தின் **இந்து மறுமலர்ச்சி காலமாகவே** விளங்கியது. விஜயநகர ஆட்சி காலத்தில் பல கோயில்களில் பூஜை வழிபாடுகள் மீண்டும் தொடங்கின. பல கோயில்கள் சீரமைக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டன.

இம் மன்னர்கள் காலத்தில் கோயில்களில் வழிபாடுகள் சிறப்புற நடைபெற்றாலும் தமிழ் அந்தணர்களாகிய ஆதிசைவ சிவாசாரியார்கள் கோயில்களின் கருவரையில் பூஜை மட்டுமே செய்யும் அடிமைகளை போல ஒடுக்கப்பட்டனர். தமிழ் அரசர்களாகிய சோழர்கள் ஆட்சிகாலத்தில், ஆதிசைவர்களாகிய சிவாசாரியார்களுக்கு தனி உரிமைகளும், மரியாதைகளும் ஆச்சாரியத்துவமும், ராஜ குருவாக இருந்து செயல்படும் உரிமை கோயிலை நிர்வாகம் செய்யும் உரிமை போன்றவைகள் தரப்பட்டன. அத்தகைய உரிமைகள் உடைமைகள் அனைத்தும் இக்காலத்தில் சிவாசாரியார்களிடம் இருந்து படிப்படியாக பறிக்கப்பட்டன.

விஜயநகரம் பேரரசரும், நாயக்கர்களும், மராட்டியர்களும், தமிழகத்தில் ஆட்சி புரிந்த பொழுது தெலுங்கரும், கன்னடியரும், மராட்டியரும், ஆயிரக்கணக்கில் தமிழகத்தில் குடியேறினார்கள். அவ்வாறு குடியேறியவர்களில் தெலுங்கு பிராமணர்களும், மராட்டிய பிராமணர்களும் அடங்குவர். இவ்வாறு வந்த தெலுங்கு, மராட்டிய பிராமணர்களிடம் கோயில் நிர்வாகமும் வழிபாடுகள் சம்பந்தமான முடிவுகள் எடுக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டன.

In Public domain, Digitized on Muthulakshmi Research Academy

ஆதிசைவ குருக்கள் என்ற மரியாதை கோயில் பூஜை செய்யும் இடத்து அளவிலேயே இருந்ததே தவிர ஆட்சி, அதிகாரம் சமூகத்தில் ஆதிசைவர்களுக்கு மரியாதை இல்லாத நிலை ஏற்பட்டது.

இக்காலங்களில் ஆகமங்களுக்கு பெரிய அளவில் முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. வேதம் படித்த பிராமணர் களுக்கு கோயில்களில் முக்கியத்துவமும் மரியாதையும் அளிக்கப் பட்டன. விஜயநகர அரசர்கள் காலத்தில் வேத அபிவிருத்தி களுக்காக பல கொடைகள் வழங்கப்பட்டன. இதனால், வேதம் படித்த பிராமணர்களை விட ஆகமம் படித்த சிவாசாரியார்கள் தாழ்ந்தவர்கள் என்ற ஒரு எண்ணம் சமூகத்தில் ஏற்பட்டது. இதனால் சிவாசாரியார்களும் வேத கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து கற்க தொடங்கினர்.

சோழ, பாண்டிய மன்னர்கள் வேதம் படித்த பிராமணர்களுக்கு இறையிலிகள் அளித்தபொழுதும், தமிழ் அந்தணர்களாகிய ஆதிசைவ சிவாசாரியார்களுக்கும் அவர்களின் ஆகம நூல்களுக்குமே மிகப்பெரும் முக்கியத்துவம் அளித்துள்ளார்கள்.

திருக்கோயில்களில் நடைபெற்ற விழாக்கள் மற்றும் சமயம் சார்பான அனைத்து நடவடிக்கைகளும் ஆகம விதி வழிபடியே சோழர்கள் காலத்தில் நடைபெற்று வந்தன.

சோழ மன்னர்கள் வேத கல்வியை ஆதரித்த பொழுதும், ஆகம கல்விக்கு மிகப் பெரும் முக்கியத்துவம் அளித்ததால் ஆகம சம்பந்தமான பல நூல்கள் அப்பொழுது தோன்றின. முக்கியமாக ஆகமங்களின் ஞானபாதம், சம்பந்தமான பல நூல்கள், சோழர்கள் காலத்தில் சிவாசாரியார்களால் எழுதப்பட்டன.

சிவாசாரியார்களுக்கும் அவர்கள் கற்ற ஆகம கல்விக்கும் மன்னர்களின் ஆதரவு இருந்ததால், ஆதிசைவ சிவாசாரியார்கள் பல சைவ மடங்களை எழுப்பி ஆகம உபதேசமும், சிவ உபதேசமும் செய்து, சோழர்கள் காலத்தில் சைவ சமயம் சிறப்புற்று விளங்க தொண்டாற்றி வந்தனர்.

பிற்காலத்தில் அதாவது, தமிழ் அரசர்களாகிய சோழர்கள், பாண்டிய மன்னர்களின் ஆட்சியில் முடிவுற்று கி.பி. 14, 15ம் நூற்றாண்டுகளில் எழுந்த மாற்று தேசத்து மன்னர்களின் ஆட்சி காலங்களின்பொழுது இந்நிலை தலைகீழாக மாறியது. சிவாசாரியார்கள் கற்ற ஆகமகல்விக்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் குறைக்கப்பட்டு வேத கல்விக்கும் பிராமணர்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேத பிராமணர்களுக்கும் தெலுங்கு, மராட்டிய பிராமணர்களுக்கு கோயில்களின் நிர்வாகத்தில் அதிக முக்கியத்துவமும், உரிமையும் அளிக்கப்பட்டன. இதனால், சிவாசாரியார்களுக்கு தமிழ் சமூகத்தில் அளிக்கப்பட்டுவந்த அந்தஸ்தும், மரியாதையும் படிப்படியாக குறைந்து வந்தன.

இக்காலத்தில், கோயில்களில் நடைபெற்ற ஆகம கிரியைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வேதமந்திரங்கள் சேர்க்கப் பட்டன. **சைவ கிரியைகளும் வைதீகமும்** என்ற கட்டுரையில் **கலிபோர்னியா பெர்க்கிலின் பல்கலைக் கழகப் பேராசிரியர் வெயின் ஸுர்தம்** அவர்கள் தரும் விளக்கம் வருமாறு,

ஆகமங்களே குறிப்பிட்ட தெய்வ வழிபாட்டைப் பற்றிய மிகமிக முந்தைய ஆதார நூல்களாகும். 12ம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழ் பெற்ற சைவ நூலாசிரியரும், ஆகம உரை ஆசிரியருமான ஸ்ரீ அகோர சிவாசாரியார் தன்னுடைய முக்கியமான உரைகளின் நோக்கம், வைதீகர்கள் ஆகம விசயங்களை தவறாக விளக்குவதை திருத்துவதேயாகும் என்று கூறுகிறார்.

மேலும், இன்று எல்லா ஆகமச் சடங்குகளிலும் வேத மந்திரங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அகோர சிவாசாரியார் கூறியுள்ள கணபதி பூஜை வேத மந்திரங்கள் அற்றது. ஆனால் இன்று செய்யப்படும் கணபதி பூஜையில் பெரிய வேத மந்திரங்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன.

ஆகம சடங்குகளில் வேதங்களின் உபயோகம் மிகமிக குறைவாகவே இருந்தது. ஆகம சடங்குகளில் வேத மந்திரங்கள் உபயோக படுத்தப்பட்டாலும், ஆவாகனம், பூஜை இவற்றிற்கு பிறகு உபசாரங்களாகிய கீதம், நாட்டியம், இவற்றிற்கு ஒப்பாகவே கருதப்பட்டன. இந்நிலை பிற்காலத்தில் தலைகீழாக மாறி மிகச்சிறந்த ஆகம சடங்குகளிலும் விஸ்தாரமான வேத மந்திரங்கள் உபயோகப் படுத்தப்படுகின்றன என்று கூறுகிறார்.

இவ்வாறு, கோயில்களில் வேதமந்திரங்கள் பாராயணம் மட்டுமே செய்யப்படும் என்ற நிலைமாறி, ஆகம பூஜைகளில் வேத மந்திரங்கள் கலப்பு அதிகம் ஏற்பட்டன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இக்காலகட்டத்தில், ஆட்சியாளர்களின் ஆதரவு ஆகம கல்விக்கு இல்லாததாலும் சிவாசாரியார்கள் கையறுநிலையில் இருந்தனர். வாழ்க்கையே போராட்டமாக மாறியதால் பூஜை செய்து ஒரு வேளை உணவு உண்டு வாழ்ந்தால் போதும் என்ற நிலைக்கு தள்ளப்பட்டனர். இதனால் தங்களின் உரிமைகள் பல பறிக்கப்பட்டபொழுதும், தங்கள் ஆகம பூஜை முறைகளில் பல மாற்றங்கள் ஏற்பட்ட பொழுதும் எதையும் எதிர்த்து கேள்வி கேட்கும் திராணியற்றவர்களாக ஆனார்கள்.

மேலும், அக்காலங்களில் கோயில்கள் உள்ள கிராமங்களிலும், அக்கிரகாரங்களிலும் சிவாசாரியார்கள் ஒரு குடும்பம் (அ) இருகுடும்பம் என மிக மிக சிறுபான்மையினராக வாழ்ந்து வந்ததாலும் மற்ற பிராமணர்கள் பெருமளவு குடும்பமாக வாழ்ந்து வந்ததாலும் பிற்கால அரசர்கள் காலத்தில் கோயிலில் பூஜை செய்யும் ஆதிசைவ குருக்களைவிட, வேத பிராமணர்களுக்கு முக்கியத்துவம் அளித்ததாலும், மன்னன் எவ்வழியோ மக்கள் அவ்வழி என்பதற்கேற்ப சமூகத்தில் உள்ள மக்களும் வேத பிராமணர்களையே உயர்வாக மதித்தாலும் ஆதிசைவ குருக்கள்களின் வாழ்வும், உரிமையும் கோயிலின் கருவறையிலேயே அடிமையாக முடங்கியது.

ஒரு கிராமத்தில் பொது மக்களுக்கு பலவித பணிகள் செய்ய எவ்வாறு வண்ணார், அம்பட்டர், குயவர் போன்றோர் தொழில் செய்ய தொழிலாளிகளாக உள்ளார்களோ அதுபோல் ஆதிசைவ குருக்களும் கோயிலில் பூஜை செய்யும் தொழிலாளி என்ற அளவில் சமூகத்தில் அவர்கள் வாழ்வுமுறை சுருங்கியது. கிராம சமூகத்தில் அவர்களுக்கு எவ்வித உரிமையும் அங்கீகாரமும் முடிவெடுக்கும் உரிமையும் இல்லாத நிலை ஏற்பட்டது.

இக்காலகட்டத்தில்தான் சிவாசாரியார்கள் தங்கள் உயிரினும் மேலாக மதித்து பாதுகாத்துவந்த பல ஆகம ஏட்டுச்சுவடிகளை அரசின் ஆதரவின்மையால் பாதுகாத்து தக்கவைக்க முடியாததால் இழந்தனர். மேலும், தங்கள் குடும்பத்தின் வறுமை காரணமாகவும் பஞ்சத்தினாலும் விலை மதிக்கமுடியாத பல ஆகம சுவடிகளை விழிப்புணர்வு இல்லாததால் விற்கும் சூழ்நிலைக்கு தள்ளப்பட்டனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆகம கல்விக்கு, அரசிலும், சமூகத்திலும் பெரியளவு ஆதரவு இல்லாததால் கோயில் வழிபாட்டுக்குரிய சில ஆகமங்களின் **கிரியாபாதத்தை மட்டும்** சிவாசாரியார் தங்கள் செய்யும் பூஜையை பொருட்டு குருகுல முறையில் கற்று தலைமுறை தலைமுறையாக பாதுகாத்து வந்தார்கள்.

சோழர்கள் காலத்தில் **ஆகமத்தின் ஞானபாதம்** சம்மந்தமான பல நூல்களை இயற்றிய ஆதிசைவ சிவாசாரியார்கள், இக்காலத்தில் ஆகமத்தின் ஞான பாத சிந்தனையே இல்லாத நிலையில் இருந்தனர்.

பெருபான்மையான ஆகமங்களின் ஞானபாத பகுதிகள் இக்காலத்திலேயே மறைந்து போயின என்று எண்ண வாய்ப்பு உள்ளது. இக்காலக்கட்டத்தில் தான் சைவசமயத்தை சார்ந்த **மறைஞானசம்பந்தர், தத்துவப்பிரகாசர்** போன்றோர், ஆகம கருத்துகளை **சைவ சமய நெறி, தத்துவப்பிரகாசம்** போன்ற நூல்களாக இயற்றி தனிபட்ட முறையில் ஆகம தத்துவங்களை பாதுகாத்து வந்தனர்.

சோழர்கள் காலத்தில் புகழ்பெற்றுவிளங்கிய சிவாசாரியார் களின் நூற்றுக்கணக்கான ஆகம சைவ மடங்கள் ஆதரவு இன்மையால் இக்காலத்தில்தான் படிப்படியாக அழிந்து போயின.

ஆகம விதிப்படி சிவாசாரியார்களுக்கு (சன்னியாச தர்மம்) துறவறம் கிடையாது. அவர்கள் இல்லறத்தில் இருந்த நிலையிலேயே சிவபூஜை செய்து கொண்டு குருவாக, மடாதிபதிகளாக இருந்து சிவதீக்ஷை அளிக்கும் உரிமை உண்டு.

திருவாவடுதுறை ஆதினம் ஸ்ரீ மாதவ சிவஞான சுவாமிகள் தமது சிவஞான மாபாடியத்துள்,

இல்வாழ்க்கையில் இருந்து ஆச்சாரியராய் (குருவாக) இருக்கும் தன்மை ஆதிசைவருக்கு மட்டுமே உண்டு என்று கூறியுள்ளார். மேலும், சிவாகமங்களில் ஆதிசைவர்க்கே அன்றி ஏனையோர்க்கு மக்கண் முரண்மையினும் ஆசிரியத்தன்மை (குருவாக இருக்கும் தன்மை) விதியாமையும் அறிக. சிவாகமங்களில் இல்வாழ்வார்க்கு உயர்ச்சி கூறும் வசனங்கள் எல்லாம் பரார்த்த பூஜைக்கண் ஆதிசைவரைக் குறித்து கூறியதேயான் என்பது தெரிந்துணர்ந்து கொள்க. என்றும் தமது சிவஞானமாபாடியத்துள் மாதவ சிவஞான சுவாமிகள் அருளியுள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆனால், தமிழகத்தின் இடைக்காலத்தில் காவியுடுத்தும் துறவிகளுக்கும், பிரம்மச்சரிய நிலையில் இருப்பவர்களுமே குருவாக மடாதிபதிகளாக இருக்கவேண்டும் என்ற கொள்கை பரவியதால் ஆதிசைவ சிவாசாரியார்களின் குருத்துவம் பறிக்கப்பட்டன. அவர்களின் ஆகம மடங்கள் படிப்படியாக செல்வாக்கு இழந்து விட்டன.

எடுத்துக்காட்டாக, ஈட்டுகின்ற பொருளில் ஒரு பகுதியை வழிகாட்டுகின்ற சிவபெருமானுக்கே என அர்ப்பணித்து வாழும், செட்டிநாட்டு நாட்டுக்கோட்டை நகராத்தார்களுக்கு, ஆதிசைவ சிவாசாரியார்களே குரு பீடமாக இருந்து சிவஉபதேசம் செய்து வந்துள்ளார்கள் என்பதும், ஆதிசைவர்களுக்கே அந்த உரிமை உண்டு என்பதும் கடந்த கால வரலாறாகும். ஆனால், தமிழகத்தின் இடைக்காலத்தில் காவியுடுத்திய பிரம்மசாரியாக உள்ள பிராமணர்களே குருவாக விளங்க வேண்டும் என்ற கொள்கை வலியுறுத்தப்பட்டதால் ஸ்மார்த்த பிராமணர் ஒருவர் நகரத்தார் மடத்தின் குருவாக இருந்து உபதேசம் செய்து வருகிறார்.

சைவ ஆதினங்கள் என்ற நூலில் **தவத்திரு. ஊரன் அடிகள்**, நாட்டுக்கோட்டை நகரத்தார்களில் பெண் மக்களுக்குத் துலாவூர் ஆதினம் குருபீடம். ஆண்மக்களுக்குக் கலாமடமும், பாதரக் குடிமடமும் குருபீடங்கள். அன்மைக்காலத்தில் கலாமடமும், பாதரக்குடி மடமும் ஒன்றாக இணைக்கப்பெற்றுப் பாதரக்குடிமடமே இப்பொழுது ஆண்களின் குரு பீடமாக இருந்து வருகிறது. **முன்பு ஆதிசைவ சிவாசாரியார் மடமாக இருந்த பாதரக்குடிமடம் அன்மைக்காலத்தில் ஸ்மார்த்த வைதீக அந்தணர் தலைமை வகிக்கும் மடமாகிவிட்டது என்று கூறியுள்ளார்.**

அதேபோல், **திருவாலங்காட்டில் தரும சிவாசாரியார்** மடம் ஒன்று இருந்தது. சிவாசாரியாரை மடாதிபதியாக கொண்ட இம்மடத்தில் ஆயிரம் வைஸ்யர் எனப்படும் செட்டிகள் சிஷ்யர்களாக இருந்தனர். இவர்கள் இக்காலகட்டத்தில் தங்கள் மடாதிபதிகள் பிரம்மச்சரியம் மேற்கொண்டு காவியுடுத்தி தண்டு கமண்டலம் ஏந்தியவர்களாய் இருக்கவேண்டும் என்று வற்புறுத்தினார்கள். ஆனால் சிவாசாரியார்கள் தங்களுக்கு ஆகம விதிப்படி துறவறம் இல்லை என்று கூறினார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதனால் மேற்கண்ட செட்டிமார்கள் தங்கள் ஆதிசைவ குருவை விலக்கிவிட்டு ஸ்மார்த்தநெறி பிராமணர் ஒருவரைக் குருவாகப் பீடமேற்றினர் என்று தமது நூலில் குறிப்பிட்டுள்ளார் **சிவசுந்தரி பூசை.ச.ஆட்சிலிங்கம்.**

இவ்வாறு சமூகத்தில் ஏற்பட்ட பல மாற்றங்களின் காரணமாக சிவாசாரியார்கள் தங்கள் ஆகம மடங்களையும் குருத்துவத்தையும் இழந்தார்கள். ஒரு சில பெரிய கோயில்களில் சிவாசாரியார்கள் உரிமையோடும், மரியாதை பெற்று விளங்கி இருந்தாலும், பெருபான்மையாக, முக்கியமாக கிராமங்களில் வாழ்ந்துவந்த சிவாசாரியார்களின் வாழ்க்கை போராட்டமாகவே இருந்தது.

சோழர்கள் காலத்தில் கோயில்களில் தேவரடியார்கள் என்று அழைக்கப்படும் தளிச்சேரிப் பெண்டுகள் அலகிடுதல், திரு மெழுக்கிடுதல், மலர் தொடுத்தல், நடனம் ஆடுவது போன்ற பணிகளை செய்து வந்தனர். இவர்களுக்கு இக்காலத்தில் மானியங்கள் வழங்கப்பட்டு மரியாதையாக நடத்தப்பட்டனர்.

ஆனால், இடைக்காலத்தில் கோயிலைச் சார்ந்தே வாழ்ந்து வந்த தேவரடியார்கள் கோயில் திருத்தொண்டுகளை கைவிட்டுத் தம் உடல் அழகை விற்றுப் பிழைக்கும் அளவுக்குத் தம் நிலையில் இழிந்துவிட்டனர். இதற்குக் காரணம் முஸ்லிம்கள் படையெடுப்பு -களினாலும், தமிழகத்து மன்னர்களும், குறுநில மன்னர்களும் விளைத்த குழப்பங்களினாலும், தெலுங்கர், கன்னடியர் செல்வாக்குப் பெற்று வந்ததாலும் தேவடியார்கட்குச் சோழ பாண்டிய மன்னர்கள் வழங்கி இருந்த நிவந்தங்கள் பறிபோயின போலும், தம் உடைமைகளை இழந்து பிழைக்க வழியொன்றைத் தேடிக் கொண்டனர் என்கிறார் **தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும் என்ற நூலில் வரலாற்று அறிஞர் K.K.பிள்ளை.**

கோயிலைச் சார்ந்தே வாழ்ந்து வந்த தேவரடியார்கள் வாழ்க்கை, சோழபாண்டிய மன்னர்கள் காலத்திற்கு பிறகு எவ்வாறு மோசமானதோ, அதேபோன்று, கோயிலை சார்ந்தே வாழ்ந்து வந்த ஆதிசைவர்களாகிய சிவாசாரியார்கள் வாழ்வு மிகமிக மோசமான தாகியது. தமிழ் அரசர்களாகிய சோழ பாண்டிய மன்னர்கள் தமிழ் அந்தணர்களாகிய ஆதிசைவர்களை மதித்து அவர்களுக்குரிய மரியாதையும் உரிமையும் வழங்கினார்கள்.

In Public domain, Digitization Mahalakshmi Research Academy

காலப்போக்கில் முஸ்லிம் மன்னர்கள் படையெடுப்பாலும் தெலுங்கு நாய்க்கர், மராட்டிய மன்னர்களின் ஆட்சி காலங்களிலும் ஆதிசைவர்களுக்கு அளிக்கப்பட்ட நிவந்தங்கள் பறிபோயின. கோயில் கருவறையில் பூஜை செய்யும் தொழிலாளி என்ற நிலையில் குருக்கள் இருந்தனர்.

இக்காலகட்டத்தில்தான் கோயிலின் ஆகம நெறிகளில் ஸ்மார்த்த நெறிகள் புகுந்தன. இதே காலங்களில்தான் தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில், ஆகமநெறிப்படி வாழ்ந்துவந்த சிவாசாரியார்களின் வாழ்க்கையில் இல்லச் சடங்குகளில் ஸ்மார்த்த நெறி பரவலாக பரவியது. இதற்க்கு காரணம், அக்காலத்தில் கோயிலை ஒட்டிய அக்கிரகாரங்களில் சிவாசாரியார்கள் ஒருவர் (அ) இருவர் என குடும்பமாக வாழ்ந்து வர மற்ற பிராமணர்கள் பெருமளவில் வாழ்ந்துவந்தால், பெருபான்மை பிராமணர்களின் பழக்கங்கள் சிறுபான்மை சிவாசாரியார்களின் இல்லங்களிலும் பழக்க வழக்கங்களிலும் பரவின.

இந்நிலையில் 18. 19-ம் நூற்றாண்டுகளில் பிரஞ்ச், ஆங்கிலேயே ஆட்சி ஏற்பட்ட பின் கோயில்களின் பராமரிப்பு நிர்வாகம் சீர்குலைந்த பொழுது கோயிலை சார்ந்தே வாழ்ந்த ஆதிசைவர்கள், குருக்கள்களின் வாழ்வு மிகவும் மோசமானதாக மாறியது. வறுமை என்பது ஒவ்வொரு ஆதிசைவ குருக்கள் வீடுகளிலும் தாண்டவ மாடியது. இக்காலகட்டத்தில் அரிசிக்கும், துணிமணிகளுக்கும் அல்லாடினார்கள் என்பதே உண்மை.

18, 19-ம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட கடுமையான பஞ்சத்தின் காரணமாக, சமூகத்தின் கீழ்நிலையில் உள்ள அனைத்து சமூகமும் எவ்வாறு பாதிக்கப்பட்டதோ அதுபோன்று, ஆதிசைவ சிவாசாரியார் சமூகமும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளானது.

ஆதிசைவ சிவாசாரியார்கள் சிவபூஜை அதாவது ஆலய பூஜை மட்டுமே செய்யவேண்டும். புரோகித தொழில் செய்யக்கூடாது என்பது ஆகம விதி. அதாவது இல்லங்களில் சென்று சடங்கு செய்யமாட்டார்கள். கோயில்களில் மட்டுமே சடங்கு செய்வர். ஆனால், இக்காலத்தில் பஞ்சத்தின் காரணமாகவும் கோயில்களில் மூலம் போதிய பொருளாதார வருமானம் இல்லாததாலும் ஆதிசைவ குருக்கள்கள் புரோகிதம் செய்யும் நிலைக்கு சென்றார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொதுவாக, சமூகத்தில் ஒரு இல்லத்தில் நடக்கும் விழாவிற்கு சிவபெருமானின் பிரதிநிதியாக குருவாக சென்று கோயில் பிரசாதம் கொடுத்து ஆசீர்வதிக்கும் தகுதி நிலையில் இருந்த ஆதிசைவ சிவாச்சாரியார்கள், காலமாற்றத்தின் காரணமாக அங்கே புரோகிதம் செய்து வாழ வேண்டிய நிலைக்கு சென்றனர்.

இக்காலகட்டத்தில் ஆதிசைவ குருக்கள் பெரும்பாலானோர் உலகில் நிகழ்ந்துவரும் மாற்றத்தை உணராமல் நாளை வரப்போகும் நவீன உலகத்தை எதிர்கொள்ள தெரியாதவர்களாக அறியாமையிலும் விழிப்புணர்வு இன்றியும் இருந்தார்கள். கடந்த காலங்களில் கோயிலை சார்ந்து வாழ்ந்து வந்த மற்ற வேத பிராமணர்களை போன்று, இவர்கள் காலமாற்றத்திற்கு ஏற்றவாறு ஆங்கில கல்வி கற்று அரசு உத்யோகத்திற்கோ, வாழ்க்கை உத்திரவாதம் தரக்கூடிய நிலைக்கு செல்லாமல், தாங்கள் செய்த சிவபூஜையையே உயிராக உயர்வாக மதித்து கோயிலை சார்ந்தே வறுமையில் வாழ்ந்து வந்தார்கள்.

அதுவும், கிராமங்களில் ஆதிசைவ குருக்கள்கள் ஊருக்கு ஒரு குடி (அ) இரு குடி என வாழ்ந்து வந்ததால் பெருமான்மை சமூகத்தின் ஆளுமைக்கு உட்பட்டு வாழவேண்டிய நிலையே இருந்தது.

இந்நிலையில், சைவசமயத்தை சார்ந்த சைவ வேளாளர்கள், சைவ முதலியார்கள், நாட்டுக்கோட்டை நகரத்தார்கள், கொங்கு கவுண்டர்கள், பிள்ளைமார்கள், போன்ற சைவ பெருமக்களே ஆதிசைவர்களுக்கு ஆதரவும் சிறிதேனும் வறுமையை போக்கும் உதவியும், உரிய மரியாதையும் அளித்து வந்துள்ளார்கள்.

இதற்கெல்லாம் காரணம் தமிழகத்தின் இடைகாலத்தில் ஆட்சிபுரிந்த மாற்று தேசத்து அரசர்களுக்கும், அரசு நிர்வாகிகளுக்கும் ஆகமவிதிப்படி வழிபாடுகள் செய்யும் ஆதிசைவ சிவாசாரியார்களின் மரபின் உண்மை வரலாறு தெரியவில்லை. ஆகமங்களை பற்றிய தெளிவும் அதிகம் இல்லை. மேலும், இடைக்காலத்து நாயக்க மன்னர்கள் வைணவ மரபை முக்கியமாக போற்றி வந்ததும் இதற்கு முக்கிய காரணமாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சமூக கட்டமைப்பில் ஒடுக்கப்பட்ட மக்கள் கீழ்மட்டத்தில் உள்ள அடிமைகளாக ஆக்கப்பட்டது போன்று, ஆதிசைவர்கள் மேல் மட்டத்தில் உள்ள அடிமைகளாக மாற்றப்பட்டனர். சமூகத்தில் பெருபான்மையான ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சொந்த வீடோ, காணி நிலமோ கிடையாது. அதுபோன்றே ஆதிசைவ சிவாசாரியார்களுக்கும் சொந்த வீடோ, காணி விவசாய நிலமோ கிடையாது. ஏனெனில், நமது மன்னர்கள் ஆட்சி காலத்தில் பிராமணர்களுக்கும், சிவாசாரியார்களுக்கும் இறையிலி நிலங்கள் தானம் அளிக்கப்பட்டன. வேத பிராமணர்களுக்கு அளிக்கப்பட்ட நிலங்கள் அவர்கள் பெயருக்கே உரிமை அளிக்கப்பட்டு தானம் கொடுக்கப்பட்டது. (எ.கா. வேள்விக்குடி செப்புப் பட்டயம்)

ஆனால், கோவிலில் பணிபுரியும் சிவர்சாரியார்களுக்கு அர்ச்சனாபோகம் என்று, சிவபிராமணக்காணி என்று அளிக்கப்பட்ட நிலங்களை, சிவாசாரியார்கள் தாங்கள் உரிமை கொண்டாடும் விதத்தில் தானங்களாக பெறவில்லை. ஏனெனில், சிவாசாரியார்கள் சிவ பெருமானின் வழிவழி அடிமைகள் என்பதால் தானம் தட்சணை என எவற்றையும், நேரிடையாக பெறக் கூடாது. சிவபெருமானிடம் சமர்ப்பித்தபின் அவரது உடமை என்றே பெற்றுக் கொள்ள வேண்டும். இதுவே ஆகம விதி.

இது கடந்த காலத்தில் ஆதிசைவ சிவாசாரியார்கள் கடைபிடித்த ஒழுங்கு. எனவே, சிவாசாரியார்கள் தங்களுக்கு என்று மன்னர்கள் வழங்கிய நிலங்களை, தானங்களை தங்கள் பெயரில் உரிமை பெறாமல், சிவபெருமான் பெயரிலேயே அதாவது கோவில் பெயரிலேயே பெற்று அனுபவித்து வந்தனர்.

காலப்போக்கில் ஏற்பட்ட மாற்றத்தில் வேதபிராமணர்களுக்கு வழங்கப்பட்ட நிலங்கள் அவர்களுக்கே உரிமையாகின. எனவே, பிராமணர்களில் பலர் நில உடைமைதாரர்களாக விளங்கினார்கள்.

சிவாசாரியார்களுக்கு மன்னர்கள் வழங்கிய நிலங்கள் அனைத்தும் கோவில் சொத்துக்களாக்கப்பட்டன. எனவே ஆதிசைவ சிவாசாரியார்கள் காணி நிலத்திற்குகூட உரிமையில்லாதவர்களாக வாழ்ந்து வந்தனர். மேலும், இவர்கள் தாங்கள் செய்யும் சிவாலய பூஜையிலேயே ஒன்றி இருந்தமையால் சொத்து சுகம் சேர்க்கும் மனம் இல்லாமல் இக்கால கட்டத்தில் வாழ்ந்து வந்துள்ளார்கள்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

சமூகத்தில் இவர்களுக்கு எந்தளவுக்கு மரியாதை தரப்பட்டது எனில், கோயிலில் குருக்களாக ஆதீக்க பெருபான்மை சாதியினர் சொல்வதை கேட்டு அதன்படி நடந்துவரும் வரையில் இவர்களுக்கு **சாமி** என்ற கௌரவம் தரப்படும். ஏதேனும் ஒரு சூழ்நிலையில் கோயில் குருக்கள் உரிமைகுரல் எழுப்பி தனக்குரிய நிலைய தக்கவைக்க முயற்சித்தால் ஊருக்கு ஒரு குடி என்றும், அடித்தால் கேட்க ஆளில்லை என்ற பேச்சுகளும், வசவுகளும் உடனடியாக வந்து சேரும். அதுவும் கிராமங்களில் வாழும் ஆதிசைவ குருக்களுக்கு இத்தகைய அனுபவம் மிக அதிகமா ஏற்பட்டிருக்கும்.

இந்நிலையில் 20-ம் நூற்றாண்டு தொடக்கத்தில் பிராமணர்-பிராமணர் அல்லாதோர் சர்ச்சை எழுந்த பொழுது அதுவரை ஆதிசைவர்களை ஆதரித்து வந்த மற்ற சமூகத்தவர்களும் ஆதிசைவர்களை கைவிட்டனர்.

பிராமணர் - பிராமணர் அல்லாதோர் கொள்கையை கொண்டுவந்தவர்கள் பிராமணர்களையும், கோயிலில் பணி செய்யும் ஆதிசைவ குருக்களையும் சமமாக பாவித்து கோயில் குருக்கள்களையும் ஏசியும் பேசியும் தாக்கும் நிலை ஏற்பட்டது. இதனால் இவர்கள் வாழ்வு மேலும் விளிம்பு நிலைக்கு தள்ளப்பட்டது.

பிராமணரல்லாதார் கட்சி எனப்படும் நீதிக்கட்சி தோன்றுவதற்கு முக்கிய காரணமே பிராமணர்கள் ஆங்கிலேயே ஆட்சியில் உயர் படிப்புகள் படித்து அதனால் உயர் பதவிகளுக்கு பெரும்பாலான பிராமணர்கள் செல்வதாலும், பிராமணர்கள் எல்லாத் துறைகளிலும் ஏற்றம் பெற்றிருந்தையும் கண்டு ஏனைய சமூகத்தவர்கள் தாங்களும் அரசு, அரசு துறைகளில் உரிய இடம்பெறவேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையிலேயே பிராமணரல்லாதார் இயக்கம் தோன்றியது. அதற்குரிய பிரச்சாரங்கள் செய்யப்பட்டன. ஆனால் உண்மையாதெனில் எந்த ஒரு ஆதிசைவ குருக்களும் அக்கால கட்டத்தில் ஆங்கில கல்வி படிப்பும் படிக்கவில்லை. எந்த ஒரு அரசு உயர் பதவிகளுக்கும் செல்லவில்லை. அதிக நிலபுலன்களுக்கு உரிய செல்வந்தர்களாகவும் வாழவில்லை.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

அக்காலக் கட்டத்தில் ஆதிசைவ குருக்கள்கள் அனைவரும் சிவாலயங்களில் பூஜைசெய்துக்கொண்டு ஏழ்மையிலும், வறுமையிலும் மற்ற எளிய பாமர மக்களைப்போலவே விழிப்புணர்வின்றியே வாழ்ந்துவந்தார்கள். ஆனால் கோயிலின் உள்ள ஆதிசைவ குருக்கள்கள் மற்ற பிராமணர்களைபோன்று உருவத்திலும், உடையிலும் ஒன்றுபோல் காணப்பட்டதால் இந்த பிராமணரல்லாதார் இயக்கம் தமிழ் அந்தணர்களாகிய ஆதிசைவ குருக்களையும் இகழ்ந்தும், தூற்றியும் வந்தனர்.

இதன் காரணம் யாதெனில் நீதிக்கட்சியை தோற்றிவித்தவர்களில் யாரும் தமிழர் இல்லை. நீதிக்கட்சி கொள்கைகளை பிரச்சாரம் செய்தவர்களிலும் பெரும்பான்மையோர் தமிழர்கள் அல்ல. எனவே, இவர்கள் தமிழ் அந்தணர்களாகிய ஆதிசைவ குருக்களை பிரித்துப் பார்க்காமல் எல்லோருமே வடநாட்டிலிருந்து வந்த ஆரிய பிராமணர்கள் என்று எண்ணி அனைவரையுமே இகழ்ந்து பேசிவந்தார்கள். தமிழ் அந்தணர்களாகிய கோயில் பணி செய்யும் ஆதிசைவ குருக்கள் என்பவர் வேறு பிராமணர் என்பவர்கள் வேறு என்ற தெளிவும், இந்த பிராமணர்களே அரசின் உயர் பதவிகளில் இருந்தார்கள் என்றும் மிகப்பெரும் நிலப்புலன்களுக்கு சொந்தக்காரர்களாக விளங்கினார்கள் என்றும் பிரித்துப்பார்க்கும் தன்மை இல்லாததனால் பிராமணரல்லாதோர் இயக்கம் தொடங்கப்பட்ட காலத்திலும், பின் சுயமரியாதை இயக்கமாக மாறிய காலத்திலும் கோயிலில் பணிசெய்யும் ஆதிசைவ குருக்கள்களே தாக்குதல் முதல் அனைத்து நிலைகளிலும் பாதிக்கப்பட்டனர்.

கடந்த காலங்களில் கோயிலில் பணிசெய்யும் ஆதிசைவ சிவாசாரியார்களும், மற்ற பிராமணர்களும் வேறுபட்டே வாழ்ந்து வந்தார்கள். கடந்த காலங்களில் குறிப்பாக 19ம் நூற்றாண்டில் கோயிலை மையமாக வைத்து இவர்கள் இருவர்களுக்குள்ளும் பூசல்கள் பல நடைபெற்றன. கோயில்களில் ஆதிசைவர்கள் ஆகமமே விதியே பிரதானம் என்று முழக்கமிட, மற்ற பிராமணர்கள் வேத வழி ஸ்ருதிகளே பிரதானம் என்று முழக்கமிட இந்தவகையாக பல சச்சரவுகள் இவர்கள் இருவருக்குள்ளும் ஏற்பட்டன.

In Public domain Digitization Muthulakshmi Research Academy

19-ம் நூற்றாண்டு இறுதி காலங்களில் சிவாசாரியார்களுக்கும் ஏகன்மவாத கொள்கையை கடைபிடிக்கும் பிராமணர்களுக்கும் இடையே ஏற்பட்ட சச்சரவுகள் பல கண்டன நூல்களாக எழுந்தன. இதில் சிவாசாரியார்களுக்கு ஆதரவாக **சூளை சோமசுந்தர நாயகர், கதிரைவேற்பிள்ளை** போன்ற பல சைவ பெரியோர்கள் செயல்பட்டு பிரச்சாரங்கள் செய்து சிறு சிறு நூல்களும் வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில் 20-ம் நூற்றாண்டு தொடக்கத்தில் ஏற்றப்பட்ட இந்த பிராமணர்-பிராமணரல்லாதோர் போராட்டமே, ஆதிசைவ குருக்களையும் மற்ற பிராமணர்களையும் ஒன்றினைத்தது. சுயமரியாதை இயக்கத்தினரும் பிராமணர்களை எதிர்க்கின்றோம் என்ற பெயரில் கோயில் பணிசெய்யும் தமிழ் அந்தணர்களாகிய ஆதிசைவ குருக்கள்களை எதிர்த்து பல கொடுமைகள் இழைத்ததால் இக்காலத்தில் இயற்கையாகவே மற்ற பிராமணர்களோடு சிவாசாரியார்கள் ஒன்றினைந்து செயல்படக்கூடிய நிலைக்கு வந்தனர்.

இன்றைக்கு அனைத்து நிலைகளிலும், அனைத்து தளங்களிலும் பிராமணர்களே சிவாசாரியார்களுக்கு பல உதவிகளை செய்து பாதுகாப்பாக இருந்து வருகிறார்கள் என்பதே மறுக்கமுடியாத உண்மையாகும்.

பின்பு ஆட்சிக்கு வந்த திராவிட கட்சிகளும் தமிழ் நிலத்துக்கேயுரிய தமிழ் அந்தணர்களாகிய ஆதிசைவ குருக்கள்களின் உண்மை வரலாற்றை அறியாமல், அவர்களையும் மற்ற பிராமணர்களுக்கு சமமாக வைத்து முற்பட்டவகுப்பினர் என்ற பட்டியலில் சேர்த்தனர்.

அதுவரை ஒடுக்கப்பட்ட, மற்ற சமூகத்து மக்கள் ஏதோ ஒரு வகையில் அரசின் சலுகைகளை பெற்று முன்னேறிய பொழுது அந்த ஒடுக்கப்பட்ட மக்களோடு மக்களாக ஊருக்கு ஒரு குடும்பம் இரு குடும்பம் என்று சிறுபான்மையினராக வாழ்ந்து வந்த ஆதிசைவ குருக்கள் முற்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட்டதால், எந்த வகையிலும் முன்னேற முடியாமலும் அரசின் சலுகைகளை பெறும் தகுதியில்லாமலும் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம் என அனைத்து வகையிலும் பின்தங்கியே உள்ளனர்.

In Public domain, Digitization: Muthulakshmi Research Academy

ஒரு கிராமத்தில் ஆங்கிலக்கல்வி கற்று, அரசு உத்யோகத்திலோ (அ) உயர்ந்த பதவியிலோ (அ) பல நிலபுலன்களுக்கும் உரிமையுடைய பிராமணரும் முற்பட்ட வகுப்பினர். அதே கிராமத்தில் கோவில் பூஜையையே நம்பி அந்த வருமானத்தில் வாழும் காணி நிலம்கூட சொந்தம் இல்லாத ஆதிசைவ குருக்களும் முற்பட்ட வகுப்பினர் என்பதே தற்சமயம் நமது அரசின் நிலைப்பாடாக உள்ளது. தங்களின் நிலையை, உரிமையை அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லும் திராணியற்றவர்களாக விழிப்புணர்வு இல்லாதவர்களாகவே ஆதிசைவர்கள் உள்ளனர்.

இவ்வாறு சங்ககாலம் முதல், பல்லவர்கள் காலத்திலும் நாயன்மார்கள் காலத்திலும் சோழர்கள், பாண்டிய மன்னர்கள் காலத்திலும் சிறப்போடும் பெருமையோடும் உரிமையோடும் வாழ்ந்துவந்த தமிழ் அந்தணர்களாகிய ஆதிசைவர்கள் 14-ம் நூற்றாண்டில் ஏற்பட்ட முஸ்லீம் படையெடுப்பில் இருந்தும், அதன் பின் ஏற்பட்ட மாற்று தேசத்து அரசர்கள் ஆட்சி, ஆங்கிலேயர் ஆட்சி என இந்த 20-ம் நூற்றாண்டு வரை சுமார் 500 வருடங்களில் பலதளங்களில், பல நிலைகளில் தங்கள் உரிமைகளை பெருமைகளை இழந்து தங்கள் தனித்தன்மையை தனித்துவத்தை இழந்து அடையாளமற்றவர்களாக, வரலாறு தெரியாதவர்களாக, சோழர்களுக்கே ராஜகுருவாக இருந்த ஆதிசைவ சிவாசாரியார்கள் இன்று அரசில், அரசாங்கத்தில், சமூகத்தில் என எதிலும் பிரதிநிதித்துவம் இல்லாத ஒடுக்கப்பட்டவர்களாகவே இன்றுவரை வாழ்ந்து வருகிறார்கள்.

திருச்சிற்றம்பலம்

பொதுநலன் வேண்டி பூஜை புரிந்திடும் ஆதிசைவர்கள்

ஆதிசைவ சிவாசாரியார்கள் பிறர்நல வழிபாடும் செய்யும் மரபுடையவர்கள். ஆதிசைவர்களின் அடிப்படை நூலாகிய ஆகமம் ஆலயத்தை மையமாக கொண்டது. ஆலயம் பொது மக்களின் நலன் பொருட்டும், உலக நலன் பொருட்டும் வழிபாடுகள் செய்யும் இடமாகும். ஆதிசைவ சிவாசாரியார்கள் தாங்கள் செய்யும் ஆகம பூஜையில் மக்கள் நலன், உலக நலன் கூறியே அதற்கு முக்கியத்துவம் தந்தே பிரார்த்தனை செய்வார்கள். எனவே, ஆதிசைவ சிவாசாரியார்களின் வாழ்க்கை பொது நலன், உலக நலன் பொருட்டு வாழ்ந்த வாழ்வாக உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

16.நிகழ்காலத்தில் ஆதிசைவர்கள்

தமிழக வரலாற்றில் 14-ம் நூற்றாண்டு முதல் படிப்படியாக பல உரிமைகளையும் சிறப்புகளையும் இழந்த ஆதிசைவ சமூகம், வறுமையிலும் துன்பத்திலும் வதைபட்ட ஆதிசைவ சமூகம், காலமாற்றத்தால் இன்றைக்கு சமூகத்தில் உள்ள ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவரும் பொருளாதார ரீதியாக ஓரளவு முன்னேறி வருவது போன்று, ஆதிசைவ சமூகமும் இந்த 21-ம் நூற்றாண்டு தொடக்கம் முதல் ஓரளவு பொருளாதார ரீதியாக முன்னேறி வருகிறார்கள்.

கிராமங்களில் சிவாலய பூஜை செய்து வசித்துவந்த ஆதிசைவ குருக்கள்கள் சிலர் வறுமையின் காரணமாகவும் பொருளாதார தேவையின் காரணமாகவும் தங்களின் உயிரினும் மேலாக மதித்து பூஜைசெய்து வந்த கிராம சிவாலய பூஜைகளை விடுத்து நகர்புறம் நோக்கி செல்லும் சூழ்நிலை உள்ளது. அதே சமயத்தில் இன்றைக்கும் கிராமங்களில் வாழும் பல ஆதிசைவர்கள் கடுமையான சோதனைகளை தாண்டியும் தங்கள் விடாத பற்றுருதியின் காரணமாக சைவசமயத்தை கட்டிகாத்தும், கிராம சிவாலய பூஜைகளை தங்களால் இயன்ற அளவிற்கு, குறைந்த வருமானத்தை கொண்டு எவ்விதமான விடுமுறை இன்றியும், புயல், வெள்ளம், ஆகிய நிலைகளில் கூட தங்கள் ஆலய பூஜையை விடாது நடத்திக்கொண்டு வறுமையிலும், சோதனைகளிலும், ஒரு மோசமான சூழ்நிலையில் வாழ்ந்து வருகிறார்கள் என்பதும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

இன்றைக்கு எவ்வித வருமானமின்றியும், ஆதரவுமின்றியும் உள்ள ஒரு சிவாலயத்தில், ஒரு கால பூஜையாவது சிறந்த முறையில் நடைபெறவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு செயல்படும் குடும்பம் ஒன்று உண்டு எனில், அது ஆதிசைவ குருக்கள் குடும்பமாகத்தான் இருக்கமுடியும். ஏனெனில் சிவ பூஜைக்காகவே சிவபெருமானால் ஆதிசைவர்கள் தோற்றுவிக்கப் பட்டவர்கள் என்பதால், ஆதிசைவர்களின் எண்ணம், சிந்தனை, செயல், மூளை, இரத்தம், தசை, நார், எலும்பு என அனைத்திலும் சிவபூஜை பற்றிய செயல்கள் அவர்கள் சிந்தனைக்கு உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு அவர்களுடைய உயிர்கூறுகளில் (ஜீன்களில்) உள்ளதால், சிவாலய பூஜை என்பது ஆதிசைவர்களின் ஆதிசைவ குடும்பங்களின் உயிர் மூச்சாகும்.

In Public domain, Digitization: Muthukamalam Research Academy

இன்றைக்கும், சிவாலயத்தில் பூஜை செய்து வரும் ஆதிசைவர், குறிப்பாக கிராமத்தில் வாழும் ஆதிசைவ சிவாசாரியார்கள் தான் பூஜை செய்யும் கோவிலில் வருமானம் போதவில்லை என்ற காரணத்திற்காக மட்டுமே பூஜை செய்வதை நிறுத்தியதாக சரித்திரமே இல்லை. வருமானம் போதவில்லை, வறுமையை போக்க முடியவில்லையே என்ற குறை ஒருபக்கம் இருந்தாலும், பல தலைமுறைகளாக நமது பாட்டன், பூட்டன் பூஜைசெய்த இந்த சிவபெருமான், நம் சிவபெருமான் என்ற உணர்வின் காரணமாக ஒருவேளை பூஜையாவது செய்ய வேண்டும் என்று உறுதிக்கொண்டு செயல்பட்டு வருகிறார்கள்.

ஆனால், இன்று ஆலயத்தில் பூஜை செய்யும் ஆதிசைவ குருக்களை அறநிலையத்துறை அதிகாரிகளும், அறங் காவலர்களும் பெருபான்மை சாதியுள்ள சமூக மக்களும் ஒரு அடிமையை போலவே நடத்துகின்ற சூழ்நிலையே உள்ளது. அதிலும் கிராமத்தில் வாழும் ஆதிசைவ குருக்களின் நிலை மிக மிக மோசமானதாக உள்ளது.

இந்நிலையில் ஒரு ஆதிசைவ குருக்கள் தனக்கு ஏற்பட்ட அவமானத்தின் காரணமாகவும் அவமரியாதையின் காரணமாகவும், ஆதரவு இல்லாமையின் காரணமாகதான் தங்கள் உயிரினும் மேலாக செய்துவந்த சிவாலய பூஜையை விடுத்து நகரங்களை நோக்கியோ(அல்லது) மற்ற இடங்களுக்கோ செல்கிறார்கள் என்பதே கசப்பான உண்மையாகும்.

இன்றைக்கு எல்லா தரப்பு மக்களும், சமூகமும் பொருளாதார தேவையை நோக்கி ஓடிக்கொண்டிருக்க, வெளி இடத்திற்குச் சென்றால் தங்கள் பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ளமுடியும் என்ற வாய்ப்பிருந்தும்,

பல தலைமுறைகளாக பூஜைசெய்து வந்த நம் சிவபெருமானை விட்டு பிரியக்கூடாது என்ற உறுதிபடைத்த மனத்தோடு வறுமையிலும் போதிய வசதிகள் இல்லாமலும் கிராமத்தில் ஒரு குடும்பம் வாழ்கின்றது என்றால் அது ஆதிசைவ குருக்கள் குடும்பமாகத்தான் இருக்கமுடியும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஏனெனில், ஆதிசைவர்கள் எல்லாம் **புகழ்துணை நாயனார்** வம்சத்தில் வந்தவர்கள். அன்று, கி.பி.5-ம் நூற்றாண்டில் எவ்வாறு தமிழகத்தின் இருண்டகாலமாகிய களப்பிரர் ஆட்சியில் பஞ்ச காலத்திலும், பட்டினியிலும், உடல்நிலை தளர்ந்தபொழுதும் தன்னால் முடியாத நிலையிலும் ஒரு குடம் நீரை சிவபெருமான் சிரசில் ஊற்றி எவ்வாறு புகழ்துணை நாயனார் சிவபூஜை செய்தாரோ அதேபோன்று இன்றைக்கும் பல ஆதிசைவர்கள் தங்களுக்கு ஆகமம் தெரிந்தாலும், தெரியாவிட்டாலும் சாஸ்திரம் அறிந்தாலும் அறியாவிட்டாலும் வறுமைக்கு இடையில் ஒரு குடம் நீரைவிட்டு தங்கள் மனம் அறிந்தவரையில் உன்னதமாக பூஜை செய்து வருகிறார்கள். வயதான காலத்திலும், தள்ளாமையிலும், பார்வை மங்கிய நிலையிலும் உணர்வின் காரணமாக பூஜை செய்து வரும் ஆதிசைவ பெரியவர்கள் பலர் இன்றும் உள்ளனர்.

எடுத்துக்காட்டாக, **வானதி பதிப்பகம்** வெளியிட்டுள்ள **சேக்கிழார் அடிச்சுவட்டில்** என்ற நூலில் சைவஅறிஞர் **சோ.சிவபாதசுந்தரம்** சோழ தேசத்தில் திருவையாருக்கு அருகில் உள்ள திங்களூர் என்னும் திருத்தலத்தில் பூஜை செய்த ஆதிசைவ குருக்கள் ஒருவரை பற்றி கீழ்கண்டவாறு விவரிக்கின்றார்.

திருப்பழனத்திலிருந்து திங்களூர் ஒரு மைல் தூரம்தான். கச்சாரோடு. திருவையாற்றுக்கும் கணபதி அக்கிரகாரத்துக்கும் செல்லும் பெரிய சாலையிலிருந்து வடக்கே சிறுபுலியூரிலிருந்து பிரிந்து செல்லும் கச்சாரோடில் மழையில்லாத சமயமாகையால் மோட்டார் போகக் கூடியதாயிருந்தது. இருபக்கமும் பழனம் என்ற ஊர்ப்பெயருக்கேற்றவாறு கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஒரே நெல் வயல்கள். பயிரும், கதிரும், அறுவடையுமாக மூன்று நிலைகளையும் அங்கு காணக்கூடியதாயிருந்தது. திங்களூரையடையும் போது முதலில் தெரிந்தது பெருமாள் கோயில். அங்கிருந்து கிழக்குத் திசையில் சிறிது தூரத்திலிருக்கிறது சிவன் கோயில். நாங்கள் போன சமயம் காலை ஒன்பது மணிக்கெல்லாம் கோயில் நடை திறந்திருக்கு மென்றுதான் நம்பிச் சென்றோம். ஆனால் வெளிவாயிற் கதவு பூட்டியிருந்தது. தென்புறத்திலுள்ள திடலில் உள்ளூர்க்காரர் யாரோ எருமையும் எருதும் பூட்டி போர் அடித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் நாங்கள் கோயிலைப் பார்க்க வந்திருக்கிறோ மென்பதைத் தெரிந்து கொண்டு, "குருக்கள் வர பத்துமணியாகும்" என்றார். நாமோ வந்தாகி விட்டது. இனித் திரும்பிப் போய் வருவதிலும் பலனில்லை. ஒரு மணி நேரம்தானே, பரவாயில்லை யென்று சொல்லி அங்கேயே ஒரு மரத்தின் கீழ் உட்கார்ந்தோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நண்பர் சிட்டி அண்ணாந்து பார்த்தார். அது ஒரு பூவரசு மரம். உடனே அவரது கற்பனை வேலை செய்தது. "ஐயா திருநாவுக்கரசரே! நாமிருப்பதும் அரசின் கீழ்த்தான். பூவரசு! முன்பு இது திருநாவுக்கரசு மரம் என்றுதான் இந்த ஊரில் வழங்கியது. யாரோ வழிப்போக்கர் பூக்கள் நிறைந்திருப்பதைக் கண்டு பூவரசு என்று பெயரை மாற்றி விட்டார்கள்" என்றார்! அப்பூதியடிகளின் ஊராச்சே. எல்லாம் திருநாவுக்கரசு மயமாயிருந்ததைச் சிட்டி ஞாபகப்படுத்தினார். வழக்கமாக இந்த யாத்திரையில் அவர் என்னைச் சேக்கிழார் என்றே பெயர் வைத்தழைத்து வந்தவர் இப்போது பூவரசு மரத்தின் கீழ் உட்கார்ந்திருந்ததும் திருநாவுக்கரசரே என்றழைக்க ஆரம்பித்து விட்டார்!

ஒரு மணி நேரம் காத்திருந்தும் குருக்களைக் காணவில்லை. ஒரு ஐயங்கார் மாது வயல் வேலைக்காரரோடு அந்தப் பக்கம் வந்தவர் எங்களைப் பார்த்துவிட்டு, "குருக்களையா பார்த்திருக் கிறீர்கள்? வயசான காலத்திலே மெதுவாகத்தான் வருவார். அதிகம் பேச்சுக் கொடுத்துவிடாதேங்கோ, அப்புறம் அவரை நிறுத்த முடியாது!" என்று சிரித்துக்கொண்டே எச்சரிக்கை செய்துவிட்டுப் பக்கத்தில் வேலை செய்பவர்களை மேற்பார்வை பார்க்கச் சென்று விட்டார். மணி பத்து, பதினொன்று, பன்னிரண்டு ஆகிவிட்டது. எங்களுக்கோ கவலை. இனிமேல் அவர் வராமல் விட்டுவிடுவாரோ என்று சந்தேகித்து, களத்தில் நின்ற ஒருவரிடம் "குருக்கள் இன்னும் வரவில்லையே. ஒரு வேளை இன்று வரமாட்டாரோ?" என்று கேட்டோம். "மழையோ வெயிலோ காற்றோ, அந்த மனுஷர் ஒரு நாளைக்கு ஒரு தடவை வராமல் இருக்கவே மாட்டார். வயசாகி விட்டது. மெதுவாகத்தான் வருவார். வழக்கமாகப் பத்துப் பத்தரைக் கெல்லாம் வந்துவிடுவார். இன்று மாத்திரம் தாமதமாகி விட்டது" என்று சொன்னவர் தெற்கே நெடுந்தூரத்துக்கப்பால் தெரிந்த சோலையைக் காட்டி, "அதோ அதுதான் திருப்பழனம் அக்கிரகாரம். அங்கிருந்துதான் அவர் வரப்புக்களிலே நடந்து வரவேணும். அதோ ஓர் உருவம் தெரிகிறது பாருங்கள்! குடை பிடித்துக் கொண்டு மெதுவாக ஊர்ந்து வருகிறது. அதுதான் குருக்கள். கொஞ்சம் இருங்கள், வந்துவிடுவார்" என்று நம்பிக்கையோடு சொல்லிவிட்டுக் களத்தில் வைக்கோலைப் பிரித்துப்போட்ட பையன்களைப் பார்த்து, "அடே! குருக்கள் வர்றார், வழியிலே வைக்கோலைப் போடாமல் பாதையை விட்டுக் குவியுங்கோடா" என்று எச்சரிக்கை செய்தார். "குருக்கள் ரொம்ப நல்லவர், ஆனால், முன்கோபக்காரர். அவர்,

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

கோயிலுக்குள் செல்லும் பாதை சுத்தமாயிருக்க வேண்டும். உள்ளே வீதியைப் போய்ப் பாருங்கள். ஒரு மண்வெட்டி, கத்தி, உழவாரம் இப்படி ஆயுதங்களை வைத்துக்கொண்டு ஒவ்வொரு புல்லாக உட்கார்ந்து எடுத்து வீதியைச் சுத்தம் செய்வது அவரது வேலை. கோயிலில் வழக்கமான பூசை முடிந்ததும் சும்மா இருக்கமாட்டார். பூச்செடிக்குத் தன் கையாலேயே தண்ணீர் இறைத்து வார்ப்பார். வீதியைச் சுத்தம் செய்வார். பெருக்குவார். பொழுது போவதே தெரியாது. சில சமயங்களில் பத்து பதினொரு மணிக்கு வருபவர் நாலு ஐந்து மணியாகிவிடும் அவர் வீட்டுக்குப் போக" என்று குருக்களைப் பற்றி விளக்கினார் களத்தில் நின்ற அந்த விவசாயி.

குருக்கள் வந்து சேர்ந்தார். ஒரு கையில் குடை. அதே கையில் ஒரு துணிப்பை. மறுகையில் ஒரு கோல். தூக்கிச் செருகிய பஞ்சகச்சம். தோளில் கசங்கிய உத்தரீயம். அரையில் மற்றொரு கச்சம். ஆடி ஆடி நடந்து வருபவர் அவ்வப்போது நின்று, பாதையில் கிடக்கும் முள்ளை அல்லது கல்லைத் தம் கைத்தடியால் தட்டி அப்புறப் படுத்திக்கொண்டே வந்தார். கோயிலண்டை வந்ததும், வெளிவாசற் கதவைத் திறந்து என்னைப் பார்த்து, "வாங்கோ" என்றார். எதற்கு வந்தேன் என்று அவரே கேட்கு முன் எனது யாத்திரையைப் பற்றி விவரமாகச் சொன்னேன். நண்பர்களைப் பார்த்தார். யோக்கிய மானவர்கள்தான் என்று முடிவு செய்தபின் உள்ளே வாருங்கள் என்று அழைத்துச் சென்றார்.

குருக்கள் பேச ஆரம்பித்தார். எண்ணெய்க்குப்பி ஒன்றைக் கையில் எடுத்துக்கொண்டு அங்கங்கு தீபங்களில் எண்ணெய் வார்க்கிறார். பின்னர் நின்று பேசுகிறார். கோயில் நிர்வாகம், பூசைக்கிரமம், இக்காலத்தில் அருச்சகர் செய்யும் மோசடிகள், தர்மகர்த்தாக்கள் செய்யும் திருட்டுத்தனம், எல்லாம் அவருக்கு ஒரே கவலையைத் தருகிறது. ஒன்றிலிருந்து பேச்சு மற்றொன்றுக்குப் போகிறது. நான் உடனே திசை திருப்ப எண்ணி, அப்பூதி அடிகளைப் பற்றிய கர்ணபரம்பரைக் கதையைக் கேட்கிறேன். "அப்பூதி இந்த ஊரில் மனமுருகிப் பூஜை பண்ணியவர். யாருக்கும் குரு உபதேசம் தான் முக்கியம். அப்பூதிக்கும் ஒரு குரு வேண்டியிருந்தது. பூஜை பண்ணினார். சொப்பனத்தில் சுவாமி தோன்றி, திருநாவுக்கரசு வருவார் என்று சொன்னார். திருப்பழனத்திலிருந்து அப்பர் வந்தார்," என்றார். "அந்தப் பாம்பு கடித்த கதை?" என்று ஞாபகப் படுத்தினேன். "ஓ அதுவா?" கதை சொல்ல ஆரம்பித்தார். அந்தப்

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

பெரியவரின் உணர்ச்சியை அடக்க முடியவில்லை. கண்களில் நீர் பெருகி விட்டது. திருவாரூரில் நமிநந்தியடிகளைப் பற்றிச் சொல்லும் போது பிச்சுக் குருக்கள் உணர்ச்சி வசப்பட்டது எனக்கு ஞாபகம் வந்தது. பக்தியிலேயே ஊறிப்போனவர்கள் உள்ளம் கலங்குவதில் ஆச்சரியமில்லை. சுவாமி சந்நிதிக்கெதிரே ஒரு நந்தி, பலிபீடம். அம்மன் சந்நிதிக்கெதிரே, தெற்கு வாயிலில் ஒரு நந்தியும் பலிபீடமும். இங்கேதான் மேற்குச் சுவரண்டை அப்பூதியும், மனைவியும், இரு பிள்ளைகளும் சிலைகளாகக் காட்சி தருகின்றனர். கிழக்குப் பக்கத்தில் அப்பர் விக்கிரகம். அங்குள்ள உற்சவ மூர்த்தி சோமாஸ்கந்தரை சில காலத்துக்கு முன்பு எவரோ திருடிக்கொண்டு போய்விட்டனராம். பின்னர் அகப்பட்டுக் கிடைத்தவுடன் குருக்கள் அதைத் தமது வீட்டிலேயே வைத்துப் பூஜை செய்து வருவதாகச் சொன்னார்.

கற்பூர தீபங்காட்டி விபூதிப் பிரசாதம் தருகிறார். "இந்தக் காலத்திலே எந்தப் பிராமணன் கிரமமாகப் பூஜை செய்கிறான்? கோயில்களில் எங்கே நல்ல விபூதி கிடைக்கிறது? கோலமாவைத் தான் விபூதி என்று சொல்லிக் கொடுத்தனுப்பி விடுகிறார்கள்." சந்தனக்கல் ஒன்றும் கட்டையும் ஒரு மூலையில் காணப்படுகின்றன. கும்பாவிலிருந்து சந்தனம் கொடுக்கிறார். "சந்தனத்தின் பெருமையை எல்லாரும் மறந்து போய் விட்டார்கள். கோயில்களில் சந்தனம் வழங்குவதை இப்போது ஏனோ நிறுத்தி விட்டார்கள்" என்று குறைபட்டுக்கொண்டார் குருக்கள். இந்தக் கோயிலின் மூலவர் பெயர் கைலாசநாதர். நமது குருக்களின் பெயரும் கைலாசக் குருக்கள். சிறு வயது முதற்கொண்டே இந்தக் கோயிலில்தான் சுவாமி கைங்கர்யம். வயது எழுபத்து மூன்றாகிறது. அப்பூதியடிகள் பிராமணர். அவர் பிராமணரல்லாதவராகிய நாவுக்கரசரை உபசரித்த காரணத்தால் இங்குள்ள பிராமணர்கள், பெரும்பாலும் வைஷ்ணவர்கள், மேற்கே போய்க் குடியேறிவிட்டார்கள் என்றார் குருக்கள். மேற்கேயுள்ள பெருமாள் கோயில் பக்கத்திலே தான் அக்கிரகாரம். சிவன் கோயில் உள்ள இடத்தைக் கீழூர் என்பார்கள். "அவர்களுக்கு இது கீழ்" என்று சொல்லிச் சிரித்தார் குருக்கள்!

திருநாவுக்கரசரையும் அவர் உழவாரப் பணியையும் நினைத்துக் கொண்டோம். கைலாசக் குருக்களின் சாயல், விபூதி நிறைந்த நெற்றி, பக்தியிலேயே ஊறிப்போய் ஒடுங்கிய உடல், விபூதி சந்தனத்தில்

In Public domain, Digitization Muthulakshmi Research Academy
இருக்கும் பற்றுதல், கோயில் வீதியையும் நந்தவனத்தையும் தன் சொந்தக் கையாலேயே சுத்தப்படுத்தி உழைக்கும் பாங்கு இவையெல்லாம் அந்த நாவுக்கரசரையே ஞாபகப்படுத்தின. ஓயாமல் பேசிக்கொண்டேயிருந்தார். வெகு நேரமாகிவிட்டதால் நாங்கள் வேறு பல தலங்களுக்குப் போக வேண்டுமென்று சொல்லி அந்தப் பெரியவரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்தோம். ஒரு மரத்தடியில் விவசாயிகள் செய்யும் வேலையை மேற்பார்வை பார்த்துக்கொண்டு நின்ற அந்த ஐயங்காரம்மா எங்களைப் பார்த்தவுடன், "குருக்களிடமிருந்து எப்படித் தப்பிச்சு வந்தீர்கள்?" என்று ஆச்சரியத்தோடு கேட்டுச் சிரித்தார்!

இதுபோன்று உணர்வுரீதியாக சிவாலயத்தில் பூஜைசெய்து பணியாற்றிய ஆதிசைவ குருக்கள் தமிழகமெங்கும் பலர் இருந்து உள்ளார்கள், இருந்துவருகிறார்கள். ஆனால் இந்த சமூகம் அவர்களை அடையாளங்கண்டு அவர்களுக்குரிய அங்கீகாரத்தையும், ஆதரவையும் தராததால் மனம் வெறுத்து ஒதுங்கியவர்கள் பலர், விரக்தியில் விலகியவர்கள் பலர், அவமானத்தால் ஊரைவிட்டே சென்றவர்கள் பலர்.

பாரத இந்தியாவில் பண்பாட்டின், ஆன்மீகத்தின் சொர்க்கமாக விளங்கக்கூடிய இடம் தமிழகமாகும். தமிழகத்தின் சிறப்பே நெடிதுயர்ந்த கோபுரங்களை கொண்ட கோயில்களும் வழிபாடுகளும் தான். தமிழகத்தில் செய்யக்கூடிய வழிபாட்டு முறைகளே தத்துவம் நிறைந்ததாகவும், பார்ப்பதற்கு இனிமை நிறைந்ததாகவும், ரசிக்கும்படியாகவும் உள்ளது என்று பல தத்துவ அறிஞர்கள் புகழ்ந்து கூறியுள்ளனர்.

தமிழகத்திற்கு பெருமை சேர்க்கக்கூடியது ஆன்மீகமும், பண்பாடு கலாச்சாரமும் ஆகும்,

அந்த ஆன்மீக பண்பாடு கலாச்சாரத்திற்கு அடிப்படியாய் இருப்பவை கோயில்களும், வழிபாடுகளும் ஆகும்.

இவ்வாறு,தமிழகத்திற்கே சிறப்பு சேர்க்கும் ஆன்மீக பண்பாட்டு கலாச்சாரத்திற்கு அடித்தளமாக விளங்கும் கோயில்களையும், வழிபாட்டு முறைகளையும் பல நூற்றாண்டுகளாக காப்பாற்றி வந்த பெருமையும், புகழும் ஆதிசைவ சிவாசாரியாரிகளுக்கே உரியதாகும்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

அதேபோல், தமிழகத்தின் சொத்தாகிய பழமையான ஆகமங்களை அதன் வடிவம் மாறாமலும், சிதைந்து விடாமலும் தங்கள் சக்திக்குட்பட்டு அரசின் ஆதரவு இல்லாமலேயே செம்மைப் படுத்தி இன்றுவரை பாதுகாத்துவருவது ஆதிசைவ சிவாசாரியார்களே ஆகும்.

கடந்த காலங்களில் நடைபெற்ற முஸ்லீம்கள் படையெடுப்பு காலங்களிலும் 18, 19-ம் நூற்றாண்டுகளில் பெரும் பஞ்சம் ஏற்பட்ட காலங்களிலும், மற்ற பொதுமக்கள் கோயில்கள் பக்கமே வர அஞ்சிய தங்கள் வாழ்வாதாரத்திற்கே போராடிய நிலையில், அந்தந்த கோயில்களில் பூஜை செய்து வந்த ஆதிசைவ குருக்கள்களே தங்களால் இயன்ற அளவு அக்கோயில்கள் பாழடைந்து விடாத வகையில் கோயில்களை காப்பாற்றியும், சுத்தம் செய்தும், தீபம் ஏற்றியும் தங்களிடம் உள்ள பொருட்களை கொண்டு படையலிட்டும், கோயில்களில் உள்ள சுவாமி உருவங்களை பாதுகாத்தும் என பல தியாகங்களை கடந்த காலத்தில் செய்து ஒவ்வொரு கோயிலையும் அந்தந்த தலத்திலிருந்த ஆதிசைவர்கள் பாதுகாத்து வந்துள்ளதால்தான் இன்று பல கோயில்கள் புகழ்பெற்று விளங்குகின்றன.

இன்று பக்தர்கள் பலர் கோயில்களுக்கு வரும் நிலையிருந்தாலும், கடந்த காலங்களில் வறுமையிலும் தெய்வப்பணி செய்தவர்கள் ஆதிசைவர்களே. **வறுமை வாட்டினாலும் தெய்வத்தை மறவாத மரபு ஒன்று உண்டு என்றால் அது சிவாசாரியார் மரபேயாகும்.**

முஸ்லீம்கள் படையெடுப்பின் பொழுது மதுரை கோயிலில் பூஜைசெய்து வந்த ஆதிசைவ சிவாசாரியார்கள்தான் மூலவர் திருமேனியை சுமார் 50 வருடங்களுக்கு மேல் பாதுகாத்துவந்தனர் என்பதையும், சிதம்பரம் நடராஜர் திருவுருவத்தை நடராஜரை பூஜித்த வந்த தில்லைவாழ் அந்தணர்கள்தான் சுமார் 35-வருடங்கள் பாதுகாத்தனர் என்பதும் இங்கே நினைவில் கொள்ளத்தக்கது.

இவ்வாறு போர்காலங்களிலும், பஞ்ச காலத்திலும் பல கோயில்களை அந்தந்த கோயில்களில் பூஜைசெய்து வந்த ஆதிசைவ குருக்கள்களே பல இன்னல்களுக்கு நடுவில் தங்களால் இயன்ற அளவு வழிபாடுகளை செய்து பாதுகாத்து வந்தனர் என்பதே வரலாற்று உண்மையாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இன்று ஒரு திருக்கோயில் புகழ்பெற்று விளங்குகிறது என்றால் அதற்கு மிக முக்கிய காரணம் அங்கே அந்த இறைவனுக்கு பூஜை செய்துவந்து ஆதிசைவ சிவாசாரியாரே ஆவார். ஒரு கோயிலில் இறைவனுக்கு பூஜை செய்யும் ஆதிசைவ சிவாசாரியார் தனது உன்னதமான பாவனையாலும், தனது மந்திர சக்தியாலும், தன்னலம் பாராத தியாகத்தாலும் உழைப்பாலும், அங்கு வரக்கூடிய பக்தர்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப செயல்படுவதாலும்தான், ஒரு கோயில் புகழ்பெற்று விளங்குகிறது.

ஆகமங்கள், ஒரு கோயிலில் உள்ள இறைதிருமேனி மூன்று காரணங்களால் இறைசக்தி கொண்டு தெய்வத் தன்மையை அடைகின்றது என்று கூறுகின்றன, அவை,

"அர்சகஸ்ய ப்ரபாவேந
அர்சநஸ்யாதி சாயநாத்
ஆபிருப்யாச்ச பிம்பாநாம்
சிலாபவதி தேவகி"

அதாவது, பூஜை செய்யும் அர்ச்சகருடைய மனோ பாவனையாலும், அர்ச்சனையின் சிறப்பாலும், விக்ரஹத்தின் அழகினாலும் இறைத்திருமேனி தெய்வத்தன்மை அடைகிறது என்று ஆகமங்கள் கூறுகின்றன. இதில் அர்ச்சகர் தனது பாவனையாலும், தான் செய்யும் ஆகம அர்ச்சனை வழிபாடுகளினாலும் இறைவனின் உயிர்சக்தி அதிகமாகின்றது என்பதை இதன் மூலம் உணரமுடியும்.

மேலும், **"அர்சகஸ்ய தபோயோகத் தேவ சாந்நித்ய மருச்தி"** அதாவது அர்ச்சகனின் தவ வலிமையே இறைவனது ஸாந்நித்யம் (உயிர்சக்தி) நிலைபெறுவதற்கும் அதிகமாவதற்கு காரணம் என்று ஆகமம் கூறுகின்றது.

இந்த வகையில் ஒவ்வொரு கோயிலும் புகழ் பெறுவதற்கு காரணம், பக்தர்கள் பெருமளவில் வருவதேயாகும்.

பக்தர்கள் பெருமளவில் வருவதற்கு காரணம் அந்த கோயில் தெய்வங்களின் இறைத்தன்மை அதிகமாவதேயாகும்.

கோயிலில் உள்ள தெய்வங்களின் இறைத்தன்மை அதிகமாக காரணம் அங்கு பூஜை செய்யும் அர்ச்சகரின் உன்னதமான பாவனையும், அர்ச்சனை வழிபாடுகளை செய்யும் பாங்கே ஆகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்த வகையில் ஒரு கோயில் எவ்வளவு பெரியதாக கட்டப்பட்டாலும், அந்த கோயிலில் பக்தர்கள் வருகைக்கும் புகழ்பெருவதற்க்கும் அங்கு பூஜை செய்து வரும் ஆதிசைவ அர்ச்சகரின் பங்கு மிக முக்கியமானதாகும்.

ஆனால், இன்று என்ன நடைபெற்றுக்கொண்டிருக்கிறது ஒரு ஆதிசைவ குருக்கள் தனது தவவலிமையாலும் மந்திர சக்தியாலும், ஆன்ம பாவனையாலும் சிறந்த முறையில் பூஜித்து, அங்கு வரும் பக்தர்களுக்கு உரிய முறையில் வழிபாடுகளை செய்து தந்து அந்த கோயிலை இறைத்தன்மையுடையதாக, தெய்வ ஸாநித்யம் உடையதாக தனது தொண்டாலும் உழைப்பாலும், கொண்டுவருவார். அதுவரை அந்த கோயில் பக்கமே வராத அரசும், ஆட்சியாளர்களும், பக்தர்களின் வருகையின் காரணமாக வரும் வருமானத்தைக் கணக்கில் கொண்டு முதலில் உள்ளூர் பிரமுகர் ஒருவரை அறங்காவலராக நியமிப்பார்கள். பின் அரசும் அறநிலையத்துறை அதிகாரியை நியமித்து அந்த கோயிலில் அதிகாரத்தை செலுத்தும். ஆதிசைவர்கள் சிவ பெருமானுக்கு மட்டுமே அடிமையானவர்கள் என்பதால்தான், இவர்களுக்கு **அகத்தடிமை திருத்தொண்டர்** என்று பெயர் பெற்றார்கள். ஆனால், இவர்கள் இன்றைக்கு சிவபெருமானுக்கு மட்டுமல்லாமல் சிவன் ஆலயத்தை நிர்வகிக்கும் அறங்காவலருக்கும், அதிகாரிக்கும் அடிமை என்ற நிலைக்கு தள்ளப்பட்டனர்.

அதேபோல், ஆதிசைவர்களின் கரம் சிவபெருமானை மட்டுமே வணங்கும் என்பதால்தான் **கரம் தளரா சைவன்** என்று பெயர் பெற்றார்கள். ஆனால், இவர்கள், இன்றைக்கு அறங்காவலருக்கும், அதிகாரிக்கும் கும்பிடு போடும் அவல நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளார்கள்.

இவ்வாறு, தங்கள் அதிகாரத்தைக் கொண்டு அந்த அறங்காவலரும், அதிகாரியும் அந்த கோயில் புகழ்பெற மூலக் காரணமாக இருந்த ஆதிசைவ குருக்களை அடிமை போல் நடத்துவார்கள். வழிபாடு விஷயங்களில் தலையிட்டு பூஜைகளை கூட்டியும், குறைத்தும் நடத்தக்கூறி என பல ஆகம விதி சம்பிரதாயங்களில் தலையிடுவார்கள். ஆகம விதிகளை எடுத்துக்காட்டி அந்த கோயிலில் பூஜை செய்யும் குருக்கள் ஏதேனும் எதிர்ப்பு தெரிவித்தால், உடனே அந்த அறங்காவலரும் அதிகாரியும் தங்கள் அரசாங்க பலத்தைக் கொண்டு மிரட்டல் விடுப்பார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆகமம் அறிந்த, தர்ம சிந்தனைக்கொண்ட, பூஜைகளை சரிவர செய்யவேண்டும் என்ற சிந்தனை உள்ள ஒரு குருக்கள் ஒன்று தன்னுடைய வெட்கம், மானம் இவைகளை விட்டுவிட்டு பூஜை பணியை தொடர வேண்டும். அல்லது தான்அதுவரை செய்து வந்த பூஜையை விட்டுவிட்டு வெளியே வந்து விட வேண்டும். இதுதான் இன்று ஒவ்வொரு ஆதிசைவ குருக்களின் நிலைமையாகும், அந்த கோயில் அறங்காவலரும், அதிகாரியும் தாங்கள் கூறும் பேச்சை கேட்டு அடிமைபோல் எதிர்த்து கேள்வி கேட்காத ஒரு ஆதிசைவ குருக்களைக் அக்கோயிலில் பணியமர்த்தி பூஜை பணியை தொடரச் செய்வார்கள். தமிழகத்தில் இன்று பல பெரிய திருக்கோயில்களில் இதுதான் யதார்த்த உண்மை நிலையாகும்.

நாம் மேலே பார்த்த திங்களூர் கோயில் கைலாசநாத குருக்கள் இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. அன்று திங்களூர் கோயிலில் அவர்செய்த தன்னலமற்ற தொண்டும், பூஜாபலனுமே, இன்று திங்களூர் கோயில் நவக்கிர திருத்தலத்தில் சந்திரனுக்குரிய கோயிலாக புகழ்பெற்று விளங்குகிறது. அன்று கைலாசநாத குருக்கள் தன்னலமற்று பூஜை செய்து வரும் பொழுது எந்த அரசும், எந்த அதிகாரியும் உதவி செய்ததாக தெரியவில்லை. ஆனால் இன்று அவர் செய்த பூஜையின் பலன் காரணமாக புகழ்பெற்று விளங்கியதும் அரசும் அரசாங்கமும் அக்கோயிலில் ஆட்சி செலுத்தும் அறநிலையைத் துறை அதிகாரி தான் கூறுவது போல்தான் நடக்கவேண்டும் என்று குருக்களை எச்சரிக்கை செய்வார்.

திங்களூரைப் போல கோயில்களும், கைலாசநாத குருக்களை போன்று பல குருக்கள்கள் தமிழகம் முழுவதும் பலர் கடந்த காலங்களில் வாழ்ந்து வந்துள்ளார்கள். தங்கள் உண்மையான தொண்டினாலும், பூஜா பலத்தாலும் பல கோயில்களை முன்னேறச் செய்துள்ளனர். இன்று புகழ்பெற்று விளங்கக்கூடிய, வருமானம் வரக்கூடிய பல பெரிய கோயில்களின் கடந்த கால வரலாற்றை, உண்மை மனதோடு ஆராய்ந்தால் அங்கு திங்களூர் கைலாசநாத குருக்களை போல தொண்டு செய்த ஒரு ஆதிசைவ குருக்களை காணமுடியும்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

ஆனால், இந்த உண்மைகளையும், உணர்வுகளையும் எல்லாம் அறியாத அரசும், அதிகாரிகளும் கோயில்களில் பூஜை செய்யக்கூடிய குருக்கள்களை அடிமைபோல் நடத்துகிறார்கள்.

ஒரு மலைவாழ் பிரதேசத்தில் வாழக்கூடிய மலைவாழ் மக்களுக்கு என்று தனிவாழ்கை முறை தனி பழக்க வழக்கங்கள் உள்ளன, அந்த மலைபிரதேசத்தையும் காடுகளையும் அவர்கள் நேசிக்கும் விதம், பழகும்விதம் போன்றவற்றை வெளியில் உள்ள நம் போன்ற மக்களோ, காட்டிலாகா அதிகாரிகளோ புரிந்துக்கொள்ள முடியாது. உணர்ந்து கொள்ளவும் தெரியாது. ஆனால், மலை காடுகளை பற்றி பாடப் புத்தகத்தில் படித்துவிட்டு தேர்வு எழுதி வரும் இந்த காட்டிலாகா அதிகாரிகள் வனங்களை, மலைகளை பாதுகாக்கின்றோம் என்ற பெயரில் அந்த மலைவாழ் மக்களின், உரிமைகளை உணர்வுகளை சிதைத்து எவ்வாறு சித்ரவதை செய்யப்படுகின்றார்களோ அதுபோன்று, கோயிலில் பூஜை செய்யக்கூடிய ஆதிசைவ குருக்கள்களை ஆகம சாஸ்திரம் அறியாத, கோயில்களின் கடந்தகால வரலாறுகளை உணராத, கோவிலுக்கும் குருக்கள்களுக்கும் உள்ள உணர்வை உறவை புரிந்துக் கொள்ள முடியாத இந்த அறநிலையத்துறை அதிகாரிகள், அறங்காவலர்கள் கோயிலை நிர்வாகம் செய்கின்றோம் என்ற பெயரில், கோயில் குருக்களுக்கு என்று இருந்த பல தனித்துவம் மிக்க சிறப்பு உரிமைகளை எல்லாம் பறித்து அவர்களை **சாதாரண பணியாளர்கள்** என்ற நிலையில் வைத்துள்ளார்கள்.

ஆகமங்களும், தேவார திருமுறைகளும், புராணங்களும், கடந்த கால சைவ சமய வரலாறுகளும் திருக்கோயில்களில் பூஜை செய்து வரும் ஆதிசைவர்களாகிய சிவாசாரியார்களை, **அகம்படித் தொண்டர்** என்றும், **வழிவழி அடிமை செய்பவர்கள்** என்றும், **சைவ சமய குருமார்கள்** என்றும், **சிவபெருமானின் பிரதிநிதிகள்** என்றும் பலவாறு முக்கியத்துவம் கொடுத்து போற்றுகின்றனர்.

ஆனால், **இன்றைய மதச்சார்பற்ற அரசுகள், கோவில் சிவாசாரியார்களை திருக்கோவில் பணியாளர்கள் என்று கூறி அவர்களை சாதாரண ஒரு தொழிலாளர்களாக வரன்முறை செய்துள்ளது.**

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மடாதிபதிகளுக்கும், ஆதினங்களுக்கும் இணையாக மதிக்கப்பட வேண்டியவர்களை வெறும் கூலிக்கு மாரடிப்பவர்களாக இன்றைய அரசுகளும், சமூக சூழ்நிலையும் அவர்களை மாற்றி வைத்துள்ளது.

இந்நிலையில், **சிவாசாரியார்களின் உண்மை வரலாற்றை அறிந்து அரசும், அரசு நிர்வாகமும் சிவாசாரியார்களுக்கு விசேஷ உரிமைகளை கோவில்களில் வழங்க வேண்டும்.** சிவபெருமானின் அணுக்கத் தொண்டர்களாகிய சிவாசாரியார்களை திருக்கோவில் சம்மந்தமான, சமயச் சார்பான நடவடிக்கைகளில் முதன்மையான பிரதிநிதித்துவத்தை தந்திட அரசு முனைந்திட வேண்டும். சோழர்கள் காலத்தில் இருந்ததுபோல் ஒவ்வொரு கோயில் நிர்வாக குழுவிலும் சிவாசாரியார்கள் உறுப்பினராக இருந்திட வழிவகை செய்திடல் வேண்டும். அதற்கு தகுந்தாற்போல் சிவாசாரியார்களும் தங்கள் தகுதியை மேம்படுத்தி கொள்ள வேண்டும்.

வனத்தில், மலையில் வாழும் மலைவாழ் மக்களுக்கு என்று தனிப்பட்ட உரிமைகளையும், சலுகைகளையும் அரசுகள் அறிவித்துள்ளன. அதுபோல், கோயில்களையே சார்ந்து வாழ்ந்து வரும் கோயில்களோடு உணர்வுரீதியாக கலந்து பழகிவரும், கோயில் வழிபாட்டு முறைகளை பலநூறு ஆண்டுகளாக பல நெருக்கடியான காலகட்டங்களிலும் பாதுகாத்துவந்த, தமிழகத்தின் ஆன்மீக கலாச்சாரத்திற்கு பெருமை சேர்த்து, தொண்டு செய்து கோயில்களில் பூஜை செய்து வரும் ஆதிசைவர்களாகிய சிவாசாரியார்களுக்கு, குருக்கள்களுக்கு தனி உரிமைகள், சலுகைகள் அரசினால் வழங்கப்பட வேண்டும்.

குருக்கள்களுக்கும் கோயிலில் உள்ள சிவபெருமானுக்கும் எப்படிபட்ட உணர்வும் உறவும் இருக்குமென்றால், ஆதிசைவ குருக்கள்கள் தாங்கள் பூஜை செய்யும் இறைவனிடம் எவ்வாறு உரிமையோடும் உணர்வோடும் பழகுவார்கள் என்றால், தாங்கள் கோவிலில் பூஜிக்கும் சிவபெருமானை **பாட்டன்** என்றும், என்னுடைய **தாத்தா** என்றும் **அப்பன்** என்றும் உரிமைகொண்டு பழகுவார்கள். இதற்கு காரணம் ஆதிசைவர்கள் சுந்தரர் மரபில் வந்தவர்கள். சுந்தரர் எவ்வாறு சிவபெருமானிடம் உரிமையோடும் நட்போடும் பழகினாரோ அதேபோன்றுதான் கோயிலில் பூஜை செய்து வரும் ஆதிசைவ குருக்கள் தங்கள் இறைவனிடம் உரிமையோடு பேசுவார்கள். பழகுவார்கள்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

கிராமங்களில், சிவாலயத்தில் பூஜை செய்து வரும் ஆதிசைவ குருக்கள்கள், தாங்கள் கோயிலில் போய் பூஜை செய்யப் போவதை கூறும் பொழுது, என் தாத்தனுக்கு சோறு போட்டுவிட்டு வந்துடறேன். என்பாட்டனை பார்த்துவிட்டு வந்துடறேன் என்று உணர்வும் உரிமையாக யதார்த்தமாய் கூறுவார்கள்.

மாலையில் கோயிலுக்கு தீபம் ஏற்றச் செல்வதை மற்றவர்களிடம் கூறும்பொழுது, அப்பா, என் ஆளு அங்க இருட்டுல உட்கார்ந்திருக்கான் போய் ஒரு விளக்கு போட்டுவிட்டு வந்துடறேன் என்று யதார்த்தமாய் பேசுவார்கள்.

தாங்கள் பூஜை செய்யும் கோயிலில் உள்ள இறைவியை தங்களின் தாயாக, மகளாக பாவித்து பேசுவார்கள் அலங்காரம் செய்து ரசிப்பார்கள்.

1950, 1960, 1970- களில் எத்தனையே குக்கிராமங்களில் உள்ள சிவன் கோயில்கள் பாழடைந்து இருக்கும். பூஜைக்கு வழி இருக்காது. ஆதிசைவ குருக்கள் வீட்டிலோ அரிசிக்கே பஞ்சம். இந்த நிலையில் சில குருக்கள்கள் புது அரிசி கொண்டு சமைத்து பூஜை செய்ய வழியில்லாததால் தங்கள் கோயில் இறைவனுக்கு ஒரு குடம் நீரிட்டு அபிஷேகம் செய்து, தங்கள் வீட்டில் உள்ள முதல்நாள் பழைய அமுதும், பச்சை மிளகாயும் வைத்து இறைவனுக்கு படைத்துவிட்டு அந்த திருப்திக்கு பின்பே தாங்கள் உண்டார்கள் என்று பெரியவர்கள் மூலம் செவிவழிப் செய்தியாக அடியேன் கேட்டுள்ளேன்.

இந்த நூலை எழுதக்கூடிய அடியேன், விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி அருகே பொரசக்குறிச்சி கிராமத்தில் ஆதிசைவ மரபில் பிறந்தவன். என் தந்தை பூஜை செய்த சிவன் கோயில் அப்பொழுது மிக பாழடைந்து இருக்கும். பாம்புகள், பூச்சிகள் எல்லாம் இருக்கும். என் தந்தை ஊரில் இல்லாதபொழுது என் தாய் தாத்தாவுக்கு பூஜை செய்து விட்டு வா என்று எனது விளையாட்டு பருவத்தில் கூறுவார். நான் எனது விளையாட்டு சிந்தனையாலும், கோயில் இருண்டு பாம்புகள் இருக்கும் என்ற பயத்தாலும் கோயிலுக்கு போக மறுப்பேன். அப்பொழுது எனது தாய், தாத்தா சாப்பிட்ட பின்புதான் நாம் சாப்பிட வேண்டும். தாத்தாவுக்கு மிகவும் பசிக்கும் என்று பலவார்த்தைகளை நயமாக பேசி என் தாய் துணையாக வந்தபின் அந்த சிறுவயதில் எனக்கு தெரிந்த அளவில் பூஜை செய்து விட்டு வருவேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எனக்கு விபரம் தெரிந்து உலக விபரம் தெரியும் வரையில் எங்கள் கோயிலில் உள்ள சிவபெருமானை நான் எனது தாத்தா என்றே சிறுவயதில் நினைத்துக் கொண்டிருந்தேன்.

இவ்வாறு பல ஆதிசைவ குருக்கள் குடும்பங்கள் பலர் தாங்கள் பூஜை செய்யும் கோயிலோடும் இறைவனோடும் உணர்வோடும், உரிமையோடும் பழகி வந்துள்ளார்கள், இதே போல் ஒவ்வொரு குருக்கள் வீட்டிலும் அவர்களுக்கும் சிவபெருமானுக்கும் உள்ள தொடர்பை கூறும் நினைவுகள் பல இருக்கும். இந்த உணர்வுகளை மற்றவர்கள் புரிந்துக் கொள்வதோ, உணர்ந்துக் கொள்வதோ கடினம்.

ஆதிசைவர்களின் வாழ்வானது சைவ சமயத்தோடும் சிவபெருமானோடும் இரண்டற கலந்த வாழ்வாகும். ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் எவ்வாறு சிவபெருமானோடு உரிமையோடு இரண்டற கலந்து பழகினாறோ அதே போன்றுதான் கடந்த காலங்களில் வாழ்ந்த ஆதிசைவ சிவாசாரியார்கள் சிவாலயத்தோடும், சிவபிரானோடும் இரண்டற கலந்து வாழ்ந்தனர். தங்களுக்கு ஏற்பட்ட வறுமையோ, துன்பமோ, இன்னல்களோ அவர்களை ஒரு போதும் பாதித்தது இல்லை. நாம் சிவபிரானுக்கு பூஜை செய்கிறோம் என்ற ஒரு நினைப்பே அவர்களை திருப்தியோடு வாழ வைத்தது, அதுவே அவர்களுக்கு வாழ்வில் மகிழ்ச்சியை அளித்தது.

ஆனால், இன்றைக்கு பல ஆதிசைவர்களுக்கு தங்கள் வரலாறும் தெரியவில்லை. தங்கள் முன்னோர்கள் செய்த தொண்டுகளையும் பெருமைகளையும் உணரவில்லை.

ஆதிசைவ பிறப்பு எத்தகைய உன்னத பிறப்பு, இந்த ஆதிசைவ மரபில் பிறக்க நாம் எத்தகைய தவம் செய்து இருக்க வேண்டும் என்ற உணர்வில்லாமலும், தங்களுக்கும் சைவ சமயத்திற்கும், தங்களுக்கும் சிவபிரானுக்கும் உள்ள தொடர்பு, உறவு பற்றி விழிப்புணர்வு இல்லாமலும், சுந்தரர் இறைவனால் தடுத்தாட்கொள்வதற்கு முன் எந்த மயக்க நிலையில் இருந்தாரோ அதுபோன்று இன்றைக்கு உள்ள ஆதிசைவர்கள் மயக்க நிலையில் உள்ளனரோ? என்று எண்ணத் தோன்றுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சைவ சமயத்திற்கு தலைவராக இருந்து வழிகாட்ட வேண்டிய ஆதிசைவர்கள் இன்று சைவ சமயத்தை பற்றிய தெளிவில்லாமல் இருக்கின்றார்கள்.

இன்று உலகம் செல்லும் வேகத்திற்கு ஆதிசைவ இளைஞர்கள் ஓடிக் கொண்டிருக்கிறார்கள். நமது பிறப்பே சிவவழிபாட்டிற்காகத்தான் என்ற நினைப்பே இல்லாதவாறு இந்த சமூக சூழ்நிலை சிறிது சிறிதாக அவர்களை மாற்றி வருகிறது.

சிவபெருமானையே முழுமுதற் கடவுளாக வழிபடவேண்டிய ஆதிசைவர்கள் இன்று பல வேறுபட்ட தெய்வங்களை வழிபடுபவற்களாக உள்ளனர். இதற்கெல்லாம் காரணம்,

> "ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல் மறப்பர்
> காவலன் காவான் எனின்."

என்ற திருவள்ளுவரின் குறளுக்கேற்ப ஆட்சியில் உள்ளவர்களும், அதிகாரிகளும் கடந்த காலங்களில் ஆகமம் அறிந்த ஆதிசைவ சிவாசாரியார்களுக்கு உரிய முறையில் ஆதரவு அளித்து பாதுகாக்காததாலும், கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் ஆதிசைவ சமூகம் கண்ட பஞ்சம், வறுமை, பொருளாதார பிரச்சனைகள் காரணமாகவும், திராவிட கட்சிகளின் ஆன்மீக விரோத கொள்கையுமே ஆகும்,

ஆகம விதிப்படி சிவாலயங்களில் மட்டுமே பூஜை செய்ய வேண்டிய ஆதிசைவர்கள் இன்று நகரங்களில் புதியதாக கட்டப்பட்டுள்ள தெருமுச்சந்தி பிள்ளையார் கோயில்களிலும், மாரியம்மன், காளியம்மன் கோயில்களிலும் தங்கள் பொருளாதார தேவை காரணமாய் பூஜை செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளனர்.

தாங்கள் ஆதிசைவர்கள் என்ற எண்ணமே அவர்களிடம் இருந்து சிறிதுசிறிதாக மறைக்கடிக்கப்பட்டு வருகிறது.

நமது மன்னர்கள் கட்டிய பாராம்பரியம் மிக்க சிவாலயங்கள் பல ஆகமவிதிப்படி பூஜைகள் நடைபெறாமல் பாழடைந்து கிடக்கின்றன. குறிப்பாக கிராமங்களில் உள்ள பல சிவன்கோயில்கள் ஆகம விதிப்படி பூஜையின்றி உள்ளன. இவற்றையெல்லாம் முறைப்படுத்த வேண்டிய அரசு இதுபற்றி சிந்தனையே இல்லாமல் உள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருமூலர் ஆகமவிதிப்படி ஆலயங்களில் பூஜைகள் நடைபெறவில்லை என்றால் மன்னனுக்கும், நாட்டுக்கும் கேடு என்பதை,

“முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளம்குன்றும்
கன்னம் களவு மிகுந்திடும் காசினி
என்னருள் நந்தி எடுத்துரைத் தானே” – என்று பாடியுள்ளார்.

இந்நிலையில், தமிழ் சமூகம் ஆதிசைவர்கள் வரலாற்றின் உண்மையை உணர்ந்து உதவிட வேண்டும். ஆதிசைவர்களும் கடந்த கால வரலாறுகளையும், பெருமைகளையும் உணர்ந்து ஆதிசைவ மரபை பேணிக் காக்க உரிய முயற்சிகளை, விழிப்புணர்வை ஏற்படுத்த ஒற்றுமையோடு செயல்படுத்த முன்வரவேண்டும். அவ்வாறு செயல்பட்டால்தான் கடந்த காலங்களில் ஆதிசைவ மரபு புகழ்பெற்று விளங்கியது போல், வரும் காலங்களிலும் தமிழக வரலாற்றில் ஆதிசைவ மரபு புகழ் பெற்று விளங்கும். இல்லையெனில், கால ஓட்டத்தில் பலமொழிகள் பல இன மக்கள் மறைந்தது போல், சைவ சமய வரலாற்றில், தமிழக வரலாற்றில் ஆதிசைவ மரபு ஒன்று இருந்தது, சிவப்பணி செய்தது என்ற வரலாறே தடம் தெரியாமல் மறைக்கப்பட்டுவிடும். எனவே, சிந்தித்து செயல்பட வேண்டும்.

திருச்சிற்றம்பலம்

ஆதிசைவ சிவாசாரியாரின் பாவனை

“ஆவாஹனாதி காலேது ஆசார்யோ குரு
ரூப த்ருத் அபிஷேகாத் யலங்காரே
ஆசார்யோ மாத்ரு ருபாவாநு
நைவேத்ய தூபதீபாதெள அர்ச்நே
மந்த்ர ரூபவாநு
ஸ்தோத்ர ப்ரதக்ஷிணே காலே ஆசார்யோ
பக்த ரூபவாநு”

ஆதிசைவ சிவாசாரியார் இறைவனை ஆவாஹனம் செய்யும்பொழுது குருவாகவும், அபிஷேகம், அலங்காரம் செய்யும்பொழுது தாயாகவும், நைவேத்யம் தூப தீப அர்ச்சனை செய்யும்பொழுது மந்த்ர ரூபமாகவும், ஸ்தோத்திரம் ப்ரதக்ஷினம் செய்யும்பொழுது பக்தனாகவும் தன்னை பாவனை செய்து கொள்ள வேண்டும்.

In Public domain, Digitized in Muthulakshmi Research Academy

17.ஆதிசைவர் மரபில் அவதரித்த அருளாளர்கள்

1. ஸ்ரீ புகழ்துணை நாயனார்

அவதரித்த தலம் : செருவிலிபுத்தூர் (சோழநாடு) (அரிசிற்கரைப் புத்தூர் அழகாபுத்தூர் என்று இப்பொழுது அழைக்கப்படுகின்றது).

மரபு : ஆதிசைவ மரபு

அவதார நட்சத்திரம் : சித்திரை மாதம் – சதயம்

சிறப்புகள் :

பஞ்சம் மிகுந்து பசிநோய் வாட்டிய வறுமை நிலையிலும் சிவபெருமானை ஆகமவிதிப்படி பூஜித்து வழிபாடு செய்தவர்.

சிவபெருமானால் பொற்காசு (படிக்காசு) வழங்கப் பெற்றவர். சமணசமய ஆதிக்கம் நிறைந்த களப்பிரர் ஆட்சி காலமாகிய கி.பி.5-ம் நூற்றாண்டில் சிவபக்தியோடு வாழ்ந்து அருள் பெற்றவர்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோருக்கு முற்பட்டவர். அறுபத்துமூன்றுநாயன்மார்களில் ஒருவர்

"புடை சூழ்ந்த புலி அதன் மேல் அரவு ஆட ஆடி
பொன் அடிக்கே மனம் வைத்த புகழ்துணைக்கும் அடியேன்."

-திருத்தொண்டத் தொகை

"புண்ணியர்கள் புகழ்அழகார் திருப்புத்தூர்வாழ்
புகழ்துணையார் அகத்தடிமைப் புனிதர் சின்னாள்
மண்ணிகழ மழைபொழியா வற்காலத்தால்
வருந்துடலம் நடுங்கிடவு மணிநீ ரேந்தி
அண்ணல்முடி பொழிகலசம் முடிமேல் வீழ
அயர்ந்தொருநாள் புலம்பஅரன் அருளாலீந்த
நண்ணலரும் ஒருகாசுப் படியால் வாழ்ந்து
நலமலிசீர் அமருலகம் நண்ணினாரே"

–திருத்தொண்டர் புராணசாரம்.

முக்தியடைந்த தலம்–அழகாபுத்தூர்

குரு பூஜை நாள் : ஆவணி மாதம் : ஆயில்யம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

2) ஸ்ரீ சடையனார் (சடைய நாயனார்)

அவதரித்த தலம் : திருநாவலூர் (நடுநாடு) திருமுனைப்பாடி நாட்டின் தலைநகரம்.

மரபு : ஆதிசைவ மரபு

அவதார நட்சத்திரம் : ஆடி மாதம் - புனர்பூசம்.

சிறப்புகள் :

மாதொருபாகனார்க்கு வழிவழி அடிமை செய்யும் வேதியர் குலமாகிய ஆதிசைவ மரபில் அவதரித்து சிவபெருமானை ஆகமவிதிப்படி பூஜித்து வந்தவர்.

ஆலால சுந்தரராகிய நம்பியாரூராரை திருமகனாக வாய்க்கும் திருவரம் பெற்றவர்.

கி.பி.7-ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆதிசைவர்,

அறுபத்தி மூன்று நாயன்மார்களில் ஒருவர்.

"என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்."

-திருத்தொண்டத் தொகை

"தலம்விளங்கும் திருநாவலூர் தன்னில் சடையனென்னும்
குலம் விளங்கும் புகழோனை உரைப்பர் குவலயத்தில்
நலம் விளங்கும் படி நாம் விளங்கும்படி நற்றவத்தின்
பலம் விளங்கும்படி ஆரூரனை முன் பயந்தமையே ."

-திருத்தொண்டர் திருவந்தாதி

முக்தியடைந்த தலம்-திருநாவலூர்

குருபூஜை நாள் : மார்கழி - திருவாதிரை.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

3) ஸ்ரீ இசை ஞானியார்

அவதரித்த தலம் : திருவாரூர்

வாழ்ந்த தலம் : திருநாவலூர்

அவதரித்த நட்சத்திரம் : ஐப்பசி மாதம் - மூலம்

சிறப்புகள் :

ஆலாலசுந்தரராகிய நம்பியாரூராரை திருமகனாக பெற்றெடுக்கும் பாக்யம் பெற்றவர்.

சிவபக்தி நிறைந்த அம்மையார்.

சிவபெருமானை இசைப்பாடல்களால் வழிபட்டு வந்தவர்

கி.பி.7-ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆதிசைவ மங்கையார்

அறுபத்தி மூன்று நாயன்மார்களில் ஒருவர்.

இசைஞானியார் திருவாரூரில் வாழ்ந்த சைவகௌதம கோத்திரத்து ஞானசிவாசாரியாரின் திருமகளார் என்பது திருவாரூர் கோயில் கல்வெட்டு செய்தி.

"என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன் இசைஞானி."

-திருத்தொண்டத் தொகை

"ஒழியாப் பெருமைச் சடையனார் உரிமைச் செல்வத் திருமனையார்
அழியாப் புரங்கள் எய்தழித்தார் ஆண்டநம்பி தனைப்பயந்தார்
இழியாக் குலத்தின் இசைஞானிப் பிராட்டியாரை என்சிறுபுன்
மொழியாற் புகழ முடியுமோ முடியா தெவர்க்கும் முடியாதால்"

-பெரியபுராணம்

முக்தியடைந்த தலம்-திருநாவலூர்

குருபூஜை நாள் : சித்திரை மாதம் - சித்திரை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4) ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்

அவதரித்த திருத்தலம்	- திருநாவலூர்
ஆன்மார்த்த தலம்	- திருவாரூர்
தந்தையார்	- ஸ்ரீ சடையனார்
தாயார்	- ஸ்ரீ இசைஞானியார்
மரபு	- ஆதிசைவ மரபு
குழந்தை திருநாமம்	- நம்பி ஆரூரன்
மனைவிமார்கள்	- ஸ்ரீ பரவை நாச்சியார்
	- ஸ்ரீ சங்கிலி நாச்சியார்.

அவதார நட்சத்திரம் : ஆவணி மாதம் - உத்திரம்.

சிறப்புகள் :

ஆதிசைவ மரபில் அவதரித்த சுந்தரரை, சிவபெருமானால் தனது அடிமை என்று தடுத்தாட்கொள்ளப்பட்டவர்.

வன்தொண்டர் என்ற திருநாமம் பெற்றவர்.

அறுபத்தி மூன்று நாயன்மார்களை எடுத்துக்கூறும் திருத்தொண்டத் தொகையை பாடி அருளியவர்.

திருவாரூரில் சிவபெருமானை தோழனாக பெற்றவர்.

தம்பிரான் தோழர் என்று அழைக்கப்பெற்றவர்.

திருத்தலங்கள் தோறும் சென்று தேவாரம் பாடியவர்.

முதலை உண்ட பாலகனை மீட்டு அருள் செய்தவர்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் காலத்திற்கு பின்பு வாழ்ந்தவர்.

அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர்.

கி.பி.7-ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

இந்நிலவுலகில் 18-வயது வரை வாழ்ந்து மானிட யாக்கையுடன் யானை மீது திருக்கயிலைக்கு எழுந்தருளும் அருள் பெற்றவர்.

ஸ்ரீ சுந்தரர் பாடிய மொத்த பதிகங்கள் 38,000 ஆகும்.

நமக்கு கிடைத்த பதிகங்கள் 100 ஆகும்.

ஸ்ரீ சுந்தரர் தேவாரங்கள் பன்னிரு திருமுறைகளில் 7-ம் திருமுறையாக வைத்து போற்றப்படுகின்றன.

சரியை, கிரியை யோகம், ஞானம், என்ற நான்கு நிலையில் யோக நெறியை விளக்க வந்தவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அறுபத்து மூன்று நாயன்மார்களின் தொண்டின் சிறப்பை திருத்தொண்டத் தொகையாக பாடியருளவே இவ்வுலகில் அவதரித்தவர்.

"தொழுதும் வணங்கியும் மாலயன் தேடருஞ் சோதி சென்றாங்
கெழுதுந் தமிழ்ப்பழ ஆவணங் காட்டி எனக்குன்குடி
முழுதும் அடிமைவந் தாட்செய் எனப்பெற்றவன் முரல்தேன்
ஒழுகும்மலரினற்றாள்எம்பிரான் நம்பியாரூரனே"

–திருத்தொண்டர் திருவந்தாதி

முக்தியடைந்த தலம்–திருவஞ்சைக்களம் (கேரளா)
குருபூஜை நாள் : ஆடி மாதம் - சுவாதி.

5) **ஸ்ரீ நம்பியாண்டார் நம்பிகள் :**

அவதரித்த தலம் : திருநாறையூர் (சிதம்பரம் அருகே)

மரபு : ஆதிசைவ மரபு.

சிறப்புகள் : மாமன்னர் இராஜராஜசோழன் வேண்டுதலுக்கிணங்க தேவாரப் பாடல்களை சிதம்பரத்தில் கண்டெடுத்து வந்தவர்.

தேவார திருமுறைகளை தொகுத்து தந்தவர்.

நாயன்மார்களின் தொண்டினை பெருமைகளை போற்றும் **திருத்தொண்டர் திருவந்தாதி** பாடலை பாடியருளியவர். இளம் பருவத்திலேயே பொல்லாப் பிள்ளையாரால் ஆட்கொள்ள பெற்றவர். ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு காலத்தால் பிற்பட்டவர், கி.பி.10–ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆதிசைவர்.

வேதத்தை நான்காக வகுத்த வேதவியாசரைப் போன்று நம்பியாண்டார்நம்பி திருமுறைகளை வகுத்தும் தொகுத்தும் அருள் செய்ததால் **தமிழ் வியாசர், சைவ வியாசர்,** என்று சிறப்பிக்கப் பெற்றவர்.

பத்து நூல்களை பாடியருளிவர். இவர் அருளிய பிரபந்தங்கள் சைவதிருமுறைகளில் பதினொன்றாந் திருமுறையில் வைத்து போற்றப் படுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நம்பியாண்டார் நம்பிகள் பாடியருளிய நூல்கள் :

1) திருநாரையூர் விநாயகர் திரு இரட்டை மணிமாலை.
2) கோயில் திருப்பண்ணியர் விருத்தம்.
3) திருத்தொண்டர் திருஅந்நாதி.
4) ஆளுடைய பிள்ளையார் திருஅந்நாதி.
5) ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம்.
6) ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை.
7) ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை.
8) ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்.
9) ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை.
10) திருநாவுக்கரசு தேவர் திருஏகாதச மாலை.

நம்பியண்டார் நம்பி பாடிய இந்த பத்து பதிகங்களே, சேக்கிழார் பெரியபுராணம் பாடுவதற்கும், வரலாற்றுண்மைகளை தெரிந்து கொள்வதற்கும் பெருந்துணையாக விளங்கியது.

"பொன்னி வடகரைசேர் நாரையூரில் புழைக்கைமுக
மன்னன் அறுபத்து மூவர் பதிதே மரபு செயல்
பன்னஅத் தொண்டத் தொகைவகை பல்கும் அந்தாதிதனைச்
சொன்ன மறைக்குல நம்பி பொற்பாதத் துணைதுணையே"

முக்தியடைந்த தலம்-திருநாறையூர்
குருபூஜை நாள் : - வைகாசி மாதம் புனர்பூசம்

6) **ஸ்ரீ அருணந்தி சிவாசாரியார் :**

அவதரித்த தலம் : திருத்துறையூர் (நடுநாடு)

மரபு : ஆதிசைவ மரபு.

அருளிய நூல்கள் : சிவஞான சித்தியார், இருபா இருபஃது.

சிறப்புகள் :

சைவசித்தாந்த தத்துவத்தை பாடியருளிய சந்தானசாரியார்கள் நால்வரில் ஒருவர். மெய்கண்டார் திருஅவதாரம் செய்ய குருவாய் இருந்து நற்காரணமாய் விளங்கியவர்.

சைவசித்தாந்த தத்துவத்தை அழகுற எளிய நடையில் பாடியருளியவர். **தமிழில், சைவசித்தாந்த தத்தவங்களை தெளிவாகவும் விளக்கமுடனும் அளிக்கும் முதல் நூலின் ஆசிரியர் என்ற சிறப்புக்குரியர்.**

In Public domain; Digitization: Muthulakshmi Research Academy

கி.பி.13-ம் நூற்றாண்டில் வாழ்ந்து ஆதிசைவர்.

தாம் பிறந்த ஆதிசைவ சிவாசாரியார் மரபிற்கேற்ப ஆகமங்கள் அனைத்திலும் பெரும்புலமை பெற்று **சகலாகம பண்டிதர்** என சிறப்பிக்கப் பெற்றவர்.

தேவார திருமுறைகளில் மிது பெரும் பக்தியும், அன்பும் கொண்டு போற்றி வழிபட்டுவந்தவர். திருமுறைப் பாராயணம் நாள்தோறும் செய்து வந்தவர்.தாம் வாழ்ந்த காலத்தில், ஆகமங்களில் தேவார திருமுறைகளில் சைவசித்தாந்த தத்துவங்களில் கரைகண்டு **நடமாடும் பல்கலைக்கழகமாக, நடமாடும் நூலகமாக** திகழ்ந்த பெருமைக்குரியவர்.

அருணந்தி சிவாசாரியார் சகல ஆகமங்களிலும் பண்டிதராய் விளங்கியதால் தாம் செல்லுமிடங்களிலெல்லாம், சாத்திர ஏட்டு சுவடிகளையும், ஆகம சுவடிகளையும் ஏற்றிச் செல்வாராம். தமக்கு ஒரு வண்டி ஆகம சுவடிகளுக்கு ஒரு வண்டி. எனவே இவர் நடமாடும் பல்கலைக் கழகம் என புகழப்பட்டார்.

சிவஞான சித்தியார் - பரபக்கம், சுபபக்கம் என்று இரண்டு பாகங்களாக பாடியுள்ளார். பரபக்கம் 301 பாடல்களை கொண்டது. சுபபக்கம் 328 பாடல்களை கொண்டது.

தாம்பிறந்த ஆதிசைவ மரபின் கடமை சிவபெருமானின் பெருமைகளை உலகறியச் செய்வது என்ற கொள்கைக்கேற்ப, மாற்று சமயங்களின் கொள்கைகளை மறுத்து சைவசித்தாந்த தத்துவத்தை, சிவபரத்துவத்தை சுபபக்கம் வாயிலாக அழகுற எடுத்துக்கூறி தாம் அவதரித்த ஆதிசைவ மரபிற்கு பெருமைசேர்த்தவர்.

“முப்பொருளின் ஈரியல்பும் ஓர்இயல்பா நுவலாது முறை வெவ்வேறாய்
செப்பு சிவாகமங்களின்தன் பொருள்ஒருமை பெற உணர்ந்து தின்முன் நூலை
ஒப்பவிரி யாப்பு அதனால் சித்தி எனும் வழிநூலாய் ஒளிர்பிற் காலத்து
இப்புவியோர் தெளிந்து உய்ய மொழிந்த அருள்நந்தி சிவன் இணைத்தாள்
போற்றி”

முக்தியடைந்த தலம் : திருத்துறையூர்
குருபூஜை நாள்: புரட்டாசிமாதம் பூரம்.

In Public Domain. Digitization Mahalakshmi Research Academy

7) **ஸ்ரீ கச்சியப்ப சிவாசாரியார் :**

அவதரித்த திருத்தலம் : காஞ்சிபுரம்

தந்தையார் : காளத்தியப்ப சிவாசாரியார்

மரபு : ஆதிசைவ மரபு.

சிறப்புகள் :

காஞ்சிபுரம் குமரகோட்டத்து ஸ்ரீ முருகப்பெருமானை முப்பொழுதும் திருமேணி தீண்டி வழிபடும் ஆதிசைவ மரபில் அவதரித்தவர்.

சைவசமயத்தின் பெருங்காப்பியம் எனப் போற்றப்படும் கந்தபுராணத்தை பாடியருளியவர்.

முருகப்பெருமானே கனவிலே வந்து கந்தபுராணம் பாடுவாயாக என்று அருள் செய்து **திகிட சக்கரச் செம்முகம் ஐந்துளான்** என்று அடியெடுத்துக் கொடுக்கும் திருவருள் பெற்றவர்.

கந்தபுராணம் அரங்கேற்றத்தின் பொழுது முருகப் பெருமானே தோன்றி வீரசோழியம் என்ற இலக்கண நூல் மூலம் புலவர்களின் சந்தேகத்தை தீர்த்து அருள் செய்த புண்ணியம் பெற்றவர்.

சைவ சமயத்தில் சிவபெருமானின் மூன்று கண்களாக போற்றப்படுபவை,

1. பெரியபுராணம், 2. கந்த புராணம், 3. திருவிளையாடற் புராணம் இவற்றில் சிவபெருமானின் நெற்றிக்கண்ணாக போற்றப்படும் கந்தபுராணத்தை பாடியருளிய பெருமைக்குரியவர்.

கந்தபுராணம் எவரையும் கவர்ந்து இழுக்கும் **காந்தபுராணம்** என்று போற்றப்படும் பெருமைக்கும் சிறப்பிற்கும் உரியவர்.

தாம்பிறந்த ஆதிசைவ மரபிற்கேற்ப, கந்தபுராணம் நூல் முழுவதிலும், சிவபெருமானின் பெருமைகளையும், ஆகம கருத்துகளையும், சைவசித்தாந்த தத்துவங்களையும் பெருமளவு பாடியருளியவர்.

கம்பனின் கவித்திறத்தையும் விஞ்சக்கூடிய வகையில் கவியமுதக் காவியமாக கந்தபுராணத்தை வழங்கிய சிறப்புக்குரியவர்.

"காதல் மழை பொழிந்த அருள் கொண்டலான
கச்சியப்பன் இருபாதம் உச்சி வைப்பாம்."

In Public domain, Digitized by Muthulakshmi Research Academy

என்ற ஆன்றோர் வாக்கிற்கிணங்க பக்தி மழை பொழிந்த கருமேகம் போன்றவர் கச்சியப்ப சிவாசாரியார் என்ற பெருமைக்கும் புகழுக்கும் உரியவர். கி.பி. 14-ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆதிசைவர்.

"உச்சிதமாம் சிவவேதியன் காளத்தி ஓங்குமைந்தன்
கச்சியப்பன் செய்த கந்த புராணக் கலைக்கடலின்
மெச்சிய கல்வி மதியும் வெண்டாமரை மேவு மின்னும்
இச்செவி நாவினுக்கு இன்பாம் அமுதம் எழுந்தனவே."

8) **ஸ்ரீ சிவகோசரியார் :-**

அவதரித்த தலம் : திருக்காளத்தி (ஸ்ரீ காளஹஸ்தி)

மரபு : ஆதிசைவ மரபு

சிறப்புகள் : -

சிவத்தையே எப்பொழுதும் கோசரித்துக் கொண்டிருப்பவர் என்பதால் சிவகோசரியார் எனப் பெயர் பெற்ற சிறப்புக்குடையவர்.

(கோசரித்தல் – தியானித்தல்)

"எய்திய சீர் ஆகமத்தில் இயம்பிய பூசனைக்கேற்ப"

என்ற சேக்கிழார் வாக்கிற்கேற்ப ஆகம விதிப்படி சிவபெருமானை பூஜித்து அருள் பெற்றவர்.

"கானவர் பெருமானார் தம் கண்ணிடந் தப்பும்போதும்
ஊனமு துகந்த ஐயர் உற்றுமுன் பிடிக்கும் போதும்
ஞானமா முனிவர் கண்டார்..."

என்று சேக்கிழார் பெருமானால் **ஞானமாமுனிவர்** என்று போற்றப்படும் பெருமைக்குரியவர் ஏனெனில், கண்ணப்பநாயனாருடைய செயல்கள்யாவும் இறைவனருளினால் காட்டவும், உணர்த்தவும் பட்ட ஞானத்தை பெற்றவராதலின் ஞானமா முனிவர் என்றார் – என்று விளக்கம் அளிப்பார் சைவ அறிஞர். **C.K.சுப்பிரமணிய முதலியார்.**

நக்கீரதேவ நாயனார் தாம் பாடிய கண்ணப்பதேவர் திருமறத்தில் போற்றி புகழப்பெற்றவர். கலியுகத்தின் தொடக்க காலத்தில் ஆகமவிதிப்படி பூஜித்த ஆதிசைவர்.

கண்ணப்ப நாயனார் செய்த அன்புவழி பூஜை முறைக்கு முன்னுதாரணமாக விளங்கும் அருள் பெற்றவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

9) ஸ்ரீ தருமி

அவதரித்த தலம் : திரு ஆலவாய் (மதுரை)

தந்தையார் : சிவமுனி

மரபு : ஆதிசைவ மரபு

சிறப்புகள் : -

சங்ககாலத்திலேயே வாழ்ந்துவந்த ஆதிசைவ மரபை சார்ந்தவர்.

தருமியின் பொருட்டு சிவபெருமான் சங்கப்பலகை ஏறிவாதிட்டு பொற்கிழியினைப் பெற்றுத்தந்த சிறப்பிற்குரியவர்.

அப்பர்பெருமான் திருப்பத்தூர் தேவாரத்தில்,

"நன்பாட்டுப் புலவனாய் சங்கமேறி
நற்கனகக் கிழிதருமிக் கருளினோன் காண்"

என்று போற்றி பாடியுள்ளார்.

கல்லாடம் நூலானது,

"பொதியப் பொருப்பன் மதியக் கருத்தினைக்
கொங்குதேர் வாழ்க்கைச் செந்தமிழ் கூறிப்
பொற்குவை தருமிக்(கு) அற்புடன் உதவி
என்னுளங் குடிகொண்(டு) இரும்பயன் அளிக்கும்
கள்ளவிழ் குழல்சேர் கருணையெம் பெருமான்"

என்று தருமிக்கு பொற்கிழி அளித்த செயலை போற்றி பாடுகின்றது.

திருவிளையாடற் புராணத்தில்,

"அந்த வேலையிலா ஆதிசைவரில்
வந்த மாணவன் மணஞ்செய் வேட்கையான்
முத்தை யாச்சி முயலும் பெற்றியான்
தந்தை தாயிலான் **தருமி யென்றுளான்**"

என்று தருமியை குறித்து பாடப் பட்டுள்ளது.

இன்றும், மதுரை திருக்கோயிலில் ஆவணி திருவிழாவில் நான்காம் திருநாளில் தருமிக்கு பொற்கிழி அளித்த விழா நடைபெற்று வருகிறது.

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

18. ஆதிசைவ மரபில் அவதரித்த பெண் சித்தர்

சென்னை கோமளீஸ்வரன் பேட்டை சட்டநாதஸ்வாமி திருமடத்தில் குருமார்களில் ஒருவரான ஸ்ரீ சாம்பசிவ சிவாசாரியாரின் மனைவியார் பெறும் சித்தராக விளங்கினார். **ஸ்ரீ அனந்தாம்பாள்** என்பது இவரது இயற்பெயராகும்.

பறவை சித்தர் என்று அழைக்கப்பட்ட **ஸ்ரீ அனந்தாம்பாள்** கி.பி.1854 ஆம் ஆண்டு வடாற்காடு மாவட்டம் போளூர் அருகில் உள்ள தேவிகாபுரத்தில் ஆதிசைவ சிவாசாரியார் மரபில் சேஷகுருக்களுக்கு மகளாக அவதரித்தவர்.

வழிபாட்டுக்கென்றே தோன்றிய அதிசைவ மரபில் பிறந்ததால் இயற்கையாகவே இளமை முதல் ஆன்மீக பற்றுடையவராக விளங்கினார். ஸ்ரீ சக்ரபூஜை உபாசனை செய்து வந்ததால், **ஸ்ரீ சக்கர அம்மாள்** என்றும் **ஸ்ரீ சக்கரையம்மா** என்றும் பக்தர்களால் அன்போடு அழைக்கப்பட்டார்.

அக்காலத்தில் சென்னையில் வாழ்ந்த பிரபல மருத்துவர். சி.நஞ்சுண்டராவ் இரவது மகிமையை உணர்ந்து அம்மையாரின் பிரதான சீடரானார். தனது குருவின் மகிமையை இவ்வுலகம் அறியும் வண்ணம் பல தொண்டுகளை மேற்கொண்டார். ஸ்ரீ சக்கரையம்மா 1901-ஆம் ஆண்டு சிவநிலை அடைந்தார். தமது குரு ஸ்ரீ சக்கரையம்மா விருப்பத்தின்படியே அவர் கூறிய இடத்தில் நஞ்சுண்டராவ் இவருக்கு ஜீவசமாதி கோவில் எழுப்பி வழிபாடு செய்து வந்தார். இவருடைய ஜீவசமாதி கோயில் சென்னை திருவான்மியூரில் கலாஷேத்ரா அருகில் உள்ளது. இங்கு தன்னை நாடிவரும் ஆன்மாக்களுக்கும்,அடியவர்களுக்கெல்லாம் அவர்கள் கவலையை போக்கி அருளை வாரி வழங்கி வருகிறார் ஸ்ரீ சக்கரையம்மா.

தமிழ்தென்றல் திரு.வி.க அவர்கள் இந்த அம்மையார் பறக்கும் ஆற்றல் பெற்றிருந்ததாக தனது உள்ளொளி என்ற நூலில் விரிவாக பதிவு செய்துள்ளார். அப்பகுதி வருமாறு,

சென்னை கோமாளீஸ்வரன் பேட்டையில் ஓர் அம்மையார் இருந்தார். அவர் காலஞ்சென்ற டாக்டர்.நஞ்சுண்டராவின் குரு என்று உலகம் சொல்லும் அவ்வம்மையார் பறவையைப் போல் வானத்தில் பறப்பார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒருமுறை யான் வசித்த கல்லூரியின் மேல்மாடியில் பறந்து வந்து நின்றார். மானுடம் பறக்கிறதெனில் உலகம் அதை எப்படி வியக்குமென்று சொல்ல வேண்டுவதில்லை, அக்காலத்தில் சென்னையில் வசித்த விஞ்ஞானியர் பலர் சூழ்ந்து சூழ்ந்து அம்மையார் நிலையை ஆராய்வர்.

அப்பொழுது சென்னை மியூஸியத் தலைவராயிருந்த ஓர் ஐரோப்பியரால் பறவையார் நிலை பெரிதும் ஆராயப்பட்டது. அம்மையார் பறவை இனத்தைச் சேர்ந்தவரென்றும், அவரிடம் பறவைக்குறிய கருவிகரண அமைப்புகள் சில உள்ளன என்றும் கூர்தல் (Evolution) அறப்படி அத்தகையப் பிறவி இயற்கையில் அமைதல் கூடும் என்றும் அவரால் விளக்கப்பட்டன.

அவர் விளக்கம் மற்றவரால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. யான் **தேசபக்தன்** ஆசிரியனாகிய போது டாக்டர்.நஞ்சுண்டராவின் நெருங்கிப் பழகுதல் நேர்ந்தது. பறவையாரைப் பற்றி அவரை நான் விசாரித்தேன். அவர் **அம்மையார் சித்தரினத்தில் சேர்ந்தவர்** என்று கூறினார்.

பறவை நாயகியார் நிலை மனோதத்துவத்துக்கு எட்டுவதா? உண்ணிப் பாருங்கள்.

என்று தமிழ்தென்றல் திரு.வி.க அவர்கள் ஸ்ரீ சக்கரையம்மா அவர்களின் பெருமையை போற்றி புகழ்ந்துள்ளார்.

இன்றும் பல பக்தர்கள் ஸ்ரீ சக்கரையம்மா ஜீவசமாதி கோயில் சென்று தாங்கள் வேண்டுதல்களை பிரார்த்தனை செய்து பலன் அடைந்து வருவது கண்கண்ட உண்மையாகும்.

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ சக்கரையம்மா திருவடிகள் போற்றி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

19.மருத மரத்தை காத்த புஷ்பவன குருக்கள்

மருத பாண்டியர் - புஷ்பவன குருக்கள்

சிவகங்கை சமஸ்தானத்திற்கு ராஜாவாக சுமார் 250 ஆண்டுகளுக்கு முன்பு ஆட்சி புரிந்தவர் மருத பாண்டியர். இந்திய சுதந்திர போராட்டத்தில் பங்கு பெற்று ஆங்கிலேயர்களுக்கு எதிராக போராடியவர். மிகுந்த சிவபக்தி கொண்ட இவர் தம்முடைய ஆட்சி பகுதிக்குட்பட்ட காளையார் கோயிலுக்கு மிகப்பெரிய தேர் ஒன்று அமைக்க கருதினார். தேரின் அச்சுக்கு ஏற்றதான பெரியமரம் தேடிய பொழுது மதுரைக்கு அருகே உள்ள திருப்பூவணம் என்ற ஊரில் சிவாலயத்திற்கு எதிரே மிகப் பெரிய மருதமரம் ஒன்று இருப்பதாக அறிந்தார்.

தகுந்த அதிகாரிகளை அழைத்து அந்த மருதமரத்தை வெட்டி எடுத்துவரும்படி உத்தரவு பிறப்பித்தார். அதிகாரிகள் வேலையாட்களை கொண்டு மரத்தை வெட்ட முயன்றபொழுது,

திருப்பூவணநாதருக்கு பூஜை செய்து வந்த ஆதிசைவர்களுள் ஒருவராகிய புஷ்பவனக்குருக்கள் என்ற பெரியோர் மரத்தை வெட்ட வேண்டாம், வெட்ட வேண்டாம் என்று சொல்லிக் கொண்டே வேகமாக ஓடிவந்து தடுத்தார்.

அதிகாரிகள் குருக்களை அலட்சியம் செய்து வேலைக் காரர்களை ஏவி மருதமரத்தை வெட்ட முயன்றனர். அப்போது குருக்கள் மிக்க ஆத்திரம் அடைந்து **"சிவபெருமான் மீது ஆணை ! நீங்கள் இந்த மரத்தை வெட்டக்கூடாது என்று மறுபடியும் தடுத்தார்"** உடனே அதிகாரிகள் மரத்தை வெட்டாமல் நிறுத்தி விட்டு உடனே செய்தியை மருத பாண்டியருக்கு தெரிவித்தனர்.

செய்தியை கேட்ட மருத பாண்டியர் ஆச்சரியமடைந்து இறைவன் திருத்தேருக்காக நாம் வெட்டச் சொல்லிருக்கும் பொழுது அதை யாரேனும் தடுக்கலாமோ? தைரியத்தோடு தடுத்ததற்கு என்ன காரணம் இருக்கக் கூடும்? நாமே நேரில் போய் விசாரித்து வரவேண்டும் என்றெண்ணி மருதபாண்டியர் திருப்பூவணம் சென்றார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இறைவனை தரிசித்து விபூதி பிரசாதம் வாங்கி அணிந்து கொண்டார். பின் கோயிலில் உள்ள ஆதிசைவர்களை பார்த்து, இங்கே உள்ள குருக்களில் யாரோ ஒருவர் நமது கட்டளையை மீறி மருதமரத்தை வெட்டக் கூடாதென்று தடுத்தாராமே, அவர் யார்? அவர் இங்கே இருக்கிறாரா? என்று கேட்டார்.

அப்போது அவர்கள் மகாராஜாவிற்கு பயந்து புஷ்பவன குருக்கள் குடும்பத்தோடு மதுரைக்குச் சென்று விட்டார் என்று கூறினார்கள்.

மருத பாண்டியர் உடனே மதுரைக்குச் சென்ற புஷ்பவன குருக்களுக்கு ஓர் **அபயநிருபம்** எழுதுவித்து அதைக்காட்டி அவரை அழைத்து வரும்படி ஒருவரை அனுப்பினார்.

(அபய நிருபம் என்பது பழைய காலத்தில் குற்றவாளிக்கேனும் அஞ்சி ஓடி ஒளிந்துக் கொண்டவர்களுக்கேனும் - "நீங்கள் அஞ்ச வேண்டாம், இங்கே வந்தால் உங்களுக்கு ஒரு துன்பமும் நேராது" என்று அரசர்களால் அவர்களுக்குள்ள பயத்தைப் போக்குவதற்காக எழுதப்படுவது.)

அபய நிருபத்தைக் கண்ட புஷ்பவன குருக்கள் மதுரையில் இருந்து திருப்பூவணம் வந்து மருதுபாண்டியர் முன்னே நடுக்கத்தோடு நின்றார்.

காளையார்கோயில் தேர் பணிக்கு உபயோகப்படுத்துவதற்காக இருந்த மருத மரத்தை வெட்டக்கூடாது என்று நீர் தடுத்தீரா? என்று மருதபாண்டியார் கேட்டார்.

அப்போது குருக்கள், திருப்பூவணம் என்ற இத்தலம் விசேஷமானது. புஷ்பவன காசி என்ற சிறப்பிற்குரியது. தேவாரப் பாடல் பெற்றது. அயலூரில் இருந்து பக்தர்கள் பலர் வைகையை கடந்து இங்கு தரிசனம் செய்ய வருவர். அவ்வாறு வரும் பக்தர்கள் கோயிலின் எதிரே உள்ள மருதமரத்தில் கீழிலிருந்து இளைப்பாறி விட்டுச் செல்வது வழக்கம். முக்கியமாக கோடை காலத்தில் பக்தர்களுக்கு குளிர்ந்த நிழலை தருவதாக இந்த மரம் விளங்குகின்றது.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

இவ்வாறு பல ஆயிரம் பக்தர்கள், பெண்கள், குழந்தைகள் என்று பலர் இந்த மரத்தின் கீழ் தங்கி இளைப்பாறியுள்ளனர்.

இவ்வாறு பக்தர்களுக்கு பெரிய பயன்தரும் வகையில் இருப்பதை மகாராஜா அறிந்திருந்தால் இந்த மரத்தை வெட்ட உத்தரவிட்டிருக்க மாட்டீர்கள். மேலும், தாங்கள் நினைத்தால் இந்த தேசத்தில் எவ்வளவோ மரங்கள் கிடைக்கக்கூடும் இந்த மருத மரந்தான் வேண்டுமென்பதில்லை என்றார்.

மேலும், இந்த மருதமரம் மகாராஜாவின் பெயரைத் தாங்கிக் கொண்டு நிற்கின்றது. மகாராஜா மக்களைப் பாதுகாத்து காப்பாற்றி வருவது போலவே இந்த மரம் பக்தர்களுக்கு நிழலளித்து வருகிறது என்று கூறினார் குருக்கள்.

குருக்கள் உருக்கமாக பேசியதை கேட்ட மருதுபாண்டியர் குருக்களை நேராக பார்த்தார். புஷ்பவன குருக்களுடைய நல்லெண்ணத்தையும், அவருடைய உண்மையான உள் அன்புமே மரம் வெட்டுவதை தடுக்கச் செய்து என்பதை உணர்ந்தார். புஷ்பவனக் குருக்கள் பக்தர்கள் மீதும், மருத மரத்தின்மீதும் கொண்ட அன்பைப் பாராட்டினார். மருதமரம் வெட்டப்படாது என்று உறுதியளித்தார்.

மருதமரம் தழைத்து வளர்ந்து பக்தர்களுக்கு நிழலளித்தது. புஷ்பவன குருக்களின் நல்லெண்ணத்தால் மிகப் பெரிய மருதமரம் காப்பாற்றப்பட்டது.

(இச்செய்தி தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்கள் எழுதிய **நான் கண்டதும் கேட்டதும்** என்ற நூலில் இடம் பெற்றுள்ளது.)

திருச்சிற்றம்பலம்

அழகிய வீரபாண்டியபுரம் என்று வழங்கும் ஒட்டப்பிடாரம் என்ற ஊரில் சிவ.சு.குமாரசாமிகுருக்கள் அவர்களால் நிறுவப்பட்ட சிவப்பிரகாச ஆதினம் என்ற சைவ மடம் இருந்ததாக தெரிய வருகிறது. இவர் ஐம்பது பாடல்களை கொண்ட சிதம்பர ஷேத்திரத்தின் மகாத்மியம் என்ற நூலை இயற்றியுள்ளார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

20.ஆதிசைவ சிவாசாரியார்களின் பழக்க வழக்கங்கள்

1) ஆதிசைவர்கள் சிவபெருமானையே முழுமுதற்கடவுளாக முதற்குருவாக கொண்டவர்கள்.

2) விபூதி, ருத்திராஷம், பஞ்சாட்சரத்தை எப்பொழுதும் தம் உடலில் தாங்கியே இருப்பார்கள்.

3) சிவபெருமான் ஒருவருக்கே அடிமையானவர்கள் என்பதாலும், சிவலிங்கத்தைதீண்டி பூஜிக்கும் கரங்களை உடையவர்கள் என்பதாலும், சிவபெருமானை மட்டுமே கரம் உயர்த்தி வணங்குவார்கள், மற்றவர்களிடம் ஆசி வழங்கும் விதத்திலேயே வணங்குவார்கள்.

4) இவர்கள் ஆகமவிதிப்படி தங்கள் இல்லங்களில் ஆத்மார்த்த பூஜை செய்த பின்னரே ஆலயங்களில் பரார்த்த பூஜை செய்வார்கள்.

5) ஆதிசைவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு ஏழு வயதில் வேத முறைப்படி உபநயனம் செய்து, ஆகம விதிப்படி சமயதீக்ஷை செய்து சிவ உபதேசம் செய்து வைக்கும்பழக்கமுடையவர்கள்.

6) ஆதிசைவர்கள் வைதீக சந்தியாவந்தனம், சைவ சந்தியா வந்தனம், (சைவஅனுஷ்டானம்) இரண்டுமே செய்யும் வழக்கம் உடையவர்கள்.

7) ஆதிசைவர்கள் தங்கள் குடும்பத்தில் நடைபெறும் சுக, துக்க நிகழ்ச்சிகள் அனைத்தையும் முதலில் தாங்கள் பூஜை செய்யும் சிவபெருமானிடமே முறையிடும் பழக்கம் உடையவர்கள்.

8) ஆதிசைவர்கள் தாங்கள் பூஜை செய்யும் கோயிலில் உள்ள சிவபெருமானுக்கு உறவு பெயர் வைத்து, அந்த இறைவனோடு உறவாடியும் உரிமையோடும் பூஜிக்கும் பழக்கம் உடையவர்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

9) ஆதிசைவர்கள் தங்கள் இல்லத்தில் நடைபெறும் எந்த ஒரு விழாவிலும் தாங்கள் பூஜிக்கும் சிவபெருமானையே முதன்மைபடுத்தி கொண்டாடும் வழக்கம் உடையவர்கள்.

10) பொதுவாக பிராமணர்கள் திருமணத்தில் மஹாவிஷ்ணுவை பிரதானமாக கொண்டு திருமணம் செய்வார்கள். ஆதிசைவ சிவாசாரியார்கள், சிவபெருமானையே பிரதானமாக ஆவாஹனம் செய்து சிவசாட்சியாக திருமணம் செய்யும் வழக்கமுடையவர்கள்.

11) ஆதிசைவர்கள் தாங்கள் பூஜை செய்யும் சிவபெருமானுக்கு நைவேத்யம் செய்யாமல் உணவருந்தும் பழக்கம் இல்லாதவர்கள்.

12) ஆதிசைவர்கள் எத்தகைய ஒரு திடுக்கிடும் நிகழ்ச்சிகள் நிகழ்ந்தாலும், உடனே தாங்கள் பூஜிக்கும் சிவபெருமானின் நாமத்தை சொல்லும் பழக்கம் உடையவர்கள்.

13) ஆதிசைவர்கள் சிவாகமவிதிப்படி சமயதீக்ஷை, விசேஷதீக்ஷை, நிருவாண தீக்ஷை,அஸ்திராபிஷேகம், ஆசாரிய அபிஷேகம் ஆகியவற்றை உரியகாலங்களில் செய்துக் கொண்டு ஆகம கிரியைகள் அனைத்தும் புரியும் உரிமைபெற்று சிவாசாரியார் என்ற தகுதியை பெறுவதை வழக்கமாய் கொண்டவர்கள். இவ்வாறு முறையாக ஆசாரிய அபிஷேகம் பெற்று விதிப்படி ஆகம விதிகளை கடைப்பிடிப்பவரே உத்தமோத்தம சிவாசாரியார் என்று அழைக்கப்படுவார்.

14) ஆதிசைவ சிவாசாரியார்கள் மஹாகாரண பஞ்சாட்சரம் உபதேசம் பெறும் பழக்கம் உடையவார்கள்.

15) இல்லறத்தில் இருந்த நிலையில் குருவாக இருந்து, பக்தர்களுக்கு சிவ, ஆகம உபதேசம் செய்து ஆன்மீக வழிகாட்டும் பழக்கம் உடையவர்கள்.

16) ஆதிசைவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு சிறுவயதிலேயே சிவபக்தியை, சிவவழிபாடுகளை அறிமுகம் செய்து சிவகுழந்தைகளாக வளர்க்கும் வழக்கமுடையவர்கள்.

17) ஆதிசைவர்கள் ஆகமவிதிப்படி சீவதீக்ஷை பெற்றபின்பு சிவபெருமானின் ஐந்து திருமுகங்களின் பெயர்களில் ஒன்றையே தங்கள் பெயராக கொள்ளும் வழக்கம் உடையவர்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

18) ஆதிசைவர்கள் எந்நிலையில் இருந்தாலும், எக்கோலம் கொண்டாலும் எந்த தேசத்தில் இருந்தாலும் தாங்கள் பூஜித்த சிவபெருமானை என்றும் மறவாதவர்கள்.

19) ஆதிசைவர்கள் தாங்கள் பூஜித்து வந்த கோயிலில் உள்ள சிவபெருமானை தங்கள் பரம்பரையில் ஒருவராக தங்களின் முன்னோர்களில் ஒருவராக பாவிக்கும்வழக்கமுடையவர்கள்.

20) ஆதிசைவர்கள் குடும்பத்து குழந்தைகள், தனது தந்தையார் பூஜித்து வரும் சிவபெருமானை நம்மசாமி என்றும், நம்ம சிவன் என்றும் உணர்வோடு கூறுபவர்களாக வளர்ந்துவரும் வழக்கமுடையவர்கள்.

21) ஆதிசைவர்கள் தாங்கள் பூஜித்து வரும் கோயிலில் உள்ள அம்பிகையை தங்களது தாயாக மகளாக பாவித்து பேசும் வழக்கமுடையவர்கள்.

22) ஆதிசைவர்கள் ஆகமங்களை பிரதானமாக கொண்டு ஆகம நூல்களில் கூறியுள்ளபடி தங்கள் இல்லத்தில் நடைபெறும் விசேஷங்களை செய்யும் பழக்கமுடையவர்கள்.

23) ஆதிசைவர்கள் சிவபெருமானை தவிர மற்ற எவருக்கும் விழுந்து நமஸ்கரிக்கும் வழக்கம் இல்லாதவர்கள். அதே போல் மற்ற எவரிடமும் கைநீட்டி விபூதி வாங்கும் பழக்கமும் இல்லாதவர்கள்.

24) ஆதிசைவர்கள் தமிழ்மொழி, வடமொழி என்ற இரண்டு மொழிகளும் கற்கும் வழக்கமுடையவர்கள்.

25) ஆதிசைவர்கள் தாங்கள் செய்யும் ஆகம விதிப்படியான பூஜையில் தேவார திருமுறைகளை ஓதும் பழக்கம் உடையவர்கள்.

26) ஆதிசைவர்கள் தங்களால் உருவாக்கப்பட்ட கிரந்த மொழி அதாவது, கிரந்த தமிழில் தங்கள் ஆகம கல்வியை கற்கும் பழக்கம் உடையவர்கள்.

27) ஆதிசைவர்கள் காலம்தோறும் கிரந்த தமிழை வழிவழியாக பாதுகாத்து வரும் மரபுடையவர்கள்.

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitized on Muthulakshmi Research Academy

21.ஆதிசைவர்களின் கடமைகளும், பணிகளும்

1) ஒவ்வொரு ஆதிசைவரும் தங்கள் மரபின் உண்மை வரலாற்றை அறிந்து உணர்ந்து கொள்ளவேண்டும்.

2) ஆகமங்களை பாதுகாப்பது ஆதிசைவர்களின் முக்கிய கடமை. ஏனெனில் ஆகமம் என்பது ஆதிசைவரின் அடிப்படை நூல். அந்த வகையில், ஒவ்வொரு ஆகமத்தின் மூல ஏடுகளையும், பத்ததி நூல்கள், வழி நூல்கள், சார்பு நூல்கள் என்று அனைத்து ஆகமங்களையும் தொகுத்து காலத்திற்கு ஏற்றவாறு பாதுகாக்க வேண்டிய பணிகளை செய்திட வேண்டும்.

3) ஒவ்வொரு ஆதிசைவரும் தங்கள் குடும்பத்தில் உள்ள குழந்தைகளுக்கும், பெண்களுக்கும் தங்கள் மரபின் வரலாறுகளை,பெருமைகளை எடுத்துக்கூற வேண்டும்.

4) ஆதிசைவர்கள் தாங்கள் கற்கும் ஆகம கல்விக்கு மத்திய, மாநில அரசுகளின் அங்கிகாரம் பெற அனைத்து முயற்சிகளும் செய்ய வேண்டும்.

5) ஆதிசைவர்கள் தங்கள் மரபு தொழிலாகிய சிவாலய பூஜையை செய்து வரவேண்டும். சூழ்நிலை காரணமாக வேறு பணிக்கு சென்றாலும், தங்கள் மரபுக்கு பெருமை சேர்க்கும் வகையில் உரிய காலத்தில் சிவதீக்ஷை பெற்று ஆத்மார்த்த சிவபூஜை கண்டிப்பாக செய்து வரவேண்டும்.

6) திருக்கோயிலில் பணிபுரியும் ஆதிசைவர்கள் தங்களை வரலாற்று ரீதியாக மேம்படுத்திக் கொள்ள வேண்டும். பக்தர்களிடம், இறைவனை பற்றி சாஸ்திர புராணரீதியாக கூறுவதோடு அல்லாமல் வரலாற்று ரீதியாக கூறும் தகுதியை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

20.ஆதிசைவ சிவாசாரியார்களின் பழக்க வழக்கங்கள்

1) ஆதிசைவர்கள் சிவபெருமானையே முழுமுதற்கடவுளாக முதற்குருவாக கொண்டவர்கள்.

2) விபூதி, ருத்திராஷம், பஞ்சாட்சரத்தை எப்பொழுதும் தம் உடலில் தாங்கியே இருப்பார்கள்.

3) சிவபெருமான் ஒருவருக்கே அடிமையானவர்கள் என்பதாலும், சிவலிங்கத்தைதீண்டி பூஜிக்கும் கரங்களை உடையவர்கள் என்பதாலும், சிவபெருமானை மட்டுமே கரம் உயர்த்தி வணங்குவார்கள், மற்றவர்களிடம் ஆசி வழங்கும் விதத்திலேயே வணங்குவார்கள்.

4) இவர்கள் ஆகமவிதிப்படி தங்கள் இல்லங்களில் ஆத்மார்த்த பூஜை செய்த பின்னரே ஆலயங்களில் பரார்த்த பூஜை செய்வார்கள்.

5) ஆதிசைவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு ஏழு வயதில் வேத முறைப்படி உபநயனம் செய்து, ஆகம விதிப்படி சமயதீக்ஷை செய்து சிவ உபதேசம் செய்து வைக்கும்பழக்கமுடையவர்கள்.

6) ஆதிசைவர்கள் வைதீக சந்தியாவந்தனம், சைவ சந்தியா வந்தனம், (சைவஅனுஷ்டானம்) இரண்டுமே செய்யும் வழக்கம் உடையவர்கள்.

7) ஆதிசைவர்கள் தங்கள் குடும்பத்தில் நடைபெறும் சுக, துக்க நிகழ்ச்சிகள் அனைத்தையும் முதலில் தாங்கள் பூஜை செய்யும் சிவபெருமானிடமே முறையிடும் பழக்கம் உடையவர்கள்.

8) ஆதிசைவர்கள் தாங்கள் பூஜை செய்யும் கோயிலில் உள்ள சிவபெருமானுக்கு உறவு பெயர் வைத்து, அந்த இறைவனோடு உறவாடியும் உரிமையோடும் பூஜிக்கும் பழக்கம் உடையவர்கள்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

9) ஆதிசைவர்கள் தங்கள் இல்லத்தில் நடைபெறும் எந்த ஒரு விழாவிலும் தாங்கள் பூஜிக்கும் சிவபெருமானையே முதன்மைபடுத்தி கொண்டாடும் வழக்கம் உடையவர்கள்.

10) பொதுவாக பிராமணர்கள் திருமணத்தில் மஹாவிஷ்ணுவை பிரதானமாக கொண்டு திருமணம் செய்வார்கள். ஆதிசைவ சிவாசாரியார்கள், சிவபெருமானையே பிரதானமாக ஆவாஹனம் செய்து சிவசாட்சியாக திருமணம் செய்யும் வழக்கமுடையவர்கள்.

11) ஆதிசைவர்கள் தாங்கள் பூஜை செய்யும் சிவபெருமானுக்கு நைவேத்யம் செய்யாமல் உணவருந்தும் பழக்கம் இல்லாதவர்கள்.

12) ஆதிசைவர்கள் எத்தகைய ஒரு திடுக்கிடும் நிகழ்ச்சிகள் நிகழ்ந்தாலும், உடனே தாங்கள் பூஜிக்கும் சிவபெருமானின் நாமத்தை சொல்லும் பழக்கம் உடையவர்கள்.

13) ஆதிசைவர்கள் சிவாகமவிதிப்படி சமயதீக்ஷை, விசேஷதீக்ஷை, நிருவாண தீக்ஷை,அஸ்திராபிஷேகம், ஆசாரிய அபிஷேகம் ஆகியவற்றை உரியகாலங்களில் செய்துக் கொண்டு ஆகம கிரியைகள் அனைத்தும் புரியும் உரிமைபெற்று சிவாசாரியார் என்ற தகுதியை பெறுவதை வழக்கமாய் கொண்டவர்கள். இவ்வாறு முறையாக ஆசாரிய அபிஷேகம் பெற்று விதிப்படி ஆகம விதிகளை கடைப்பிடிப்பவரே உத்தமோத்தம சிவாசாரியார் என்று அழைக்கப்படுவார்.

14) ஆதிசைவ சிவாசாரியார்கள் மஹாகாரண பஞ்சாட்சரம் உபதேசம் பெறும் பழக்கம் உடையவார்கள்.

15) இல்லறத்தில் இருந்த நிலையில் குருவாக இருந்து, பக்தர்களுக்கு சிவ, ஆகம உபதேசம் செய்து ஆன்மீக வழிகாட்டும் பழக்கம் உடையவர்கள்.

16) ஆதிசைவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு சிறுவயதிலேயே சிவபக்தியை, சிவவழிபாடுகளை அறிமுகம் செய்து சிவகுழந்தைகளாக வளர்க்கும் வழக்கமுடையவர்கள்.

17) ஆதிசைவர்கள் ஆகமவிதிப்படி சீவதீக்ஷை பெற்றபின்பு சிவபெருமானின் ஐந்து திருமுகங்களின் பெயர்களில் ஒன்றையே தங்கள் பெயராக கொள்ளும் வழக்கம் உடையவர்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

18) ஆதிசைவர்கள் எந்நிலையில் இருந்தாலும், எக்கோலம் கொண்டாலும் எந்த தேசத்தில் இருந்தாலும் தாங்கள் பூஜித்த சிவபெருமானை என்றும் மறவாதவர்கள்.

19) ஆதிசைவர்கள் தாங்கள் பூஜித்து வந்த கோயிலில் உள்ள சிவபெருமானை தங்கள் பரம்பரையில் ஒருவராக தங்களின் முன்னோர்களில் ஒருவராக பாவிக்கும்வழக்கமுடையவர்கள்.

20) ஆதிசைவர்கள் குடும்பத்து குழந்தைகள், தனது தந்தையார் பூஜித்து வரும் சிவபெருமானை நம்மசாமி என்றும், நம்ம சிவன் என்றும் உணர்வோடு கூறுபவர்களாக வளர்ந்துவரும் வழக்கமுடையவர்கள்.

21) ஆதிசைவர்கள் தாங்கள் பூஜித்து வரும் கோயிலில் உள்ள அம்பிகையை தங்களது தாயாக மகளாக பாவித்து பேசும் வழக்கமுடையவர்கள்.

22) ஆதிசைவர்கள் ஆகமங்களை பிரதானமாக கொண்டு ஆகம நூல்களில் கூறியுள்ளபடி தங்கள் இல்லத்தில் நடைபெறும் விசேஷங்களை செய்யும் பழக்கமுடையவர்கள்.

23) ஆதிசைவர்கள் சிவபெருமானை தவிர மற்ற எவருக்கும் விழுந்து நமஸ்கரிக்கும் வழக்கம் இல்லாதவர்கள். அதே போல் மற்ற எவரிடமும் கைநீட்டி விபூதி வாங்கும் பழக்கமும் இல்லாதவர்கள்.

24) ஆதிசைவர்கள் தமிழ்மொழி, வடமொழி என்ற இரண்டு மொழிகளும் கற்கும் வழக்கமுடையவர்கள்.

25) ஆதிசைவர்கள் தாங்கள் செய்யும் ஆகம விதிப்படியான பூஜையில் தேவார திருமுறைகளை ஓதும் பழக்கம் உடையவர்கள்.

26) ஆதிசைவர்கள் தங்களால் உருவாக்கப்பட்ட கிரந்த மொழி அதாவது, கிரந்த தமிழில் தங்கள் ஆகம கல்வியை கற்கும் பழக்கம் உடையவர்கள்.

27) ஆதிசைவர்கள் காலம்தோறும் கிரந்த தமிழை வழிவழியாக பாதுகாத்து வரும் மரபுடையவர்கள்.

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

21.ஆதிசைவர்களின் கடமைகளும், பணிகளும்

1) ஒவ்வொரு ஆதிசைவரும் தங்கள் மரபின் உண்மை வரலாற்றை அறிந்து உணர்ந்து கொள்ளவேண்டும்.

2) ஆகமங்களை பாதுகாப்பது ஆதிசைவர்களின் முக்கிய கடமை. ஏனெனில் ஆகமம் என்பது ஆதிசைவரின் அடிப்படை நூல். அந்த வகையில், ஒவ்வொரு ஆகமத்தின் மூல ஏடுகளையும், பத்ததி நூல்கள், வழி நூல்கள், சார்பு நூல்கள் என்று அனைத்து ஆகமங்களையும் தொகுத்து காலத்திற்கு ஏற்றவாறு பாதுகாக்க வேண்டிய பணிகளை செய்திட வேண்டும்.

3) ஒவ்வொரு ஆதிசைவரும் தங்கள் குடும்பத்தில் உள்ள குழந்தைகளுக்கும், பெண்களுக்கும் தங்கள் மரபின் வரலாறுகளை,பெருமைகளை எடுத்துக்கூற வேண்டும்.

4) ஆதிசைவர்கள் தாங்கள் கற்கும் ஆகம கல்விக்கு மத்திய, மாநில அரசுகளின் அங்கிகாரம் பெற அனைத்து முயற்சிகளும் செய்ய வேண்டும்.

5) ஆதிசைவர்கள் தங்கள் மரபு தொழிலாகிய சிவாலய பூஜையை செய்து வரவேண்டும். சூழ்நிலை காரணமாக வேறு பணிக்கு சென்றாலும், தங்கள் மரபுக்கு பெருமை சேர்க்கும் வகையில் உரிய காலத்தில் சிவதீக்ஷை பெற்று ஆத்மார்த்த சிவபூஜை கண்டிப்பாக செய்து வரவேண்டும்.

6) திருக்கோயிலில் பணிபுரியும் ஆதிசைவர்கள் தங்களை வரலாற்று ரீதியாக மேம்படுத்திக் கொள்ள வேண்டும். பக்தர்களிடம், இறைவனை பற்றி சாஸ்திர புராணரீதியாக கூறுவதோடு அல்லாமல் வரலாற்று ரீதியாக கூறும் தகுதியை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

In Public Domain. Digitization Muthulakshmi Research Academy

7) தேவார திருமுறைகள், சைவசித்தாந்த தத்துவங்கள் ஆதிசைவர்களின் சொத்துகளாகும். சிவபெருமானும், சைவ சமயமும் ஆதிசைவர்களுக்கே முதல் உரிமையுடையது. எனவே கடந்த கால வரலாற்று உண்மையை உணர்ந்து, வைணவ ஆலயங்களில் பட்டாச்சாரியார்கள் வைணவ ஆகமவிதிப் பூஜை செய்வதோடு, எவ்வாறு ஆழ்வார்கள் அருளிய நாலாயிரதிவ்ய பிரபந்தத்தை பாராயணம் செய்வது போல் ஆதிசைவசிவாசாரியார்களும் தேவார திருமுறைகளை ஈடுபாட்டோடு பாராயணம் செய்தல் வேண்டும்.

8) ஆதிசைவர்கள் தங்கள் மரபின் தனித்துவத்தை நிலைநாட்ட அனைத்து நடவடிக்கைகளும், முயற்சிகளும் மேற் கொள்ளுதல் வேண்டும்.

9) அரசு ஆவணங்களில் **ஆதிசைவர்** என்று குறிப்பிடும்படி செய்ய உரிய பணிகளை செய்யவேண்டும்.

10) ஆதிசைவர்கள் தம்மை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசுக்கு கோரிக்கை வைக்கவேண்டும்.

11) ஆதிசைவ, சிவாசாரியார்கள் மற்ற பிராமணர்களில் இருந்து வேறுபட்டவர்கள் என்பதாலும் ஊருக்கு ஒருவர், இருவர் என்று இன சிறுபான்மையினராக வாழ்ந்து வருவதாலும், கல்வி, பொருளாதாரம் ஆகியவற்றில் பின்தங்கிய நிலையில் இருப்பதாலும், ஜெயின் சமூகத்தவர், சீக்கிய சமூகத்தவர், சௌராஷ்டிரர் போன்று சிறுபான்மையினர் என்ற அந்தஸ்த்தை பெற உரிய சட்ட நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

12) ஆதிசைவ சிவாசாரியார்கள் தமிழர்கள், தமிழ் அந்தணர்கள் என்பதை எடுத்து கூறும் வகையில் உரிய விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

13) சோழர்களுக்கே ராஜகுருவாக இருந்தவர்கள்ஆதிசைவர்கள், அந்த வகையில் அரசிலும், அரசியலிலும் ஆதிசைவர்கள் உரிய பிரதிநிதித்துவத்தை பெறும் முயற்சிகளைமேற்கொள்ள வேண்டும்.

14) ஆதிசைவர்களாகிய நம்முன்னோர்கள் சைவ சமூகத்திற்கு குலகுருவாக இருந்து நல்வழி காட்டி அருளியவர்கள். அந்த வகையில் ஒவ்வொரு ஆதிசைவரும் சமூகத்திற்குரிய நல்வழிகளை பக்தர்களிடம் கொண்டு சேர்க்கும் பெரும் பணியை நமதுகடமை என்ற உணர்வோடு செய்திட வேண்டும்.

15) ஆதிசைவர்கள் எந்த நிலையிலும் குருக்கள் என்ற பட்டத்திற்கேற்றவாறு சிவாசாரியார் என்ற தகுதிக்கேற்றவாறு தங்கள் பெருமையை, உரிமையை தகுதியை தாழ்ந்திடாதவாறு வாழ்ந்திடல் வேண்டும்.

திருச்சிற்றம்பலம்

ஆலயங்களில் ஆலய வழிபாட்டின் நோக்கம்

சர்வேஷாம் ரக்ஷணார்த்தாய
க்ராமாதிஷ் விசேஷத:
ஸ்தாபிதம் விதிநா லிங்கம்
சுரைர்வா முநிபிர்நரை:
ஸ்வயமுத்பூத லிங்கஞ்ச
ப்ரதிமாஞ்சேஸ்வராத்மகம்
தத் பரார்த்தம் ஸமாக்யாதம்
ஸர்வேஷம் ஆத்மன: பலம்

– ஸ்ரீமத் பூர்வ காரணாகமம்

உலக நலன் பொருட்டும் மக்களின் நல் வாழ்விற்காகவும் செய்யப்படும் பூஜையே ஆலயங்களில் செய்யப்படும் ஆகம பூஜையாகும்.

கிராமங்களில், விசேஷ தலங்களில் தேவர்களால், முனிவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட, சுயம்புவாக தோன்றிய இறைவனை உலக நலன், மக்கள் நலன் வேண்டி பூஜை செய்து பிரார்த்திப்பதே ஆகமங்கள் கூறும் ஆலய வழிபாட்டின் மைய நோக்கமாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

22.ஓர் வேண்டுகோள்

தெய்வத் திருமேனிகளை தீண்டி அபிஷேகம், அலங்காரம் அர்ச்சனை செய்யும் உரிமையுடைய ஆதிசைவ சிவாசாரியார்கள் எந்த நிலையிலும் தாழ்ந்துவிடக் கூடாது. இன்றைக்கு உலகமே போற்றும் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், அன்று ஒரு காளி கோயில் அர்ச்சகராகத்தான் தன் வாழ்க்கையை துவக்கினார். அந்த அர்ச்சகரே விவேகானந்தர் என்ற ஒரு பெரும் ஆன்மீக சமூக ஞானியை இந்த உலகத்திற்கு அடையாளங் காட்டினார்.

ஆட்சி செய்து வாரிவழங்கும் அரசரேயாயினும் சிவபெருமான் சந்நதியில் ஆதிசைவர் கைமேல் இருக்க தம் கை கீழ் இருக்க தாழ்ந்து திருநீறு பெறுவார் எனில், ஆதிசைவர்களாகிய நம் பெருமை எந்தளவிற்கு அளவிடற்கரியது என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும்.

ஆதிசைவர்களாகிய நம்முடைய பெருமைமிகு வரலாற்றை இந்த சமூகம் அறிந்துக் கொள்ளும் வகையில் ஒவ்வொருவரும் முயற்சியெடுக்க வேண்டும். அதற்கு தகுந்தவாறு சமூகத்தில் நடந்துக் கொள்ள வேண்டும். தங்கள் தனித்துவத்தை என்றும் எப்பொழுதும் பாதுகாத்திட வேண்டும்.

ஆதிசைவர்களாகிய நம்மை தோற்றுவித்தசிவ பெருமானையும், நம்பொருட்டு அளித்த ஆகமங்களையும் போற்றியும் வழிபட்டும் வந்தோம் என்றால் நமக்கு என்றும் எப்பொழுதும் எவ்வித குறையும் ஏற்படாது.

ஆதிசைவர்களாகிய நம்முடைய முக்கிய கடமை பணி சிவபெருமானை காட்டுவதே ஆகும். கடந்த காலங்களில் நமது ஆதிசைவ முன்னோர்கள் பலரும் குருவாக இருந்து இந்த சமூகத்திற்கு நல்உபதேசம் செய்து வழிகாட்டியுள்ளார்கள் என்ற உண்மையை உணர்வை நாம் பெற்றிட வேண்டும்.

In Public domain, Digitization Mithra Research Academy

எடுத்துக்காட்டாக, கடந்த நூற்றாண்டுகளில் **பழனி ஈசான சிவாசாரியார்** குருவாக இருந்து, குகஸ்ரீ திருமுருக கிருபானந்த வாரியார், தமிழ்கடல் ராய. சொக்கலிங்கம் செட்டியார், செட்டிநாட்டு நகரத்தார்களால் குருவாக போற்றப்படும் பாலகவி இராமநாதன் செட்டியார் என்ற தத்புருஷ தேசிகர், போன்று எண்ணற்ற பல சைவ அன்பர்களுக்கு சிவதீக்ஷை அளித்து நல்லருள் செய்து நல்வழிகாட்டியுள்ளதை நாம் சிந்தித்து தெளிதல் வேண்டும்.

இந்த நூற்றாண்டில் சிவாகம ஞானசாகரம் **திருக்கோலக்கா சிவஸ்ரீ.ந.இராமநாத சிவாசாரியார்** அவர்கள் எண்ணற்ற சைவ அன்பர்களுக்கு குருவாக இருந்து சிவதீக்ஷை அளித்து சிவஉபதேசம் செய்துவருவதோடு, தமது தள்ளாத வயதிலும் எண்ணற்ற ஆகம சைவ நூல்களை எழுதி தமது சொந்த செலவில் வெளியிட்டு வருவதோடு, திருவாவடுதுறை, தருமபுரம், திருபனந்தாள் ஆதீனங்களுக்கு, ஆகமரீதியாக ஏற்படும் சந்தேகங்களை ஆகம விளக்கத்தோடு தெளிவுபடுத்தியும், பல சைவ அன்பர்களுக்கும் திருக்கோயில் நிர்வாகிகளுக்கும், ஆகம விதிகளை எடுத்து கூறி ஆகம விதிப்படி பூஜைகள், விழாக்கள் செய்துவர உரிய வழிகாட்டியாக குருநாதராக விளங்கி வருகிறார்.

(இந்த நூலின்னை எழுதிய அடியேனுக்கு இவரே தீக்ஷா குருநாதராக இருந்து அருள் செய்தவர்)

மேலும், இன்றைக்கும் தனது மனம், வாக்கு செயல் மூன்றினாலும் ஆதிசைவ சமூகத்தின் உயர்வுக்காகவும், பெருமைக்காகவும் பாடுபட்டு வருபவர்.

அதேபோல், எளிமையின் அடையாளமாகவும் சிவாசாரியார் சமூகத்திற்கு பெருமை சேர்க்கும் விதமாகவும் வாழ்ந்து வருபவர் **பிள்ளையார்பட்டி சிவஸ்ரீ பிச்சை சிவாசாரியார்** அவர்கள். எளிமையும், பேச்சில் நிதானமும், கனிவும் கொண்டவர். அனைவராலும் **பிச்சை அண்ணா** என்று அன்போடு அழைக்கப்படுபவர்.

In Public domain: Digitization Muthulakshmi Research Academy

ஆகமமே படிக்கமுடியாத வறுமையான சூழ்நிலையில் இருந்த சிவாசாரியார் குழந்தைகளுக்கு கடந்த காலங்களில், தாம் ஆதிசைவ சமூகத்தின் மீது கொண்ட பற்றின் காரணமாகவும், தமது சமூகம் முன்னேற வேண்டும் என்ற நோக்கத்தின் காரணமாகவும், அனைத்து ஆதிசைவ குழந்தைகளும் ஆகமங்களை தெளிவுற கற்க வேண்டும் என்ற எண்ணத்தின் காரணமாகவும், பிள்ளையார்பட்டியில், நகரத்தார்கள் ஒத்துழைப்போடு ஆகம பாடசாலை நிறுவி எண்ணற்ற ஆதிசைவர்களுக்கு வாழ்வளித்த வள்ளல்.

வயதில் சிறியவர்களையும், இளைஞர்களையும், எளியோர் களையும் முன்னிலைப்படுத்தி அங்கீகாரம் அளித்து கௌரவப் படுத்துவதில் சிறந்தவர்.

பல சைவ அன்பர்களுக்கு சிவதீக்ஷை அளித்து நல்வழிபடுத்தியவர். உலகமே போற்றும் சிவாசாரியராக விளங்கி வருபவர். வெளிநாடுகளிலும் ஆகமமும் சைவ சமய தத்துவங்களும் பரவி புகழ் பெருவதற்கு காரணமாய் விளங்குபவர்.

இதேபோல், மயிலாடுதுறையில் சிவபுரம் வேத சிவாகம பாடசாலை நிறுவி சிவாகமப்பணி செய்து வருபவரும், சைவ ஆதினங்களோடு தொடர்பு கொண்டு சைவத் தொண்டும், சிவத்தொண்டும் ஆற்றிவருபவர் **சிவஸ்ரீ ரவிசுவாமிநாதசிவாசாரியார்,** இவர்கள் ஆன்மீகம், ஆகமம் சம்பந்தமான பல கட்டுரைகளை பல இதழ்களில் எழுதி வருகின்றார். ஆதிசைவ சமூகத்தின் வளர்ச்சிக்கும், சிறப்புக்கும் பாடுபட்டு வருபவர். எண்ணற்ற ஆதிசைவ சிறுவர்களுக்கு ஆகம கல்வியை அளித்து வருகின்றார். எல்லோரையும், அரவணைத்துச் செல்லும் குணமுடையவர். அரசின் அறநிலையத் துறையில் பங்கு கொண்டு உரிய ஆகம ஆலோசனைகளை வழங்கி வருபவர்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மதுரை திருப்பரங்குன்றத்தில் ஸ்கந்தகுரு வித்யாலயம் நிறுவி பல ஆதிசைவ சிறுவர்களுக்கு ஆகம கல்வியை உபதேசம் செய்தும், சிவதீக்ஷை அளித்தும் ஆன்மீக வழிகாட்டியாக விளங்கும் **சிவஸ்ரீ ராஜாபட்டர்** அவர்கள். இவர்கள் ஆதிசைவ சமூகத்திற்கு பெரும் தொண்டு ஆற்றி வருகிறார்கள்.

என இவ்வாறு, இன்றும் பல ஆதிசைவ சிவாசாரியார்கள் சிவபெருமானின் புகழையும், சைவ சமய சிறப்பையும் உபதேசித்து குருவாக, ஆச்சாரியராக இருந்து தன்னலம் பாராது ஆதிசைவ மரபிற்கே உரிய கடமையும், தொண்டினையும் செய்து வருகிறார்கள்.

இவற்றையெல்லாம் உணர்ந்து வருங்கால ஆதிசைவ இளைஞர் சமுதாயம், குருவிற்கு உரிய தகுதியோடு சைவ சமய வளர்ச்சிக்கும், சிவபெருமானின் பெருமைகளை இவ்வுலகம் உணரும் வகையில் தங்கள் மரபிற்கேற்ப தொண்டாற்றிட வேண்டும்.

மாணிக்கவாசகர் திருவாசகத்தில் சிவபெருமானை,

"முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே."

என்று புகழ்ந்து பாடுவார்.

அதுபோல், ஆதிசைவர்கள் பழமைக்கு பழமையாகவும், காலமாற்றத்திற்கேற்றவாறு மரபுக்குட்பட்டு புதுமைக்கு புதுமையாகவும் செயல்படும் வகையில் தங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும். தங்கள் தகுதிகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

இன்றயை நிலையில், ஆதிசைவர்கள் மரபில் வந்த அனைவரும் சிவாலய பூஜை செய்ய வேண்டும் என்று வலியுறுத்த முடியாது. அதே சமயத்தில் சிவாலயத்தில் பூஜை செய்து வருபவர்கள் உரிய சிவதீக்ஷை பெற்று தகுதியோடு ஆகம தொண்டினை மேற்கொள்ள வேண்டும்.

மாற்று உத்யோகத்தில் மாற்று தொழிலில் செய்யும் ஆதி சைவ மரபில் வந்தவர்கள் தங்கள் மரபிற்கு பெருமை சேர்க்கும் விதமாக எந்நிலையில் நின்றாலும், எக்கோலம் கொண்டாலும், தாங்கள் ஆதிசைவர்கள் என்ற எண்ணத்தோடு சிவபெருமானை மறவாதவர்களாக விளங்கிட வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எல்லாவற்றிற்கும் மேலாக,

திருவள்ளுவர்,

"மறப்பினும் ஒத்து கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்."

என்பார். அதவாது, உயர்ந்த குலத்தில் பிறந்த பிராமணன் தமக்குரிய வேதத்தை ஓதுவதை மறந்துவிட்டாலும் குற்றமில்லை. ஆனால், பிராமணன் தன்னுடைய ஒழுக்கத்தில் குறைந்தால் அவன் உயர் குலத்தான் என்பது அழிந்து போகும் என்பார்.

அதுபோல் சிவபெருமானை தீண்டி பூஜித்து வழிபடும் ஆதிசைவர்களாகிய சிவாசாரியார்கள், மந்திர, தந்திர சாஸ்திர விஷயங்களில் குறையுடையவர்களாக விளங்கினாலும் பரவாயில்லை.ஆனால் தனிமனித ஒழுக்கத்தில் குறையில்லாத வராக, ஒழுக்கம் நிறைந்தவராக விளங்கினால் அந்த ஒழுக்க நிலையே, ஆதிசைவர்களுக்கு சமூகத்தில் பெருமையையும், புகழையும் தந்திடும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

வருங்காலத்தில் ஆதிசைவ சமூகம் மேலும் மேலும் வளர்ச்சியுற்று தனித்துவத்தோடும், தனி அடையாளத்தோடும் பெரும் புகழ் பெறவேண்டும் என்று எல்லாம் வல்ல எம்பெருமானை வேண்டி, எந்நிலையிலும் மற்றவர்களுக்கு எடுத்துக்கூறும் தகுதி சிறிதும் இல்லாத அடியேனை ஆதிசைவ சமூகம் மன்னித்தும், அதே நேரத்தில் மேற்கண்ட கருத்துகளை ஆதிசைவ சமூகம் உள்வாங்கிக் கொண்டு செயல்படவேண்டுமாய் பணிவுடன் வேண்டுகிறேன்.

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

23. மூன்றாம் குலோத்துங்கசோழன் ராஜகுரு ஸ்ரீ ஈஸ்வர சிவாசாரியார்

சோழ மன்னர்களின் வரலாற்றில் மிகவும் குறிப்பிடத்தக்க திறமை பெற்று திகழ்ந்த மன்னர்களில் மூன்றாம் குலோத்துங்க சோழன் குறிப்பிடத்தக்கவர் ஆவார்.

கி.பி. 1178 முதல் 1218 வரை ஆட்சிபுரிந்த மூன்றாம் குலோத்துங்க சோழனின் ராஜகுருவாக வீற்றிருந்தவர் ஸ்ரீ ஈஸ்வர சிவாசாரியார் ஆவார். இவர் மூன்றாம் குலோத்துங்க சோழனால் கும்பகோணம் அருகே திருபுவனம் என்ற ஊரில் எழுப்பப்பட்ட திருக்கோயிலை தலைமை ஏற்று கும்பாபிஷேகம் (பிரதிஷ்டை) செய்தவர். தனது குரு ஸ்ரீ ஈஸ்வர சிவாசாரியார் மீது மிகுந்த பக்தியும், மதிப்பும் கொண்ட மூன்றாம் குலோத்துங்க சோழன் தனது குருவின் பெருமைகளையும், அவர் திருபுவனம் திருக்கோயில் கும்பாபிஷேகத்தை செய்த சிறப்பையும் அக்கோயிலில் கல்வெட்டாக வடித்துள்ளார்.

அப்பகுதி வருமாறு,

"ஸ்ரீ கண்ட சம்பு தநயேத பதிர்ந் ருபாணாம்
பாண்டாரீ ரீசஸ்சிவே நமஹ......
சோமேஸ்வரண புருணா புவநஸ்ய பித்ரோ
ஸ்ரேஷ்டாம காரயத ஸெள
சிவயோ; பிரதிஷ்டாம்

வித்யா யேந மநீஷிணா நிகடிதா
விஸ்ப்ருஷ்டமஷ்டாதச
ஸ்தாணோர்யேந விவிக்தமோப நிஷதம்
விஸ்வாஸகத்வம் பகோ:

வேதாகாரச சைவதர்ந த்ருசா
சித்தாந்ததே ரத் நாகரோ
ராஜேந்திரரயஸ்ய குருஸ்ஸ ஈஸ்வர சிவ;
கஸ்தஸ்ய மருக்யோ குண;"

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதன் பொருள் :

"ஸ்ரீ கண்ட சம்பு என்பவருடைய குமாரரும் தன்னுடைய குருவுமான ஸ்ரீ ஈஸ்வர சிவாசாரியார் என்னும் சோமேஸ்வரரைக் கொண்டு இவ்வுலகத்திற்கே அம்மையப்பராக விளங்கும் பரமேஸ்வரன் பார்வதி ஆகிய இருவரையும் மிகச்சிறந்த முறையில் பாண்டியாரி (குலோத்துங்க சோழன்) என்ற இவ்வரசன் பிரதிஷ்டை செய்வித்தான்."

"ராஜகுருவான ஸ்ரீ ஈஸ்வர சிவாசாரியார் வித்துவான்களுள் சிறந்தவர். பதினெட்டு சிவபுராணங்களையும் தெளிவாக அறிந்தவர். சிவபெருமானின் உயர்வைச் சொல்லும் உபநிடதங்களை விரிவாகச் சொல்பவர். சைவ தர்சனத்தை (ஆகமங்களை) கறைகண்டவர். **சித்தாந்த ரத்னாகரம்** என்னும் ஆகம சித்தாந்த நூலை இயற்றியவர். யாரோ அவரது குணத்தை தேடி அடைய முடியும்?"

என்று, தனது குருவின் பெருமைகளை புகழ்ந்து கல்வெட்டில் வடித்துள்ளான்.

மேலும், மூன்றாம் குலோத்துங்க சோழனால் எழுப்பப்பட்ட திருவாரூர் ஸ்ரீ தியாகராஜர் ஆலய கிழக்கு இராஜ கோபுரத்திற்கு மகா கும்பாபிஷேக பிரதிஷ்டை (கடவுண் மங்கலம்) செய்தவரும் இந்த சைவச் செம்மலாகிய ஸ்ரீ ஈஸ்வர சிவாசாரியாரே ஆவார்.

இந்த கிழக்கு இராஜகோபுர கோஷ்டத்தில் தனது சிற்பத்தையும், தனது குரு ஸ்ரீ ஈஸ்வர சிவாசாரியார் சிற்பத்தையும் வடித்து, தானும் தனது குருவும் ஆரூர் பெருமானை என்றென்றும் வணங்கும் கோலத்தில் மூன்றாம் குலோத்துங்க சோழன் நிறுவியுள்ள அமைப்பு குலோத்துங்க சோழன் தனது குருவின் மீது வைத்துள்ள அன்பையும், மரியாதையும் வெளிப்படுத்துவது ஆகும்.

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆகமங்களில் ஆலயம் ஆதிசைவர்

ஆகம விதிப்படி, பரார்த்த பூஜை என்று அழைக்கப்படும் திருக்கோயில்களில் செய்யப்படும் ஆகம பூஜைகள் நாட்டின் அரசனுக்கு ஆயுள், ஆரோக்யம், நோயின்மை போன்ற நன்மைகள் (ஸம்பத்துக்கள்) ஏற்படுவதற்காகவும், பகை நாடுகளின் தொல்லைகளிலிருந்து மக்களை காப்பாற்றும் வலிமையை, வெற்றியை அரசனுக்கு தந்தருள வேண்டும் என்ற வேண்டுதல் பொருட்டும் மற்றும் கிராமம், நகரம் ஆகிய இடங்களில் வசிக்கும் மக்களின் நன்மைக்காகவும், விருத்திக்காகவும் மக்களின் நலன் பொருட்டு செய்யப்படுவதாகும். இதனை ஆகமம்,

"ந்ருபதே ஆயூர் ஆரோக்ய
ஜயஸம்பத்வி வ்ருத்தயே
க்ராமாதீநாம் வ்ருத்யர்தம்
பரார்த்தே ஜ்யா ப்ரயுஜ்யதாம்."

என்று கூறுகிறது. மேலும், ஆலய (பரார்த்த) பூஜையை,

"பரார்த்த யஜனம் கார்யம்
சிவவிப்ரைஸ்து நித்யச;
தார்மிக; குருதே நித்யம்
ஆதிசைவோ த்விஜோத்தம;"

பரார்த்த பூஜை எனப்படும் ஆகம விதிப்படி அமைந்த திருக்கோயில்களில் செய்யப்படும் பூஜைகளை சிவத்வஜர்களாகிய ஆதிசைவ சிவாசாரியார்களே செய்தல் வேண்டும் என்பதாகும்.

–ஸ்ரீமத் பூர்வ காமிகாமம்
அர்ச்சனா விதிபடலம்

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குறிப்புகள்:

திருச்சிற்றம்பலம்

In Public domain: Digitization Muthulakshmi Research Academy

குறிப்புகள்:

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ அகோர சிவாசாரியார் பரார்த்த நித்ய பூஜாவிதியில் சிவாசாரியார்கள் லக்ஷணம்

"வேதாதி நானாவித மந்த்ர தந்த்ர
முத்ரா க்ரியா சில்ப ஸ்வாக் ஸ்வரூபம்
ஆசாரயுக்தம் ஸுகுணம் ஸுரூபம்
ஆசார்யமாஹு: சிவம் **ஆதிசைவம்** ||
ஸ தத்வக்ஞான ஸம்பன்ன: ஷடத்வஸ்தான சிந்தக:
பரதாஷ்டாங்க யோகக்ஞோ க்ஞானஸம்பத்தி போதக:
தீக்ஷாபிஷேக சாஸ்த்ர க்ரியா யுக்தோ வாக் ப்ரஸாத சுபப்ரத:
இத்யாதி குணஸம்பன்னோ தேசிகேந்த்ரோபிதீயதே."

<u>இவற்றின் பொருள் வருமாறு,</u>

"வேத ஆகமங்கள், இவை தொடர்பான பற்பல சாத்திரங்கள், பற்பலவான மந்திர சாத்திரங்கள் சாக்த சம்பந்தமான தந்திர சாத்திரங்கள், முத்திரை வகைகள், கிரியைகள்,
சிற்ப சாத்திரங்களாகிய வாஸ்து சாத்திரங்கள் பீஜாக்ஷரம் முதலான நல்ல மங்களகரமான வாக்குகளின் சொரூபங்கள் இவற்றை நன்கு அறிந்தவர்களாகவும், நல்ல ஆசார ஒழுக்க முறைகளை உடையவர்களாகவும், நற்குணம் உடையவர்களாகவும், நல்ல தோற்றம் வாய்ந்தவர்களாகவும் உலகோர்க்கு மங்களங்களை அளிக்கவல்லவர்களாகவும் திகழும் ஆதிசைவர்களையே, சிவாசாரியார்கள் எனப் பெரியோர்கள் கூறுகின்றனர்."

திருச்சிற்றம்பலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



அம்மானே ஆகம சீலர்க்கு அருள்நல்கும்
பெம்மானே பேரரு ளாளன் பிடவூரன்
தம்மானே தண்டமிழ் நூற்பல வானர்க்கோர்
அம்மானே பரவையுண் மண்டளி அம்மானே

– ஸ்ரீ சுந்தரர்